# செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்



பல்கலைப் புலவர்
**க.சி. குலரத்தினம்**

சுடரொளி வெளியீட்டுக் கழகம்
இலண்டன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்

(முதற் பாகம்)


பல்கலைப் புலவர்

**க.சி. குலரத்தினம்**



**சுடரொளி வெளியீட்டுக் கழகம்,**

**Chuderoli Publication Society**

15, Rutland Road,

London E7 8PQ, United Kingdom



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு: 14

செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் (முதற் பாகம்)

முதற் பதிப்பு: அக்டோபர் 1989

இரண்டாம் பதிப்பு : தி.ஆ. 2036 ஆவணி செப்ரம்பர் 2005

பிரதிகள் : 1000

உரிமை: சுடரொளி வெளியீட்டுக் கழகத்துக்கு மட்டும்

**விலை ரூபாய் 70/-** (இந்தியாவில்)

**விலை ரூபாய் 150/-** (இலங்கையில்)

**£5** (பிற நாடுகளில்)

இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும்
இந்நூல் விற்பனைக்குண்டு.

தமிழ்நாட்டில் கிடைக்குமிடம்:
**காந்தளகம்,**
4, முதல் மாடி, ரகிசா கட்டடம்,
68, அண்ணா சாலை,
சென்னை- 600 002.
தொலைபேசி: 28414505

*அச்சுப் பதிப்பு:*

**உலகத் தமிழர் பதிப்பகம்**
4, சௌராட்டிரா நகர் 7ஆம் தெரு,
சூளைமேடு, சென்னை-600 094.
பேசி : 9444111951/55180155
Email:eramathi@rediff.com

*வெளியீடு:*

**சுடரொளி வெளியீட்டுக் கழகம்,**
**Chuderoli Publication Society**
15, Ruthland Road,
London E7 8PQ, United Kingdom

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிய கலைச் செல்வம்!

**டாக்டர் ஔவை நடராசன்**
முன்னாள் துணைவேந்தர்

**பு**லமையாழமும், பொருந்திய கலைவளமும் ஒருங்கே வாய்ந்த புலத்துறை முற்றிய புலவர்கள் பலரைக் கொண்டது ஈழநாடு. இற்றைக்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர், முத்தமிழ்ப் புலமையோடு திகழ்ந்த புலவர் சிலர் ஆற்றிய தமிழ்ப் பணிகளைத் தொகுத்துப் பல்துறை வித்தகர் க.சி. குலரத்தினம் ''செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்'' என்ற அரிய நூலை எழுதி வழங்கினார். எளிய இனிய நடையில் நுணுக்கமான செய்தி களையும், அரிய கருத்துக் கோவைகளையும், அந்நாளைய புலவர்கள் பாடிய பழம் பாடல்களையும் கொண்டதாக இந்நூல் திகழ்கிறது.

குமாரசாமிப் புலவர், இருபாலைச் சேனாதிராய முதலியார், சட்டாம்பியார் விசுவநாதன் முதலிய அருந்தமிழ்ப் புலவர்கள் பற்றிய அரிய குறிப்புகள் இந்நூலை அணி செய்கின்றன. சான்றாகக் கதிரைவேற் பிள்ளையின் அரிய பணிகளுள் ஒன்றாகக் கற்பனைக் களஞ்சியம் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் எழுதிய தருக்க நூலைத் திருத்தமாக 1872ஆம் ஆண்டு அவர் பதித்தபோது எழுதிய முகவுரை நினைக்கத்தக்கது. ''ஏழு பதார்த்தங்களைக் கூறும் சித்தாந்த முத்தாவலி முதலிய நவீன தருக்கம் போலல்லாது, பதினான்கு பதார்த்தங்களைக் கூறும் பிராசீன தர்க்கமாகிய இந்நூல், சமஸ்கிருத மொழியில் சிவகேசவ மிசிரனாலியற்றப்பட்டுத் துறைமங்கலம் சிவப்பிரகாசரால் தமிழில் மொழியெர்க்கப்பட்டுக் காலத்துக்குக் காலமொன்றின் பின்னொன்றாய ஏட்டுப் பிரதி களிலெழுதப்பட்டு, வழுமலிந்து மங்கிச் சிக்குண்டு பயன்படாது கிடந்ததனை யாம் பரிசோதித்து எமது கிஞ்சிற் புத்திக்கு இயன்றவாறே வழுவறுத்துச் சிக்கறுத்துப் பயன்படு நூலாக்கி அச்சிடுவித்தாம்.'' இது அந்நாளைய நடை. இத்தகைய நூல்கள் இப்போது எவருக்கும் கிட்டுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் காலத்தில் வாழ்ந்த, புத்தலத்துக் கற்பிட்டியைச் சேர்ந்த சைமன் காசிச் செட்டியவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய புலவர் வரலாற்று நூலை எந்தையார் பலமுறை பாராட்டிக் கூறியதுண்டு. பின்னாளில் அறிஞர் தெ.பொ.மீ. அவர்களும் அந்த வரலாற்று நூலை ஒரு பதிப்பாக வெளியிட்டார். இருநூறுக்கு மேலிட்ட புலவர்களைப் பற்றிய குறிப்புகளைக் கொண்ட ஆங்கில நூலாக அது மிளிர்கிறது.

தமிழகத்தின் தாய்ப் பல்கலைக்கழகமாகத் திகழும் சென்னைப் பல்கலைக் கழகம் தொடங்கிய நிலையில், உருவான, முதன்மைத் தலைமைக் கல்லூரியாகிய மாநிலக் கல்லூரியில் அந்நாளில் சேர்ந்திருந்தனர். மறந்தும் தமிழ் பேசக் கருதாதவராக அவர்கள் இருந்தனர். அந்நிலையில், அவர்களோடு செந்தமிழ்ப் புலமையும் ஆங்கிலச் செழுமையும் வாய்க்கப் பெற்றவர்களாக விசுவநாதர், தாமோதரனார் முதலியோர் மாணவராகப் பயின்றனர். எனவே தமிழகத்தின் பெரும் பதவிகளில் அந்நாளில் தமிழுணர்வோடு பணியாற்றிய தலைவர்களாகச் சிலரேனும் அமையும் வாய்ப்புக்கு இவர்களே தொடக்கம் செய்தனர்.

அரிய செய்திகளைத் தேடி முயன்று சான்றாவணமாகத் தொகுத்து எழுதிய இந்நூலை மீள் பதிப்பாக அறிஞர் சுடரொளி திரு. ஐ.தி. சம்பந்தன் ஆர்வத்தோடு வெளியிடுவதைப் பாராட்டி மகிழ்கிறேன். இப்போது இலண்டன் மாநகரில் சீரிய தமிழ்ப் பணியாற்றிவரும் சான்றோர் சம்பந்தர் தமிழோடும் தமிழரோடும் கொண்டுள்ள உறவும் பரிவும் மறக்க முடியாதன. சுடரொளிப் பதிப்பகமும், சுடரொளி இதழும் தமிழ் மக்களுக்கு வாய்த்த அரிய கலைச் செல்வங்களாகும். ஈழத்துப் புலவர்களின் பழம்பெருங் கருவூலங்களைத் தொடர்ந்து பதிப்பிக்கும் பணியைச் சுடரொளியார் அயராது மேற்கொள்ள வேண்டுகிறேன்.

ஔவை நடராசன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுரை

உணர்ச்சிக் கவிஞர் **காசி. ஆனந்தன்**

**ப**தினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கனகசபாபதி என்னும் கூழங்கைத் தம்பிரான் சுவாமிகளிடம் தமிழ் பயின்ற பெரும்புலவர் இருபாலை சேனாதிராய முதலியாரையும் - பின்னால் வாழ்ந்த மேலும் பதினேழு தமிழீழப் புலவர்களையும் பற்றிப் பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் அவர்கள் எழுதியுள்ள இந்நூல் ஓர் அரிய தமிழ் வரலாற்றுப் பதிவாகும்.

ஆறுமுக நாவலரும் தாமோதரம் பிள்ளையும் வாழ்ந்த அதே காலத்தில் தமிழ்காத்த ஆன்றோர் வரிசை.

தமிழ் இலக்கியம் - இலக்கணம் ஆழப்படித்த பேரறிஞர்களாகவும், தமிழ்ப் பாக்களை அள்ளிக் கொட்டிய பெரும் புலவர்களாகவும், தமிழின் புகழ் நாற்றிசை பரப்பிய செந்தமிழ்ச் செல்வர்களாகவும் இத்தமிழ் ஆற்றலாளர்கள் திகழ்ந்தார்கள்.

வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலத்தின் மேய்ச்சலுக்கு இரையாகிப் போகாமல் தமிழ்ப் பயிர் காத்த வேலிகள் இவர்கள்.

தமக்குப் பின்னால் தமிழ் நிலைக்கவும் தழைக்கவும் தமிழ் தோய்ந்த மாணாக்கர்களை வடித்துத் தந்த தமிழ்ப் பட்டறைகள்.

தெரியாத பல செய்திகளை இப்பெரும் புலவர் வரலாற்றைப் படித்துத் தெரிந்து கொள்கிறோம்.

இலங்கையின் நீளம் - அகலம் - பரப்பளவு ஆகியவற்றைப் புதிய அளவைக் கருவிகள் ஏதுமின்றி முதன் முதல் மேனாட்டு நில அளவையாளர் வியக்கும் வகையில் அளந்து கூறிய ஈடு இணையற்ற அறிஞர் தமிழாய்ந்த மேதை காசிச் செட்டி என்பது இதுவரை நாம் அறியாத செய்தி.

சென்னைப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டபோது (1857) நடைபெற்ற இளங்கலை (B.A.) வகுப்பு முதல் தேர்வில் தமிழீழத்தைச் சேர்ந்த விசுவநாத பிள்ளை அவர்களும் அவர் மாணவர் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களுமே முதல் இளங்கலைப் பட்டதாரிகளாகத் தேர்ச்சி பெற்றார்கள் என்பது இன்னொரு செய்தி.

பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் அவர்கள் தன்னால் முடிந்தவரை பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழீழப் புலவர்கள் வாழ்வைப் பதிவு செய்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளைப் பற்றியே யாழ்ப்பாணப் புலவர்கள் பாடிக் கொண்டிருந்த காலத்தில் ஒரு கணிகையைக் கதைத் தலைவி ஆக்கிக் 'கனகிபுராணம்' பாடிய நட்டுவச் சுப்பையனார் இந்நூலில் வருகிறார்.

மட்டக்களப்பு வேலாப்போடியும் திருக்கோணமலை அகிலேசம் பிள்ளையும் யாழ்ப்பாணப் புலவர் வரிசையில் இணைந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழீழப் பூஞ்சோலையாய் மணம் பொழிகிறார்கள்.

இந்நூல் மட்டக்களப்பு 'அண்ணாவி' மார் பற்றிய நினைவின் பால் என்னை இட்டுச் சென்றது.

'செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்' நூலில் உள்ள புலவர்களுக்கு இணையான 'அண்ணாவிமார்' மட்டக்களப்பில் செழிப்பான இலக்கியப் பணி ஆற்றியிருக்கிறார்கள்.

இன்று நாட்டுக் கூத்துகளின் பல மூலப்படிகள் நம்மிடம் இல்லை. பெரும் புலவர்களாய் வாழ்ந்த 'அண்ணாவிமார்' வரலாறும் நம்மிடம் இல்லை.

நாவலடி நல்லையா 'அண்ணாவியார்' இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். முன்பு வாழ்ந்த 'அண்ணாவிமார்' பாடல்களை அவர் கூறக் கேட்டு நான் வியந்திருக்கிறேன். சில பாடல்களில் பாரதிதாசனார் பாடலின் வீச்சினைக் கண்டு சிலிர்த்ததுண்டு. அவர்கள் வரலாற்றையும் யாரேனும் தேடித் தொகுத்தால் பயனுள்ள பணியாக அமையும்.

நாவலர், விபுலாநந்தர், தாமோதரம் பிள்ளை, ஞானப்பிரகாசர் போன்றோர் வாழ்க்கை இப்புலவர் வரிசையில் இல்லை எனினும் அவர்கள் வரலாறு நாடறிந்ததே.

இலைமறை காய்களை அல்ல. கனிகளை இன்னூல் நம் கண்களில் இருத்தியுள்ளது.

பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் அவர்களின் தமிழ் வளர்ச்சிப் பணிகளைப் பாராட்டுகிறேன்.




தமிழீழம்

**- காசிஆனந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவரும்,*
*இராசாங்கச் செயலாளரும்,*
*மின்சக்தி எரிபொருள் அமைச்சின்*
*மேலதிகச் செயலாளருமாய*

**திரு.செ. குணரத்தினம் அவர்கள்**
**வழங்கிய**
**முதல் பதிப்புக்கான**

# அணிந்துரை

பழங்காலம் முதலாக இலங்கை, தமிழ் வளர்த்த நிலப்பரப்பாக நிலவி வருகின்றது. இலங்கையின் வடபகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் புலவர்கள் பலர் வாழ்ந்து பலவாய தமிழ் நூல்கள் செய்து தந்துள்ளார்கள். இருபது நூறாண்டுகளுக்கு முன்பே ஈழத்துப் பூதந்தேவனார் என்னும் புலவர் இந்நாட்டினராய்த் தமிழ் வளர்த்திருக்கிறார். அவர் இயற்றிய ஏழு செய்யுள்கள் சங்க இலக்கியத் தொகுதியாய் எட்டுத் தொகையில் இடம்பெற்றுள்ளன.

காளிதாச மகாகவியின் வடமொழிக் காப்பியத்தின் தமிழாக்கமாக இயற்றப்பெற்ற இரகுவம்சம் என்ற காப்பியம் இலங்கைப் புலவராய அரசகேசரி என்பவரால் இயற்றப் பெற்றதாகும். ஈராயிரத்து நானூறு செய்யுள் கொண்ட இயற்றமிழ்க் காப்பியம் அது. தமிழ்நாட்டில் தலபுராணங்கள் எழுந்த காலத்தில் இலங்கையிலும் அத்தகைய புராணங்கள் இயற்றப்பெற்றன. தமிழ்நாட்டில் கோவை, உலா, கலம்பகம், சதகம், தூது அந்தாதி முதலான பிரபந்தங்கள் எழுந்த காலத்தில் இலங்கையிலும் அத்தகைய நூல்கள் படைக்கப்பெற்றன.

தட்சிண கைலாச புராணம், கோணாசல புராணம், திருக்கரசைப் புராணம், புலியூர்ப் புராணம், சிதம்பர சபாநாதர் புராணம் முதலியன இயற்றப் பெற்றன. இன்னும் ஏகாதசிப் புராணம், சிவராத்திரி புராணம் முதலியவையும் இக்காலத்தில் எழுந்தவையேயாம். சூது புராணம், வலை வீசு புராணம், கனகி புராணம் என்பன புதுமையானவை. உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் செய்யுள் நூல்கள் அறுபது இயற்றினார் என்பர். நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஏறக்குறைய பதினையாயிரம் செய்யுள்கள் இயற்றியுள்ளார். ஆடிப் பிறப்புக் கொண்டாட்டம் முதலியவற்றைச் சுவையான முறையில் எளிய தமிழில் பாடிய அவர், பக்திப் பாடல்களையும் பாடித் தந்துள்ளார். கதிர்காமத்து முருகன் மீது அவர் பாடியுள்ள பாடல்களைக் கற்றறிந்தோர் வியந்து போற்றுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"புதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை பாடிப்
பொருவில் கந்தா சுகந்தா என்றுபாடிக்
கதிரைமலை காணாத கண்என்ன கண்ணே
கற்பூர ஒளிகாணாக் கண்ணென்ன கண்ணே."**

இப்படியான அடிகள் சிலப்பதிகாரச் செய்யுள்களை ஒட்டி யமைந்தவையாக விளங்குகின்றன.

இப்படிப்பட்ட புலவர்களை முதன் முதலாக எங்கள் தலை முறையினருக்கு அறிமுகப்படுத்தி அவர்தம் பெருமைகளையும், பாடற் சிறப்புகளையும் தொட்டுக் காட்டிய பெருமை பண்டிதமணி கணபதிப் பிள்ளை அவர்களையே சாரும். ஈழத்துப் புலவர் பெருமைகளைத் தமது எழுத்தாலும் பேச்சாலும் விதந்து போற்றித் தமிழ்நாட்டு அறிஞர்களுக்கும் அவர்தம் சிறப்பினை இனங்காட்டிய பெருமை பண்டிதமணி யாருடையது. திருநெல்வேலி 1951ஆம் ஆண்டில் நடைபெற்ற நான்காம் தமிழ் விழாவில், ''முடிவிலாதுறை சுன்னாகத்தான்'' எனத் தொடங்கும் முத்துக் குமார கவிராசசேகரம் அவர்களின் பாடலைப் பீடிகையாகக் கொண்டு தமிழ் என்னும் தலைப்பில் பண்டிதமணி அவர்கள் பேசியவை பெருவிருந்தாயிருந்தது.

பண்டிதமணி அவர்கள் இலக்கிய இரசனை செய்த சிறப்பு மறக்கக் கூடிய தொன்றன்று. இந்த முயற்சியைப் பண்டிதமணி அவர்கள் 1933ஆம் ஆண்டு முதலாகவே தொடக்கி வைத்துச் சின்னதம்பிப் புலவர், சேனாதிராய முதலியார், முத்துக்குமார கவிராயர் முதலாய எம் நாட்டுப் புலவர்களின் கவித்துவத்தை விதந்து போற்றியுள்ளார். நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் கவித்துவத்தைத் தமிழ் கூறும் நல்லுலகமறிய எடுத்தியம்பிய சிறப்பும் பண்டிதமணியார் அவர்களுக்கே உரியதாகும்.

**"சீராரும் மன்றல் திருநாளில் செந்தீயை
நேராகச் சுற்றி வரும் நேரமதில்
ஆராநல் லன்போ டென்விரலோடு அருகிணைந்த
பொன்புனையும் செல்வப் புதுமலர்க்கை"**

என்று தமது மனைவியாரின் கையினைப் பாடிய புலவரவர்களைக் ''கண்ணுக்கே வேண்டும் கவி'' என்று கேட்டுப் பாடவைத்தவர் பண்டிதமணி அவர்கள்.

பண்டிதமணி அவர்கள் தொடக்கி வைத்த இந்தக் கைங்கரியம் அவரின் அபிமானிகளாலும், மாணாக்கர்களாலும் மேலும் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. இரசிகமணி கனக செந்தி நாதன் இப் பணியினைத் தொடர்ந்த வர்களில் குறிப்பிடத்தக்கவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கும் அறிஞருள் இப்பணியினைச் செய்ய வல்லவர் க.சி. குலரத்தினம் அவர்களே. தமிழ்ப் பண்பாட்டிலும் பாரம்பரியத்திலும் ஊறித் திளைத்த தோடல்லாமல், எழுத்து வன்மையும் ஒருசேரப் பெற்றிருப்பது இவருக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். ''தமிழ் தந்த தாதாக்கள்'' என்ற இவரது அருமையான நூலுக்குப் பிறகு ''செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்'' எனப் பெயரிய இந்நூல் வெளிவருவது கண்டு மகிழ்வுற்றேன். இந்நூல் முதற்பாகமாக அமைய இதனைத் தொடர்ந்து இன்னும் இரு பாகங்களும், இவற்றைத் தொடர்ந்து ''சைவம் வளர்த்த சான்றோர்கள்'' என்னும் நூலும் வெளிவரும் என அறிகிறேன்.

முந்திய அரசாங்கத்தின் காலத்தில் பிரதேச அபிவிருத்தி, இந்து சமய கலாசார, தமிழ் அலுவல்கள் அமைச்சின் செயலாளராக இருந்தபொழுது, ''தமிழ் தந்த தாதாக்கள்'' என்னும் நூலைத் தந்த அன்பர் ஐ.தி. சம்பந்தன் இந்த நூலின் பிரதியொன்றையும் தந்தார்.

இந்த நூல் ஈழத்தில் தமிழ் வளர்த்த சான்றோர் பலரை அறிமுகப்படுத்துகிறது. கற்றறிந்தோர் போற்றவல்ல அழகிய வசனநடையில் அமைந்த இந்நூல் ஈழந் தமிழன்னைக்குக் க.சி. குலரத்தினம் அணிவிக்கும் இன்னொரு அணிகலன் என்பேன். குலரத்தினம் எடுத்துக் கொண்ட பணி மேலும் மேலும் தொடர வேண்டும். இவர் வழிகாட்டிய வண்ணம் ஈழத்துத் தமிழ்ப் புலவர்களின் பங்களிப்புகளும், அவை எழுந்த காலமும், அவற்றின் பின்னணிகளும் ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு உரியவை. அந்த ஆராய்ச்சிக்குத் தோற்றுவாயாகக் குலரத்தினம் அவர்களின் ஆக்கங்கள் அமையவல்லன.

இந் நூலின் ஆசிரியர் மேலும் மேலும் இப்பணியினைத் தொடர்ந்து ஈழத் தமிழ் மாதாவுக்கு மேலும் மேலும் பணி செய்ய வேண்டுமென வழுத்தி, ''செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்'' எனப் பெயரிய இந் நூலினை அறிஞர் பெருமக்கள் விரைந்து ஏற்றுப் போற்ற வேண்டும் என்று தமிழ்ச் சங்கத்தின் சார்பில் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

**செ. குணரத்தினம்**
தலைவர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை உப அதிபரும்,*
*தமிழ்த் துறையில் முதுமாணியும்,*
*கல்வித் துறையில் முதுமாணியும்,*
*சைவப் பெரியாருமாகிய*
திரு. **வை. கா. சிவப்பிரகாசம்** அவர்கள்
அளித்த
முதல் பதிப்புக்கான

# அணிந்துரை

மரபு வழி சமயத் தமிழ்க் கல்வியை முறையாகப் பயின்ற பல்துறை வித்தகர் திரு.க.சி. குலரத்தினம் அவர்கள் தாம் புலத்துறைகளிற் கண்ட முடிபுகளை நூல்கள் மூலமும் செய்தியிதழ்கள் மூலமும் வெளிப்படுத்தி வருகின்றார். தமிழ், சமயம், வரலாறு ஆகிய புலத்துறைகளில் அவர் படைத்த நூல்கள் சிறந்த தகவற் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன.

தமது கல்விச் சேவைக் காலத்தில் ஆற்றிய எழுத்துப் பணியை ஓய்வுக் காலத்திலும் தளர்ச்சியின்றித் தொடரும் பல்கலைப் புலவர் திரு. குலரத்தினம் அவர்கள் ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்களின் தமிழ் வளர்ச்சிப் பணிகள் பற்றி எழுதிய கட்டுரைத் தொடர் இப்போது ''செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்'' என்னும் பெயரில் நூல் வடிவம் பெறுகின்றது. நீண்டகால உழைப்பின் பயனாகத் திரட்டிய தகவல்களைச் சீர்தூக்கித் தமது கருத்துகளைப் பல்கலைப் புலவர் அவர்கள் இந்நூலில் ஒருமுகப்படுத்தி ஆற்றொழுக்காகத் தந்துள்ளார்கள்.

இன்று ஈழநாட்டுப் புலவர்கள், அறிஞர்கள், படைப்பாளிகள், வல்லுநர்களின் தமிழ் வளர்ச்சிப் பங்கு பற்றிய முன்னைய இருட்டடிப்பும் புறக்கணிப்பும் விலகியதனால் அப்பங்களிப்புப் பற்றிய உண்மைகள் பல அம்பலமாகி வருகின்றன. திரு. குலரத்தினம் அவர்கள் ஈழநாட்டுப் புலவர் பெருமக்களின் தமிழ் வளர்ச்சிப் பங்களிப்புக் குறித்த அறிவுக் குறையையும் ஆர்வக் குறையையும் நீக்கும் பொதுநோக்கத்தை நிறைவு செய்யும் முகமாகத் தமது கட்டுரைகளை வரைந்துள்ளமை வரவேற்கத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஈழத்தைப் பொறுத்த அளவில் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு பொற்காலம் எனலாம்'' என்கிறார் திரு. குலரத்தினம் அவர்கள்.

எனவே அவர் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சிறப்பு நோக்கத்தோடு தேர்ந்தெடுத்து அக் காலத்தில் வாழ்ந்த ஈழநாட்டுப் புலவர்களின் ஆக்கங்களிற் காணப்படும் சிறப்புகளைத் தமக்கேயுரிய முறையிற் சுவைபட எழுதியுள்ளார்.

ஈழநாட்டுத் தமிழ் வல்லாரில் புலவர்கள், வித்துவான்கள், உரையாசிரியர்கள், தனிச் சிறப்புடையார் என்றிவ்வாறு பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் வேறுபடுத்திக் கூறும் கருத்துரையைத் திரு. குலரத்தினம் அவர்கள் ''தோரண வாய்தல்'' என்னும் பகுதியில் விதந்து கூறி முன் வைக்கிறார். இவ்வறிமுக விதப்புரையைத் தொடர்ந்து செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் பலர் பற்றிய வரலாற்று விமர்சனக் கருத்துகளையும் பல தகவல்களையும் தாங்கிய கட்டுரைகள் அமைகின்றன. இருபாலைச் சேனாதிராய முதலியார், சுன்னாகம் முத்துக்குமார கவிராயர் என்னும் சைவத் தமிழ்ப் புலவர்கள், சைமன் காசிச் செட்டியார், கரோல் விசுவநாதபிள்ளை என்னும் கிறிஸ்தவத் தமிழ்ப் புலவர் உள்ளிட்ட தமிழ்ச் செம்மல்கள் பலரின் வாழ்வும் வாக்கும், பண்பாடும் பாரம்பரியமும், ஆர்வமும் ஆக்கங்களும், சிந்தனையும் சிறப்பும், இரசனையும் ஈடுபாடும் தொடர்பான தகவல்களையும், விமர்சனக் கருத்துகளையும் விளக்கமாகவும் விரிவாகவும் பல்கலைப் புலவர் அவர்கள் வரைந்துள்ளார்.

கவிராயர்களின் மரபுக் கவிதைகளைப் படித்துச் சுவை காண்பதில் வல்லவரான திரு. குலரத்தினம் அவர்கள் சனரஞ்சகமான பாடல்களையும் நயக்கும் மனப் பக்குவம் உள்ளவர். முத்தகச் செய்யுள் பாடும் வித்தகரான முத்துக்குமார கவிராயர் 'கற்பனைக் கடலிற் கப்பலோட்டிய' சிறப்பை வெளிப்படுத்தும் கப்பற்பாட்டை நயந்து அதனை மக்களிலக்கியமாகப் போற்றும் அருமைப்பாடு குறிப்பிடத்தக்கது. (பக். 65)

யாழ்ப்பாணத்துக்கும் தமிழுக்கும் பெருமையீட்டித் தந்தவர் அறிவுச்சுடர் விசுவநாதபிள்ளை ஆவர். அவரின் தமிழ்ப் பணிகளைத் திரு. குலரத்தினம் விமர்சனம் செய்யும் பாங்கு சிறப்பானது. ஒருபோது நரசிங்கபுரம் வீராசாமி முதலியாரின் வித்துவக் காய்ச்சலைக் கண்டு மனம் பொறுக்காது நாவலர் பெருமான் நல்லறிவுச் சுடர் கொளுத்திய அருமையைப் போற்றும் பல்கலைப் புலவர் அவர்கள், ''நாவலர் அவர்கள் பிள்ளையவர்களின் மும்மொழிப் புலமையையும் பன்முக அறிவையும் வெகுவாகப் பாராட்டி அவர் செய்த நூல்களின் தரத்தையும் மதிப்பிட்டுச் சென்னைப் பட்டணவாசிகளுக்கு உண்மையை நுட்பமாக விளக்கினார்.'' என்று கூறுகிறார். சமய வேறுபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதாமல் புலமைச் சிறப்பை மதிக்கும் நாவலர் பண்பு திரு. குலரத்தினத்திடமும் காணப்படுதல் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

அரிய தகவற் களஞ்சியங்களான இத்தகைய கட்டுரைகள் அடங்கிய ''செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்'' என்னும் நூலை வாசிக்கும் தமிழார்வலர்கள், திரு. குலரத்தினம் அவர்களின் நல்ல தமிழ்ப் பணியை நயந்து பாராட்டுவர்; வியந்து மகிழ்வர் என்பதில் ஐயமில்லை. ஆயின் ஈழநாட்டுத் தமிழிலக்கிய வளர்ச்சியை நுணுகி ஆராய்வோர் செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் பற்றி அவர் கூறும் தகவல்களுக்குரிய மூலங்கள், ஆதாரங்கள், விமர்சனங்கள் அடங்கிய உசாத்துணைகளை அறிந்து கொள்ளவும் அவற்றைப் படித்துப் பயன்பெறவும் விரும்புவர்.

ஈழநாட்டுத் தமிழ் வளர்ச்சியின் பன்முகக் கூறுகளை மதிப்பிடும் நூல்களைத் திரு. குலரத்தினம் தொடர்ந்து எழுத வேண்டும் என இலக்கியவுலகம் எதிர்பார்க்கின்றது.

**வை.கா. சிவப்பிரகாசம்**

''வள்ளுவரகம்'',
வியாபாரிமூலை,
பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சொற்கொண்டல், தமிழாகரர்,
திருமுறை உரைமணி
**டாக்டர் சொ. சிங்காரவேலன் M.A; Ph.D.**
*(தமிழ்ப் பேராசிரியர், அ.வ.அ. கல்லூரி, மயிலாடுதுறை)*
அவர்களின்
முதற் பதிப்புக்கான

# அணிந்துரை

ஈழத்துத் தமிழ்ப் பேரறிஞரும், பல்கலைப் புலவரும் ஆகிய க.சி. குலரத்தினம் அவர்கள் எழுதிய 'செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்' என்ற நூலைப் படித்துப் பார்த்தேன். இவர் எழுதிய 'தமிழ் தந்த தாதாக்கள்' என்ற நூலை முன்னரே படித்திருக்கின்றேன். யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி, சுடரொளி வெளியீட்டுக் கழகத்தாரால் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் யாழ்ப்பாணம் தந்த செம்மல் புலவர்களுக்கு ஓர் அணியாரம்.

19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த குமாரசாமிப் புலவர், இருபாலைச் சேனாதிராய முதலியார், முத்துக்குமார கவிராயர், சைமன் காசிச் செட்டியார், அருணாசலம், சதாசிவம் பிள்ளை, ஹென்றி மாட்டின், சட்டம்பியார் விசுவநாதர் ஆகியோருடைய தமிழ்ப் பணியைச் சான்றாதாரங்களுடன் விளக்கியுள்ளார்.

பல்கலைப் புலவர் அவர்கள் 203 பக்கங்களில் இந்தச் சிற்றாராய்ச்சியைச் செம்மையாக நிறைவு செய்துள்ளார். முதற்கண் அமைந்த தோரண வாய்தல் தக்க முன்னுரையாக அமைந்துள்ளது.

எளிய இனிய நடையில் எழுதப்பட்டுள்ள இந்த நூல் தமிழ் மக்களின் இல்லந்தோறும் இருக்க வேண்டிய நூல் ஆகும். பல்கலைக்கழகங்களில் தமிழாய்வு செய்வோருக்கு ஈழம் வளர்த்த சான்றோர் பற்றி அறிய இந்நூல் தக்க வழிகாட்டியாக இருக்கும் என்பது உறுதி.

இதனை உலகிற்கு வழங்கியருளிய திரு. குலரத்தினம் அவர்களின் பணிக்குத் தமிழ் கூறும் நல்லுலகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வாழ்க செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்!
வாழ்க செம்மல் குலரத்தினம் அவர்கள்!!

மயிலாடுதுறை
8-9-1989

அன்பன்
**சொ. சிங்காரவேலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

**ஐ.தி. சம்பந்தன்** *செயலாளர், சுடரொளி வெளியீட்டுக் கழகம்*

**த**மிழ் கூறும் தென்குமரியின் பெரும் பகுதி கடல்கோளுக்குட்பட, எஞ்சி நின்றிலங்குவதே நமது இலங்கை மணித் திருநாடாகும். இந்நாடு தமிழ் வழங்கும் நாடு மட்டுமன்று, தமிழ் தோன்றிய நாட்டின் ஓர் அங்கமுமாகும். பண்டு தொட்டு இங்கு வளர்ந்து வரும் பைந்தமிழ்ப் புலவர் பரம்பரையினர், தமிழை வளர்த்து வருகின்றனர். அதன் பயனாகத் தமிழர்தம் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி வருகின்றனர்.

இத்தகைய புலவர் பெருமக்களின் அருமை பெருமைகளை 'மறைவாக நமக்குள்ளே' பேசிக்கொண்டிராமல், அவர்களின் 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை' செய்யும் நோக்குடன் ''தமிழ் தந்த தாதாக்கள்'' நூலை வெளியிட்ட நாம், இப்போது ''செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்'' - முதலாம் பாகத்தை வெளியிடுகின்றோம்.

தமிழ்ப் பற்று, சமய ஞானம், வரலாற்றுணர்வு, இலக்கியப் பயிற்சி, பல்துறை அறிவு, பழமையிற் காலூன்றிப் புதுமையை நயக்கும் பண்பு, எழுத்தாற்றல் முதலியவை நிறையப் பெற்ற பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் அவர்களே இத்தகைய நூல்களை எழுதுவதற்கு முற்றிலும் தகுதியானவர்கள் என்பதற்கையமில்லை. நமது நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் இந்நூலை எழுதி உபகரித்த பல்கலைச் செல்வருக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஈழநாட்டறிஞர்களின் தமிழ், சமயப் பணிகளை நன்குணர்ந்து மனந் திறந்து பாராட்டும் பண்பு வாய்ந்தவர் பெருஞ்சொற் கொண்டல் சொ. சிங்காரவேலனார். மாயூரம் தருமையாதீனக் கல்லூரியிலே தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றும் அன்னாரின் கருத்துரை இந்நூலை அணி செய்கின்றது. அவருக்கும் நமது நன்றி உரியது. அரச துறையில் பெரும்பணி வகித்த போதிலும் தமிழ்ப் பற்றும் கவி ஆர்வமும் மிக்க கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. செ. குணரத்தினம் அவர்கள் வழங்கிய மதிப்புரைக்கும், பெரும் தமிழ்ப்பணி ஆற்றி வரும் கோப்பாய் அரசினர் பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு.வை. கா. சிவப்பிரகாசம் அவர்கள் வழங்கிய நல்லுரைக்கும் எங்கள் நன்றி.

தரமான தமிழ் நூல்களை வெளியிடுவதற்கு எமக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வரும் வாசகர்களாகிய உங்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**- ஐ.தி. சம்பந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை - 2

**ஐ.தி. சம்பந்தன்** செயலாளர், சுடரொளி வெளியீட்டுக் கழகம்

**"செ**ந்தமிழ் வளர்த்த செம்மல்கள்" நூலின் முதலாவது பதிப்பு 1989இல் வெளியிடப்பட்டது. இந்நூல் வெளியீட்டு விழாக்கள் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நடைபெற்றன. அன்று இந்நூல் பெருமளவில் விற்பனையாகின. மிகுதி நூல்கள் யாழ்ப்பாணத்திலுள்ள எமது சுடரொளி அச்சகத்தில் இருந்தன. அரசியல் சூழ்நிலை காரணமாகச் சுடரொளி அச்சகத்திற்கு ஏற்பட்ட ஆபத்தால் அந்நூல்களும் அழிவுற்றன. ஆசிரியர் பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் ஐயா வாழ்ந்துகொண்டிருக்கும்போது இந்நிகழ்வு இடம் பெற்றது. இதனால் அவர் வேதனை அடைந்தார். அவரது இரண்டாவது தொகுப்பை வெளியிடுவதற்கு ஆயத்தமாக இருந்த வேளையில் இந்நிகழ்வு இடம் பெற்றது. இதனால் நாம் திட்டமிட்ட வெளியீடுகளைப் பிரசுரிக்க - வெளிக் கொணர முடியவில்லை.

தமிழர்கள் புலம் பெயர்ந்தார்கள். நாமும் புலம்பெயர்ந்து இலண்டன் வந்தோம். அங்கு 1994லிருந்து சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் பணியைத் தொடர்ந்தோம். எமது இலக்கியப் பணிக்கு வாசகர்களிடையே ஆதரவு பெருகியது. நாம் தொடர்ந்து வெளியிட்டு வரும் "சுடரொளி" இருமாத இதழில் ஆசிரியர் திரு. குலரத்தினம் ஐயா எழுதிய "தமிழ் தந்த தாதாக்கள்" நூலை மறு பிரசுரம் செய்து வந்தோம். இதைப் படித்த வாசகர்கள் பலர் பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் அவர்களின் இருநூல்களையும் மறுபிரசுரம் செய்யுமாறு கோரிக்கை விடுத்தனர். தமிழ்நாட்டுப் பேரறிஞர் முனைவர் ஔவை நடராசன் அவர்கள் இலண்டன் வந்திருந்தபோது அவ்வெளியீடுகளை வாசித்த பின்னர் "ஈழத்தில் 15, 16, 17, 18ஆம் நூற்றாண்டில் தமிழை வளர்த்த இப் பெரியார்களின் வரலாறு இன்று முக்கியமானது; இதை மறு பதிப்புச் செய்யுங்கள்" என்று உற்சாகம் தந்தார். எல்லோரதும் அபிலாசைகளை நிறைவேற்றுவதோடு ஆசிரியரையும் நினைவுகூரும் முகமாகவும் 2ஆவது பதிப்பு வெளியிடப் படுகிறது. நூலின் முக்கியத்துவம் பற்றி எமது முதற் பதிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலை மேலும் மெருகூட்டும் வகையில் காத்திரமான அணிந்துரை, முகவுரை தந்து உதவிய முனைவர் ஔவை நடராசன் அவர்களுக்கும், என் நீண்டகால பாசமிகு நண்பர் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றி.

இந்நூலை விரைவாகவும், சிறப்பாகவும் வெளியிட ஆலோசனை நல்கிய காந்தளகம் மறவன்புலவு க. சச்சிதானந்தன் அவர்களுக்கும், அச்சிட்ட உலகத் தமிழர் பதிப்பகம் திரு. இரா. மதிவாணன் அவர்களுக்கும் நன்றி. உலகெலாம் பரந்து வாழும் தமிழர்கள் இந்நூலை வாங்கிப் படித்து ஆதரவு நல்குவார்கள் என்று பூரிப்படைகின்றோம்.

செப்ரம்பர் 2005 — **- ஐ.தி. சம்பந்தன்**

இலண்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## பல்கலைப்புலவர் க.சி. குலரத்தினம்

**ப**ண்டிதமணி அவர்கள் காட்டிய இலக்கிய வழி என்னும் நூலைப் படித்தது போலத் தொடர்ந்து சென்று அவர் குறிப்பிட்ட புலவர்களையும், கவிகளையும், அவர்களோடு தொடர்பு கொண்ட சமகாலத்தவர்களையும் அறிவதோடு, அவர்கள் எல்லோருடைய உபகரிப்புகளையும், பங்களிப்பு களையும் விபரமாக அறிவதில் விருப்பமுண்டாயது.

அதைப் பற்றி அறிந்தவற்றை யெல்லாம் ஏனையோரும் அறிய வைத்தல் வேண்டும் என்பது மற்றொரு விருப்பம். மற்றவருமறிய வைப்பதற்கு எழுத்தில் நூல் வடிவில் கொடுப்பதே நிலையான பணியாகும். எம்முந்தையோர் விட்டுச் சென்ற அருஞ் செல்வங்களை யெல்லாம் எம் பின்னவரும் அறிந்து கொள்வதற்கும் இது சாதனமாகும்.

இந்த வகையில் நூல்களை உருவாக்கும்போது இக் காலத்தில் பகீரதப் பிரயத்தனஞ் செய்ய வேண்டியிருக்கிறது. காகிதாதிகளின் கடும் விலையேற்றமும், கைதேர்ந்த அச்சுக்கலை விற்பன்னர்களின் தட்டுப்பாடும், மின்சாரத்தின் பற்றாக்குறையும், இன்ன பிறவும் இடையூறாய் நிலவும் இக்காலத்தில் பெருமுயற்சி யெடுத்துச் சில இடையூறுகளைப் புறங்கண்டு புத்தகத்தை அச்சேற்றிப் போகும்போது, இது வெகுவாக நீளுவதாயிற்று. எனவே ஒரு சில புலவர்களின் வாழ்வையும் வளமான பணியையும் கோவைப்படுத்தி முதற் பாகமாக வகை செய்துள்ளோம். இதிலே தோரண வாய்தல் என்னும் நுழைமுகமும், பதினெண் புலவர்களின் விபரங்களும் அடங்கும். இதை இவ்வளவிலாவது செப்பமாக வெளிவர உதவிய சுடரொளி அச்சக உரித்தாளருக்கும், சுடரொளி வெளியீட்டுக் கழகச் செயலாளர் நண்பர் அன்பர் ஐ தி. சம்பந்தன் அவர்களுக்கும் இவர் தம் இல்லத்தரசி, குழந்தைகளுக்கும் இதில் ஊக்கங் காட்டிய சிறப்பும் பண்பும் கருதி எம் பணிவான நன்றியும் கடமைப்பாடும் உரியதாகும். இன்னும் அச்சகத்து அச்சுக் கலைவாணர்களுக்கும் எம் பணிவான நன்றியுரியதாகும். இந்நூலைக் கருத்தூன்றிப் படித்துத் தங்கள் அபிப்பிராயங்களைக் கூறி எம்மை இதில் ஊக்குவித்த கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. செ. குணரத்தினம், கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு.வை.கா. சிவப்பிரகாசம், செஞ்சொற்கொண்டல் டாக்டர் சொ. சிங்காரவேலன் ஆகியோருக்கும் எமது உளங்கனிந்த நன்றி.

**க.சி. குலரத்தினம்**

அம்மன் வீதி,
கந்தமடம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. தோரணவாய்தல் ........................................ 19
2. சேனாதிராய முதலியார் ........................................ 38
3. முத்துக்குமார கவிராயர் ........................................ 50
4. சைமன் காசிச்செட்டியார் ........................................ 67
5. அருணாசலம் சுவாமிநாதர் ........................................ 81
6. அருணாசலம் சதாசிவம்பிள்ளை ........................................ 89
7. ஹென்றி மாட்டின் ........................................ 100
8. சட்டம்பியார் விசுவநாதர் ........................................ 108
9. கறோல் விசுவநாதபிள்ளை ........................................ 119
10. வல்லுவெட்டி குமாரசுவாமி முதலியார் ........................................ 132
11. நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை ........................................ 140
12. ஆராய்ச்சியார் கந்தப்பிள்ளை ........................................ 150
13. நட்டுவச் சுப்பையனார் ........................................ 155
14. மொட்டை வேலாப் போடியார் ........................................ 162
15. வே. அகிலேசபிள்ளை ........................................ 167
16. குமாரகுலசிங்க முதலியார் ........................................ 175
17. கனகசபைப் புலவர் ........................................ 182
18. வைமன் கதிரைவேற்பிள்ளை ........................................ 189
19. சிவசம்புப் புலவர் ........................................ 205


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எடுத்தாண்ட பிரசுரங்கள்

1. உதயதாரகை இதழ்கள்
2. பாவலர் சரித்திர தீபகம்
3. யாழ்ப்பாண வரலாற்றுக் குறிப்புக்கள்
4. ஸ்ரீ லங்கா சஞ்சிகைகள்
5. சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் நூல்கள்
6. கணேச ஐயர் அவர்கள் நூல்கள்
7. ஈழகேசரி ஆண்டு மலர்கள்
8. பண்டிதமணி - இலக்கிய வழி
9. கலைச்செல்வி - சிற்பி
10. கனக. செந்திநாதன் கட்டுரைகள்
11. மட்டக்களப்புத் தமிழகம்
12. ஈழத்துக் கவிதைக் களஞ்சியம்
13. எவ்.எக்ஸ்.சி. நடராசா கட்டுரைகள்
14. கழகத் தமிழ்ப் புலவர் வரலாறுகள்
15. செந்தமிழ் மாத இதழ்கள்
16. செந்தமிழ்ச் செல்வி இதழ்கள்
17. தமிழ்ப் பொழில் இதழ்கள்
18. தினகரன் ஞாயிறு இதழ்கள்
19. வீரகேசரி ஞாயிறு இதழ்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கடவுள் துணை

# தோரணவாய்தல்

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் தமது இலக்கிய வழி என்னும் நூலில் பழைய யாழ்ப்பாணத்தின் இலக்கிய இரசனையை மறந்து போனவர்களுக்கு ஞாபகஞ் செய்யும் வகையைக் கூறியுள்ளார். அவர் வித்துவான்களைப் புலவர்கள் வரிசையில் வைத்துக் கொள்ள விரும்பவில்லை. இனித்த கவிதைகள் செய்தவர்களையே புலவர் வரிசையில் வைத்துக் கொள்ள விரும்பியவர். தமிழருள் மகாமேதைகள், தருக்கக் கோடரிகள் இவர்களையும், இவர்களைப் பின்பற்றியவர்களையும் சொல்லுவதற்குப் பண்டிதர்கள் என்று மற்றொரு வரிசையை எடுத்துக் கொள்ளலாம் என்றவர். இலக்கிய இரசத்தைத் தாரை தாரையாகப் பொழிந்து கொண்டிருந்த வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை அவர்களை உரைநயம் சொல்லுகின்ற உரையாசிரியர் வகுப்பிலேதான் வைத்தவர். பரீட்சை எடுக்காத பண்டிதர் என வழங்கிய குருகவி மகாலிங்கசிவம் அவர்கள் கற்பனா சக்திக்கு ஊற்றான ஓர் இனித்த உபந்நியாசகர் என்று மதித்து அவருக்கென்று ஒரு தனித்த இடம் வேண்டும் என்றவர். தெல்லிப்பழை வித்துவான் சிவானந்தையர் அவர்களின் விவேகம், புலோலிக் கதிரவேற்பிள்ளை அவர்களின் மகாதிறமை தனித்தனிப் பெருமைக்குரியவர் என்றவர். இன்னும் எத்தனையோ மதிநுட்பம் வாய்ந்தவர்கள் தமிழ்ப்பணி செய்தவர்கள் இருக்கின்றார்கள் என்றவர், ஆறுமுகநாவலர் அவர்களின் தனிப் பெருமை பிரசித்தமானது என்று போற்றியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக இங்கே பெயர் குறித்துச் சொன்னவர்களும், குறிப்பிடாமல் உணர வைத்தவர்களும் ஆகிய எல்லாரும் ஈழ மண்டலத்தின் அறிவுக் கண்கள்; தவப் புதல்வர்கள். இவர்கள் ஒவ்வொருவரையும் தமிழ் மாணவ மாணவிகள் தெரிந்திருக்க வேண்டும் என்றவர்.

இன்னும் புலவர்கள் என்றால் அறிஞர்கள் என்று கருத்துக் கொள்ளலாம் என்றவர். நல்லறிஞர்களாய் நன்மைக்குப் பாதகம் இல்லாத இனிய கவிகள் புனைந்தவர்களையே புலவர்கள் என்று எடுத்துக்காட்ட முயன்றவர். தமிழறிஞர்களின் பெயர்களை நாம் மறந்துவிடக் கூடாது என்றும் இப்பெயர்களை மனத்தில் இருத்திக் கொண்டால், பிறகு வளர வளரப் பெரிய பயன் உண்டாகும் என்றும் கூறியவர்.

பழைய புலவர்கள் பலர் பரம்பொருளைப் பற்றியும், பெரும் பொருள்களைப் பற்றியும் சொன்னார்களேயன்றித் தம்மைப் பற்றி எவரும் சொல்லவில்லை. இது சங்க காலப் புலவர் முதலாகப் பாரம்பரியப் புலவர்கள் கையாண்டு வந்த மரபாகும். சென்ற காலத்துப் புலவர்களைப் பற்றிப் பின்வந்த புலவர்கள் சொன்னவற்றையே இலக்கிய வரலாற்றாசிரியர்கள் எடுத்துக் கூறிவந்துள்ளார்கள்.

தமிழ் நூல்கள் செய்தவர்கள் சிறப்புப் பாயிரம் கூறும் மரபில் ஆக்கியோன் பெயர், வழி, எல்லை, நூற்பெயர், யாப்பு, முதலியபொருள், கேட்போர், பயன் என்னும் எட்டுப் பொருள்களும்; இவற்றின் மேலாக காலம், கலன், காரணம் என்பனவும் கூறியதும் உண்டு.

## செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்

இவ்வாறாக எங்கள் நாட்டில் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் இனிது வாழ்ந்து, இன்பத் தமிழ்ப் புலவர்களா யிருந்தவர்கள், பெருங் காப்பியங்கள் பாடும் தகுதியுடையோ ராயிருந்தும், சில தனிப் பாடல்கள் பாடியும் இந்நாட்டிலேயன்றித் தாய் நாடாகிய தமிழ்த் திருநாட்டிலேயும் போதிய புகழ் பெற்றவர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டவர்கள் எங்கள் புலவர்களைக் காளமேகம், பலபட்டடைச் சொக்கநாதர் போன்றோர் வரிசையில் இடம் பெறத் தக்கவர்கள் என்று மதித்தும் உள்ளார்கள். எங்கள் புலவர்கள் கல்விப் பயிற்சி குறைந்தோர் நாவை யசைத்து, இதயத்தைத் தொட்டமை யோடு, கவிச் சுவையை மக்கள் மத்தியில் சனரஞ்சகமாக்கியும் விட்டனர் எனலாம்.

இப் புலவர்கள் சிலர் தம் தாய்மொழியாகிய செந்தமிழேயன்றி வடமொழியையும் நன்கறிந்தவராவர். இவர்கள் யாத்த பாடல்கள் பல இலக்கியச் சுவையோடு, பொருட் சுவை ததும்பியனவாயும் உள்ளன. பண்ணில் தோயப் பொருள் முடிப்புக் கட்டிப் பாடும் பாவலர் நம் முந்தையோர் என்றும், அவர்களை ஆதரித்த நம் நாட்டரசர்கள் அவர்களுக்கு எண்ணிப் பொன் முடிச்சுக் கட்டி ஈந்தனர் என்றும் எம் முந்தையோர் புலவர், புரவலர் தொடர்பை விளக்கிப் பாடியும் உள்ளார்கள். இவ்வாறாகக் கவிச்சுவை தேடும் உணர்வு மிகுதியாயிருந்த காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டு எனக் கருதின் மிகையாகாது. எங்கள் புலவர்கள் சிலர் சிலேடை சமுத்திகள் அமைந்த சித்திர கவிகளையும் பாடித் தந்துள்ளார்கள். இவர்கள் எமக்குச் செய்து போன விருந்து பெரு விருந்தாக நிலவுகிறது. சிந்தைக் கினிய செந்தமிழ் விருந்தை மாந்துவதற்குச் சேர வாருங்கள் என்று இளம் சந்ததியினரை வரவேற்கின்றோம். வாருங்கள்.

## குமாரசாமிப்புலவர் அவர்கள் தந்த உபகரிப்பு

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களை நாவலர் பாரம் பரியத்தில் உருவாக்கிய சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் தந்த தமிழ்ப் புலவர் சரித்திரம் 1916ஆம் ஆண்டில் வெளியானது. அதன் இரண்டாம் பதிப்பு 1951இல் அவர் தம் மைந்தர் முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை அவர்களால் வெளியிடப்பெற்றது.

இரண்டாம் பதிப்பில் மேலும் இருபத்தாறு புலவர்களின் வரலாறுகள் வந்துள்ளன. இந்நூலில் இடம்பெற்ற இருநூற்றெட்டுப் புலவர்களுள் பலர் தமிழ் நாட்டவரேயாவர். இதில் ஈழநாட்டவர் சிலரின் வரலாறுகள் வந்துள்ளமை புலவர்களை எடை போட்டறிவதற்கு வசதியளிப்பதாயுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் அவர்கள் தமது நூலின் உபக்கிரமணிகை என்னும் நீண்ட முகவுரையில் தமிழ்ப் புலவராயினோர் யாவர் என்றும் வரையறை செய்துள்ளார். ''தமிழ் மொழிக்கணுள்ள இலக்கிய இலக்கணங்களைக் களங்கமறக் கற்றுத் தெளிந்த மெய்யுணர்வும், பிரபந்தஞ் செய்யும் பெருவலியுமுடையவர்கள்'' என்பர். புலவர் எனப்படுவோர் யாவர் என்பதை விளக்கும்போது, ''புலவர் என்பது அறிஞர் எனப் பொருள்படும். புலம் - அறிவு. அர் - ஒரு விகுதி. வடநூலார் கூறும் வித்துவான் என்பதும் இப்பொருட்டு. வித் - அறிதல், வான் ஒரு விகுதி'' என்பர். இன்னும் வடநூலார் கூறும் நாமங்களாகிய தோடஞ்ஞன், கோவிதன், புதன் முதலியனவும் அறிவுடைமை பற்றி வந்தனவாகும் என்பர். தோடஞ்ஞன் வழுக்களை அறிவோன். தோடம் - வழு. ஞன் - அறிவோன்.

இனிப் புலவரைப் பற்றிக் கூறுமிடத்து, ''புலவராவார் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழும் முறையே பயின்று ஐந்திலக்கண நெறிகளும் தழுவிக் கருங்கவி, இன்பகவி, அருங்கவி, பெருங்கவி என்னும் நால்வகைக் கவிகளையும் பாடும் வலியமைந்த அறிஞர் என நிகண்டு நூலார் கூறுவர்.

கருங்கவி - ஆசுகவி, அருங்கவி - சித்திரகவி. புலவர் என்பார் கவி, கமகன், வாதி, வாக்கி என நால்வகைப்படுவர். கவியாவான் கருங்கவி முதலிய நால்வகைக் கவிகளையும் பாடும் தொழில் நல்ல புலவன். கவி - பண்டிதன், கமகனாவான் பல்கலையுணர்ச்சியானும் மதிநலவலியானும் கற்றுணராத நூற்பொருள்களையும், கற்றுணர்ந்தவன் போலக் கற்றுணர்ந்தோர் வியக்குமாறு போதிக்கும் புலவன். கமகன் போதிப்பவன். வாதியாவான் ஏதுவும் மேற்கோளும் எடுத்துக்காட்டிப் பரமதங்களை மறுத்துச் சுவமதம் ஒன்றையே நிறத்தி வாதிக்கும் புலவன். வாதி - வாதஞ் செய்பவன். வாக்கியாவான் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கையும் திறம்பட விரித்துரைக்கும் புலவன். வாக்கி - வாக்கில் வல்லவன்.

## புலவர்கள் பெற்ற பெருமதிப்பு

புலவர்கள் பலர் பிரபுத்தன்மையுடைய செல்வர்கள் விரும்பிக் கொடுத்த பொருளும் வரிசையும் பெற்று, வறுமை என்பது சிறிதும் அறியாது வாழ்ந்தனர். தமிழ்நாட்டில் சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் சேதுபதியவர்களும் அவரைப் போன்ற செல்வர்களும் புலவர்களை ஆதரித்தமை போல, எங்கள் நாட்டில் வைத்திலிங்கச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டியார் போன்ற செல்வப் பிரபுக்களும் மிக்க வரிசை கொடுத்துப் புலவர்களைப் போற்றி வந்தார்கள். புரவலர்களின் புகழும் புலவர் கவிகளால் இன்னும் விளங்குகின்றன.

புலவர்களை அரசர்களும் பிரபுக்களுமன்றித் திருக்கைலாச பரம்பரைத் திருவாவடுத்துறையாதீனம், தருமபுரவாதீனம், திருவண்ணாமலையாதீனம் முதலிய மடாலயங்களிலே அதிபதிகளாய் வீற்றிருந்த தேசிகமூர்த்திகளும் நன்கு மதித்துப் பேணி வந்தார்கள்.

இங்ஙனம் பேணப் பெற்ற பெரியவர் தம் வரிசையில் முன்னோடி யாய் விளங்கியவர் யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியூரினராய காராளபிள்ளை ஞானப்பிரகாசர் என்னும் தம்பிரான் சுவாமிகளாவர். இவர் இற்றைக்கு முந்நூற்றறுபது ஆண்டுகளுக்கு முன்னர் அங்குச் சென்றவர். இவரைத் தொடர்ந்து ஆதீனத்தில் பெரும் புகழ் பெற்றவர் வரணியூர் தில்லைநாதர் என்னும் பெரியாராவர்.

சென்ற நூற்றாண்டிலேயும் அண்மைக் காலத்திலேயும் அங்கே மதிப்புப்பெற்ற நம்மவர் வரிசையிலே ஆறுமுக நாவலர் அவர்கள். சபாபதி நாவலர் அவர்கள், அம்பலவாண நாவலர் அவர்கள், செந்திநாத ஐயர் அவர்கள், குமாரசுவாமிப் புலவர் அவர்கள், சாமிநாத பண்டிதர் அவர்கள் தாமோதரம் பிள்ளை அவர்கள், விசுவநாத பிள்ளை அவர்கள், முத்துக்குமார தம்பிரான் அவர்கள், சேர் இராமநாதன் அவர்கள், நடேச பிள்ளை அவர்கள் முதலானோர் குறிப்பிடத்தக்க பெரியவர் களாவர்.

இங்ஙனமாக இவர்கள் அன்றும் அண்மைக் காலத்திலும் அங்கே பெருமதிப்பும் பாராட்டும் பெறுவதன் முன், பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலேயே திருக்கைலாய பரம்பரைத் தம்பிரான் சுவாமியாய கனகசபாபதி யோகி என்பார் இங்கே எழுந்தருளி வைத்திலிங்கச் செட்டியார் மனையிலிருந்தவாறு எம்மவருக்குப் பாரம்பரியத் தொடர்பை உண்டாக்கினார்.

## பாரம்பரியம் வளர்ந்த வண்ணம்

திருக்கைலாச பரம்பரைத் தொடர்பை ஈழத்திருநாட்டில் உண்டாக்கிய கனகசபாபதி யோகியாரைக் கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள் எனவும் வழங்கினார்கள். தம்பிரான் சுவாமிகளிடம் முறையாகக் கற்ற மாணாக்கர் வரிசையில் இருபாலை நெல்லைநாத முதலியார், இவர் மைந்தன் சேனாதிராய முதலியார், நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமானந்தர் கந்தப்பிள்ளை, மாதகல் மயில்வாகனப் புலவர், வண்ணைச் சிவன்கோயில் ஸ்தாபகர் வைத்திலிங்கச் செட்டியார் முதலானோரும் இன்னும் சிலருமாவர்.

தம்பிரானிடம் கற்று வல்லவர்களாய மாணாக்கர்களின் மாணாக்கர்கள் நாடெங்கும் நல்ல பாரம்பரியத்தை உண்டாக்கி விட்டார்கள். சேனாதிராச முதலியார் கல்விப் பாரம்பரியத்தில் கோப்பாய் அம்பலவாண பண்டிதர், காரைநகர் கார்த்திகேச ஐயர், நல்லூர் ஆறுமுக நாவலர், நல்லூர் சம்பந்தப் புலவர், நல்லூர் மனப்புலியார், சரவணமுத்துப் புலவர், நீர்வேலி பீதாம்பரப் புலவர், கந்தரோடை நாகநாத பண்டிதர், வல்லிபட்டித்துறை ஏகாம்பரப் புலவர், வட்டுக்கோட்டைச் சண்முகச் சட்டம்பியார் மறவன்புலோ சயம்பர் முதலானோர் கற்று வல்லவரானார்கள். இங்ஙனமாகவே அம்பலவாண பண்டிதர் வழியில் மத்திய கல்லூரி அதிபர் பீற்றர் பேர்சிவல், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் முதலானோர் உருவானார்கள்.

இங்ஙனமாகவே நல்லூர் கார்த்திகேய ஐயர் மாணாக்கர்களுள் மட்டுவில் வேற்பிள்ளை என்னும் உரையாசிரியர், நல்லூர் வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளை என்னும் பொன்னையா உபாத்தியாயர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கந்தரோடை நாகநாதபண்டிதர் மாணாக்கர்களுள் சிறந்து விளங்கியவர் நீர்வேலி சிவசங்கர பண்டிதர் என்னும் பெரியார். அடுத்து வட்டுக்கோட்டை சண்முகச் சட்டம்பியார் உருவாக்கிய விற்பத்தி மான்களுள் தலையாயவர் அருணாசலம் சதாசிவம்பிள்ளை என்னும் ஆனோல்ட் அவர்களாவர். பாவலர் சரித்திரம் பண்ணிய பண்பாளர் இவரேயாவர்.

இவ்வாறாக அடுத்துவந்த ஞானப் பரம்பரையில் குமாரசுவாமிப் புலவரின் பரம்பரையும், பொன்னம்பலபிள்ளையின் பரம்பரையும், சிவசங்கர பண்டிதரின் பரம்பரையும் மிகப் பலராவர். சிவசங்கர பண்டிதரின் மாணாக்கருள் சபாபதி நாவலரும் ஒருவர்.

சபாபதி நாவலர் பரம்பரையில் வந்தவர்களுள் மாவிட்டபுரம் விசுவநாதபிள்ளை, சுழிபுரம் சிவப்பிரகாச பண்டிதர், வதிரி தாமோதரம்பிள்ளை முதலானோருடன்; தமிழ்நாட்டுச் சிதம்பரம் சோமசுந்தர முதலியார், மாகறல் கார்த்திகேய முதலியார், திருமயிலை சிங்காரவேலு முதலியார், திருமயிலை பாலசுந்தர முதலியார், சிதம்பரம் சிவராமச் செட்டியார் முதலானோரும் ஒரு சிலராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபாபதி நாவலரைப் போலச் சிவசங்கர பண்டிதரிடம் படித்தவர்கள் வரிசையில் மாதகல் ஏரம்பு ஐயர், புன்னாலைக்கட்டுவன் கதிர்காமு ஐயர், ஆவரங்கால் நமச்சிவாயப் புலவர், நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதர் (இவர் சிவசங்கர பண்டிதரின் மைந்தன்) சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், சுன்னாகம் முருகேசு பண்டிதர், கீரிமலை சபாபதிக்குருக்கள் முதலானோராவர்.

இவர்களுள் புன்னாலைக்கட்டுவன் கதிர்காமு ஐயரால் உருவாக்கப் பெற்றவர்களுள் புன்னாலைக்கட்டுவன் கணேசையர். *(1878-1958)* குப்பிழான் செந்திநாதையர் (காசிவாசி), சரவணமுத்துப் புலவர் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

## முத்தமிழ் வளர்த்த முந்தையோர்

நந்தமிழாய செந்தமிழ் எங்கே வழங்கினாலும் இதனை நற்றமிழ், பைந்தமிழ், ஒண்டமிழ், தீந்தமிழ் என்றெல்லாம் வழங்குபவர்கள் முத்தமிழ் என வழங்கத் தவறுவதில்லை. எந்தமிழ் முத்தமிழ் என வழங்கும் முறையில் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனப் பெருமை தருவதாகும்.

ஒரு காலத்தில் இசைத் தமிழ் செவிவழியாலும் நாடகத் தமிழ் கண் வழியாலும் சமணருக்குக் கேட்டுமுட்டு, கண்டுமுட்டு உண்டாகிக் காமம் பயப்பன என ஒதுக்கப்பட்டதும் உண்டு. பின்னர்த் தேவார காலத்தில் இசைத் தமிழின் உயிர் நாடியாய பண், பழைய மதிப்புப் பெறுவதாயிற்று. தேவாரப் பதிகங்கள் பெரும்பாலானவை பண்ணிற்றோய்ந்தனவேயாம். பண்ணின் பயனாம் இன்னிசை எனப் பெரிய புராணம் போற்றுகிறது.

திருக்கோயில்கள் பண்சுமந்த இசைத்தமிழை வளர்த்த பான்மையில் நாடகத்தையும் வளர்த்தன. நாடகத்தால், நடிப்பால், பாவனையால் பக்தி வளரத் தமிழும் வளர்ந்தது. நாடக வளர்ச்சியில் எம் நாட்டவரின் பங்களிப்புப் பெரிதாகும். ஊர்கள் தோறும் இசைவல்லார் கீர்த்தனைகள், கும்மிப் பாடல்கள், கரகப் பாட்டு, காவடிப் பாட்டுப் பாடிய பணியோடு நாடகங்களும் எழுதி மேடையேற்றினார்கள். நாவலரின் முன்னோர் சிலர் பல நாடகங்கள் எழுதினார்கள்.

நாடகத் துறையில் வெகுவாக ஈடுபட்ட நம்மவர் சிலர் புகழ்பெற்ற நாடிகளாயிருந்தார்கள். ஊர்கள் தோறும் கூத்துக் கொட்டைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியாக எழுந்தன. முழுநிலா வேளைகளில் தரமான நாடகங்கள் மேடையேற்றப் பெற்றன. ஒலி பெருக்கி வசதியில்லாத காலத்தில் ஆயிரவர் அமர்ந்து பார்த்துக் கேட்கும் வகையில் நடிகரின் உரையாடலும் பாட்டும் மகிழ்வித்தன.

தரமான நடிகர் சிலரின் பெயர்களோடு அவரவர் நடித்த பாத்திரங்களின் பெயரும் சேர்ந்து வழங்கியமை பாரம்பரியத்திலும் தொடர்ந்து வழங்கலாயின. விசுவாமித்திரர் தம்பு, சந்திரமதி சின்னையா, இயமன் முருகேசு, வேடன் சின்னத்தம்பி முதலிய பெயர்கள் இன்றும் ஒலிக்கின்றன. பெண்கள் மேடையேறாத அக் காலத்தில் நடையுடை பாவனை சாயல் குரல் எல்லாம் அமையப் பெண் வேடந் தாங்கியவர்களின் நடிப்புத் திறமையும் பெரும் புகழீட்டியது. ஊர்கள் தோறும் உருவான நாடக சபைகள், மன்றங்கள் அதிகமாயிருந்தன.

## பலவகை நூல்களும் எழுந்த காலம்

தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் நூற்பயன் அறம், பொருள், இன்பம், வீடு கூறலேயாகும் என்பர். இவற்றுள்ளும் வீடு என்பது சிந்தையும் மனமும் செல்லா நிலைமைத்தாகலின் முன்னைய மூன்றையுமே மூதறிவாளர் முற்படக் கூறிச் சென்றார்கள் என்ப. அடுத்து வந்தவர்கள் அப்பாலும் கூறிச் சென்றதாக இலக்கிய வரலாற்றாய்வுக்காரர் இயம்புவார்.

சோதிடமும் சொகினம் என்னும் சகுன சாஸ்திரமும், வக்கினகிரந்தமும், மந்திரவாதமும், மருத்துவநூலும், சாமுத்திரிகா இலட்சணமும், நிலத்து நூலும், ஆயுத நூலும், ஆடை நூலும், அணிகல நூலும், அருங்கல நூலும் இன்ன பிறவும் சொன்ன புலவர்களைப் பற்றியும் அறியக் கிடக்கின்றன. இவை யாவும் செய்தவர்கள் செந்தமிழ் வளர்த்த செம்மல்களே யாவர்.

பேராசிரியர் மு. அருணாசலம் அவர்கள் முன் மொழிந்தவாறு, மக்கள் வரலாற்றை ஒட்டியே இலக்கியமும் வளர்ந்து வரும். மக்கள் வரலாற்றில் நாட்டு வரலாறு, சமய வரலாறு என இரண்டு போக்குகள் உள்ளன. சமயத்தின் வரலாறும் அறிந்தால்தான் உண்மையான இலக்கிய வரலாற்றை அறிய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மைப் பொறுத்த அளவில் பொற்காலம்

ஈழத்தைப் பொறுத்த அளவில் பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு பொற்காலம் எனலாம். இந்த நூற்றாண்டிலே அச்சுக்கலை அரங்கத்துக்கு வந்தமை பெருமளவில் பக்கத் துணையாக அமையப் புலவர் பலர் நூல்களை எழுதி வெளியிடுவதில் தனியார்வம் கொண்டிருந்தனர்.

இக் காலத்தவருள் தமிழ், வடமொழிப் புலமையோடு உலகறிந்த ஆங்கிலமும் தலையெடுப்பப் பலர் மும்மொழிப் புலவர்களாய் மொழித் தொண்டு புரியலானார்கள். எவர் எதைத்தான் சொன்ன போதிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புலவர் பெருமக்களுள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களே தமிழ் கூறும் நல்லுலகத்தில் நாயகமணி போல எழுந்தருளியிருந்தார். அவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் இருபத்தோர் ஆண்டுகளையும் இறுதி இருபத்தோர் ஆண்டுகளையும் காணாவிட்டாலும் 1822- 1876 ஆண்டுக் காலத்தில் வாழ்ந்தார்.

அவர் பிறந்து மொழி பயின்ற காலத்திலேயே புகழுடன் உலாவினார். பன்னிரண்டாம் வயதில் ஆங்கிலம் பயிலப் போன போதே தமிழில் பண்டிதருக்கான தராதரமுடையவராயிருந்தார். இங்ஙனமாகவே வைமன் கதிரைவேற்பிள்ளை, சி.வை. தாமோதரம் பிள்ளை, குப்பிழான் செந்திநாத ஐயர் முதலானோரும் இருந்தனர் என்ப.

பொற்காலம் எனத்தகும் பத்தொன்பதாம் நூற்றாண்டிற் பல கோயில்கள் புனருத்தாரணஞ் செய்யப் பெற்றுக் கும்பாபிடேகம் மகத்துவத்தால் சாந்நித்தியம் பெறலாயின. தரமான புலவர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள் தத்தம் பிரதேசத்துக் கோயில் மூர்த்திகளுக்குப் பள்ளி எழுச்சி, ஊஞ்சற் பதிகம், உலாப் பிரபந்தம் முதலாய நூல்களைப் பாடி மக்கள் மத்தியில் சமய மறுமலர்ச்சியை உண்டாக்கினார்கள்.

நாவலர் காட்டிய வழியில் கோயில்கள், மடங்கள் தோறும் புராண படனங்கள் நடைபெற்றன. கந்தபுராணம் யாழ்ப்பாணக் கலாச்சார நூலாகியது. இன்னும் திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், பிள்ளையார் கதை முதலிய நூல்கள் மக்கள் மத்தியில் பக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மையை வளர்த்து வந்தன. இந்த வகையில் மொழிவளம், இலக்கிய அறிவு, ஒழுக்கம், கலைத்திறன், உழைப்பு என்பனவும் பெருகி மக்கள் வாழ்வை மலர்த்தின. இத்தகைய மலர்ச்சியின் பயனாகப் பல நூல்கள் மலர்ந்து மணம் பரப்பி வந்தன. மக்கள் பலர் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் ஆர்வத்தோடு அறிந்து வந்தார்கள். வைதிகம் நன்கு பரவியதால் வேதப் பயனாம் சைவம் என்னும் கோட்பாடும் பெருமளவில் வியாபக முற்றிருந்தது.

## அன்று விதைத்த விதை

இன்று தமிழ் வளர்ச்சியும் தமிழ் இலக்கிய அறிவும் நாட்டில் இளஞ்சந்ததியினரிடையே பெருகி வருவதன் காரணமாகத் தமிழியல் வளர்ச்சிக்கான வழிகோலப் பெற்றுப் பல்கலைக்கழகங்கள் என்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் வரிசையும் அதிகரிக்கின்றன. இவை அன்று விதைத்த விதைப்பின் விளைவேயாகும்.

இன்னும் நாம் பிரமிப்படையும் விதத்தில் பிற நாட்டுப் பல்கலைக்கழகங்கள் பல நாள்களாகத் தமிழாய்வு செய்கின்றன. நம்மவர் பலர் தத்தம் முதுமானி, கலாநிதிப் பட்டங்கள் பெறுவதற்கு அந்நாடுகளுக்குச் சென்று புலம் புரிந்து வருகின்றனர்; பழையன கண்டும் வருகின்றனர்.

இன்றைய சூழ்நிலையில் இலக்கிய வரலாற்றைக் கற்போர் தத்தம் பிரதேசத்துப் புலவர்கள் செய்த உபகரிப்பையும் கருத்திற் கொண்டு உழைக்கின்றார்கள். இந்த வகையில் நாம் எங்கள் ஈழத் திருநாட்டின் உபகரிப்புகளை நன்காராய்ந்து உரிமை கோருவதற்கும் பெருமிதமடைவதற்கும் தகுந்த காலம் வந்துள்ளது. புதிய முடிவுகள் பல பழைய விநோதரச மஞ்சரி வைபவ நிகழ்ச்சிக் கூறுகளை ஒதுக்கி தள்ளிவிட்டன.

மதிப்புக்குரிய தமிழ்த் தாதா தென்கலைக் கலாநிதி மகா மகோபாத்தியாய ஐயர் அவர்கள் அன்று ஆறுமுக நாவலர், சபாபதி நாவலர், தாமோதரம் பிள்ளை முதலானோரின் உபகரிப்புகளையும் பெறு பேறுகளையும் இருட்டடிப்புச் செய்து, மாசுபடுத்தி மறைத்த சங்கதிகள் யாவும் அம்பலமாகிவிட்டன. தகுந்த முறையில் தக்க பேராசிரியர்கள் மறைக்கப்பட்டிருந்தவற்றை நம்பியாண்டார் நம்பி போல வெளிக்கொணர்ந்து தூசு நீக்கிக் குன்றின் மேல் தீபமென ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலவைத்துள்ளார்கள். இவர்களின் தூண்டுதலின் பயனாகப் பல ஆராய்ச்சி நூல்கள் காலந்தோறும் வெளிவந்துள்ளன.

வடவேங்கடம் தென்குமரியாயிடை தமிழ் கூறும் நல்லுலகம் எனக் கொண்டவர் கேட்கும் வண்ணம் குமரிக்கண்டத்தின் கோடியிலே தமிழ்க் குரல் கொடுத்தவர்கள் ஈழத்திரு நாட்டவராவர். இந்த வகையில் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு நெறியில் ஊறிய இலக்கண இலக்கிய ஊற்றுகளைச் செம்பாட்டு ஊற்றுகள் என்று கலாநிதி கா. சிவத்தம்பி அவர்கள் செம்மையாகக் கூறியுள்ளார்.

இனி என்றோ எப்பவோ ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை அவர்கள் கூறினாற் போல் தமிழ் மொழியில் கணிதம், மறைஞானம். வைத்தியம், தத்துவம், இரசாயனம், அகராதி முதலியன யாவும் எங்கள் புலவர்களால் எழுதப் பெற்றிருக்கின்றன.

## ஈழத்துப் புலவர்கள்
## வரலாற்றின் வரலாறு

தமிழ் கூறும் நல்லுலகத்தில் ஒன்றாகிய இலங்கை. சேரமண்டலம். சோழ மண்டலம், பாண்டி மண்டலம், தொண்டை மண்டலம் என்னும் மண்டலங்களின் வரிசையில் ஈழமண்டலம் என நிலவி வருகின்றது. இன்று பூவுலகமெங்கும் தமிழ் கூறும் நல்லுலக மாவதற்கான சாத்தியக் கூறுகள் புலனாகின்றன.

முன்னர் ஒரு சமயம் தமிழ்நாட்டுப் புலவர் ஒருவர் ஈழநாட்டினர் தமிழில் என்ன செய்தார்கள் என்று இகழ்ச்சிக் குறிப்போடு கேட்ட போது அவருக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்துவதற்கு ஆறுமுக நாவலர் அவர்கள் எழுதிய ஒரு கட்டுரையே காரசாரமான புலவர் வரலாறாயமைவதாயிற்று.

நாவலர் அவர்களின் சமகாலத்தவராய புத்தளத்துக் கற்பிட்டியைச் சேர்ந்த காசிச் செட்டி என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய புளூட்டாக் என்னும் புலவர் வரிசையே முதலில் எழுந்த புலவர் வரலாறாகும். அவ்வரலாற்று நூலைத் தமிழ்ப்படுத்துவதிலும் பார்க்கப் புதிதாய் ஒன்றை எழுதப் புகுந்த அருணாசலம் சதாசிவம் பிள்ளை என்பார் வேறு புலவர்கள் வரலாற்றையும் சேர்த்துப் பாவலர் சரித்திரம் செய்தமை தமிழ் கூறும் உலகத்துக்குப் பெருவிருதாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாசிவம்பிள்ளை அவர்களுக்குப் பின்னர்ப் புலவர் வரலாறுகள் எழுதிப் புகழ் பெற்றவர்கள் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களும், புன்னாலைக்கட்டுவன் கணேசஐயர் அவர்களுமாவர். இவர்களைத் தொடர்ந்து சிலர் சிறியனவும் பெரியனவுமாகப் புலவர்களைப் பற்றி வரலாற்றுக் குறிப்புகள் எழுதியதும் உண்டு. அவர்கள் யாவரும் தேவையான இன்றியமையாதனவான தகவல்களைத் தந்தார்களேயல்லாமல் போதியனவினதாகக் காலவரையறை சமகாலப் புலவர்கள் உபகரிப்பு, புலமை, நயம் முதலியனவற்றைக் கூறவில்லை என்றே கூறவேண்டும்.

இங்ஙனமாகத் தான் தமிழ் நாட்டவருள்ளும் தமிழ் வரலாறு தமிழ் இலக்கிய வரலாறு என்னும் நூல்களை முன்னோடிகளாக எழுதியவர்களும் முதலில் ஆங்கிலத்திலேயே எழுதினார்கள் அவர்களுள் தீட்சிதர் பூரணலிங்கம்பிள்ளை, வையாபுரிப்பிள்ளை முதலானோரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

பின்னர்த் தமிழில் எழுதப் புகுந்தார் பலருள் சிவராசபிள்ளை சீனிவாசகம்பிள்ளை, சுப்பிரமணியபிள்ளை, சதாசிவபண்டாரத்தார் இராசமாணிக்கனார்.

நாடு சுதந்திரம் பெற்றதும் நமக்கென ஒரு பல்கலைக் கழகம் அமைந்ததும் தாய்மொழிக் கல்வி வசதி கிடைத்ததும் தமிழில் சிறப்புப் பட்டம் பெறும் வாய்ப்புக் கிட்டியதும் தமிழாராய்ச்சி என்னும் துறைவகுப்புப் பெற்றதும் தமிழ்ப் புலவர்கள் வரலாற்றை விரிவாக ஆராய்ந்தறிவதற்குச் சாதகமாயின. தமிழ்த் துறையில் ஆராய்ச்சி செய்து கலாநிதிப் பட்டம் பெறுவதற்கு மேற்கு நாட்டுப் பல்கலைக் கழகங்களே வழிகாட்டும் அளவில் தமிழ்த்துறை வரலாயிற்று.

தமிழ் நாட்டிலும் சென்னைப் பல்கலைக் கழகமும் அண்ணாமலை பல்கலைக்கழகமும் வித்துவான் புலவர் பட்டங்களுக்கான படிப்பு வசதிகள் செய்தமையும் பலவாய நூல்களை வெளியிட்டு வாய்ப்பாக உபகரித்தமையும் தமிழ் மேலும் பரவவும் வியப்பாக முற்றவும் வாய்ப்பாயின.

பல்வேறு மாநிலங்களாயமைந்த பழைய பாரத நாட்டின் தென்னாடாய தமிழ்நாட்டிலே தமிழ் மாநாடுகள் காலந்தோறும் நடைபெற்று வந்த அடிச்சுவட்டில் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் அமையவும் உலகநாடுகளில் நடைபெறவும் வசதிகள் உண்டாயின. உலகப் பல்கலைக்கழகங்களில் தமிழ் ஆராயப் பெறவும் பேராசிரியர்கள் தமிழின் தொன்மையையும் அதன் அகல ஆழத்தையும் ஆயவும் துணிவாராயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் புலவர்களின் பெருமை

இன்றைய சூழ்நிலையில் முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் யாவும் தத்தம் முன்னைநாட் புலவர்கள் செய்தளித்த நூல்களைப் பொன்னே போல் போற்றி வருகின்றன. ஒவ்வொரு நாட்டவரும் தம்புலவர்கள் தமக்கு விட்டுப் போன அருஞ் செல்வங்களைத் தேடித் துருவியாராய்ந்து அச்சிட்டுத் தம் பின்சந்ததியார் பயனடையும் வண்ணம் செய்கின்றனர்.

பழம் பெரும் புலவர் தம் வரலாற்றினைக் கருத்தூன்றிக் கற்கும் போதுதான் அன்று அவர்கள் படைத்த நூல்கள் எழுவதற்கான சூழ்நிலையை அறிந்து நன்றாக நயக்கின்றனர்.

எம் முந்தையோரின் பழுதிலாத்திறம் பண்பாடு, அன்பு, நல்லொழுக்கம், அறிவாற்றல், புலமை எல்லாவற்றையும் அறியும்போது அவர்களின் சமகாலத்தவரும் பிறரும் அவ்வப்போது பெற்ற பெரும்பயனும் புலவர்கள் பெற்ற பெரும் புகழும் நமக்கு விளங்குகின்றன.

எங்கள் புலவர்கள் நன்றாக எடைபோட்டறிந்து சுவைத்து நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்த தமிழ் நாட்டறிஞர்களுள் நாடகப் பேராசிரியர் பத்மபூஷணம் பம்மல் சம்பந்த முதலியார் ஒருவர் அவர் தாம் கண்ட புலவர்களைப் பற்றி எழுதிய நூலில் எழுதியுள்ள வாசகம் எமக்குப் பெருமை தருவதாகும்.

''பொதுவாக அக் காலத்தில் யாழ்ப்பாண வாசிகளே தமிழில் நன்றாய்க் கற்றவர்கள் என்று மதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்குள்ளும் தாமோதரம்பிள்ளை அவர்கள் சிறந்த புலமையுள்ளவர் என்று மதிக்கப்பட்டார். பேசும்போதும் ஏறக்குறையத் தமிழ்ச் சொற்களையே கையாளுவார்''

## இலங்கை என்பது ஆற்றிடைக்குறை

இலங்கை சிவபூமி என்று கூறியருளிய திருமூலர், தமிழ் மண்டலங்கள் தத்துவமாமே என்றார். தமிழ் மண்டலங்கள் ஐந்தனுள் ஈழமும் ஒன்று என்பர். இலங்கை என்றால் ஆற்றிடைக்குறை என்பதும் பொருளாகும். முன்னர்ப் பாண்டியன் ஒருவன் வடிவேல் எறிந்து கடலை வற்றச் செய்தமை பொறாத கொடுங்கடல் பஃறுளியாற்றுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் கொண்ட காலத்தில், இரு ஆறுகளுக்கிடையில் எஞ்சி நின்ற நிலப்பரப்பு இலங்கையாதல் வேண்டும். இஃது இலங்கியதால் இலங்கையானமையும் அமையும். இது பொன்போல் இலங்கவே பொன்னாடு என்னும் கருத்தில் ஈழநாடாயிற்று எனவும் கருதலாம்.

இவ்வாறாயின் இடைச்சங்கம் நிலவிய கபாடபுரத்து நிலப்பரப்பில் எஞ்சிய பகுதி இலங்கை எனக் கொள்ளலாம் போலும். குமரி முனைக்குத் தென்பால் பரந்தமைந்த குமரிக் கண்டம் என்னும் கடல் கொண்ட லெமுரியா வரலாறு உண்மையாகிவருகிறது.

இலங்கைத் தமிழர் பிரதேசம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள கடற்பிரதேசம். முன்னர் ஒடுக்கமாகவே இருந்ததால் அநுமன் பாய்ந்து சென்றான் என்பது பொருத்தமாகிறது.

முன்னர் இரண்டாம் சங்கம் இருந்த பிரதேசம் கடல் கொண்ட போது வேறான போதிலும் மூன்றாம் தமிழ்ச் சங்கத்திலும் பங்கு பற்றிய செய்தி உண்மையாய் உள்ளது. ஈழத்துப் பூதன் தேவன் என்பவரால் ஈழத்தவரின் தமிழுரிமை நிலை நாட்டப் பெற்றுள்ளது.

இருபதாம் நூற்றாண்டில் இன்றைய மதுரையில் நான்காம் சங்கம் அமைக்கப் பெற்றபோதும் ஈழத்துப் புலவர் பலர் கவியரங்கேறியமை ஏடுகள் அறிந்த உண்மை. நான்காம் சங்கத்துத் திங்கள் ஏடான செந்தமிழ் என்னும் சஞ்சிகையில் எங்கள் புலவர்களின் பங்களிப்பு மிக்குள்ளன.

## செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் இலக்கிய இரசனைக் காற்றுப் பட்ட 1942ஆம் ஆண்டு ஆவணி மாதம் தொடக்கம் எங்கள் புலவர்கள் வரலாற்றையும் அவர் தம் உபகரிப்புகளையும் ஆங்கிலப் புலவர்கள் வரலாறு போன்ற அமைப்பில் எழுதுதல் வேண்டும் என்னும் ஆசை உண்டானது.

ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருவர் என்று தலையங்கமிட்டுப் புலவர்களைப் பற்றி எழுதி வந்த கையெழுத்துப் பிரதிகளைக் கண்ணுற்ற ஏழாலையூர் பண்டிதரும் பட்டதாரியுமான சைவப்பெரியார் மு. கந்தையா அவர்கள் இது நல்ல முயற்சி என்று எப்பவோ ஊக்கப்படுத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், எங்கள் ஆசான் பண்டிதமணி அவர்கள் இந்த அமைவில் ஒரு திருத்தம் சொன்னார்கள். வரிசை அறியுமாறு ஒரு வார்த்தை சொன்னார்கள். எனவே ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருவர் என்பதை வரிசைப்படுத்திச் செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் என்றும் சைவம் வளர்த்த சான்றோர் என்றும் வரிசைப்படுத்த வேண்டி வந்தது.

இவ்வாறமைந்த வரிசையில் செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் வரிசை பெரிதாயிற்று. எனவே இந்த வரிசையைத் தனி நூலாக வெளியிடலாம் எனக் கருதினோம். இந்த வரிசையில் ஈழத்து அறிஞர் பெருமக்கள் காலத்துக் காலம் இங்கேயும் தமிழ்நாட்டிலே சென்றுறைந்தும் செந்தமிழ் வளர்த்துப் பெற்ற பேறு பெரிதாயிற்று. இத்தகைய செவின் பயனாகத் தமிழ்நாட்டுச் செம்மல்களும் இங்கே வந்தேறி எம்மிடையே செந்தமிழ் வளர்த்த செம்மை பெரிதாயிற்று. தாயும் சேயும் போன்றமைந்த இரு நாடுகளும் தமிழ் கூறும் நல்லுலகங்களாகவே காலந்தோறும் இருதரத்தாரும் கொண்டும் கொடுத்தும் சங்கத் தமிழை நன்கணம் வளர்ப்பார்களாயினர். இந்த நல்லுறவைப் பற்றி ஆராயும்போது இதயம் விம்முகிறது கண்கள் நீர் பொழிகின்றன. காற்றில் மிதந்து பறந்தாற் போல உணர்ச்சிப் பெருக்கு உண்டாகிறது. நான் பெற்ற இன்பம் எல்லோரும் பெறுதல் வேண்டும். என்னும் ஆர்வம் பொங்குகிறது. மனம் ஓடிக்கொண்டிருக்கும் வேகத்தில் கையெழுதிச் செல்கிறது. இவை எம் செயல்கள் அல்ல என்றும் சிந்தனை வருகிறது.

## ஈழத்துப் புலவர் பாரம்பரியம்

ஈழத்துப் புலவர் தம் பாரம்பரியம் மிகப் பழைமை வாய்ந்தது. அஃது இன்று எங்களுக்குக் கிடைத்துள்ள வகையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. அஃது இடையில் பிறநாட்டவர் புறமதத்தவர் செல்வாக்கினால் பொலிவிழந்து நீறு பூத்த நெருப்புப் போலக் கிடந்ததும் உண்டு.

ஒரு காலத்தில் பிறநாட்டாரும் புறமதத்தவரும் தமிழிற் செம்மை கண்டு இதனைப் பயின்று புலமை பெற்றுப் பங்களிப்புச் செய்ததும் உண்டு. அந்நியர் படையெடுப்புகளால் பாதிக்கப்பட்டு நலிவெய்திக் கிடந்த செந்தமிழை எம் புலவர்கள் வாழையடி வாழையாகத் தோன்றி மரபு காத்து வளர்த்ததும் உண்டு. இத்தகைய வளர்ப்புக் காலத்திலே பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பொற்காலமாய் அமைந்ததும் உண்டு. இருபதாம் நூற்றாண்டுப் புலவர்தம் பணி மிகப் பரந்ததாய்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்முகமாய் ஒளி பெறுவதற்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புலவர் பெருமக்களே காரணராயிருந்தனர் எனக் கருதினும் அமையும்.

இத்தகைய புகழ் பூத்த விற்பத்திக் காலத்திலேதான் இரு கவிராயர்கள் என்று பண்டிதமணி அவர்கள் போற்றும் பெரும் படிப்பாளிகள் இருவர் இருபாலையிலும் சுன்னாகத்திலும் தோன்றினார்கள்.

இருபாலையைச் சேர்ந்த சேனாதிராயர் என்றும் சுன்னாகம் முத்துக்குமார கவிராயர் என்றும் புகழொடு தோன்றிய இருவரும் மாணாக்கர் பரம்பரையாற் பொலிவு பெற்றவர்கள். சைவம் வளர்க்கவும் செந்தமிழ் வளர்க்கவும் பேரார்வம் கொண்டெழுந்த மாணாக்கர் பலர் தத்தம் ஊர்கள் தோறும் சைவமும் தமிழும் வளரப் பண்ணைகள் தோன்றுமாறு செய்தார்கள்.

இப் பண்ணைகள் தோறும் வாழையடி வாழையெனத் தோன்றிய புலவர்களின் பெருக்கம் தெற்கே சிங்கள நாட்டை நோக்காது வடக்கே கடல் கடந்து தமிழ்நாட்டை நோக்கியது அங்கே அவர்களின் தேவையும் அவசியமாகவே அவர்களின் செலவு வரப்பிரசாதமாயும் அமைந்தது.

## தமிழ்நாடு
## பாராட்டிய ஈழத்துப் புலவர்கள்

ஆறுமுகநாவலர் அவர்களை நாயகமணியாகக் கொண்ட நல்லறிஞர் கூட்டம் தமிழ்நாட்டிற் பல துறைகளிலும் இணையற்ற பணிபுரிந்தமையினாலே பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழிலக்கிய வரலாறு ஈழத்தின் வரலாறாக அமைவதாயிற்று இவ்வமைவு இருபதாம் நூற்றாண்டில் முற்பகுதியையும் உண்டாக்கியதாயிற்று எனின் மிகையாகாது.

பழைய காலத்திலே பாரம்பரியமாக ஈழத்தின் பெயர் தென்னிந்தியாவெங்கும் பெருமளவில் பரவி வியாபகமுற்றிருந்தது பழைய சேர சோழ பாண்டிய பல்லவ நாயக்க மன்னர்கள் பலரும் ஈழத்தவர் முயற்சிகளை நன்கறிந்தனர்.

முன்னர் நிலவிய வாணிகம். வர்த்தகம், காசுப்புழக்கம் கொடுக்கல் வாங்கல் முதலிய பொருளாதாரத் துறையில் ஈழக் காசு என்னும் பொற்காசு இணையற்றதாய் தரமிக்கதாய் விளங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பாண்டி நாட்டிலே திருப்பரங்குன்றத்தையடுத்த குடியிருப்பு ஈழக் குடுமிகள் பெயரால் விளங்கியது.)

தென்னகத்து ஈஸ்வரங்களில் ஒன்றாகிய இராமேஸ்வரம் யாழ்ப்பாணத்து அரசர் தம் பரிபாலனத்தில் இருந்தது. கோயிற்றிருப் பணிக்கு வேண்டிய கருங்கற்கள் திருக்கோண மலையிலிருந்து ஏற்றுமதியாயின. நாளாந்த பூசைக்கு வேண்டியன நெடுந்தீவிலிருந்து போனமையும் நயினாதீவு குருக்கள் குடியிருப்பதால் சிறப்புற்றமையும் முறையே பசுத்தீவு, பிராமணத்தீவு என்னும் பெயர்களை வழக்கில் வரச் செய்துள்ளன.

எம்மவர் ஆண்டுதோறும் சிதம்பரத்தில் ஆருத்திரா தரிசனம் செய்வதில் அமைதி கண்டனர். சிதம்பரத்தின் நினைவாக ஈழத்திலும் சிதம்பரேசுவரனுக்கு ஆலயம் அமைத்துச் சிதம்பரத்துப் பூசை முறைகளை நடத்திவந்தனர். சிதம்பரம், சிவசிதம்பரம், சிவகாமி, பொன்னம்பலம், பேரம்பலம், சபாநாதன், சபாநேசன் முதலாய பெயர்களைப் பிள்ளைகளுக்கு வழங்கி இன்பங் கண்டனர்.

ஈழத்து அறிஞர்கள் பண்டிதர் என்றும் புலவர் என்றும் வித்துவான் என்றும் வழங்கியமையோடு மகா வித்துவான், வித்துவசிரோமணி, சைவப் பெரியார், தர்க்ககோடரி, அட்டாவதானி, சதாவதானி, உரையாசிரியர், நாவலர், இலக்கணக் கொட்டர் என்றெல்லாம் பெரும் பட்டங்களாலும் வழங்கினர்.

ஈழத்துப் புலவர்கள் தமிழ்நாட்டுப் புலவர்களுக்கும் வழிகாட்டிகளாய், வரன்முறை காட்டியவர்களாய் மரபுவழி நூல்களைச் செய்தும் முன்னோடிகளாயும் வாழ்ந்தனர். ஈழநாட்டின் உபகரிப்பு தனித்தன்மையானதாயும் பயன் கொடுத்தது.

ஈழத்துப் புலவர்கள் இறையன்புடையவர்களாய்க் கல்வி கேள்வி அறிவு ஆற்றல் இன்சொல் ஈகை உள்ளத்தூன் ஊக்கம் எடுப்பு ஏற்றம் ஒழுக்கம் ஒப்புரவு முதலாய நற்பண்புகளின் கொழு கொம்புகளாய் அப் பண்புகளின் உறைவிடமாய் உருவமாய் வாழ்ந்தவர்கள். அவர்கள் பிறர்க்குறும் வெங்குறை தீர்த்த விழுமியோராய்ப் பேச்சினாலும் எழுத்தினாலும் தமிழ்த் தாய்க்கும் தமிழ்நாட்டிற்கும் அளப்பரிய சேவை செய்தவர்களாயுமிருந்தார்கள்.

தென்பாண்டி நாட்டுப் பெரும்புலவர்களில் இருவராய சுப்பிரமணிய பாரதியாரும் சோமசுந்தர பாரதியாரும் பள்ளித் தோழர்களாய்ப் பத்துப் பதினொரு வயதுப் பாலகர்களாய் விளையாடித் திரிந்த காலம் ஒரு காலம். அக் காலத்தில் ஒருநாள் யாழ்ப்பாணத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் ஒருவர் திருநெல்வேலிச் சூழலில் திருக்கோயில்களைத் தரிசித்து வந்தபோது விளையாட்டுத் தோழர் இருவரையும் கண்டார்.

இருவரும் இளமையிலேயே செய்யுளியற்றும் திறமை பெற்றிருந்தவர்கள். என்பதறிந்து, இருவரிடமும் முறையே வாழை, கமுகு என்பன பற்றிப் பாடுமாறு பணித்ததும் இருவரும் உடனடியாக அரிய பாக்களை யாத்தமை கேட்டுப் பாரதி என்னும் பட்டம் கொடுத்ததாகப் பலர் எழுதியுள்ளார்கள். பட்டம் கொடுத்த யாழ்ப்பாணத்துப் புலவரின் பெயரையோ இளம் புலவர்கள் யாத்த பாடல்களையோ இதுவரை எவரும் குறிப்பிடவில்லை.

இனி, சுப்பிரமணிய பாரதியாரின் ஞானகுரு யாழ்ப்பாணத்துச் சாமி என்பார். யாழ்ப்பாணத்து அருளம்பல சுவாமி அவர்களைப் பற்றியும் அவரே தமது ஞானகுரு என்றும், கன்னியாகுமரி முதல் காசி வரை சஞ்சாரம் செய்த பாரதியார் பாடியுள்ளார். இன்னும் சோமசுந்தர பாரதியாருக்கு நாவலர் என்னும் பட்டம் கொடுத்தவர்களும் பெருநாவலரான ஆறுமுக நாவலரைப் பெற்றெடுத்த யாழ்ப்பாணத்து மக்களேயாவர்.

## ஈழத்து உபகரிப்புகளில் ஒரு சில

ஈழநாட்டுப் புலவர்கள் சின்னஞ் சிறிய ஊஞ்சற் பதிகம் முதல் பென்னம் பெரிய புராணங்கள் வரை பெருமை மிக்க இலக்கியங்கள் செய்தவர்கள். அவர்கள் செய்த பெருமைமிக்க புராணங்களின் வேறாய வேடிக்கை, நையாண்டி நயமிக்க புராணங்களும் உள்ளன. கனகி புராணம், வலை வீசு புராணம், சீமேந்தினி புராணம் முதலியவை பெரும் புராண வகையைச் சேராதவை எனினும் கவிச்சுவையுள்ளனவாகும்.

ஈழத்துப் புலவர்களின் நாட்டுப் பற்று பாரம்பரியமானது. பழைய பள்ளுப் பிரபந்தங்களில் ஈழ மண்டல நாடெங்கள் நாடே என அவர்கள் இதயபூர்வமாகத் தாயகத்தை நேசித்துப் பூசித்துப் பாடிய வகையில், பின்வந்தவர்களும் பாடியுள்ளார்கள். நாட்டுப் பற்று மிக்க புலவர்கள் இயற்கை வனப்பையும் இனிமையாக வருணித்துள்ளார்கள்.

வங்கத்துப் பெரும் புலவராய தாகூர் தாத்தாவை நினைவு செய்யும் வகையில் எங்கள் தங்கத் தாத்தாவாய் நவாலியூர் சோமசுந்தர புலவர் பல்லாயிரம் பாடல்கள் பாடியுள்ளார். அவர் எடுத்த எடுப்பிலேயே எங்கள் ஈழத் திருநாட்டை இனிமையாகப் பாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பூவுலகில் பொன்னுலகம் போன்றதெனப் புலவர் புகழ்ந்துரைக்கும் தென்னிலங்கை'' என்றும், ''வையமென்னு மாமடந்தைவாள் விழியென்றோத மன்னி வளர் பொன்னிலங்கை'' என்றும், ''ஏரிலங்கும் சீரிலங்கு மெழிலிலங்கை நாடு'' என்றும், ''முன்னமயனுலகத்தைப் படைக்க வெண்ணி முதற் படைத்தவிடமி தென மொழிய நின்ற தென்னிலங்கை'' என்றும் பலவாறாகப் பாடியுள்ளார். எந்நாடும் எப்பதியும் இதற்கீடாகாவெனப் பாடியவர், நம் யாழ்ப்பாணத்தை இலங்கையின் சிரம்போல் சிறந்ததென்பர்.

## தமிழ்ப் பெருமை

*தமிழ் சால்புக்கும் அறிவுக்கும் நீதிக்கும் சமத்துவத்திற்கும் நிலைக்களம். நீண்ட காலமாகப் பிறநாட்டவர் பிடியிலகப் பட்டிருந்த எம்மவர், இன்று தங்கள் பல்லாயிரமாண்டுக்கு முற்பட்ட பழைய பாரம்பரியப் பாடல்கள், கலைகள், தத்துவங்கள், வரலாறுகள், சட்டம், வைத்தியம் முதலிய துறைகளை நினைவிற்கொண்டு வருகிறார்கள். பழைய ஏட்டுச் சுவடிகளிலும், கல்லெழுத்துகளிலும் எங்கள் பெருமை ததும்பிக் கிடப்பக் கண்டு இன்புறுகிறார்கள். எம் பிற் சந்ததியினர் இவற்றை எல்லாம் அறிதல் வேண்டும் எனக் கருதி இனிய முறையில் எழுதி வருகிறார்கள். இன்றைய இலங்கைக்கும் பழைய இலங்கைக்கும் பாலம் அமைக் கிறார்கள். தமிழ் வளர்ந்து உலக வியாபகமுறுவதற்குக் காலம் உதயமாகிறது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபாலை சேனாதிராய முதலியார்
(1780 - 1840)

## தந்தையார் பெருமை

பண்டிதமணி அவர்களின் இலக்கிய வழியில் வருகின்ற இரு கவிராயர்களுள் ஒருவர் சுன்னாகம் முத்துக்குமார கவிராயர். மற்றவர் மண்ணாடு கொண்ட முதலியார் வாழ்ந்த இருபாலைச் சேனாதிராய முதலியார். இருவாலை எனவும் வழங்கும் இவ்வூர் தென்கோவையை யடுத்ததும், நல்லூரின் அயலூருமாகும். பாரம்பரியமாகப் பழந்தமிழ்க் குடிமக்களைக் கண்ட இருவாலையில் வந்து மணஞ் செய்து வாழ்ந்தவர் நெல்லைநாத முதலியாராவர்.

அக் காலத்து முப்பத்திரண்டு கோயிற்பற்றுகளுள் சிறந்த தெல்லிப்பழையில் வாழ்ந்த அருளம்பல முதலியார் வழியில் வாழையடி வாழையென வந்த புலமையாளர் வரிசையில் பொன்னம்பலமுதலியார், வன்னிய சிங்க முதலியார் மைந்தனே நெல்லைநாத முதலியாராவர்.

நெல்லைநாத முதலியார் நினைவாற்றலுக்குப் புகழ்பெற்ற புலமையாளர். அவர் எதனையும் ஒருமுறை கேட்டாலோ படித்தாலோ நினைவிற் பதித்துக் கொள்ளும் விவேகம் வாய்ந்தவர். எனவே அவரை எல்லோரும் ஏகசந்தக்கிராகி என அழைத்து மகிழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் ஒல்லாந்தரின் அரசாங்க அதிபராக இருந்த பெரியாரோடு நெருங்கிப் பழகிய கோபாலு செட்டியார் என்னும் வணிகரின் மைந்தன் வைத்திலிங்கம் செட்டியார், தமிழ்நாட்டின் வைத்தீஸ்வரன் கோயிலைப் போன்ற அமைப்பில் யாழ்ப்பாணத்து வண்ணையில் அமைத்த திருக்கோயில் செட்டியார் சிவன் கோயில் என்றும் வைத்தீஸ்வரன் கோயில் என்றும் வழங்குவது.

சிவன் கோயிலையடுத்துள்ள வைத்திலிங்கம் செட்டியாரின் வாழ்விடம் மாளிகை போன்றதாயமைய, அவர் தமிழ் வளர்த்த புரவலராய்ச் செந்தமிழ்ச் சுவை மாந்துவதில் இன்பங் கண்டிருந்தார். அவரைச் சிவப்பணியிலும் செந்தமிழ்ப் பணியிலும் சிந்தை வைக்கத் தூண்டியவர் கூழங்கைத் தம்பிரான் என்னும் கனக சபாபதி யோகியாவர்.

செட்டியார் அக் காலத்து ஆதாயமீட்டிய முத்துக் குளிப்பாற் பெற்ற முத்தினது குப்பை அதிகம். முத்தளப்பான் செட்டி என்ற பிரசாரம் அவர் புலவர்களுக்கு முத்து அளப்பதில் முன்னின்றவர். புலவர் குழாம் பொழுது போக்காகப் பிரபந்தங்கள் பாடிப் பரிசு பெற்று வந்த காலம் அக் காலம். கூழங்கைத் தம்பிரானே குலகுருவாயும் ஆஸ்தான வித்துவானாயும் அங்கெழுந்தருளியிருந்தார். தம்பிரான் சுவாமிகளின் மாணாக்கர் வரிசை பெரிது. அவர்கள் செவிவாயாக நெஞ்சு களனாகக் கற்று, அருங்கலை வாணராய்த் தத்தம் ஊர்களில் தமிழ்ப் பண்ணை, சைவப் பண்ணை அமைத்து சைவத் தமிழ் வளர்த்துவந்தார்கள்.

செட்டியாரிருப்பிடம் அரசனின் நாளோலக்கம் போலமைந்திருந்த வேளையில், செட்டியார், புலவர்கள் புடைசூழவிருந்து செந்தமிழ்ச் சுவை மாந்தினார். அந்த நேரத்திலே தமிழ்நாட்டிலிருந்து பெரும் புலவர் ஒருவர் எடுபிடியாட்களோடு வந்து, சிறிது இறுமாப்போடும் ஆடம்பரத்தோடும் தம்மை அறிமுகஞ் செய்து, தாம் செட்டியார்மீது புதிதாக ஒருநூல் பாடி வந்ததாகவும், அதை அங்கே படித்துக் காண்பிக்க விரும்புவதாகவும் கூறினார்.

''நல்ல தருணம்'' எனக் கூறி வரவேற்ற செட்டியாரைப் புலவர் வாழ்த்திவிட்டுப் பாடத் தொடங்கினார். ஒன்று இரண்டு எனப் பல பாடல்களைப் பாடி முடித்தபின், செட்டியார் மகிழ்ந்து நெல்லை நாதப் புலவரைப் பார்த்து, ''புலவரே! செந்திக் கவிவாணரின் செந்தமிழ்ப் பாக்கள் எவ்வாறிருக்கின்றனவோ?'' என்று பணிவாகக் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லை நாதர் உடனடியாக ''ஐயா! பாடல்கள் நன்றாக அமைந்துள்ளன. சுவையுள்ளன, ஆனால், அத்தனையும் பழைய பாடல்களே'' என்றார்.

இதனைக் கேட்ட செந்திக்கவி வெகுவாகச் சிந்தை நொந்து, கண்களில் நீர் ததும்ப நெல்லைநாதரைப் பார்த்து, ''புலவர் அவர்களே! எம் பாடல்கள் பழைய பாடல்கள் என்கிறீரே? எங்கே ஒரு பாடலைச் சொல்லுங்கள் கேட்கலாம்'' என்றார்.

உடனே நெல்லைநாதர், ''ஒரு பாடல் என்ன? முழுப் பாடல்களும் எனக்கு மனப்பாடம் இதோ சொல்லுகிறேன். கேளுங்கள்'' என்று பாடல்களை மடமடவென்று சொன்னார். இவற்றைக் கேட்டுச் செந்திக்கவி ஏங்கி நின்ற பரிதாபக் காட்சியைக் கண்டு மனமிரங்கிய நெல்லைநாதர், ஐயா! புலவரே! பாடல்கள் உங்களுடையனவே. ஆனால்... ...'' என்று கூறியதிலிருந்து செந்திக்கவி தான் கொண்டிருந்த ஆரம்ப கட்டத்துப் பெருமிதத்தை மன்னிக்குமாறு தாழ்மையாகப் புலவரிடம் வேண்டிக் கொண்டார்.

இவ்வாறாக இவர்கள் உரையாடியதை உற்றுக் கேட்டிருந்த செட்டியார், இரு தாம்பாளங்களில் பரிசுகள் எடுத்து வந்து, நெல்லைநாதருக்கு ஒன்றைக் கொடுத்தபோது, அவர் அதனை இரு கைகளாலும் ஏற்றுக் கண்களில் ஒற்றி நன்றி தெரிவித்தபின், அதனை மனமகிழ்ச்சியோடு செந்திக் கவியிடமே தம் அன்பளிப்பாகச் சேர்ப்பித்தார். இவ்வாறாகச் செட்டியாரளித்த மற்றப் பரிசும் பெற்ற செந்திக்கவி, இரட்டைப்பரிசு பெற்றபேற்றில் பூரித்துச் செந்தமிழ் வளர்த்த யாழ்ப்பாணத்தைச் சிந்தை மகிழ்வோடு பாராட்டி வாழ்த்தினார்.

## சேனாதிராய முதலியார்

செந்தமிழ் நாட்டினின்றும் வந்த பைந்தமிழ்ப் புலவர் செந்திக்கவியும், பெரும் புரவலர் வைத்திலிங்கம் செட்டியாரும் நன்கு மதித்த நெல்லைநாத முதலியாரின் மைந்தன் சேனாதிராய முதலியார் முந்தையோர் மரபைப் பேணிக் காத்ததோடு, முன்னோரளித்த செல்வத்தைத் தம் பின் வந்த சந்ததியினரிடம் வரன்முறை தவறாது ஒப்படைத்த பெருமையும் உள்ளவராவர்.

சேனாதிராயர் இளமையில் தென்கோவையில் வாழ்ந்த புலவர்களிடம் ஆரம்பக் கல்வி பயின்றதோடு, மாதகல் சிற்றம்பலப் புலவரிடமும் சில நூல்களைக் கற்றார் என்பர். சிற்றம்பலப் புலவரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரியார் மைந்தன் மாதகல் மயில்வாகனப்புலவர் இவரின் சகபாடியாயிருந்தார் என அறியக் கிடக்கிறது.

சேனாதிராயர் பெருநூல்கள் மரபு தவறாமல் கற்பதற்கு அன்று உறுதுணையாயும் வாய்ப்பாகவும் இருந்த ஆசான் கனக சபாபதி யோகி என்னும் கூழங்கைத் தம்பிரான் சுவாமியாவர். சுவாமிகள் வைத்திலிங்கம் செட்டியாரின் ஆஸ்தான குருவாயிருந்தமையை நெல்லைநாத முதலியார் அறிந்திருந்தார். இன்னும் மாதகல் சிற்றம்பலப் புலவர் தம் மருமகன் மயில்வாகனப் புலவரைச் சுவாமிகளிடம் படிக்க அனுப்பியமையும் வழிகாட்டவே. சேனாதிராயர் கூழங்கைத் தம்பிரான் சுவாமிகளிடம் படிப்பதற்கு உந்து சக்தியாயிற்று. எதனையும் எவர்க்கும் ஒருமுறை மாத்திரம் சொல்லும் நியதி கொண்ட சுவாமிகளிடம் படித்துவந்த வைத்திலிங்கம் செட்டியாருக்கு, மயில்வாகனப் புலவர் அவர்களும், சேனாதிராயரும் படிக்க வந்தமை உறுதுணையாயிற்று. சேனாதிராயர் கடினமான நூல்களை இலகுவாகக் கற்றுக்கொண்ட ஆற்றலை உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் புகழ்ந்துள்ளார்.

*"... ... தேசிய கோத்தமனாய்*
*சான்ற கனக சபாபதி யோகியாம்*
*போன்றவர் பிறரிலாப் புண்ணிய னடிதழீஇ*
*ஒவ்வொரு நூலையு மொவ்வொரு முறையினாய்*
*அவ்வவர் சொற் பொருளனைத்தையு மகத்தமைத்*
*தூழ்படு திறமிதென் றுலக முவப்பக்*
*காழ்படு கடுமையிற் கற்று நிறைந்த*
*திதமுறு நுண்மதிச் சேனாதிராய*
*முதலி ... ... ..."*

படிப்பார்வம் மிக்க சேனாதிராய முதலியார் தம் குருவாய கூழங்கைத் தம்பிரானிடம் போதியளவு பொன் கொடுத்து நாற்பது நாள்களில் நன்னூலைத் துறை போகப் படித்துணர்ந்தவர் என்ப.

## பன்மொழிப் புலமை

முதலியார் அவர்கள் தாய்மொழியோடு வடமொழி, சிங்களம், பாளி, போத்துக்கேயம், ஒல்லாந்து மொழி, ஆங்கிலம், இலத்தீன் முதலாய பல மொழிகளை நன்குணர்ந்து, துவிபாஷகர் என அக் காலத்தில் வழங்கிய முதலியார் வேலை பார்த்தவர்.

நீதிமன்றங்களில் மொழி பெயர்ப்பாளராக இருந்த காலத்திலே சட்டத்துறையையும் தக்க பெரியவர்களிடம் கரைகண்டு நியாயவாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வழங்கிய அப்புக்காத்து வேலையும் பார்த்தவர் அவர் சிலகாலம் கச்சேரி மணியகாரனாயும் கடமையாற்றியபோது, நல்லூர் பரமானந்தர் கந்தப்பிள்ளை என்பார் அங்கே ஆராய்ச்சி என்னும் உத்தியோகம் பார்த்தவர். ஆராய்ச்சியார் கந்தப்பிள்ளை முதலியாரிடம் நெருங்கிப் பழகித் தம் கடைசி மைந்தன் ஆறுமுகம் என்பாரை அவரிடம் படிக்க வைத்தார். ''அந்த ஆறுமுகம் என்பவர் எங்கள் ஆறுமுகநாவலர் என்பது தெரிந்ததே. இவ்வாறாக முன்னர் நாவலர் அவர்களின் தாயார் சிவகாமியின் முன்னோராய ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் மூலம் கிட்டிய திருவண்ணாமலையாதீனத் தொடர்பு'' மீண்டும் சேனாதிராய முதலியாரிடம் இவர் கற்றபோது கிடைத்தமை பெரும் பேறாயிற்று. சேனாதிராய முதலியார் நாளடைவில் நீதவான் உத்தியோகம் பெற்றுப் பெரும் சிறப்போடு வாழ்ந்த காலத்திலே நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வெகுவாக வளர்ந்து வந்தது. இன்றைய கோயில் 1734-ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்று வளர்ந்து வந்தபோது, முதலியார் பல பாடல்கள் பாடி வணங்கியதோடு, கந்தபுராணப் பிரசங்கமும் செய்து, பொதுமக்களைப் பக்தின் பாலராக்கிப் பரமனுக்கடியாராக்கினார். கந்தபுராணப் பிரசங்கம் செய்வதில் சேனாதிராய முதலியார் சிறந்து விளங்கினார் என்ப.

## பிரபந்தங்கள் பாடியமை

முதலியார் தாம் வழிபடு கடவுளாகவும் குலதெய்வமாகவும் நல்லூர் கொண்ட முருகப்பெருமான் மீது நல்லை வெண்பா, நல்லையந்தாதி, நல்லைக் குறவஞ்சி முதலிய பல நூல்களைப் பாடினார். ஈழமண்டலத்தில் மிகப்பிரசித்தி பெற்ற சுப்பிரமணியர் தலங்களுள் ஒன்றாய நல்லூரில் மகாவரப்பிரசாதியாய் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுள் மீது வெண்பா யாப்பினால் இயன்ற நூல் நல்லை வெண்பா என வழங்கியது.

இந்நூல் ஆறுமுகநாவலர் காலத்திலேயே 1878-ஆம் ஆண்டிலே நூலாசிரியரின் மாணாக்கருள் ஒருவராய தென்கோவை அம்பலவாண பண்டிதர் என்பவரால் வெளியிடப் பெற்றது. பின்னர்ப் பல செய்யுள்கள் மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் வெளியீடான செந்தமிழ் என்னும் சஞ்சிகையிலும் உரைக் குறிப்புகளோடு வெளிவந்துள்ளன.

நல்லை வெண்பாப் பாடல்கள் எளிதில் விளங்கிக் கொள்ள முடியா அருந் தொடர்களும் சொற்பொருள்களும் மிக மலிந்து, யமக திரிபுகளாகிய சொல்லணிகளும் சிலேடை முதலிய பொருளணிகளும் நிரம்பியிருக்கப் பெற்றதோர் அரிய நூலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலேடை வெண்பாப் பாடுவதில் ஆற்றல் அனுபவம் பெற்ற முதலியார் அவர்கள், சிவன், விநாயகர், உமை, விஷ்ணு, பிரமா, சூரியன், சந்திரன் முதலாய மூர்த்தங்களையும்; தேவருலகம், ஆகாயம், பூமி, மேரு, இதயம், கடல், செந்தமிழ் முதலான படைப்புகளையும் நல்லூருக்கு உவமையாக வரப் பாடியுள்ள சாதுரியம் பெரிது. இடையிடையே புராண வரலாறுகள் பொதிந்து வந்துள்ளமை அவரின் பன்முக ஞானத்தைக் காட்டுவனவாகும்.

பேராற்றுப் பிரவாகம் போல அருட் பிரவாகந் ததும்பும் நல்லூர்க் கந்தனாலயத்தைச் சிந்தையிற் கொண்டு வாழ்ந்த சேனாதிராய முதலியார் நல்லை வெண்பாவில் எடுத்த எடுப்பிலேயே ''கந்தவேள் வேல் முருகன் காங்கேயன் காதலித்து வந்த நல்லூர்'' என்பர் பூமாது நாமாதுடன் வாழும் நல்லூர், நாற்றிசையும் வந்திறைஞ்சும் நல்லூர், வேதவொலி, வேள்வியொலி, மிக்க விழாவொலி நல்லூர் என்றெல்லாம் புகழ் பெற்ற நல்லூர் என்றவர், ஈழமண்டலத்தைப் பொன்னுலகம் அன்னது என்பர். பொன்னுலக மன்ன நாட்டின் நன்னகர் நல்லூர் என்பர்.

முருகப் பெருமானின் கிருபா கடாட்சம் பெற்ற சேனாதிராய முதலியார் முருகன் பெருமைகள் பலவற்றைப் பேசிவரும்போது, அவன் தேவர்கள் அளிக்கும் அவிப்பாகத்தையும் ஏற்பவன், ஏழைகள் அன்போடு படைக்கும் தேனும் தினைமாவையும் ஏற்றருள் புரிபவன் என்பர்.

இவ்வாறாக நூலாசிரியரின் சொற் பொருளுணர்ச்சி வன்மையும் அறிவாற்றல்களையும் கவித்துவத்தையும் அனுமானித்த வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்கள், முதலியாரையும் நூலையும் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

*''தென்கோவை யென்னும் சீர்சால் நகர்வாழ்*<br>
*மேழிக் கொடியோர் வாழ்வுபெற் றோங்க*<br>
*அவதரித்திட்ட அருந்தமிழ்க் கவிஞனாம்*<br>
*ஆனாவியல்பிற் சேனாதிராய*<br>
*முதலியும்...''*

என வரும் பாடல் படித்தின்புற வேண்டியது.

தமிழறிவு குன்றிய அக் காலத்தில் பலர்க்கும் தமிழிலக்கண இலக்கியங்களைக் கற்பித்துச் செந்தமிழணங்கு நடம்புரிவதற்குரிய இடம் யாழ்ப்பாணம் என்று கூறும்படி செய்து வைத்த புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாமணியும் பரோபகாரப் பண்பினருமாகிய பெரியார் சேனாதிராய முதலியாராவர்.

யாழ்ப்பாணத் தமிழரின் தவக் குறைவினாற் போலும் முதலியார் செய்த நல்லைக் குறவஞ்சி என்னும் நூல் கிடையாமற் போனது. எனினும் அதில் வரும் இரண்டொரு செய்யுள்கள் வழங்கி வருகின்றன. நல்லைக் குறவஞ்சி யமக சிலேடைகளும் வினோதார்த்தங்களும் மலிந்த பிரபந்தம் என்பர்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருபாலை, சங்கானை ஆகிய ஊர்களில் மட்பாண்டம் செய்வோர் வாழ்ந்தனர். வண்ணார் பண்ணையில் குயவன்குளம் இருந்தது. இருபாலை சேனாதிராய முதலியாரின் பிறப்பிடம்.

முதலியார் தமதூராய இருவாலையில் குயப் பெண்களையும் அவர்கள் செய்யும் சட்டி, குடம் ஆகிய மட்பாண்டங்களையும் அவற்றில் சமைக்கும் சாறு என்னும் குழம்பையும், முருகப்பெருமானின் சக்திகளோடும், அவருக்குரிய விழாக்களாய் கந்தசஷ்டி, தைப்பூசம் என்பனவோடும் தொடர்புபடுத்திச் சிலேடை நயம் ததும்பப் பாடிய பாடல் ஒன்று, நல்லைக் குறவஞ்சிப் பாடலாக நயத்தற்குரியதாகக் கிடைத்துள்ளது.

*"திருவாரும் நல்லைநகர்ச்*
*செவ்வேற் பெருமானார்*
*இருவாலைக் குயத்தியரோ*
*டின்பமுற்றா ரம்மானை*
*இருவாலைக் குயத்தியரோ*
*டின்பமுற்றா ராமாயின்*
*தருவாரோ சட்டிகுடம்*
*சாறு வைக்க வம்மானை*
*தருவார்காண் சட்டிகுடம்*
*சாறுவைக்க வம்மானை"*

குயத்தியரோடு நல்லைப் பெருமான் இன்பமுற்றார் என்று சிலேடை ததும்பப் பாடிய முதலியார், குயத்தியர் இளமை திகழும் தனங்களையுடைய தெய்வநாயகி, வள்ளிநாயகி என்னும் சத்தியர் இருவர் என்பர். குயவர் தரும் சட்டி, குடம் ஆகிய மட்பாண்டங்கள், சட்டி திதியாய கந்தசஷ்டி விழாவையும், தைப்பூச விழாவையும் குறிக்க வைப்பர். குடம் பூசநாள். சட்டி குடத்தில் சாறு வைக்கத் தருவாரோ என்பதில் சாறு திருவிழாவைக் குறிப்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு பாடலில் மானீன்ற கொடியென்று வள்ளி நாயகியையும், பிடி என்று தெய்வநாயகியையும், உடம்பிடி என்று வெற்றி வேலாயுதத்தையும் இவ்வாறு மூன்று சக்திகளையும், இன்னும் கோதண்டம் என்னும் வில்லையும் குறித்த முதலியார், மிடியாகிய துன்பக்கடல் நீக்க நல்லூர் முருகப் பெருமான் மயிலேறிச் சூரியன் போல் உதித்தார் என்பர்.

*"கொடிவளரு மணிமாடக் கோபுரஞ்சூழ்*
*நல்லூரிற் குமரமூர்த்தி*
*அடியருளத் திருளகல வமரர்முக மலரவர*
*வணிமானீன்ற*
*கொடியினொடும் பிடியுனொடுங் குலவுமுடம்*
*பிடியொடுங்கோ தண்டமேந்தி*
*மிடியகல மயிலேறி விடியவந்த*
*தினகரன்போல் மேவினானே."*

## தமிழ்ப் பணியும், சைவப் பணியும்

மதிப்புக்குரிய பெரிய அதிகார உத்தியோகங்கள் வகித்த சேனாதிராய முதலியார், செந்தமிழன்பராயும் சிவநேயச் செல்வராயுமிருந்த காரணத்தால், தாம் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம் என்னும் பெரு வழக்கிற்கேற்பப் பல இளைஞர்களை அன்பாதரவோடு அணைத்துச் செந்தமிழ் சொல்லிக் கொடுத்தார். அவர் காலத்தில் தமிழ் வளர்ச்சிக்குச் செய்த தொண்டு ஊரறிந்தது, நாடறிந்தது, அரசறிந்தது.

பாரிய நிலபுலம் போதிய அளவில் விளைவு கொடுக்க உழுவித் துண்ணும் பெரியாராயிருந்த இவர், தம்மிடம் வந்தவர்களுக்கு உணவும் உடையும் கொடுத்து அறிவுப் பசியையும் தீர்த்து வைத்தார். இவர் பரோபகாரப் பண்பின் உறைவிடமாகவும் ஆசாரசீலராயுமிருந்தார்.

இவர் நியாயவாதத் தொழில் நடத்திய காலத்தில் நல்லூர்க் கந்தனை நாள்தோறும் வழிபடுவதற்காகத் திருக்கோயிலுக்கு அண்மையிலேயே தமது அலுவலகத்தை அமைத்திருந்தார் என்பர். நல்லூரில் பணியாற்றியதோடு அக் காலத்து அறங்காவலரான பெரியாருக்கும் ஆலோசகராக இருந்து அருந்தொண்டாற்றி வந்தார்.

இருபாலையிலமைந்த பெரிய விநாயகராலயம் இவர் முயற்சியாலெழுந்ததாகும். இதற்கு வேண்டிய மூலதனத்தையும் இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீடு செய்துள்ளார் என்பர். அக் காலத்தில் நல்லூரில் நல்லமுறையில் சைவப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தவரும் இவரே. இவருக்குப் பின்னர் இவர் மாணாக்கர் சரவணமுத்தர் என்பாரும், ஆறுமுகநாவலர் அவர்களும் தொடர்ந்து செய்துவந்தார்கள்.

## நூல் நயம்

முதலியாரின் நல்லை வெண்பாவைப் பாராட்டிப் புகழ்ந்த பிற்காலப் புலவர்களுள் அப்புக்குட்டிக் குருக்கள். இருபாலை அமரசிங்க முதலியார், சி.வை. தாமோதரம்பிள்ளை முதலானோர் குறிப்பிடத்தக்கவர். தாமோதரம்பிள்ளை அவர்கள் பாராட்டிய பாடல் படித்தின்புற வேண்டியது.

*"உவர்நீருண் டிடுமேக மொண்சுவைநீ*
*ருதவியென வோதமுண்ட*
*தவநீடு முனிவரன்செந் தமிழ்மதுரக்*
*கடலளித்தான் றமிழாந் துய்ய*
*பவநீர்முற் றினிதருந்திப் பாவலர்க்கோர்*
*நல்லூர்வெண் பாவாந் திவ்ய*
*நவநீத வமிழ்தினைச்சே னாதிரா*
*யன்றிரட்டி நல்கினானால்"*

நல்லை வெண்பாவுக்குப் புலோலி வித்துவான் முருகேசபிள்ளை என்பார். வித்துவான் கணேசையர், வித்தகம் கந்தையா பிள்ளை, மும்மொழிப் புலவர் சதாசிவ ஐயர் முதலானோர் உதவியுடன் நல்லதோர் உரையெழுதி அதனைச் செந்தமிழ்ப் பதிப்பகத்தில் **1942**ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்.

## நல்லைக் கலி வெண்பா

முதலியார் பாடிய நல்லைக் கலிவெண்பா, குமரகுருபர சுவாமிகள் செய்தருளிய கந்தர் கலிவெண்பாவின் போக்கினை உடையது, பக்தி பயப்பது, பல்சுவை ததும்புவது. இன்னும் ஆராயின் யமகத் தொடையமைந்து, அரும்பொருள் பொதிந்து படிப்போருக்கு ஆனந்தம் பயப்பது.

இந் நூல் முற்றும் கிடைக்கவில்லை என்றும் ஓதுவாரிடம் இருந்த ஏட்டின் பிரதியில் பிழைகள் இருக்கின்றன என்றும் கூறுவர். சிலர் இதை முதலியார் பாடவில்லை என்றும் கருதுவர். ஆனால் இது நல்லூரில் வெளிப்பிராகாரத்தில் ஒரு விழாவில் ஓதப்பட்டு வந்தது என்பது உண்மை. இன்று அகப்படும் பதிப்பு குலசபாநாதன் வெளியிட்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பூமங்கலச் சங்கரனார் புத்திரா எனத் தொடங்கிக் கந்தா கருணாகரா வென முடியும் பாடல் எழுபத்திரண்டு அடிகள் வரை நீண்டது. முருகப் பெருமானின் திருநாமங்களை அருச்சனை செய்வதற்கு வாய்ப்பாகக் கோத்துள்ளது. அவருடைய திருவிளையாடல்களையும் படைவீடுகளையும் பிற தலங்களையும் பகர்வது கார்த்திகையா நாளீன்ற கந்தன், சரவணத்தின் கந்தன், சேந்தன், விசாகன், ஓங்கார வொண்கண்ணுள முருகன் என்றெல்லாம் போற்றிக் கைலாயம் காட்டுவாய் காப்பாய் கந்தா முருகா கதிர்வடிவேற் காங்கேயா'' என்றெல்லாம் வேண்டுகோள் விடுப்பது இப் பாடல்.

## நல்லூர் ஊஞ்சற் பதிகம்

நல்லூர் முருகனுக்கு நல்லதொரு திருவூஞ்சற் பதிகமும் முதலியார் பாடியுள்ளார். இப் பதிகம் கோயிலில் ஓதுவார் அவர்களாற் பாடப் பெற்று வருகிறது. இதில் உள்ள பத்துப் பாடல்களும் பக்தியூட்டுபவை. இவற்றில் முருகனைப் புலவன் என்றும், அரன் புதல்வன் என்றும் குருபர முதல்வன் என்றும், எவ்வுயிர்க்கும் தானவனாயுள்ளவன் என்றும், எந்தனகத்திருந்தருள்பவனென்றும், ஆறு சமய பராபரர் என்றும், எவ்வுயிர்க்கும் தாயாய் தானாய் நின்றருள் புரிபவரென்றும், தேவாதி தேவரென்றும், திரிபுவன கர்த்தாவென்றும், வரையெறிந்த சேவகர் என்றும், சிவஞான போதகர் என்றும், அடியாரை அஞ்சல் என்பவரென்றும் போற்றி; அவர்தம் சேவல், மயில், தேவியர், வேல் மற்றும் ஆயுதங்கள் வாழ்கவென்று வாழ்த்தி, நாதாந்த வேலவரை நாளும் வாழவென்று ஊஞ்சலாட்டியுள்ளார்.

## பிற பாடல்கள்

வண்ணார் பண்ணையில் உள்ள நீராவியடிப் பிள்ளையார் கோயிலின் அக்காலத்து அறங்காவலர்கள் கேட்டுக்கொண்ட வண்ணம் அவர் பிள்ளையார்மீது பல பாடல்கள் பாடியுள்ளார். மேலும் தம் நண்பர் முத்துக்குமார கவிராயர் வணங்கி வந்த மாவைக் கந்தன் மீதும் பல பாடல்கள் பாடியுள்ளார்.

## அகராதிப் பணி

இத்தாலி நாட்டுப் பாதிரியாரான கொன்ஸ்ரன்ரைன் பெக்ஸ்சி என்னும் வீரமா முனிவர் செய்த தமிழகராதி காலத்தால் முந்தியது. அதனையடுத்துத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தயாரிக்கப் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகராதி தெல்லிப்பழையில் வணக்கத்துக்குரிய றைற் என்பார் தொகுத்த அகராதியாகும். இந்த அகராதி வேலையில் உதவியாளராயிருந்தவர்கள் வரிசையில் முன்னணியில் முதல்வராயிருந்தவர் பன்மொழிப் புலவராய சேனாதிராய முதலியாராவர். இவ்வுண்மை இவ்வதிகாரப் பதிப்பில் வரும் சிறப்புப் பாயிர அடிகளால் அறியக் கிடக்கிறது என்று காட்டுவர். ''தெல்லியம்பதியில் வரு நெல்லைநாதக் குரிசில் செய்தவமெனாவுதித்த சேனாதிராசகலை ஞானாதிராசனும்'' என்பன சில அடிகளாகும்.

## முன்னோரும் பின்னோரும்

சேனாதிராய முதலியாரின் முன்னோரும் பெரும்புகழ் பூத்தவர்களேயாவர். அருளம்பல முதலி என்பார் வழி வழி வந்த பொன்னம்பல முதலி, வன்னியசிங்க முதலி மைந்தரே நெல்லைநாத முதலியாராவர்.

நெல்லைநாத முதலியாரின் மூத்த மைந்தன் கந்தப்பர் முதலி என்பார் வழிவந்தவர்கள் விசுவநாதர் முதலியும், இவர் மைந்தர்கள் அருளம்பலம், சுப்பிரமணியம் என்போருமாவர். இவர்கள் வழிகளில் நெல்லைநாதர், சேனாதிராயர் என்போர் வந்துள்ளார்கள்.

சேனாதிராய முதலியார் தென்கோவை பஞ்சாயுத முதலியாரின் புதல்வியைத் திருமணஞ் செய்து இராமலிங்கம், பருவத வர்த்தினி என்னும் இரு பிள்ளைகளுக்குத் தந்தையானார். இராமலிங்கர் பிறப்புரிமைப் பொறியாள்கை நெறியால் பரம்பரை தவறாத புலமை பெற்ற மதிப்புடன் வாழ்ந்தார். ஆறுமுகநாவலர் அவர்கள் 31-12-1847 ஆம் நாள் தமது சைவப் பிரசங்கத்தை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் கோயிலில் ஆரம்பித்தபோது, இராமலிங்கரே தலைமை தாங்கினார் என்ப.

பருவதவர்த்தினியார் செந்தமிழன்பும் சிவநேயமும் சிந்தை நிறையக் கொண்ட சீலர். அவர் இராமநாதபிள்ளை என்னும் பிரபுவைத் திருமணஞ் செய்து, கந்தர்த்தம்பி என்னும் மைந்தனைப் பெற்றார். கந்தர்த்தம்பியைக் கந்தப்பிள்ளை எனவும் வழங்குவர். கந்தர்த் தம்பியும் பேரனிடம் நன்றாகக் கற்று விற்பத்திமானாயிருந்தார். இவர் தென்கோவைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்குப் போதிய பொருளுபகரித்த பெருமையுள்ளவர். நாவலர் வித்தியாசாலையென வழங்கிய பாடசாலை ஆசிரியருள் சிலரைத் தம் மனையிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருக்கச் செய்து, ஓய்வு நேரங்களில் அயற்பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் செந்தமிழ் ஊட்டச் செய்த செல்வப் பிரபுவுமாவர்.

கந்தர்த்தம்பி தம் முந்தையோரான சேனாதிராய முதலியார் சேகரித்து வைத்திருந்த அருந்தமிழ் ஏட்டுப் பிரதிகள் பலவற்றைத் தாமே பொறுப்பேற்றுப் பேணிப் பாதுகாத்துப் படியெடுத்தும் வந்தார். நாவலர் பல நூல்களை அச்சிற் பதிப்பித்தபோது அவருக்குப் பல ஏடுகள் கொடுத்துதவிய கந்தர்த்தம்பி, வைமன் கதிரைவேற்பிள்ளை அவர்கள் தமிழ் ஏடுகளின் பிரதிகள் பலவற்றை இலண்டன் சுவடிச்சாலைக்கு அனுப்பி வந்தபோது, அவரிடமும் பல சுவடிகளைக் கொடுத்துதவினார்.

கந்தப்பிள்ளை எனவும் வழங்கிய கந்தர்த்தம்பி அவர்களின் புதல்வி காமாட்சி பெற்ற காதல் மைந்தனே வித்தகம் கந்தையா பிள்ளை எனப் பெயர் பெற்ற பெரும் பண்டிதராவர். இவர், முதலியார் சிற்கைலாய பிள்ளை அவர்களிடமும், சுன்னாகம் குமார சுவாமிப் புலவர் அவர்களிடமும் முறையாகக் கற்று வித்துவ முறுக்கேறி வித்தகம் என்னும் சஞ்சிகை நடத்திய விற்பத்திமானாவர். பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களை வழிப்படுத்திய பெரியவர்களுள் இவரும் ஒருவராவர்.

இனி, நீதிபதி வைமன் கதிரவேற்பிள்ளை அவர்களும், அவர் தம் தந்தை குமாரசுவாமி முதலியார் என்னும் பெரும் புலவரும், சேனாதிராய முதலியாரை நன்கறிந்து நல்ல மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள்.

குமாரசுவாமி முதலியார் எடுத்த எடுப்பிலேயே பாடல் பாடும் பொருள் புலவராகவே, இவர் சேனாதிராய முதலியார் அவர்கள் 1840 ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தபோது, மனமுருகிப் பாடிய பாடல்களில் ஒன்று கிடைத்துள்ளது.

*"நாணா திராவிடமு நன்னிலக்க ணாறுறச்செய்*
*சேனாதி ராயனையோ செத்ததென்றீர் - வானாதி*
*பொன்னிலத்து முண்மை புகனூலுரைப்ப தற்காய்*
*இந்நிலத்தை விட்டெழுந்த தே"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துக்குமார கவிராயர்
## (1780 - 1852)

### சுன்னாகத்தின் பெருமை

**யா**ழ்ப்பாணத்துப் பழைய செந்தமிழ்ப் பண்ணைகளுள் சுன்னாகமும் ஒன்று. அங்கே செம்பாட்டு, நிலப் பண்பும் மிகுதியாக வுண்டு. சுன்னாகத்திலேயுள்ள பெரிய நாளங்காடி என்னும் பெருஞ் சந்தை குடாநாட்டிற்கே மதிப்புக் கொடுப்பதாகும். அதன் பெருமை போத்துக்கேயராய பறங்கியரையும் தலை சாய்க்கச் செய்தது. போத்துக்கேயரை அடுத்து வந்த ஒல்லாந்தர் காலத்திலே 1665ஆம் ஆண்டளவிலே காசியிலிருந்து வந்த அரங்கநாத ஐயர் மகன் வரத பாண்டியர் என்பார் சுன்னாகத்தில் செந்தமிழ் வளர்த்தமையோடு, சைவ சமயத்தையும் நிலைபெறச் செய்துள்ளார்.

*"ஐயமின் முந்நூற் றையிரு விருத்தம்*
*செய்ய செந்தமிழாற் றெரிந்துரை செய்தனன்*
*கங்கைமா நதிசூழ் காசிமா நகரமும்*
*பங்கமில் பங்கையப் பைந்துணர் மாலையும்*
*ஆதி நான்மறை சேரந்தண ராணையும்*
*கோதக லோமதிக் கொடியு மிங்குடையோன்*
*கன்னியங் கமுகிற் கயலினங் குதிக்கும்*
*துன்னிய வளவயற் சுன்னை நன்னாடன்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்காயமிட்ட பாண்டத்தில், பெருங்காயம் சமைந்த பின்பும் அதன் வாசனை நிலவுமாப் போல் எங்கள் முந்தையோர் கொண்டிருந்த தமிழ்ப் பற்று, அவர்கள் மறைந்த பின்பும் மரபு வழி தவறாமல் நாட்டில் முகிழ்த்து நிலவி வந்துள்ளமைக்கு யாழ்ப்பாணத்து ஊர்கள் தோறும் உண்டாய செந்தமிழ்ப் பண்ணைகளே சான்றாக இருந்து வந்துள்ளன.

## சுன்னாகப் புலவர்கள் பரம்பரை

சுன்னாகம் என்றுமே புலவர்களின் பெருக்கத்தாற் பொலிவு பெற்று வந்துள்ளது. அங்கே மரபு வழிவந்த நற்றமிழ்ப் புலவர்கள் வரிசையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பலர் பரம்பரை பரம்பரையாகப் புலமை பெற்றுயர்ந்து வந்துள்ளார்கள்.

நாகநாதபிள்ளை மைந்தன் சந்திரசேகரம்பிள்ளை, மைந்தன் சுப்பிரமணியபிள்ளை, மைந்தன் அம்பலவாணபிள்ளை என்னும் நான்கு தலைமுறைகளுமே புலமை வாய்ந்த குடும்பத்தவராவர்.

அம்பலவாணபிள்ளை என்பாரின் மைந்தர்கள் இருவர். மூத்தவர் முத்துக்குமாரர், இளையவர் சின்னதம்பிப்பிள்ளை. இருவருமே இளமை முதற் புலமை பெற்றுப் புகழீட்டியவர்களாவர். மூத்தவராய முத்துக்குமாரரின் இளமைப் புலமை அவருக்குக் கவிராயர் என்னும் பட்டத்தையும் ஈட்டிக் கொடுப்பதாயிற்று.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் காட்டிய இலக்கிய வழியிலே நாம் சந்திக்கின்ற இரு கவிராயர்களுள் ஒருவர் முத்துக்குமார கவிராயராவர். அவர் தம் கவித்துவத்துக்கு ஏற்றம் கொடுத்தவர்கள் அவரைக் ''கவிராசசேகரம்'' என்றே வழங்கியுள்ளார்கள்.

கவிராயரின் அருமைத் தம்பியாராய சின்னதம்பிப்பிள்ளை என்பாரின் மைந்தருள் ஒருவரின் பெயரும் அம்பலவாணபிள்ளை என்பதாகும். இவரைச் சிதம்பரம் அம்பலவாணபிள்ளை எனவும் வழங்குவர். சிதம்பரம் அம்பலவாணபிள்ளையின் அருமை மைந்தரே. சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர். இவரை இலக்கியவழி இரண்டு மனிதர்களுள் ஒருவராகச் சுவைத்துக் காண்பிக்கின்றது.

இங்ஙனமாகத் தம்முடைய முற்சந்ததியினரும் பிற்சந்ததியினரும் செந்தமிழ் வளர்த்த செம்மல்களாயிருக்கும் பாக்கியம் பெற்றுத் தாமே பெருமளவில் செந்தமிழ் வளர்த்த செம்மலாயிருந்தவர் முத்துக்குமார கவிராயராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துக்குமார கவிராயர் அம்பலவாணர் என்னும் புலவரின் மைந்தராய் 1780ஆம் ஆண்டில் தோன்றியவர். இவர் ஒல்லாந்தர் ஆட்சியையும் ஆங்கிலேயர் ஆட்சியையும் கண்ட அனுபவசாலி. இவர் இளமையிலேயே தம்மிட்டம் போலக் கவிபாடும் திறமை பெற்றிருந்தாரெனவே, எல்லோரும் இவரைக் கவிராயர் எனவே அழைப்பாராயினர்.

## மாணாக்கர்களாற் பெற்ற பெருமை

கவிராயருடைய புலமையை அறிந்தவர்கள் பலர், தங்கள் புதல்வர்களை இவரிடம் படிக்க வைத்தனர். சிறுவர்களை மனிதராக்கிய பெருமை கவிராயருக்குண்டு. கவிராயரின் புலமைப் பைத்தியம் பலரிடம் தொற்றியமையால் ஊரிற் பல இளைஞர்கள் புலவர்களாக மலர்ந்திருந்தனர்.

சிறுப்பிட்டி வைரவநாதர் என்னும் பெரியார் ஏழாலையில் திருமணஞ் செய்தவர். அவரின் மைந்தர்களில் ஒருவராய தாமோதரம் பிள்ளை அவர்கள், கவிராயரின் உத்தம மாணாக்கனாகி, பன்னிரண்டாம் வயதுக்குள்ளேயே பண்டிதர்க்கான இலக்கிய இலக்கண அறிவைப் பெற்றுக் கொண்டார். தாமோதரம்பிள்ளை அவர்கள்தாம் பிற்காலத்தில் எழுதிய நூல்களுக்கும், பதித்த நூல்களுக்கும் முகவுரைகள் எழுதியபோது குரு வணக்கமாகக் கவிராயரைப் போற்றிய பாடல்கள் இலக்கியச் சுவையோடு குருவி சுவாசப் பண்பாட்டையும் காட்டுவன. செந்தமிழ் வளர்த்த செம்மலாய கவிராயரின் புகழைச் சீடராய பிள்ளையவர்கள் பாடிய பாடல்களிலொன்று இது.

*"எழுத்தொடு விழுத்தமிழ் பழுத்தசெந் நாவினன்
முழுத்தகை யேற்கவை யழுத்திேனோன் சுன்னா
கத்துயர் மரபினோன் முத்துக் குமார
வித்தக னடிதலை வைத்து வாழ்த்துவனே"*

செந்தமிழ் வளர்த்த செம்மலாய தாமோதரம் பிள்ளை அவர்கள் தாம் அரிதின் முயன்று நூறாண்டுகளுக்கு முன் பதிப்பித்த கலித்தொகைப் பதிப்பிலும் தம்மாசிரியருக்கு வணக்கஞ் செலுத்தத் தவறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"சுன்னை முத்துக் குமாரன் றுணைக்கழல்*
*சென்னி நாவொடு சிந்தை திருந்தவைத்*
*தன்ன மூதறிவாளர் பதந்துதித்*
*திந்நி லத்திவ் வுரையின் றியம்புகேன்"*

இவ்வாறே பிள்ளை அவர்கள் தாம் பதிப்பித்த இலக்கண விளக்கப் பதிப்பிலும் தம்மை உருவாக்கிய செம்மலாய கவிராயர் அவர்களைச் சிந்தையிலிருத்திப் போற்றியிருக்கிறார்.

*"திங்கள் தங்கிய செஞ்சடை முடியினன் திருத்தாள்*
*பங்க யங்கயி லாயநா தனைமுனிப் பழிச்சிச்*
*சங்க மங்களத் தமிழ்முத்துக் குமாரன் தன்மலர்ப்பா*
*தங்கள் வங்கமாத் தமிழ்க்கடல் இடைபடி குவனே"*

தமிழ், கடலிலும் பெரியது, பரந்தது. இதனைக் கடந்து கரை காண்பதற்கு ஓடம் போலுதவுவது தம் குருவாய கவிராயரது மலர்ப்பாதம் என்பர். குரு பாதம் துணையென்று இந்து நாகரிகப் பண்பாட்டில் நிலவும் பண்டைய தூய மரபுமாகும்.

## விநாயக வணக்கம்

முத்துக்குமார கவிராயர் சுன்னாகத்துச் சந்திரசேகர விநாயகப் பெருமானை மெய்யன்போடு உருகி வழிபடும் நியமம் பூண்டவர் என்பது, அவர் அப் பெருமான்மீது பாடிய தனிக் கவிகளால் அறியற்பாலது. அவர் வணக்கமாகவும் முறையீடாகவும் சில பாடல்கள் பாடியுள்ளார். வணக்கமாகப் பாடிய பாடல்களுள் ஒன்று "ஒரு கோட்டானை நாளும் வணங்குவனே" என வருவதாகும். இதில் விநாயகப் பெருமானின் பரத்துவம் பாடி, அவர் தம் கவிதையைக் கேட்டருள்புரிந்தவர் எனப் பாடுவர். அவர் முருகப் பெருமானுக்குத் திருமணஞ் செய்து வைத்தவர். வெள்ளை இடபமேறிய பெருமான் மைந்தர் என்றெல்லாம் பாடுவர்.

*"வாட்டானை யன்னமை தீட்டா விழிமிளிர் மான்மகளைத்*
*தாட்டானை யானுக்கு வேட்டானை யன்பர்தஞ் சஞ்சலங்கள்*
*மீட்டானை யென்கவி கேட்டானைச் சுன்னையின் மேவுநரை*
*மாட்டா னருளொரு கோட்டானை நாளும் வணங்குவனே"*

தமக்கருள் புரிந்த பெருமானைச் சுன்னாக நண்பனே என்றும் கலைஞான தற்பரா என்றும் வழங்குபவர், கால் மேலான பர மூல காரணமான கணபதீ, கருணாநிதீ எனச் சரணடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் சரணடைந்த அவர் தம் காலத்து ஆங்கிலேயர் அத்துமீறி அரசபணி என்னும் சேவையில், குடிமக்கள் கட்டாயமாகத் தெருக்கட்டும் வேலையில் ஈடுபடுதல் வேண்டும் என்று பறையறைந்து மக்களை நலியச் செய்தார்கள். இதனைப் பொறாத கவிராயர் விநாயகப் பெருமானிடமே முறையிட்டு வருந்தியுமுள்ளார்.

*''மருக்கட்டுமாலை முடிமன்னர்*
*கட்டளை வந்தபடி*
*தெருக்கட் டட்டாம்கன் மலைப்பாரை*
*ஒப்பனை செய்தடித்து*
*நருக்கட்டு மாமறுத் தாற்குற்ற*
*மாக்கினை நம்பிக்கை யென்(று)*
*இருக்கட்டு மாமிதற் கென்செய்கு*
*வேன்சுன்னை ஏரம்பனே''*

## சிதம்பர நடராசர் தோத்திரம்

யாழ்ப்பாணத்தாருக்குத் தில்லை என்னும் சிதம்பரம் அடுத்த ஊர் போலமைந்திருந்த தலமாகும். ஆண்டுதோறும் சிதம்பரம் போய்வந்த அடியார்கள் யாழ்ப்பாணத்தவர். யாழ்ப்பாணத்தவர் பலர் தம் நிலபுலங்களைச் சிதம்பரத்திற்குத் தரும சாதனம் செய்துமிருக்கிறார்கள். சிதம்பரத்தில் மடங்கள் கட்டியும் உள்ளார்கள் ஆறுமுகநாவலர் அவர்கள் சிதம்பரத்தில் சைவப் பிரகாச வித்தியாசாலை அமைத்து உயர் கல்விக்கான வழிவகைகளையும் செய்துள்ளார். அவரின் முன்னோரான ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் 1650ஆம் ஆண்டளவிலேயே சிதம்பரத்தில் திருக்குளமும் திருமடமும் தம் பெயர் நிலவுமாறு அமைத்தவராவர்.

முத்துக்குமார கவிராயர் சிதம்பர நடராசப் பெருமானின் குஞ்சிதபாதம் மறவாதவர். அவர் நடராச மூர்த்தமீது பக்திப் பெருக்கால் உந்தப் பெற்றுத் தோத்திர ரூபமாக வழியெதுகையும் மடக்கலங் காரமும் விரவி வருமாறு மூன்று ஆசிரிய விருத்தங்கள் பாடியுள்ளார். அவை ''சிதம்பர மெனுந்தவர் நிதம்பர விதம்பெறு சிதம்பர மகாதேவனே'' என்னும் ஈற்றடிகளைக் கொண்டு முடிவனவாகும்.

*''பாதநூ புரமணி கலின்கலின் கலீனென்று*
*பரதவித மாட வேங்கைப்*
*பட்டாடை மடமடென விட்டாட வரையினிற்*
*பன்னகக் கச்சை யாடச்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சோதிநூ லாடவுட னாதியேனக் கொம்பு*
*தொட்டாட விதிக பாலத்*
*தொடையாட முழுவெண்பு புடையாட மான்கன்று*
*துள்ளிவிளை யாட மதியின்*
*பாதியா டக்குழையின் மீதுபொற் குண்டலம்*
*பளபளென் றாட வணியும்*
*பணியாட, வணியக்கு மணியாட மதலைப்*
*பசுந்தொடையு மாட வேணிச்*
*சீதவா னதியாட, மன்றாடு நின்பாத*
*தெரிசனம் எனக்க ருளுவாய்*
*சிதம்பர மெனுந்தவர் நிதம்பர விதம்பெறு*
*சிதம்பர மகாதே வனே!''*

## மாவிட்டபுரக் கந்தசுவாமியார்

கோவிற் கடவை என்றும் மாவை என்றும் வழங்கும் திருத்தலத்தில் கோயில் கொண்டருளியுள்ள சுப்பிரமணியப் பெருமானுக்குக் காவடிக் கந்தன் என்றும் திருநாமம் வழங்குவதுண்டு. அங்கே நடைபெறும் பெருந் திருவிழா நாள்களில் பக்தர்கள் பாற்காவடி கொண்டு ஆடிப் பாடி வரும் காட்சி பக்திப் பரவச மூட்டுவதாகும். அங்கே நடைபெற்ற திருவிழாவொன்றில் அடியார்கள் வேண்டிக் கொண்டபோது, கவிராயர் பாடிய தோத்திரப் பாடல்கள் அற்புதமானவை.

மாவிட்டபுரத்துக் காவடியாட்டங் கண்ட அடியவர்கள் இயமன் ஏறிவரும் எருமையைக் காணமாட்டார் என்று கருத்துப் படப் பாடிய பாடலில், ஏ என்பது ஏழு, ரு என்பது ஐந்து எனவே ஏழுஞ்சுமை எருமை என வருகிறது.

*"கோவிற் கடவைக் குருபரனா ருற்சவத்தைச்*
*சேவித்து நிற்பார் தெருத்தோறும் - காவிச்செல்*
*காவடியைக் கண்டிருப்பார் காண்பரோ கூற்றுவனார்*
*தாவடி ஏழுஞ் சுமையைத் தான்''*

இங்ஙனம் பாடியவர், தொடர்ந்து திருவிழாத் தரிசனப் பலன், திருவிழாச் சேவையின் சிறப்பு, சப்பர மஞ்சத் திருவிழாச் சிறப்பு என்பன சம்பந்தமாகவும் பாடியுள்ளார். இப்பாடல்களின் முதலடியை நண்பர் சேனாதிராய முதலியார் உடன்நின்று எடுத்துப் பாட, ஏனைய அடிகளைக் கவிராயர் தொடர்ந்து பாடியமை இரட்டைப் புலவர்களின் சம்பந்த விசேடத்தைக் குறிப்பனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்கு அப்பால் கவிராயர் மாவிட்டபுரத்துக் கடவுள் பவனி வந்த காட்சியைப் பாடியபோது, பாடிய ஆசிரிய விருத்தத்தில் அயலூர்களின் பெயரை இட்டுப்பாடி, அவற்றுள் வேறு பொருளை மறைத்து வைத்துமுள்ளார். இதை வடநூலார் நாமாந்திரிகை என்னும் பிரகேளிகை என்பர். இதனால் ஒரு பொருள் ஆழ்ந்து கிடப்ப, மேலெழுந்த வாரியாக வேறொரு பொருள் மிதந்திருக்கக் காணலாம். இத்தகைய பாடல்கள் சிலவற்றைப் பண்டிதமணி அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற நான்காம் தமிழ் விழாவில் சேதுப்பிள்ளை அவர்களின் தலைமையில் தமிழ் என்னும் தலைப்பில் பேசி விருந்து செய்ததும் உண்டு.

அன்று கவிராயர் பாடிய பாடலில் மல்லாகம், மாதகல், சுன்னாகம், ஈவினை, துன்னாலை, சில்லாலை, கொடிகாமம் ஆகிய ஊர்ப் பெயர்களை வைத்துப் பாடிய பாடலில் மறைத்து வைக்கப் பெற்ற பொருள் உய்த்துணர வேண்டியது.

*''மல்லாக மாதகலான் மருகன் கன்னாகத்தான்*
*மகன்பா வாணர்*
*சொல்லாச்சீர் ஈவினையான் துன்னாலை யானத்தான்*
*சுரும்ப ரோதிச்*
*சில்லாலை யிருள்வென்ற குறக்கொடிகா மத்தானைச்*
*சிகண்டி மாவூர்*
*வல்லானை மாவிட்ட புரநகரத் திடைப்பவனி*
*வரக்கண் டேனே''*

இங்கே எழுந்தருளி வந்தவர் முருகன். அவர் மல் ஆகம்மாது அகலான் மருகன் அஃதாவது வலிய மார்பிலே ஸ்ரீதேவி அகலாதிருக்கும் திருமாலின் மருகன். சுன்னாகத்தான் என்பவர் வெள்ளியங் கிரியின் சிவன். சீர் ஈவினையான் என்றால் செல்வம் கொடுக்கும் செயலுடையவன். துன்னாலையானத்தான் என்பது மன்மதனுக்கு அத்தான். சில்லால் ஐ இருள் வென்ற என்பது தகட்டணியால் வியக்கப்படும் இருளையும் வென்ற என்பதாகும். குறக்கொடிகாமத்தான் என்பது குறவர் மடமகளாய வள்ளியம்மையார் மீது அளவு கடந்த அன்புடையவன் என்பதாகும்.

இனி முருகப் பெருமான் எழுந்தருளி உலாவரக் கண்ட மகளிர் கொண்ட காதலையும், செய்த செயல்களையும் இங்ஙனமாகவே மறைத்துப் பாடிய பாடல்கள் பலவாகும். அவற்றுள் ஒன்று கட்டளைக் கலிப்பாவா லமைந்து, இலக்கிய இரசிகர்கள் பல்லாயிரவர் நாவை அடிக்கடி அசைத்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"முடிவி லாதுறை சுன்னாகத் தான்வழி*
*முந்தித் தாவடிக் கொக்குவின் மீதுவந்(து)*
*அடைய வோர்பெண் கொடிகாமத் தானைசத்(து)*
*ஆனைக் கோட்டை வெளிகட் டுடைவிட்டாள்*
*உடுவி லான்வரப் பன்னாலை யான்மிக*
*உருத்த னன்கடம் புற்றமல் லாகத்துத்*
*தடைவி டாதனை யென்று பலாலிகண்*
*சார வந்தன ளோர்இள வாலையே"*

இங்கே வந்த ஊர்ப்பெயர்கள் சுன்னாகம், தாவடி, கொக்குவில், கொடிகாமம், ஆனைக்கோட்டை, கட்டுடை, உடுவில், பன்னாலை, மல்லாகம், பலாலி, இளவாலை என்பனவாகும்.

இங்கேயும் மறைத்து வைக்கப் பெற்ற பொருள் அருமை வாய்ந்த அகத்துறை சம்பந்தமானதொன்றாகும். சுன்னாகத்தான் திருக்கைலாச மலைச் சிவன் வழி என்பது மகனைக் குறிப்பது தாவடிகொக்கு என்பது தாவிப்பாய்கின்ற அடிகளையுடைய குதிரை. பெண்கொடி என்பது கொடி போன்ற பெண். காமத்தாள் காதல் மிகுதியாயுள்ளவள். ஆனைக்கோட்டைக் கட்டு உடைவிட்டாள் என்பது அவள் காமவிச்சை காரணமாக யானைக் கொம்பனைய குத்து முலைகளைக் கட்டவிழ்த்து விட்டாள் என்பதாகும். உடுவிலான் என்பது நட்சத்திரங்களைத் தேவியாகவுடைய சந்திரன். உடு+இல்லான் என்பதாகும்.

இனி இத்தகைய சூழலைச் சாதகமாக்கிக் கொண்டு மன்மதன் வருகிறான். அவன் பன்ஆலையான் சொல்லப்படுகின்ற கருப்பு வில்லினையுடையவன். மல்லாகம் வலிய மார்பு, பலாலி பலவாய துளி, இளவாலை இளம் பருவத்தாளாய மடக்கொடி.

## நல்லூர் முருகனைப் பாடிய நயம்

கவிராயர் சேனாதிராயரோடு நெருக்கமாகப் பழகிய நட்பில் நல்லூருக்கும் வருபவர். இருவரும் கோயிலுக்குச் சென்று வணங்கி நிற்கும்போது, கவிராயர் முதலியாரிடம் "எங்கே உங்கள் முருகனை நீங்களே பாடுங்கள்" என்பார். முதலியார் பாடிய பின், தாமும் பாடுதல் கவிராயர் வழக்கம். அன்று கார்த்திகைத் திருவிழா. கீரி மலையில் மடங் கட்டிய கிருஷ்ணபிள்ளை அவர்களின் முன்னோர் பரம்பரையாகச் செய்து வந்த பெருவிழா கவிராயர் சுவாமி தரிசனஞ் செய்தபோது, நாயகி பாவனையில் நன்கமைந்த கட்டளைக் கலித்துறைப் பாடலும், இரட்டையாசிரிய விருத்தமும் பாடித் துதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

*"மங்கள நல்லை வடிவேலர் வீதிவந் தார்மடவார்*
*பங்கயங் காந்தள் குவளைவெண் முல்லை பரப்பிமறு*
*செங்கு நிறைகுடம் வைத்துமெய்த் தொண்டுசெய் தாரிதற்கோ*
*அங்க முழுதும் புனிதமி னார்க்கென் றறைந்ததுவே"*

கவிராயர் நல்லூர்க் கார்த்திகைத் திருவிழாவன்று அடுத்துப் பாடிய இரட்டையாகிய விருத்தத்திலே மறைத்து வைத்துப் பாடியதும் நாமாந்திரிகையாகும். இது கடவுள் மாட்டு மானுட மகளிர் நயந்த பக்கமுமாம்.

*"ஆரா தனைக்காந் திருநல்லூர்*
*ஆறு முகத்தார் மனைவியரோ(டு)*
*அடுப்பி லடுத்த நெருப்பிலன்பர்*
*அகத்தை உருக்கும் சாறுவைத்தார்*
*வாரா மறுகி னோராய்மென்*
*மடவா ரெடுத்தார் காற்பலச்சொன்*
*மரத்தைக் கோளி யாரெடுத்தார்*
*மருங்கின் மயலாய் நின்றேனே!*
*ஊரா ருரையும் வம்பலரே!*
*உற்றா ரினுவ்கோ வம்பலரே!*
*உலவை யீரும் வைவாளே!*
*உறுக்கி யனையும் வைவாளே!*
*வேரா வுடம்பில் வரும்பீரே!*
*விரும்பி யென்பால் திரும்பீரே!*
*விளைவின் மதனுக் கத்தானே!*
*விரும்பு மென்னா கத்தானே!"*

அடுப்படியில் சுவையாகச் சமைத்த சாறு என்பது வெளிப்படையான கருத்து. ஆனால் மறைத்துக் கூறிய பொருள் அடுப்பு-பரணி. பரணிக்கு அடுத்தது நெருப்பு - கார்த்திகை. சாறு என்பது திருவிழாவாகும்.

காதல் உண்டாய மகளிருக்கு அயலவர் கூறும் பழிச்சொல் அலர் அவளுக்குத் தென்றற் காற்று உயிரைப் போக்கும் வாள் போன்றதாகும். இனி அவளுடைய முலைகளில் பீர் என்னும் பசலை படருவதும் உண்டு. எதுவரினும் அவள் ஊரார் அலரைப் பசளையாக்கிக் காதலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ப்பாள். காதலன் வேறு யாருமில்லை. மன்மதனுக்கு அத்தான். அவளுக்கு நெஞ்சில் நிறைந்த கந்தன்.

## நல்வாழ்வு வேண்டி நரசிங்க மூர்த்தியைப் பாடியமை

மயிலணியிற் கோயில் கொண்ட நரசிங்க மூர்த்தியையும் கவிராயர் விட்டு வைக்கவில்லை. தமக்கு நல்வாழ்வு வேண்டும் என வேண்டுகோள் விடுத்துச் சில பாடல்கள் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்றையாவது சுவைத்துப் பார்க்கலாம்.

*"கல்லாத புல்லர் மனையணு காமற் கவியவர்மேற்*
*சொல்லாமல் நல்குர வில்லாமல் நித்தம் துயர்க்கடலுட்*
*செல்லாமல் நல்ல வரந்தரு வாய்செந் திருமருவு*
*நல்லாய்! மயிலணி வாசா! விசய நரசிங்கமே"*

## ஐயப்பனைப் போற்றியமை

தமிழ்நாட்டில் இன்று சபரிமலை ஐயப்பன் வழிபாடு உச்ச கட்டமடைந்து, காடு மேடு பள்ளத்தாக்கு எங்கும் 'சுவாமியே ஐயப்பா சரணம்' என்னும் மந்திரவொலி ஆவேசக் குரலில் ஒலிக்கிறது. பக்தர்கள் கூட்டங் கூட்டமாக ஆடிப் பாடி அரோகரா குரலெழுப்பிப் போகும் காட்சி பக்திப் பரவசத்தைத் தூண்டுமாறு படருகிறது.

இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னரே முத்துக்குமார கவிராய சேகரர் சுன்னாகத்து ஐயனார் மீது ஊஞ்சற் பாட்டுப் பாடி வாழ்த்திய அருமை பெரிது. அவர் ஐயனார் தத்துவத்தையும் விளக்கி அவரருளை நாடி வேண்டி, ஊஞ்சரேற்றிப் பாடி ஆட்டுகிறார். நாமும் பக்தி மேலிட்டுத் தமிழ்த் தேனருந்தி அசைகின்றோம்.

சுன்னாகந் தனிலுறைவோம் என்று வந்த சுத்த மகா சாத்தன் என்றும், அத்திமுகன் சகோதரன் என்றும், அதிக கிருபாகரன் என்றும், ஆரணத்தின் உட்பொருள் என்றும், பூரண புட்கலை தேவியர் தலைவரென்றும், திருக்கையில் செண்டு ஏந்தியவர் என்றும் அருட்கடல் என்றும் போற்றி; வஞ்சனை நோய் வறுமை, பிறவித் துன்பம் நீக்கி, அஞ்சல் அஞ்சல் என அருளுமாறு வேண்டுவர். இத்தகைய ஊஞ்சற் பாடல்களில் ஒன்றையும் இறுதியில் வரும் வாழ்த்தையும் பாடி இன்புறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புங்கவர்கள் நால்வேத கீதம் பாடப்
புனையிழையார் பரதவித நடனம் ஆடு,
மங்கலநா விரண்டுமிரு மருங்குங் கூட,
மாதவர்கள் சொரியுமலர் மாரி மூடச்
செங்கரங்கொண்டு அரம்பையர்சா மரங்கள் போடத்
திங்கள்படி மணிமாடத் தென்பால் மேவும்
ஐங்கரன்கண் குளமகிழ ஆடீர் ஊஞ்சல்
அரியரனார் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்!

சுந்தரமார் முகில்மாரி பொழிந்து வாழ்க;
சுரபிநிரை வாழ்கமன்னர் செங்கோல் வாழ்க,
மைந்தர்மனை நிதிபெருகி இல்ல றத்தின்
மனைவாழ்க மகாசைவ சமயம் வாழ்க;
சிந்தனையிற் கவலைமிடி வறுமை துன்பம்
தீர்ந்தடியார் வாழ்க;சுன்னைப் பதியும் வாழ்க;
அந்தணர்தம் கிளைவாழ்க; ஆடீர் ஊஞ்சல்
அரியரனார் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்."

கவிராயர் தமிழிலேயன்றிச் சைவ சமயத்திலேயும், சிவனடியாரிடத்தும் பேரபிமானமும் பெரும்பற்றும் கொண்ட பெரும் புலவராவர். அவர் சைவ சமயத்தைப் பழைய பெருமை வாய்ந்த பீடத்தில் வைப்பதற்கு எடுத்த பெருமுயற்சியை, "முத்துக்குமார கவிராயர் மொய்யமர்" என்று பிற்காலப் புலவர் போற்றுவர்.

கவிராயர் சைவாபிமானம், மொழியபிமானம். ஊரபிமானம் மிக்கவர். அவர் தமக்கு முன் வாழ்ந்த புலவர்கள் சிலர் சுன்னாகத்தைப் போற்றிப் பாடிய வகையில் தாமும் தம் அபிமானந் துலங்கப் பாடியுள்ளார்.

"புன்னாக நீழலும் பொய்கை நடுவிற் பொருந்தியதும்
என்னாக ரோமஞ் சிலிர்ப்பெய்த வைங்கர னெய்தியது
முன்னாக நாடி யரியர னீன்ற முதல்வன்புரம்
சுன்னாக மாமித் தினமேது சொல்லித் துதிப்பதுவே"

சுன்னாகத்து ஐயனார் தம் படைத் தலைவன் மகாகாளன் என்பாரோடு அந்தப் பதியையும் அயலூர்களையும் அன்பருளம் மகிழக் காத்து வருபவர். அவர்மீது ஊஞ்சல் பாடிய வாயால் கவிராயர் வேறு தோத்திரப் பாடல்களும் பாடியுள்ளார். அத் தோத்திர மாலைக்குப் காப்பாக, மங்கல வாழ்த்தாக சந்திரசேகர விநாயக மூர்த்தியைப் போற்றும் பாடல் படித்தின் புறப்பாலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓங்குகரு ணையினுருவ மாங்குயில் நிகருமொழி
உமையம்மை பங்கனாம்
உத்தமனு நத்தமர வத்தமிசை வைத்தவனு
மொண்சால மரநீழலில்
தாங்களிரு வருமாண்பெ ணாங்கொலென மருவியே
சரமசர முய்யமகவாய்த்
தந்திடச் சுன்னைநகர் வந்திரட் சிக்குமா
சாத்தவருண் மூர்த்தி மீது
தேங்குமது ரத்தமிழி னாசிரிய மோதவென்
சித்தத்து ணித்தமுறையும்
திகழுமரு மறைமுதற் பிரணவத் துருவான
சிற்பர னான்கினுடனே
தாங்குமொரு கையன்முரு கையனுய்யக்குறத்
தையன்மை யற்குதவினோன்
சந்திரசே கரானந்த சிந்துரா னானஞான
தற்பரன் பொற்பாதமே"

## தனிப்பாடல்கள் தாராளமாகப் பாடியமை

கவிராயர் அவர்கள் தம் அறிவாற்றலுக் கேற்பப் பெருநூல்கள் எவையும் செய்யவில்லை. அவர் பெரும்பாலும் பல தனிப் பாடல்களே செய்துள்ளார். அன்றி ஊர்கள் தோறும் பல தலங்களுக்கு ஊஞ்சல் பதிகம் என்னும் சிறு பிரபந்த வகைகள் பல பாடியுள்ளார்.

அக் காலத்துக் கிறிஸ்து மதப் போதகர்கள் வரம்பு மீறிச் சைவ சமயத்தைத் தாழ்த்திப் பேசிப் பொன்னும் பொருளும் உண்ணும் உணவும் உடுக்க உடையும் கொடுத்து ஏழைகளைத் தம்மதத்தில் சேர்த்த தவறான போக்கை வெகுவாகக் கண்டித்துப் பாடி வந்தார்.

சனரஞ்சகமாக எல்லோரும் எளிதில் விளங்கிக் கொள்ளும் வகையில் இவர் பாடிய பாடல்கள் கும்மி வகையைச் சேர்ந்தவை. பெண்கள் கூடிக் கைகொட்டிப் பாடியாடும் வகையில் இவர் ஞானப் பெண்ணே! என விளித்துப் பாடிய பாடல்களே ஞானக் கும்மி என்னும் தொகுதியாகும்.

கவிராயர் ஞானக் கும்மி, யேசுமத பரிகாரம், ஐயனார் ஊஞ்சல், நடராசர் பதிகம் என்பனவோடு பல தனிப் பாடல்களும் பாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் ஞானக் கும்மி, யேசுமத பரிகாரம் என்பவை அக் காலத்து கிறிஸ்தவ போதகர்கள் சைவத்தைப் பரிகாசம் செய்து குறைத்துப் பேசி பிரசாரஞ் செய்தமையைப் பொறாது, சைவத்தை விளக்குவதற்காகப் பாடியவையாகும்.

இவற்றுள் சில பாடல்கள் நகைச் சுவையாயும், நக்கல் கிண்டல் ததும்ப அக் காலத்து வெள்ளைக்காரப் பாதிரிமாரின் போக்கைக் கண்டிப்பனவாயும் உள்ளன.

வெள்ளைக்காரப் பாதிரிமார் தம்மைத் தேசிகர் எனக் கூறிக்கொண்டு, தேசிகர்க்குரிய ஆசார அநுட்டானமின்றி வாழ்ந் தமையையும் குறிப்பிடுவர். காலைக்கடன் முடித்ததும் கால் கழுவாமல் கடதாசியால் துடைக்கும் வழக்கத்தைக் கவிராயர் கடுமையாகக் கண்டிப்பர்.

*''மாசார் மலத்தை விடுத்துக் குதத்திடை*
*மண்ணிட்டு நீர்கொண்டு சௌசஞ் செய்யாதவர்*
*தேசிக ராம்பரி சுத்தரு மாமினிச்*
*செப்புவ தேதடி ஞானப் பெண்ணே''*

கவிராயர் ஞானக்கும்மி பாடும்போது எடுத்த எடுப்பிலே ''சீர்கொண்ட வேதாகமங்களைப் பொய்யென்று செப்பு மிலேச்சர்'' என்று புறச் சமயத்தாரைக் குறிப்பிடுவர். தொடர்ந்து மதவிகற்ப இயல்பு, யேகோவா இயல்பு, யேசு இயல்பு, பரிசுத்த ஆவி இயல்பு, சீவனியல்பு, கிரியை இயல்பு, நரக இயல்பு, முத்தி இயல்பு, மோசே முதலியோர் இயல்பு, கிறிஸ்தவர்கள் இயல்பு என்னும் பல தலைப்புகளில் பலவித பாவினங்கள் விரவிவரப் பாடியுள்ளார். இவற்றுள் ஓசை நயமும் சொல்லலங்காரமும் பொருளடர்த்தியுமுள்ள ஆசிரிய விருத்தம், கொச்சகக் கலிப்பா, கலிவிருத்தம், கலித்துறை, வெண்பா முதலிய பாவினங்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வாறாக இவர் 116 பாடல்கள் அருமையாகப் பாடியுள்ளார்.

சைவர்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவில் நம்பிக்கை கொண்டு தீர்த்தமாடுதலை விசேடமாகக் கருதி சென்றாடு தீர்த்தம் எனப் போற்றுவதைப் புறச் சமயத்தவர் பழித்துவிட்டு, நீரைக் கிள்ளித் தெளித்து ஞானஸ்நானம் செய்வது எதற்கு என்றெல்லாம் கவிராயர் சாடியுள்ளார்.

சைவர்கள் திருக்கோயிலை மையமாகக் கொண்டு தங்கள் வாழ்வை வளம்படுத்தி உய்தி பெறுவதை, பிரதிஷ்டாதி உற்சவாந்தம்; உற்சவாதி பிராயச்சித்தம் என்று பயபக்தியுடன் கொண்டாடுவர். இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறாகப் புற மதத்தவர் சைவரின் பிரதிஷ்டாதி கிரியைகளைக் குறை கூறப் பொறாத கவிராயர் பாடுவர்.

*"மேலான கோயிற் பிரதிட்டை யேனென்று*
*வீண்பழி சொல்வார் சலொமோ னெனும்வேந்தன்*
*ஆலயங் கட்டிப் பிரதிட்டை செய்த*
*தறிகில ரோவெடி ஞானப் பெண்ணே"*

இங்ஙனமாகவே யேசு மதபரிகாரம் என்னும் தொகுதியும் ஆசிரிய விருத்தத்தாலமைந்த இருபத்து நான்கு பெரிய பாடல்களைக் கொண்டதாகும். இப்பாடல்கள் தோறும் ஈற்றடியாக "அமல பூரண சுத்த சச்சிதானந்த மயமாம் சிவனை அறிவதறிவே" என்னும் தொடர் விரவிவரப் பாடியுள்ளார்.

இன்னும் போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் அரசாண்ட அக் காலத்துக் கிறிஸ்தவ பாதிரியார் நடந்துகொண்ட வண்ணத்தைப் படம் பிடித்தாற் போலப் பாடியுள்ளார்.

"அள்ளிப் பணங் கொடுத்து ஆளேன் பிடிக்கிறார் அவர் வார்த்தை கேட்பது அறிவோ" என்றும், "அடியிலாப் புணையேறி நெடிய கடல் போகிறார். அவர் வார்த்தை கேட்பதறிவோ" என்றும், சுட்ட மண்ணுடன் பச்சை மண் பரிசிக்குமோ" என்றும் "சூரியனை அங்கையால் மூடலாமோ" என்றும் "பரசமய நூல்களைத் தெய்வத்தை நடைகளைப் பாகுலாசாரமதனைச் சீரார் தவங்களையிகழ்ந்து பல புத்தகங்கள் தீட்டியே கூலியாட்கள் சேர்த்து வைத்தெங்குங் கொடுக்கிறார், தமது தேசிகன் மொழி மறந்தார்" என்றும் "அருட்டுறையின் வழி சற்று மறியாமலலைகிறாரவர். வார்த்தை கேட்பதறிவோ" என்றும், "தங்கள் சபையிடை சேர்ந்து யேசு மதமல்லாது சற்சமய மல்லையென்று சாற்றி" என்றும் பலவாறாக அக் காலத்துப் புறமதத்தவர் செயல்களைக் கண்டித்துப் பாடுவர்.

இன்று பண்பாடு பற்றிப் பேசுபவர் தாய்மொழியன்பு தாயன்பு ஊரபிமானம் நாட்டபிமானம் என்றெல்லாம் பேசுகிறார்கள். கவிராயர் தாய்மொழியன்பும் ஊரபிமானமும் கொண்ட பெரியவர். அவரின் சமயாபிமானம் தலை சிறந்தது. அவர் சைவம் பட்ட பாட்டையும் கெட்ட கேட்டையும் கண்டும் கேட்டும் மனம் நொந்து எங்களை அடுத்துக் கெடுத்தவர்கள் கூறிய ஆசை வார்த்தைகளையும் இடையில் கைவிட்டதையும் அயலவரிடம் அநுபவரீதியில் கண்ட அமைவில் பாடிய பாடல்கள் பல. அக் காலத்து உடுவிற் பாதிரியார் ஒருவர் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியினத்தை நினைத்து வருந்தி பராபரனிடமே முறையீடு செய்துள்ளார்.

"நல்லவழி காட்டுவோம் உடுபுடைவை சம்பளம்
 நாளுநா ளுந்தருகுவோம்
நாஞ்சொல் வதைக்கேளும் எனமருட்டிச் சேர்த்து
 நானமுஞ் செய்து விட்டார்
மெல்ல மெல்லப் பின்னை வேலையிங் கில்லைநீர்
 வீட்டினிடை போமென்கிறார்
வேண்டியொரு கன்னியைக் கைக்கொண்டு கருவாக்கி
 விட்டபின் கணவன் வேலை
இல்லைநீ போவென்று தள்ளுவது போலுமே
 இனிஎம்மை எம்முறவினோர்
எட்டியும் பாரார்கள் கிட்டவும் வாரார்கள்
 ஏர்ப்பூட்டி உழவுமறியோம்
அல்லலாம் இம்மைக்கு மறுமைக்கு நரகினுக்(கு)
 ஆளாகி மிகஅழிந்தோம்
ஆபரா பரனே! கிறிஸ்தவர்கள் எங்களை
 அடுத்துக் கெடுத்தார்களே.

வண்டியேன்? மஞ்சமேன்? கதிரையேன்? குதிரையேன்?
 வாங்கு மெத்தைகள் சிவிகையேன்?
வட்டித்த கவிகையேன்? மல்லிகைச் செடிகளேன்?
 வாழை கமுகுயர் தோட்டமேன்?
பெண்டிரேன்? பிள்ளையேன்? திரவியத் தோட்டமேன்?
 பேணிவரு காணியினமேன்?
பேரின்ப ஞானவழி இதுகொலோ? யேசுவும்
 பின்பற்று சீடருங்கைக்
கொண்டதோ இவையெலா மவர்நின்ற ஞானவழி
 கூறிநற் புத்தி சொல்லிக்
குணமாக்க வல்லஇவர் பணமாக்க வந்தது
 குறிப்பறிந் தும்வறுமையால்
அண்டினோம் உண்ணவும் உடுக்கவும் வாழவும்
 அதற்குமங் கிடமில்லையே
ஆபரா பரனே! கிறிஸ்தவர்கள் எங்களை
 அடுத்துக் கெடுத்தார்களே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனரஞ்சகமாகவும் பாடியமை

கவிராயர் அவர்கள் முத்தகச் செய்யுள் பாடுவதில் வித்தகர் என்று பெயரெடுத்தவர். அவர் செந்தமிழ் மணக்குமாறு சிந்தைக்கினிய கப்பல் பாட்டும் பாடியுள்ளார். தம் பெயராலே ஒரு கப்பல் ஓட்டியதாகக் கற்பனைக் கடலில் அதனை யொட்டிப் பாடியுள்ளார். மக்களிலக்கியமாக அது போற்றப் பெற்றது.

**ஏலேலோ ஏலஎலோ**
**ஏலேலோ ஏலஎலோ**

*ஆதிபுரம் சோதிவஸ்து தந்தத்தைய*
*முக்கண் ஐயன் வெள்ளைவிடை ஊர்த்திக்கு*
*மாதவத்தோன் பணிபாதம் அம்பலவாணன் மகன்*
*கப்பலிது இந்தத்தையா.*

*மங்கையர்க் கானஒரு மஞ்சட் சிவப்பு*
*மைக்கூடு கண்ணாடி வண்ணவளை சீப்பு*
*கெங்கைக் கிசைந்தவொரு குத்தா றவுக்கை*
*குங்குமம் செம்பவளக் கஸ்தூரி மஞ்சள்*
*ஏலேலோ ஏலஎலோ*

*திங்கள் நுதலுக்கான திலக செந்தூரம்*
*செம்பஞ்சு திருநாமத் தரசிலாப் பொடியும்*
*கொங்கு வங்காளத்தில் விலைநலம் பேசிக்*
*குமரவேள் கப்பல் கொண்டு வருகுது அப்பா,*
*ஏலேலோ ஏலஎலோ*

## கவிராயரின் கவித்துவம்

கவிராயர் பாடிய பாடல்களுள் நடராசர் பதிகம் கிடைக்கவில்லை என்பர். அவர் தோத்திர ரூபமாகப் பல தலங்களிற் பாடிய பாடல்கள் பெரும்பாலானவை கிடைத்துள்ளன. இவற்றை யெல்லாம் திரட்டி 'முத்தகப் பஞ்சவிஞ்சதி'' என்னும் தலைப்பில் கவிராயர் வழிவந்த சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் 1907ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர்க் கவிராயர் மறைந்த நூற்றாண்டின் நினைவாகப் புலவரவர்களின் புதல்வர்களிலொருவராய முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை அவர்கள், கவிராயர் நூல்களைப் பிரபந்தத் திரட்டு என்னும் தலைப்பில் 1952ஆம் ஆண்டில் வெளியிட்டிருந்தார்.

கவிராயரின் கவித்துவம் பற்றி அன்று வெளிவந்த பதிப்பில் அருமையாகக் கூறப்பெற்றுள்ளது. ''பாக்கள் எல்லாம் சொல்லும் பொருளும் சுவைபட நல்லிசையோடு கூடிப் படிப்பவர் மனத்தை மகிழ்விக்கும் தன்மையுடையன. மடக்கலங்காரம், நாமாந்தரிகை, சங்கியாதை, வியுற்கிராந்தை முதலியன பல அணிகள் இவருடைய பாடல்களில் நூதனமாக அமைந்துள்ளன.

## வாழ்க்கைக் குறிப்பு

கவிராயர் முதலில் வண்ணையைச் சேர்ந்த நீர்வாவியடியில் இரகுநாதர் என்னும் புகழ் பெற்ற சிறப்பரின் குடும்பத்தில் திருமணஞ் செய்தபின், சுன்னாகத்தைச் சேர்ந்த கதிராசி என்னும் மாதை மணந்து, வள்ளியம்மை, யோகம்மா, சின்னம்மா, பொன்னம்மா என்னும் நால்வர் பெண்களைப் பெற்றார் எனப. இப்பெண்கள் சந்ததியில் வந்தவர்களும் ஓரளவு புலமை பெற்றவர்களாயிருந்தார்கள் என்ப. கவிராயர் 1852ஆம் ஆண்டு வரை வாழ்ந்து செந்தமிழ் வளர்த்தார் என்பது வரலாறு.

''புவிப் புலவர் கேட்டு நனிமேவுஞ் சுவை மகிழப் பொன்னார் நாட்டில்'' கவிச்சுவை ததும்பப் பாடிய பாவாணர் வரிசை சிறக்கத் தமிழ் வளர்த்த செம்மல்கள் வரிசையில் முத்துக்குமார கவிராச சேகரமும் ஒருவராவர். ''முத்துக்குமார கவிராயன் பாடலென் மூதருஞ் செல்வத்துக்கு வாய்த்த பொன் மண்டலமீழநன் மண்டலமே'' என்று ஈழமண்டல சதகம் புகழ வாழ்ந்தவர் கவிராயர் என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைமன் காசிச் செட்டியார்
(1807 - 1860)

## நில அளவையாளர்

இலங்கையின் அட்ச தேசாந்தரத்தையும், நீள அகலத்தையும், நிலப்பரப்பையும், சுற்றளவையும் முதன் முதலாக ஐரோப்பிய நில அளவையாள நிபுணர்கள் வியக்கும் வகையில் அளந்து கணித்து, நிதானமாகக் கூறிய பெரியார் சைமன் காசிச் செட்டி என்னும் தமிழனேயாவர்.

இன்னும் ஒரு காலத்தில் போத்துக்கேயரும், ஒல்லாந்தரும் ஒருவர் பின் ஒருவராக ஆண்ட இலங்கைக் கரை நாடுகளின் பரப்பு 10,520 சதுரமைல் என்றும், நடுவில் மலைநாடு எனக் கண்டியரசன் ஆட்சிக்குட்பட்ட நிலம் 14,144 சதுரமைல் என்றும் நவீன அளவைக் கருவிகள் எவையுமின்றி அளந்தறிந்து கூறிய பெருமையும் செட்டியார் அவர்களுக்கே உரியதாகும்.

## கற்பிட்டியின் பெருமை

தமிழ் கூறும் நல்லுலகங்களிலொன்றாய இலங்கையின் வட பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் வண்டமிழ் பேசும் மக்கள் பண்டைக்காலம் முதலாகப் பரவி வாழ்ந்து வருகின்றனர் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறுரைக்கும் உண்மை. இப்பெரு மாநிலங்களுக்குமப்பால் மத்திய மலைநாட்டிலும் இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் கொழுந்து கிள்ளிப் பாலெடுத்து வளம்பாடி ஆடி வாழ்ந்து வருகின்றார்கள் என்பதும் வரலாறு. இன்னும் இலங்கையின் மேற்குக் கரையோரமாகப் போகும்போது அங்குள்ள பெருநிலப் பரப்பில் சிலாபம், உடப்பு, கருக்குப்பனை, கட்டைக்காடு, நரைக்களி, மாம்புரி, பாலாவி, முந்தல், மங்கலவெளி, நுரைச்சோலை, பாலைக்குடா, குறிஞ்சிப்பிட்டி, கற்பிட்டி, புத்தளம், மருதங்குளம், புளிச்சாக் குளம், பலகைத் துறை, முன்னக்கரை, நஞ்சுண்டான் கரை முதலாய பல இடங்கள் செந்தமிழ் மணக்கும் ஊர்களாயே நிலவி வந்துள்ளன என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன.

இலங்கையின் மேற்குக் கடலோரப் பிரதேசமாக விளங்கும் இப்பெரு நிலப்பரப்பில் கற்பிட்டி என்னும் பேரூர் பெரிய பட்டணமாகவும் துறைமுகமாகவும் கோட்டையோடு கூடிய பாதுகாப்பு நிலமாகவும் உள்ளது. சுண்ணக் கல்லாலான பெரும் பிட்டிகள் நிறைந்தவூர் கற்பிட்டி. போத்துக்கேயர் இதனைக் கல்பென்ரைன் எனவும், ஒல்லாந்தர் கல்பெற்றி எனவும், ஆங்கிலேயர் கற்பிற்றி எனவும் வழங்கினர்.

## செந்தமிழ் நிலவிய கற்பிட்டி

முன்னொரு காலத்தில் இப் பிரதேசமெங்கும் செந்தமிழ் பேசியவர்களும் சிவநேயம் மிக்கவர்களும் நெருக்கமாக வாழ்ந்தார்கள் என்பதற்குச் செப்புப் பட்டயங்களும், சிலாபத்திலுள்ள முன் ஈசுவரப் பெருமான் திருக்கோயிலும் சான்றாகவுள்ளன. இப் பகுதிகளில் வாழும் மக்களின் முற் சந்ததியினரின் நிலத்துக்குரிய உறுதிகள் யாவும் தமிழிலேயே எழுதப் பெற்றுள்ளன என்பதற்குப் போதிய ஆவணங்கள் சான்றாகவுள்ளன.

இப் பகுதிகளில் அரேபியர், போத்துக்கேயர், ஒல்லாந்தர் வந்து குடியேறி வாழ்ந்து வளம் கண்ட பின்னரும் இங்கெல்லாம் செந்தமிழ்ப் புலமை நிலைபெற்று வந்துள்ளது.

காலந்தோறும் இங்கெழுந்த பிரபந்தங்கள் பல செந்தமிழ் மயமாயுள்ளன. கும்மிப் பாடல்கள், கோலாட்டப் பாடல்கள், ஊஞ்சற் பாடல்கள், மான்மியப் பாடல்களோடு இன்னும் நாடகம் சார்ந்த பாடல்களும் உள்ளன. காவியச் சுவை மாந்திய புலவர்கள் பலர் இங்கு வாழ்ந்து மறைந்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயரின் ஆட்சியின் ஆரம்ப காலத்திலே அவர்களோடு கூட்டாட்சி செய்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தாரின் 'கிளாக்' உத்தியோகத்தர் பலரும் சென்னையிலிருந்து வந்த தமிழராகவே, கற்பிட்டி கற்பிற்றி என்றாவது வழங்கலாயிற்று. இது தமிழ் பட்டபாட்டின் ஒரு சிறு வைபவம். காசிச்செட்டி என்ற பெயரே இன்றும் ஆங்கில வரலாற்று நூல்களில் காசிசிற்றி என எழுதப் பெற்றுள்ளமையும் தமிழ் பட்ட பாடேதான்.

கற்பிட்டிக்கு அண்மையில் உள்ள புத்தளம் ஆங்கிலேயர் காலத்தில் வெகுவாக வளர்ச்சியுற்ற பெரிய பட்டினமாகவே; கற்பிட்டி பின்தங்கிய சிறு பட்டினமாகிச் சிறுத்துவிட்டது, எனினும் கற்பிட்டியைச் சூழவுள்ள தமிழ் மணக்கும் ஊர்கள் பலவாகும். அவை தேத்தாப்பளை, தளுவை, நாவற்காடு, மாம்புரி, நரக்களி, நுரைச்சோலை, எத்தாலை, பால்குடா, கண்டல்குடா, ஊரியாறு, குறிஞ்சாப்பிட்டி, தாத்தாவழி என்பனவும் பிறவுமாம். இவை யாவும் தமிழ் மயமானவை என்பதனோடு அழகானவையுமாம்.

அழகான தமிழ் மயமான கற்பிட்டியை அடுத்துள்ள தீவுகளும் தனியழகானவை. தமிழ் மயமானவை, அவற்றின் பெயர்களே மிகவும் தூய தமிழானவை, அழகானவை, காரைத் தீவு, இலுப்பாந்தீவு என்பனவற்றோடு ஆனைவாசல் என்றோர் இடமும் உள்ளதென்ப.

## தமிழ் வர்த்தக மொழி

இலங்கைக் கரையோர நாடுகளை ஆளத் தொடங்கிய ஆங்கிலேயரின் ஆட்சியின் முதறகட்டம் 1796 முதல் 1802 வரையிலானது. அடுத்து வந்த அமியன்ஸ் உடன்படிக்கை காரணமாக ஒல்லாந்தர் இலங்கையை நிரந்தரமாக ஆங்கிலேயரிடமே கையளித்தார்கள். எனவே ஆங்கிலேயருக்கு மேலதிகமாகத் தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் பலர் தேவையாயினர்.

இலங்கையின் வாணிகம், வர்த்தகம், கொடுக்கல் வாங்கல் முதலியன தமிழிலேயே அதிகமாக நடைபெற்றன. சுருங்கச் சொன்னால் கொழும்பில் "பெற்ரா" என வழங்கும் வர்த்தக மையம் தமிழில் பேட்டை என்பதை எவரும் அறிவர். இதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

இவ்வாறாக அக்காலத்தில் வைசியர், வணிகர், செட்டிமார் என்னும் கூட்டத்தவர் வர்த்தகத்தில் முன்னணியில் நின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிட்டியைச் சேர்ந்த பழைய செட்டிமார் பலர் கொழும்புச் செட்டிகள் என வளர்வதற்கும் சந்தர்ப்பம் உண்டானது. கற்பிட்டியைச் சேர்ந்த சைமன் காசிச் செட்டி என்பார் தமது இருபத்தொராம் வயதில் புத்தளம் மணியகாரனாக நியமனம் பெற்றார். அடுத்து அவர் மாவட்ட முதலியாராகப் பதவியுயர்வு பெற்றதோடு, அரசாங்கம் நன்கறிந்து வியந்து போற்றிய அறிஞராகவும் இருந்தார்.

## காசிச் செட்டியார் பெருமை

கொழும்புச் செட்டிமார் என வழங்கிய இவர்கள், நடையுடை பாவனை பழக்க வழக்கம் முதலிய போக்குகளில் மற்றவர்களைவிட ஓரளவுக்கு வேறுபட்டவர்களாயும் இருந்தனர். இவர்கள் தமிழ்நாட்டுத் திருநெல்வேலி மாவட்டத்தின் பலவூர்களிலிருந்தும் புலம் பெயர்ந்து வந்து குடியேறியவர்களாவர்.

செட்டிமார் சிலர் வர்த்தகத் துறையில் வெகுவாக ஈடுபட்டு வாழ்ந்தபோது, வசதியை முன்னிட்டு ஐரோப்பியருடன் நெருங்கிப் பழகி அவர்களின் சமயத்தையும் சார்வராயினர். இந்த வகையில் சமயஞ் சார்ந்த தமிழனே கபிரியல் சைமன் காசிச் செட்டி அவர்களாவர்.

இவர் கற்பிட்டியில் 21-3-1807ஆம் நாளில் தோன்றியவர். இளமையிலேயே தாய்மொழியாய தமிழையும், வடமொழி, சிங்களம், போத்துக்கீசம், ஒல்லாந்தம், ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், அரபு, எபிரேயம் ஆகிய மொழிகளையும் நன்கு கற்றுப் பன்மொழிப் புலவராயினார்.

இவர் மாவட்ட முதலியாராயிருந்த காலத்தில் இவருடைய பெருமை அரசாங்கத்துக்கூடாக ஆள்பதி அவர்களுக்கும் எட்டியது. இவரின் தனியாற்றலை மட்டிட்ட ஆள்பதி, இவர் பெருமையைக் குடியேற்ற நாட்டு மந்திரியாருக்கும் அறிவித்திருந்தார்.

## இலங்கைச் சட்டசபை

இவ்வாறாக இவர் 1833ஆம் ஆண்டில் மாவட்ட முதலியாராய் நியமனம் பெற்ற காலத்திலேதான். இலங்கை அரசியற் பரிபாலனத்தின் பொருட்டுக் கோல்புறூக் திட்டத்தின் பிரகாரம் சட்டசபை நிறுவப் பெற்றது. இதனையடுத்து இலங்கை ஐம்பெரும் மாகாணங்களாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிக்கப் பெற்றது. அவை வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்தி என்பனவாம். சட்ட சபையில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியாக முதலில் நியமனம் பெற்றவர், ஆறுமுகத்தாபிள்ளை குமாரசுவாமி என்னும் முதலியாராவர். இவர் சேர் இராமநாதன் அவர்களின் தாயாரின் தந்தையாவர்.

குமாரசுவாமி முதலியார் 7-11-1836இல் காலமானதால் சட்டசபையில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியாக நியமனம் செய்வதற்கு வேறு எவரும் வசதியாகக் கிடைக்காமையால் ஆள்பதி செட்டியார் அவர்களை இளைப்பாறச் செய்து 20-06-1838இல் நியமனஞ் செய்தார். ஆள்பதி இவ்வாறு இவரை இளைப்பாறச் செய்தமை பரிபாலனத்திற்குப் பெரும் பாதிப்பை உண்டாக்கும் என்று குடியேற்ற நாட்டு மந்திரியார் வன்மையாகக் கண்டித்து எழுதியதும் உண்டு. எனவே ஆள்பதி சில ஆண்டுகளில் இவரைப் பழையபடி அரசாங்க சேவையில் ஈடுபடுத்திவிட்டு, சட்டசபைப் பிரதிநிதியாக மானிப்பாய் சாமிநாதர் எதிர்மன்னசிங்கம் என்பாரை நியமித்தார்.

## செட்டியார் பெற்ற உயர்வும் அவர் செய்த உபகரிப்பும்

அரசாங்க சேவையில் மீள இடம்பெற்ற செட்டியாரைத் தேசாதிபதி அவர்கள் இலங்கைச் சிவில் சேவை என்னும் உயர்பதவிக்கு உயர்த்தி கற்பிட்டிப் பகுதியின் பொலிஸ் நீதவான் பதவியை நல்கினார். இதிலிருந்து பதவி உயர்வு பெற்ற செட்டியார் பெரிய கோர்ட்டு நீதவான் என்னும் மாவட்ட நீதிபதியாயினார்.

இவ்வாறாகப் பன்மொழிப் புலமையோடு, மணியகாரனாயும், முதலியாராயும், சட்டசபைப் பிரதிநிதியாயும், நீதவானாயும், நீதிபதியாயும் பணிபுரிந்த செட்டியார் தமது ஓய்வு நேரங்களிற் செய்த தமிழ்ப்பணி பரவலானது. வாய்ப்பு வசதிகள் கிடையாத அக்காலத்தில் இவர் ஐம்பதுக்கும் அதிகமான படைப்புகளைச் செய்திருந்தார்.

இவருடைய ஆராய்ச்சிகள் ஆழமானவை, அருமையானவை. அக்காலத்தில் எல்லாம் ஆங்கில மயமாக இருந்த வேளையில் இவருடைய நூல்கள் யாவும் ஆங்கிலத்திலேயே வெளிவந்தன. இன்றைய பெரியவர்கள் பிரமிப்படையும் வண்ணம் இவர் அன்றைக்கே சில நூல்களை முன்னோடியாக எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்காசிய நாடுகளில் பண்டைக் காலத்திலேயே இந்து நாகரிகம் பரவியதால், அங்கெல்லாம் தமிழும் வடமொழியும் வியாபகமுற்றிருந்தன. இந்த வகையில் யாவாத் தீவில் எழுந்த மொழிக்கும் சமஸ்கிருதத்துக்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்தார். இவ்வாறே மாலைத் தீவில் சிங்களம் கலந்ததை ஆராய்ந்தார். அல்லி அரசாணி வரலாற்றை ஆராய்ந்தார். கிரேக்க மொழியிலிருந்து பைபிளைத் தமிழ் செய்த கொழும்புத் தமிழன் பிலிப்மெல்லோவின் வரலாற்றை எழுதினார். பரவர் என்னும் குலத்தவர் உற்பத்தியை ஆராய்ந்து எழுதினார். யாழ்ப்பாணத்தின் பழைய வரலாற்றை 1658 வரை எழுதினார். தமிழ் நூல்களின் பட்டியல் ஒன்றை அகராதி அமைப்பில் எழுதினார்.

இன்னும் தமிழ் மொழியில் கலந்து நிலவும் பிறமொழிச் சொற்களை நிரைப்படுத்தி எழுதினார். சமஸ்கிருத தமிழ் அகராதி என ஒன்று தயாரித்தார். இவ்வாறே ஆங்கில - தமிழ் அகராதி ஒன்றைத் தயாரித்தார். தாவரவியல் நன்கறிந்த இவர், தமிழ்த் தாவரவியல் அகராதி என ஒன்றைத் தயாரித்தார்.

திருக்கோணேஸ்வரத் திருக்கோயில் பற்றிய பழைய புராணப் பாடல்களை ஆங்கிலத்தில் பெயர்த்தெழுதினார். கடவுள்மா முனிவர் செய்த திருவாதவூரடிகள் புராணத்தின் ஒரு பகுதியை ஆங்கிலத்தில் பெயர்த்து எழுதினார். மலையகராதி என்னும் தலைப்பில் ஏதோ ஒன்று எழுதினார் என்ப. முஸ்லீம்களின் சீறாப் புராணத்தை நன்கு ஆராய்ந்து அதன் சிறப்பு என்று ஒருநூல் தயாரித்தார்.

செட்டியார் எழுதிய நூல்களிற் சில அச்சேறியுள்ளன. அன்று 1831 ஆம் ஆண்டிலே வெளிவந்தவைகளுள் தமிழர் சாதிப் பகுப்பு முறை என்பது ஒன்று. மற்றது புத்தளப் பிரதேசத்து முக்குவர் உற்பத்தியும் வரலாறும் என்பது. இன்னொன்று தமிழர் சடங்கு முறைகள் என்பது. அடுத்த ஆண்டில் இலங்கைச் சோனகரின் பழக்க வழக்கங்கள் என்பது வெளிவந்தது.

இவர் மாவட்ட முதலியாராய்ப் புத்தளத்தில் கடமையாற்றியபோது இவருக்கு வயது இருபத்தேழு. இவர் இலங்கை பற்றிய எல்லா விதமான தகவல்கள், செய்திகள் யாவற்றையும் அரிதில் திரட்டி சிலோன் கசற்றியர் என்றொரு நூலை எழுதுவதற்குப் பெரிதும் விரும்பினார்.

தமது வேணவாவைத் தேசாதிபதி சேர் றோபேட் வில்மட் ஹோட்டன் அவர்களுக்கு விண்ணப்பித்தார். கலா விநோதனாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள்பதி இவரைப் பெரிதும் பாராட்டித் தம்மாலியன்ற உதவி செய்வதாயும் பதிலெழுதி ஊக்கமளித்தார். இவர் இத்தகைய முயற்சியைத் தம் மேலதிகாரியாய குடியேற்ற மந்திரியாருக்கும் அறிவித்தார்.

செட்டியார் தயாரித்த நானாவித செய்தித் தொகுப்பான **சிலோன் கசற்றியர்** *1834*ஆம் ஆண்டு வெளிவந்தது. இதற்கு இலங்கைப் பிரமத நீதியரசர் சேர் சாள்ஸ் மார்ஷல் என்னும் பிரபுவும், பிரதம படைத் தலைவர் சேர் யோன் வில்சன் என்பாரும் மகிழ்ச்சியோடு மதிப்புரை வழங்கியிருந்தார்கள். குடியேற்ற மந்திரிமார் செட்டியாரைப் பாராட்டி வாழ்த்தி நூற்றைம்பது பவுண் அன்பளிப்பாக அனுப்பியிருந்தார்.

செட்டியாரின் படைப்பு பின்வந்த வர்த்தமானி என்னும் ''கஜற்'' செய்திக்கு முன்னோடியாகும். இலங்கையில் செய்தித்தாள்கள் என ஆங்கிலேயர் ஆரம்பித்த புதினப் பத்திரிகைகளுக்கும் முன்னோடியாகும். செட்டியாரின் புகழ் இலண்டன் வரை பரவியது. இலங்கை வாழ் தமிழன் இவ்வாறொன்றைப் படைத்தான் என்பது பிரமிப்புக்குரிய தாயிற்று.

அடுத்த ஆண்டில், அஃதாவது *1835*இல் வெளிவந்த இலங்கை ஒப்சேவர் என்னும் பத்திரிகை *17-3-1835*ஆம் நாள் இதழின் தலையங்கத்தில் செட்டியாரை நன்றாகப் பாராட்டி வாழ்த்தி ஊக்கப்படுத்தியது. இவர் பரிபூரண வெற்றியடைந்துள்ளார் என்று போற்றியது. இவர் அழியாப் புகழுக்குத் தம்மைப் பாத்திரராக்கிக் கொண்டார் என்று மகிழ்ச்சி தெரிவித்தது.

ஆள்பதி மக்கன்சி அவர்கள் ஆங்கிலப் புலமை வாய்ந்த பெரியவர். அவர் செட்டியார் அவர்களை நேரிலறிந்து அவரை வியந்து, ஆங்கிலேயர் அல்லாத மக்களுள் இவர் அபூர்வ ஆற்றல் வாய்ந்த சிறந்த விவேகியாவர்'' என்று பாராட்டினார்.

செட்டியார் எழுதிக் குவித்த ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் நூல்களையும் நிரைப்படுத்தி அறிந்து கொள்வதே பெருஞ்சிரமமான செயலாகும். இவர் இளமையிலே தமது பிரதேசமாய மேற்குக் கரையோரத்துக் குதிரைமலை என்னும் இடத்தின் புராதனப் பெருமையை ஆராய்ந்து எழுதியுள்ளார்.

இவர் கசற்றியர் என்னும் நானாவித செய்தித் திரட்டை வெளியிட்ட பின், இலங்கையின் பழைய வரலாற்றைப் பல்வேறு ஆசிரியர்கள் பல்வேறு மொழிகளில் எழுதியவற்றையெல்லாம் கருத்துடன் கற்றறிந்து அவற்றைச் சுருக்கமாக இலங்கைச் சரித்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூசனம் என்றொரு நூலைத் தமிழில் 1839ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார் என்ப.

## பத்திராதிபர் பணி

இவர் பல்வேறு மொழிகளை நன்கறிந்து, தாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிமையானது எங்கும் இல்லை என்று கண்டு, இந்த மொழியிலேயே இனியதொரு சஞ்சிகையை நடத்துவதற்கு 1841ஆம் ஆண்டில் ஆரம்பித்தார்.

உதயாதித்தன் என்னும் பெயரில் மக்களுக்கு அறிவொளி யூட்டுவதற்காகத் திங்கள் தோறும் ஒரு செந்தமிழ்ப் பத்திரிகையை ஓராண்டும் ஒரு மாதமும் நடத்தி வந்தார் என்ப. பதின்மூன்று இதழ்களுக்கு மேல் நடத்துவதற்கு இவர்களின் வேலைப்பளு இடங் கொடுக்கவில்லை போலும்.

தாம் கொண்ட கத்தோலிக்க மத விசுவாசங் காரணமாக யோசேப்பு வாஸ் என்னும் பெரியாரின் வரலாற்றையும், இலங்கையில் கத்தோலிக்க மதம் அபிவிருத்தியடைந்த வரலாற்றையும் பழைய ஏற்பாட்டின் ஆதியாகமம் சம்பந்தமாகவும் அவர் தனித் தனியாக மூன்று நூல்கள் 1848ஆம் ஆண்டளவில் எழுதி வெளியிட்டுள்ளார் என்பர்.

## தமிழ்ப் புலவர் வரலாறு தந்தமை

செட்டியார் அவர்களுக்குத் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் நல்ல பெயரும் புகழும் உண்டாவதற்குக் காரணமாயிருந்தது. இவர் எழுதிய **தமிழ்ப் புலவர் வரலாறு** என்னும் நூலாகும்.

தமிழ்ப் புலவர் வரலாற்றை முதன் முதலாக முன்னோடியாக இவர் ஆங்கிலத்திலேயே எழுதினார். அந்த வரன்முறை பிற்காலத்துத் தமிழ்நாட்டுப் பெரும் புலவர்களான தீட்சதர், பூரண லிங்கம்பிள்ளை முதலானோர் கையாண்ட நெறியுமாகும். தமிழை இன்றும்தான் நாமெல்லோரும் ரமில் என்றே வழங்குகின்றோம். இந்த வழக்கு நம்முன்னோரை வெகுவாக ஆட்டி வைத்ததில் வியப்பொன்றும் இல்லை.

முந்திய நூற்றாண்டுகளில் எங்கள் ஈழத்திரு நாட்டவர் எழுத்துத் துறையில் சில முன்னோடி இலக்கியங்களை இயற்றிய வகையில், பத்தொன்பதாம் நூற்றாண்டில் எங்கள் மதிப்புக்குரிய செட்டியார் தமிழ்ப்புலவர் வரலாற்றை முன்னோடியாக எழுதியுள்ளார் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கெல்லாம் பெருமை தரும் பெருமுயற்சியாகும். இந்நூலை இவர் அக் காலச் சூழ்நிலையில் எழுதினார் என்பதை ஆராயும்போது, இவர் பட்ட துன்பங்கள், இடையூறுகள் வசதிக் குறைவுகள் என்பனவற்றைக் கருதும்போது, இவற்றின் செயற்றிறனை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

தமிழ் புளூட்டாக் என்னும் புலவர் வரலாறு 1859ஆம் ஆண்டில் வெளிவந் துலாவிய பின், கிடைத்தற்கரிய செல்வப் பேழையாயிருந்தது. இதனருமை கருதியவர்கள் இதனை 1946ஆம் ஆண்டில் மறுபதிப்புச் செய்தபோது தமிழ்நாட்டுப் பேராசிரியர் மீனாட்சி சுந்தரனாரும், எங்கள் நாட்டுப் பேராசிரியர் விபுலானந்த அடிகளாரும் ஆராய்ச்சிக் குறிப்புகளும் அணிந்துரையும் அருமையாக எழுதியுள்ளார்கள்.

காசிச் செட்டியார் "தமிழ் புளூட்டாக்" என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் எழுதிய நூலில் பல தமிழ்ப் புலவர்களின் வரலாற்றைத் தமது அறிவாற்றலுக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டிய வகையில் சுருக்கமாக எழுதியுள்ளார்.

புளூட்டாக் என்பவர் மிகப் பழைய கிரேக்க நாட்டு மூதறிஞர். அவர் ஏதென்ஸ் நகரில் நன்றாகக் கற்றதோடு உரோமாபுரிக்கும் பலமுறை சென்று சமகாலப் புலவர்களோடு கலந்துரையாடித் தம் அறிவைப் பெருக்கியவர். அவர் போதகராயும் பணிபுரிந்து நாட்டு மக்களை நன்கறிந்தவர். இந்த வகையில் அவர் தம் காலத்துப் புலவர் பெருமக்களாய நாற்பத்தாறு பேரின் வரலாற்றை எழுதியுள்ளார். அந்நூல் அவர் பெயரால் வழங்குவதாயிற்று.

இந்த வகையில் கிரேக்கம், இலத்தீன், ஒல்லாந்து மொழி, ஆங்கிலம் வல்லவராய காசி செட்டியார் புளூட்டாக் என்னும் பெயரைவிட்டுத் தமிழ்ப் புலவர்களின் வரலாற்றை எழுதியுள்ளார். இது அக் காலத்தவருக்குப் பெருவிருந்தாயிருந்தது.

செட்டியார் உயர்ந்த உத்தியோகம் வகித்தவர். இவர் சாதாரண மக்களோடு அன்று நெருங்கிப் பழகியிருக்கமாட்டார். இவருக்கு அக் காலத்துப் பண்டிதர், புலவர், வித்துவான்கள் பழக்கமாயிருக்கச் சூழ்நிலை அமைந்திராது. எனவே செட்டியாரவர்கள் தாமறிந்த வகையில் தமக்கெட்டிய வரையில் 202 புலவர்களைப் பற்றி அக் காலத்தில் முன்னோடியாக எழுதியுள்ளார்.

செட்டியார் அவர்களின் புகழைத் தமிழ்நாட்டுக் களத்தூர் வேதகிரி முதலியார் நன்கறிந்து பாராட்டியுள்ளார். முதலியார் நாலடியார் உரை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மநுவியாக்கியான சதகம், நீதிசிந்தாமணி, சன்மார்க்க சாரம் முதலிய நூல்கள் எழுதிய பேரறிஞராவர்.

செட்டியாரவர்கள் தமது உத்தியோக வேலைப்பளுவினிடையே உல்லாசமான ஒரு மனநிலையில் உதயாதித்தன் என்னும் திங்கள் ஏட்டினை பதின்மூன்று மாதங்கள் நடத்தியிருக்கிறார்.

செட்டியாருக்குப் புகழீட்டிய மற்றொரு நூல் தமிழரின் சாதிப் பாகுபாடு, பழக்க வழக்கங்கள், குணவியல்புகள், இலக்கிய இலக்கண நூல்கள் சம்பந்தமானதாகும். இதையும் இவர் ஆங்கிலத்திலேயே எழுதியுள்ளார். இது வைத்திய கலாநிதி எஸ். சி. போல் அவர்களின் பெரும் பாராட்டுக்குரியதாய், அன்னாரின் அணிந்துரையோடு 1934ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

இந்நூல் ஆங்கிலத்தில் உருவான போதிலும் தமிழ் மயமாய்த் தமிழ்நாட்டின் தொன்மை, தமிழ்மொழியின் பழைமை, மலையாள மொழியின் விளக்கம் என்பன பலவும் கொண்டுள்ளதாகும். இன்னும் நாடு என்பதன் வரைவிலக்கணம் கூறும்போது, 1833ஆம் ஆண்டுக்கு முற்பட்ட இலங்கை, மாகாண, மாவட்டப் பிரிவுகள் பிரச்சனைகள் இல்லாமலிருந்தது என்பர். இன்னும் இலங்கையில் 3300 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் செல்வாக்குத் தலையெடுத்திருந்தது என்பர்.

அன்றொரு நாள் இலங்கையின் பிரதம நீதியரசராய் இருந்த சேர். அலெக்சாண்டர் யோண்சன் என்னும் பெரியார், ஒல்லாந்தரிடமிருந்து இலங்கையை ஆங்கிலேயர் அதிகாரத்துக்கு இரத்தஞ் சிந்தாமல் மாற்றியவர். அவர் ஒரு சமயம் இராசாங்க ஆசிய சபையில் பேசியபோது, தம்மிடம் தமிழரசி ஒருத்தியின் வரலாற்று நூல் இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். சிங்களவர் போற்றும் விஜயன் இலங்கைக்கு வந்தபோது, இங்கே மக்கள் குடியிருந்ததைக் கண்டவன் என்பர்.

## தமிழர் பெருமை

காசிச் செட்டியார் தமிழைப் பற்றியும் தமிழரைப் பற்றியும் எழுதிய இடங்களில், அவர் தம் பழைமை, பழக்க வழக்கங்கள், நாகரிகச் சிறப்பு, நம்பிக்கைகள், விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள், உடைகள், ஆபரணங்கள், அலங்கார வகைகள் யாவற்றையும் விபரமாகக் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இலங்கையின் மேற்குக் கரையோரமெங்கும் பரந்து குடியேறி வாழ்ந்த மிழரை மலபார் மக்கள் எனவும் வழங்கினர். அவர்களுடைய நடையுடை பாவனைகள் ஆபரணங்கள் யாவும் அயலூர்களில் வாழ்ந்த சிங்கள மக்களைப் பெரிதுங் கவர்ந்தன.

தமிழ்ப் பிரதேசங்கள் நாளடைவில் சிங்களப் பெயர் பெற்றமையைச் செட்டியார் சுட்டிக் காட்டியுள்ளார். பிரதம நீதியரசர் சேர். அலெக்சாண்டர் யோண்சன் தமிழர் சால்பைப் போற்றியமையை அறியத் தந்துள்ளார்.

சிவபெருமானை வழிபடும் சைவ சமயத்தவரின் ஆசார சீலத்தை வெகுவாகப் போற்றி எழுதும் செட்டியார், சைவ மக்களின் தாவரவுணவின் தூய்மையையும், அவர் பால், பழம் உண்ணும் பழக்கத்தையும், உணவில் பருப்பு, நெய், தயிர், மோர், ஊறுகாய், வடகம் சேர்த்துக் கொள்வதையும் குறிப்பர். மிகத் தாழ்ந்த இனத்தவர் அணில், முயல், ஆமை முதலியவற்றையும் சிலர் எருது, எருமை முதலியவற்றையும் உண்டார்களேயன்றிப் பசுவைக் கொன்று உண்டதாகத் தெரியவில்லை என்பர்.

புகையிலை புதிதாக நாட்டில் புகுந்ததென்றும், அதன் தீங்குகளை எழுதப் ''பட்டோலை கொள்ளாது'' என்ற பழமொழிக்கிணங்க நாட்டிலுள்ள பனையோலைகள் போதா என்பர்.

மட்பாத்திரத்திலேயே உணவு தயாரித்த தமிழர் அவற்றை எவருங் காணவொட்டாது மறைவாக வைப்பர் என்றும், தற்செயலாக நாய், பூனை அவற்றை நக்கினால் உடனடியாக அவற்றை உடைத்து நொறுக்கி எறிந்துவிடுவர் என்றும் கூறுவர்.

வாழையிலையில் உண்ட தமிழர், அது கொண்டு தொன்னைகள் செய்து மோர் பருகினர் என்பர். தொன்னைகள் கிண்ணங்கள் போல அழகாக இருந்தன என்று வியந்துள்ளார். யூதர் போலத் தமிழரும் உணவுக்கு முன்னரும் பின்னரும் நன்றாகக் கைகழுவினர் என்று போற்றுவர்.

தமிழர் நிலத்தில் பத்மாசனத்தில் அடக்கமாக அமைதியாக அமர்ந்து உண்டு, எதனையும் எச்சிற்படுத்தாது அண்ணாந்து பருகினர். அருகிலிருந்து உண்பவர் தும்மினால் மற்றவர் உடனடியாக உண்பதையே நிறுத்திக் கொள்வர். இவ்வாறே இரவில் உண்ணும்போது விளக்கு அணைந்தால் உண்பதை நிறுத்திக் கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறெல்லாம் எழுதிய செட்டியார், கொழும்புத் தமிழர் கண்டபாவனையில் ஐரோப்பிய நாகரிகத்தைப் பழகி வருகின்றார்கள் என்பர். என்றாலும் தமிழர் கரண்டி முள்ளுக் கொண்டு உண்பதை அன்று கையாளவில்லை என்றும், பெண்களை வெள்ளையர் மத்தியில் உண்ணவைக்கவில்லை என்றும் கூறுவர்.

தமிழர் பழக்க வழக்கங்கள், பண்பாடு சால்பு என்பனவெல்லாம் வரையறுத்து வழங்கிய செட்டியார், தமிழ்ப் பிள்ளைகள் தாய் தந்தையரை வீழ்ந்து வணங்கினர் என்பர். தமிழர் பெரியவர்களுக்குப் பதினாறு விதமான உபசாரங்கள் செய்தனர். பிரிந்தவர் கூடும்போது மார்புறத் தழுவிக்கொள்வர்.

காசிகண்டம் என்னும் நூலில் இல்லறம் பற்றிக் கூறிய அத்தியாயத்தை ஆங்கிலேயர் அறிய விளக்கிய செட்டியார் அதனை இன்று நாமும் அறியும் வண்ணம் தந்துள்ளார். மூத்தோரைப் பெரிதும் மதித்த தமிழ் நாகரிகத்தை இறுக்கமாக எழுதிய செட்டியார், பாபிங்ரன் என்னும் வெள்ளையர், இறாஸ்முஸ் எழுதிய நாகரிகத்தைப் பற்றிச் சொன்னதையும் ஒப்பிட்டுள்ளார்.

தமிழர் சமூக வாழ்வில் விருந்துண்ணும்போது நயத்தக்க நாகரிகமுள்ளவராயிருப்பர். நிரையிலிருந்து உண்பவர்கள் எல்லோருக்கும் உணவு பரிமாறிய பின்னரே உண்பதும், எல்லோரும் உண்டபின்பே எழுந்துபோவதும் வெறும் சம்பிரதாயம் அல்ல அருமையான ஆசாரம் என்பர்.

தமிழ்நாட்டுப் பெண்களை வீட்டுக்குள்ளே பூட்டிவைக்கும் பழக்கத்தைப் பிழையாக எழுதிய ஆங்கிலேயரைச் செட்டியார் வன்மையாக மறுத்து, பெண்கள் உரியமுறையில் மதிக்கப்படுவதையும் அவர்தம் உரிமைகள் சொத்துகள் பேணப்படுவதையும் குறிப்பிடுவர்.

## சைவாசார சீலம்

தாம் ஒரு கத்தோலிக்கராயிருந்தும் செட்டியார் தமிழரின் சைவச் சடங்குகள் கிரியைகள் பற்றித் தகுந்த விளக்கங்கள் கொடுத்திருக்கிறார்கள். தீட்டு துடக்கு முதலியவற்றையும் இல்லற வாழ்வில் நல்லற ஒழுக்கங்களைப் பற்றியும் கூறுவர். சைவ சமயத்தவர் நாளாந்த வழிபாடு செய்வதையும் கிரியைகளின்போது பிள்ளையார் பிடித்து வைத்து, நிறைகுடம், குத்துவிளக்கேற்றிச் செய்வனபற்றியும் விளக்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் கல்வி முறையைப் பற்றி முன்னரே கப்ரின் ஹாக்னெஸ் என்பார் ஆங்கிலத்தில் அருமையாக எழுதியதைப் படிக்குமாறு கூறித் தாம் கூறாது விட்டுள்ளார். இன்னும் இல்லறம் பற்றித் திருவள்ளுவர் கூறியவற்றை அருமையாக மொழிபெயர்த்த எலிஸ் என்பாரைப் பாராட்டி அதனைப் படிக்குமாறு சில பகுதிகளைத் தந்துள்ளார்.

தமிழர் திருமணச் சடங்கு ஐயர்யாத்த கரணத்தின் வழி வந்தவற்றை விளக்கி, ஓமம் வளர்த்தலைப் பெரிதும் போற்றி, ஓமத் தீயில் நவதானியங்களையும்; ஆல், அரசு, இத்தி, அத்தி, மா, கருங்காலி முதலியவற்றின் சமித்துகள் என்னும் சுள்ளிகளோடு தருப்பையும் நாயுருவியும் ஆகுதிசெய்து, புத்துருக்கு நெய்யை நூற்றெட்டு முறை மந்திரங் கூறி ஆகுதிசெய்து சொரிந்தமுறையைக் கூறுவர்.

இத்தகைய சடங்கில் மணமகனும் மணமகளும் அணையும்போது சூரியன், சந்திரன், அக்கினி, முப்பத்து முக்கோடி தேவர்கள் சபையோர் சாட்சியாக இருக்கின்றனர் என்பது கிரியை விளக்கம் இவற்றையெல்லாம் செட்டியார் நல்லமுறையில் எழுதியதால் இவர் செந்தமிழ் வளர்த்த செம்மல் என்பதோடு, சைவம் வளர்த்த சான்றோரெனவும் விளங்கினார் என்போம்.

இவ்வாறாக ''அரசாங்க சேவையிலிருந்து அருந்தமிழ்த் தொண்டாற்றிய அறிஞர், தமிழ், இலக்கியம், சரித்திரம் சம்பந்தமான அநேக கட்டுரைகளும் நூல்களும் ஆங்கிலத்தில் எழுதித் தமிழன்னையை மகிழ்வித்த பெரியார்'' என்று அம்பலவாணன் ஈழத்தறிஞர் வரிசையில் போற்றிய செட்டியார் கற்பிட்டியில் 5-11-1860 ஆம் நாளில் இயற்கை யெய்தினார்.

தமிழ் கூறும் நல்லுலகத்திலே, தமிழ்ப் புலவர்களைப் பற்றியும், தமிழ் பற்றியும், தமிழர் பழக்க வழக்கங்கள் பற்றியும் எழுதிய முன்னோடியாய் சைமன் காசிச் செட்டியாரை மறத்தலாகாது. இவர் பரம்பரையில் வந்தவர்கள் சிலர் இன்றும் புலமை வளம் உள்ளவராய் இருக்கிறார்கள்.

இப் பெரியார் ஆங்கிலத்திலேயே மிகப் பலவாய நூல்கள் எழுதினார் என்றும் அவை அச்சிடப் பெறாமலே அழிந்தன என்றும் கூறுவர். இவர் பல துறைகளில் தோய்ந்து சகலாகம பண்டிதராய் இருந்தமையோடு, பல மொழிகளறிந்த பன்மொழிப் புலவராயும் இருந்தார் என்பது தமிழர்க்கெல்லாம் பெருமையாகும். இவர் பழைய பண்பாடு, பூர்வ இதிகாசம், பாரம்பரியம் என்பனவற்றை விபரமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்திருந்தவர். இன்னும் இலங்கைப் புவியியல், இலங்கைப் பறவைகள், விலங்குகள், சுற்றாடல் அமைவுகள் முதலிய பல விடயங்களையும் ஐயந்திரிபற அறிந்திருந்தவருமாவர்.

இவர் முன்னோடியாக அன்று வெளியிட்டு வந்த 'கஜெற்' என்னும் வர்த்தகமானியில் இடம்பெற்ற நானாவித தகவல்களின் குவியலை அறிந்த தேசாதிபதி, ஆங்கிலேயரல்லாத ஒருவர் இத்தகைய அறிவுப் பெட்டகத்தை வெளியிட்டாரே என்று சட்ட சபையில் இவர் பெருமையைப் பாராட்டிப் பேசினார். இவரின் வெளியீடு, பின்வந்த எத்தனையோ விதமான அறிக்கைகளுக்கெல்லாம் வழிகாட்டியா யிருந்தது என்று ஆங்கிலேயரே பாராட்டினார்கள். இவரின் வெளியீட்டில் இவரின் புலமை வாய்ந்த ஆங்கிலப் பாடல்களும் வெளிவந்துள்ளன. இவரின் வெளியீட்டைப் பின்தொடர்ந்தே இலங்கை அவதானி என்னும் ஒப்சேவர் 1834ஆம் ஆண்டில் வெளிவந்தது.

## செயற்கரிய செய்தவர்கள்

"தண்டமிழ் காக்க வென்று
  தரணியில் தோன்றி னார்கள்
வண்டமிழ்ச் சங்கந் தன்னில்
  வளமைகள் வகுத்திட் டார்கள்
எண்டிசை போற்றும் வண்ணம்
  எழில்விழா வமைத்திட் டார்கள்
தொண்டினால் உயர்ந்திட் டார்கள்
  தொல்புகழ் தொகுத்திட் டார்கள்"

- யாரோ ஒருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணாசலம் சுவாமிநாதர்
(1765 - 1824)

இராமாயணம் எந்த மொழியில் வழங்கினாலும் அது இரு நாடுகளின் கதை. மற்றொரு இதிகாசமாய் மகாபாரதத்திற்கு முந்தியதான இராமாயணம் இலங்கையைப் பற்றிப் பரவலாகக் கூறுகிறது. கம்பராமாயணம் எழுந்த காலந்தொட்டு அஃது இலங்கைத் தமிழரால் பாரம்பரியமாகப் பயிலப் பெற்று வருகின்றது.

காலந்தோறும் இராமாயணம் வல்லவர்கள் எங்கள் நாட்டில் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்து வந்தார்கள். ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்தவராய மானிப்பாய் அருணாசலம் சுவாமிநாதர் என்பார் இராமாயணமும் பாரதமும் வல்லவர். அவர் இராமாயணம் சொல்லிக் கொடுத்தவர்களுள் இருபாலைச் சேனாதிராய முதலியாரும் ஒருவர். சேனாதிராய முதலியோர் தொடர்பால், நாவலர் அவர்களின் தமையனாரேயன்றித் தந்தையாரும் இராமாயணம் நன்கறிந்தவர் களாவர்.

சுவாமிநாதர் மானிப்பாய் ஊரின் பழங்குடியினர். அவரின் குடும்பத்தைச் சேர்ந்த எதிர்மன்னசிங்க முதலியார் இலங்கைச் சட்டசபையில் *1838* தொடக்கம் *1862* வரை தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியாயிருந்தவர். அவர் ஓய்வு பெற்றதும் அவருடைய இடத்தை அலங்கரித்தவர் அவரின் மருகராய சேர். முத்துக்குமார சுவாமி ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர். முத்துக்குமார சுவாமி அவர்களின் தந்தையார் கெருடாவில் ஊரையும் தாயார் மானிப்பாய் ஊரையும் சேர்ந்தவர்களாவர்.

சாமிநாதருக்கு முத்துச்சாமிப்பிள்ளை என்னும் அருமைத் தம்பிமார் ஒருவர் பெரிய வர்த்தகராய் விளங்கியதோடு முத்துக்குளிப்பிலும் செல்வ மீட்டியவராவர். சுவாமிநாதர் கலைமகள் கடாட்சம் பெற்றுக் கவிபாடுவதிலும் நாடகங்கள் எழுதுவதிலும், சங்கீத ஞானத்திலும் சிறந்து விளங்கினார். முத்தமிழ் வித்தகராய இவர் இயற்றமிழில் கோவைப் பிரபந்தங்கள் பாடிய சிறப்பால் கோவைத்துறைச் சுவாமிநாதர் என்று பெயர் பெற்றதும் உண்டு. இன்னும் இவர் நாடகங்கள் இயற்றி மேடையேற்றிய சிறப்பால் நாடகச் சுவாமிநாதன் எனவும் வழங்கினர் என்ப. நாடகத் துறையில் விலாசங்கள் என்னும் நூல்களையும் இவர் தயாரித்துப் புகழ் பெற்றதும் உண்டு. இவர் பல கோயில்களுக்கு ஊஞ்சற் பாடல்களும், வேறு விதமான பதிகங்களும், பல தனிப் பாடல்களும் பாடியுள்ளார் எனவும் கூறுவர்.

இவர் செய்த நாடகங்களுள் இராம நாடகமும், தருமபுத்திர நாகடமும் பெரும்புகழ் பெற்றவை. இவற்றுள் இவர் பாடிய இராம நாடகத்தில் தொண்டைமானாற்றங் கரையில் எழுந்தருளியுள்ள அன்னதானக் கந்தனாய செல்வச் சந்நிதியானை முன்னிட்டுக் கடவுள் வணக்கம் பாடியுள்ளார். முருக வணக்கத்துப் பாடலிலேயே தாம் செய்யப்போகும் இராமாயணக் கதையை ஒரே பாடலில் அருமையாகக் கூறியுமுள்ளார்.

*"ஆண்டுகொண் டவனிமுத லன்றிலங் கையிலுறையும்*
*அரியரா வணநிசிசரன்*
*அழகுசெறி சீதையைச் சிறைவைக்க ராமனா*
*யவதரித் திடுமாயவன்*
*தூண்டவனு மான்சென் றறிந்துவந் தேசொலத்*
*தொடுகடலை யணைகட்டியே*
*சுக்கிரீப னொடுசேனை சூழ்ந்திட விலங்கையிற்*
*றொகுதியோடு போயடைந்து*
*வேண்டியம ருக்குவரு தம்பியும் பிள்ளைகளும்*
*வெகுமூ பலமுமழிய*
*விறலிரா விணன்மடிய நொடியிலே சிறைமீட்ட*
*வீரரா கவன்மருகனே*
*நீண்டவன் பிலையெனினு மாண்டுகொண் டிகுமடிமை*
*நீயருளெ னக்குதவுவாய்*
*நிகரில்தொண் டமனாற்றில் நிலவுசந் நிதிமேவும்*
*நிமலகுரு பரமுருகனே."*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராம நாடகம் என வழங்கும் பழைய நூலில் வரும் பாடல் ஒன்று கிடைத்துள்ளது. இது சுவாமிநாதரின் பாடல் தானோ என்பது ஆராயற்பாலது. பாடல் எழுந்த சந்தர்ப்பம் தெரியவில்லை, ஆனால் பாடல் முழுதும் கிடைத்துள்ளது.

*எட்டி வருவார் சிலர்*
*கிட்டி வருவார் சிலர்*
*ஈண்டி வருவார் சிலர்*
*தாண்டி வருவார் சிலர்*
*ஏறி வருவார் சிலர்*
*சீறி வருவார் சிலர்*
*இரைந்து வருவார் சிலர்*
*விரைந்து வருவார் சிலர்*
*இடத்தில் வருவார் சிலர்*
*வலத்தில் வருவார் சிலர்*
*எடுக்க வருவார் சிலர்*
*முடிக்க வருவார் சிலர்*
*இடிஇடி என்பார் சிலர்*
*பிடிபிடி என்பார் சிலர்*
*எற்றும் எற்றும் என்பார் சிலர்*
*எட்டும் எட்டும் என்பார் சிலர்*
*எதிர்எதிர் என்பார் சிலர்*
*மிதிமிதி என்பார் சிலர்.*

சுவாமிநாதர் பாடிய தனிப்பாடல்களுள் ஒன்று, அறிவிற் குறைந்த உயிரினங்கள், அவையும் பிறவிப் பகைப் பிராணிகள் சமாதான சகசீவியம் செய்தமை பற்றிய செய்தி கூறுவதாகும். வட்டுக்கோட்டைக்கு இப்பால் நவாலி களையோடை கண்ணகியம்மன் கோயிலடியில் அவர் கண்காணக் கண்ட காட்சியை அவர் விவரித்துப் பாடியது. அவர் கண் காண ஓர் எலியும் பாம்பும் கீரியும் ஒன்றோடொன்று அணைந்து விளையாடிக் கொண் டிருந்தனவாம். அது பசுவும் புலியும் ஒரு படித்துறையில் நீர் குடித்தாற் போன்றதாகும். அவற்றைக் கண்டவுடன் புலவருக்குப் பாட்டுப் பிறந்தது.

*“மலியா ணவமலி மாய்கையை நீக்கி*
*மலர்ப் பதத்தைத்*
*துனியா தரவொடு தோத்திரஞ் செய்யச்*
*சுகந் தருவாய்*
*எலியா டரவொடு கீரியொன் றாகி*
*யினி யிசைந்து*
*கலியா ணமாயுறை யுங்களை யோடையிற்*
*கண்ண கையே”*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியில் வியாச முனிவர் வடமொழியில் எழுதிய மாபாரதம் பிற்காலத்தில் பெருந்தேவனார், வில்லிபுத்தூரர், நல்லாப் பிள்ளை முதலானோரால் தமிழில் பல்வேறு பாவினங்களிற் பாடப் பெற்றது. ஐந்தாம் வேதம் எனப் போற்றப் பெற்ற மாபாரதம் இதிகாசங்களில் ஒன்றாயும் சிறப்புப் பெற்றது.

தமிழர் மாபாரதத்தை விரும்பிப் படிப்பதுண்டு. அது பிற்காலத்தில் நல்ல வசன நடையிலும் வெளிவந்திருந்தது. யாழ்ப்பாணத்துச் சுருட்டுக் கொட்டில்களில் தொழிலாளர் விரும்பிக் கேட்டுவந்த படிப்பு பாரதப் படிப்பு. அது முதுமக்கள் கல்வி முறையாகவும் நிலவி வந்தது.

பாரதக் கதையை நாடகமாக எழுதியவர்களும் பலராவர். அவர்களுள் மானிப்பாய் வாசியான சுவாமிநாதரும் ஒருவர். தருமபுத்திர நாடகம் என்னும் பெயரில் இவர் இதனை எழுதியதோடு, மேடையேற்றியும் புகழ் பெற்றவர். இவர் செய்த சேவையை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும் பாராட்டியுள்ளார். இன்னும் முத்தமிழ் வித்தகரும் பேராசிரியருமான விபுலானந்த அடிகளாரும் இந்நாடகப் பிரதியொன்றிற் சில பாடல்களைப் படித்தின்புற்று ஆசிரியர்களின் வழிவந்தவர்களையும் அறிந்து கொள்வதற்கு வெகுவாக முயற்சி எடுத்ததும் உண்டு.

இவ்வாறாக மானிப்பாய் ஊருக்கு அப்பால் உள்ள கலை நகராய வட்டுக்கோட்டையில் இந்நாடகம் பலவாண்டுகளாக நடிக்கப் பெற்று வந்தது. அக் காலத்து வட்டுக்கோட்டையூரினருள் சிறந்த நடிகர்களாயிருந்த பலர் தங்கள் சொந்தப் பெயர்கள் மறக்கப்பட்டு, நாடகப் பாத்திரங்களின் பெயர்களாலேயே வழங்கப் பெற்று வந்தனர் என்று மக்கள் கவிமணி மு. இராமலிங்கம் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

அன்று 1884ஆம் ஆண்டில் இந் நாடகம் வட்டுக்கோட்டையில் மேடையேற்றப் பெற்றபோது பீஸ்மராக நடித்தவருக்குப் பாட்டா என்பதே காரணப் பெயராயிற்றாம். அவ்வூரில் பாட்டாவின் வீடு, பாட்டாவின் மக்கள் என்னும் வழக்கு நிலவி வந்ததாம். பாட்டாவின் மக்களுள் ஒருவரே முதுதமிழ்ப் புலவர் நல்ல தம்பி என்பவராவர் என்ப.

இவ்வாறாக சுவாமிநாதர் எழுதிய இராம நாடகம் யாழ்ப்பாணத்தில் பலவூர்களிலும் மேடையேற்றப் பெற்று வந்தது இது காலந்தோறும் சங்குவேலி, குரும்பசிட்டி, மாவிட்டபுரம், கந்தமடம் முதலாய இடங்களில் மேடையேற்றப் பெற்று வந்தது. கந்தமடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசடி வீதியில் உள்ள அரசவெளி என்னும் இடத்தில் நூறு பரப்புக்காணி வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்குச் சொந்தமானது. அந்த வெளியிலே நாவலர் அவர்கள் கந்தமடப் பிரபுவே என்று கண்டனந் தெரிவிக்கும் கதிரவேலு என்பாரின் வழிவந்த ஆனந்தர் செல்லையா என்பவர் சாராயக் குத்தகைக்காரன். அவர் பெரிய கூத்துக் கொட்டகை அமைத்து மேடையேற்றிய இராம நாடகம், தருமபுத்திர நாடகம் பற்றி நம் முன்னோர் கூறிவந்தார்கள்.

இனித் தருமபுத்திர நாடகத்திலே இன்று கிடைத்துள்ள பகுதியில் சூதாட்டம் முடிந்த நிலையில் துரியோதனன் பெருவெற்றி காரணமாகத் தலை கால் தெரியாமல் மகிழ்ச்சியில் புரளுகிறான். வன்செயலில் வல்லவனாய தம்பி துச்சாதனனிடம் அடிமையாய்ப் போன துரோபதியை இழுத்து வருமாறு ஏவுகிறான். அவனும் வேகமாகச் சென்று அவளுடைய பரிதாபகரமான நிலையையும் பொருட்படுத்தாது அழைக்கின்றான். அவன் பாடி அழைக்கும் பாடலில் ஏற்றம் இறக்கமாக இருவேறு விளிப்புகள் அடிகள் தோறும் விருந்தளிக்கின்றன.

*"ஐவருக் கொருத்தியாய அன்னமே நடந்து வாடி*
*தைவரு தருமன்தோற்ற தையலே நடந்து வாடி*
*பொய்நல மெய்யதாகப் புணரு மெல்லியலே வாடி*
*துய்ய அண்ணனைச் சிரித்த தோகையே நடந்து வாடி"*

என்றோ எப்பவோ தருமன் கட்டிய பளிங்கு மண்டபத்திலே ஒரு பகுதி நிலம் நீரோட்டம் போலமைந்திருந்ததாம். அதைப் பார்க்கப் போன துரியோதனன் அவ்விடத்தில் மெய்யாய் மெய்யாய் நீரிருப்பதாகக் கருதித்தன் உடையை உயர்த்தினானாம் அது கண்டு திரோபதி சிரித்தாளாம்.

அந்தச் சிரிப்பைச் சிந்தையில் வைத்திருந்த துரியோதனன் இப்போது துரோபதியின் சீரைக் கெடுக்க முற்படுகிறான். பெண்கள் சிரித்தாற் போச்சு, என்னும் சிரித்தாயே சீரைக் குலைத்தாயோ என்றும் பழமொழிகள் வழங்குதல் வழக்கம்.

அரசப் பேரவையிலே அலங்கோலமாக நிறுத்தப்பட்ட திரோபதியின் அவல நிலையைக் கண்ணுற்ற பாண்டவருள் இளையவர்களாய நால்வரும் பெரிதும் வருந்தி, மனங் கொதித்து, உடல் வெயர்த்து வஞ்சினங் கூறி எழுகின்றார்கள். அண்ணன் தருமர் அவர்களைக் கையமர்த்தி அமைதியாயிருக்கும் வண்ணங் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"அம்பியே ஆகுங்காலம் அனைத்துள்ள பொருளுமாகும்
நம்பியே போகுங்காலம் நம்மைவிட் டகன்று போகும்
தம்பியே காடுவெந்தாற் சந்தனமரம் வேகாதோ
எம்பியே பொறுத்த நீங்களின்னமும் பொறுங்களப்பா"*

தமக்கிளைய சகோதரர் நால்வரையும் அண்ணன் தருமர் கையமர்த்தியபோது, நாடகத்தில் சுவாமிநாதர் அவர்களுக்குத் தமிழ்வளம் அம்பி, நம்பி, தம்பி, எம்பி என்று நால்வரையும் கருதக் கைகொடுக்கிறது.

தருமர் அமைதி பற்றிப் பேசியபோதும் தம்பிமார் கொதிப்படங்கவில்லை. ஒரே குரலில் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். பின்னர் ஒவ்வொருவரும் தனித் தனியாகத் தம் மனக் கிடக்கையை வெளியிடுகிறார். அவர்கள் பாடல்களுள் நகுலன் கூறிய பாடல் நமக்குக் கிடைத்துள்ளது.

*"மான்பார்த்த விழிமடவாள் துரோபதிதன்
மனமிரங்கி மறுகும் போது
நான்பார்த்துக் கோபிக்கப் பொறுங்கள் என்று
அண்ணாநீ நவிலு கின்றாய்
ஓன்காத்து மொழிகின்றாய் துரியோதனனுக்
கெவராலு மிரங்க லாமா
தேன்வார்த்து வளர்த்தாலுஞ் காஞ்சூரை
தெங்காமோ செப்பு வாயே"*

இதற்குள் துரியோதனனுக்கு ஆத்திரம் மேலும் பொங்கி அவசர புத்தியும் வேலை செய்கிறது. அடிமையாகப் போன திரோபதிக்குத் தோளில் என்ன தொங்கல் அதனை உரியடா தம்பி என்று உத்தரவிட்டவனின் உளறல் பாட்டில் சில வரிகளே கிடைத்துள்ளன.

*"முழுக்கள்ளி உடுத்துகின்ற மொய்துகி லதனையும் பற்றி
விழுதுள்ளி கண்ணீர் பாய வெட்கிட உரிநீ தம்பி!"*

துச்சாதனன் ஏவற் பேயாகிக் கூரையைப் பிரித்தாற்போல திரோபதியின் துகிலை உரிகிறான். மானம் பறிபோனபோது அவள் மனங் கொதித்துக் கண்ணீர் சிந்தி அழுகிறாள். கண்ணபிரானைக் கூவிப் புலம்புகிறாள்.

*"கலையுரியுது கரவளை தெரியுது
கருவிழியுறு புனலது சொரியுது
நிலையுறுமன மெரியுது கரியுறு நிமலா!"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துகில் வளர்கிறது. துரியோதனன் பொறுமையை இழக்கிறான். காமம் தலைக்கேறுகிறது. சொல்வது என்ன என்று தெரியாமல், திரோபதியைத் தூக்கி வந்து தன் தொடைமீது இருத்துமாறு கொடியவனாய தம்பியிடம் கூறுகிறான். கொடியவனின் குரல் திரோபதியின் செவியில் விழுகிறது. துவண்டு சோர்ந்து சபதம் கூறுகிறாள். பாஞ்சாலி சபதம் கேட்கிறது.

*"தூக்கிவையென்று சொன்ன*
*தொடையது புள்வாய் கொத்த*
*ஊக்கமாந் துரியோதனா நீ*
*சுறுக்குயிர் ஒழிந்து போவாய்*
*ஏக்கமாய்த் துகிலுரிந்தோர்*
*யாவரும் இறந்தாரென்ற*
*கூக்குரல் கேட்டலல்லாது*
*கொண்டை நான் கட்டிலேனே"*

இவ்வாறாகத் துரியோதனன் தான் கொண்ட காமச் சூடு தணிவதற்குத் துரோபதியை மடிமீதிருத்தக் கருதிய செயல் நடைபெறாது போக, திரோபதி கூறிய சபதம் பாரதப் போருக்கு அடி கோலுவதாயிற்று. பாண்டவரும் தேவியும் அடிமைகள் என்னும் அவமானத்தோடு வனவாசஞ் செய்வதற்கு விரும்பவில்லை. எனவே அடிமைத்தளையை அறுப்பதற்காக மீண்டும் சூதாடுவதற்குத் தருமர் விரும்பினார். இம்முறை சூதாடுவதற்குப் பணயமாகத் தான் செய்த அறத்தை வைத்து ஆடுவதற்கு ஆயத்தமாகிச் சகுனியை அழைத்தார்.

*"சீலமாந் தருமந் தன்னைச் செயமுடன் ஒட்டம் வைத்து*
*ஆலமாம் சகுனியை யோராட்டம் நானாட வேண்டும்*
*ஞாலமே லடிமை யாகப் போவது நியாய மல்ல*
*காலம்போம் வார்த்தை நிற்கும் கடுகென வருகு வாயே"*

காட்டுக்குச் சென்றவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் அங்கே வாழ்ந்த பின், பிறரறியா வண்ணம் மறைந்து வாழ்வதற்கு விராட தேசம் நோக்கிப் போகிறார்கள்.

*"மங்கையெனும் வண்ண மகளருகிற் செல்ல*
*மாட்டிடையன் சகாதேவன் பின்னே செல்ல*
..... ..... ..... ..... ..... ..... ..... ..... ..... .....
*அருச்சுனனாகிய பேடி அருகிற் செல்ல*
*இங்கிதமாம் வீமனென்னும் மடையன் செல்ல*
*இனிமைதரு தருமமுனி கெங்கனாகித்*
*துங்கமுறு விராடபதி தூய நாட்டிற்*
*றொடர்ந்திட்டார் ராசசபை நடந்திட்டாரே"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விராட தேசத்து எவருமறியா வாழ்வு நிறைவேறிய பின் பாண்டவர்களும் கண்ணனும் பாரத யுத்தம் பற்றிப் பேசிய சந்தர்ப்பத்தில் ஒவ்வொருவரும் தத்தம் மனக் கருத்தைக் கூறிய வேளையில், சகாதேவன் கூறியமை நுட்ப புத்தியுடையது என்று எல்லாப் பாரத நூல்களும் கூறுவன, இவ்வாறே தரும புத்திர நாடகம் தந்த சுவாமிநாதரும் பாடுகிறார். கண்ணனின் மனக் கருத்தினை நன்கறிந்தவனாய் சகாதேவன் ''திரோபதி குழல் அவிழ்கிலென் முடிகிலென், துணிவுடனர சிடுகிலென் விடுகிலென், அருமருதிடை தவழ்தரு முனதுளம் வேறாரறிவார்'' என்று கூறியதும் உண்டு. இன்னும் சனசஞ்சகமான பாடலில், சூத்திரதாரியாய் கண்ணனைக் கட்டி வைத்தால் பாரதப் போர் வராமல் தடுக்கலாம் என்பான்.

*''சொல்லவொரு வார்த்தையுண்டோ*
*செய்வதற்கு வேறுமொரு தொழிலுமுண்டோ*
*வல்லமையாயுனைப் பிடித்துக் கட்டி*
*வைத்தாற் பாரதப்போர் வருவதுண்டோ*
*நல்லது உன்மாயம் நானறிவேன்*
*சாமிநீ நவில வேண்டாம்*
*கொல்ல தெருவினி லூசிவிற்க*
*வந்தால் விலையாமோ கூறுவாயே''*

இத்தகைய புகழ் பெற்ற நாடகம் 1880ஆம் ஆண்டில் இலங்கை நேச முத்திராட்சரசாலையில் அச்சிடப் பெற்றதென்றும், இதன் பிரதியொன்று கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் நூலகத்தில் இருந்ததென்றும் சுவாமி விபுலானந்தர் இதனை வெகுவாக மெச்சினார் என்றும் கூறுப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணாசலம் சதாசிவம்பிள்ளை

யே.ஆர். ஆர்னோல்ட்
(1820 - 1896)

## மானிப்பாய் ஊரின் மகிமை

**யா**ழ்ப்பாணத்து மத்தியிலமைந்த மானிப்பாய் நல்லதொரு தமிழ்ப் பண்ணையாயிருந்தது. அது சிவநேயம் மிக்கவர்களின் சைவப் பண்ணையாயும் இருந்தது. அங்கே எழுந்தருளியுள்ள மருதடி விநாயகரின் மகத்துவம் பெரிது. புதுவருடப் பிறப்பு நாளில் சித்திரத் தேரேறி அன்பர்களுக்கு அருள் வழங்குதல் அவர் வழக்கம். அன்பர்கள் பக்திப் பெருக்கோடு வெளிப் பிராகாரத்தில் பொங்கிப் படைக்கும் நிவேதனங்களையும் அவர் ஏற்றருள் புரிபவர்.

மருதடிப் பிள்ளையாரின் வரப்பிரசாதத்தால் மானிப்பாய் மக்கள் பெருவாழ்வு வாய்க்கப் பெற்றவர்கள். வெள்ளைக்காரர் தமது ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் கொழும்பில் நிறுவிய கொம்பனிகள் என்னும் வர்த்தக நிறுவனங்களில் யாழ்ப்பாணத் தமிழரே காசாளர்களாயும் தரகர்களாயும் பணிபுரிந்து பக்கபலமாயிருந்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கொம்பனிகளுக்குப் பங்குப் பணஞ் சேர்த்து மூல நிதியைப் பெருக்கியும் உதவி புரிந்தவர்கள். அவர்களுள் மானிப்பாய் மக்களே முன்னணியில் நின்றவர்கள்.

மானிப்பாய் கேந்திரதானத் தமைந்தாற்போல் நிலவச் சுற்றுப் புறங்களில் ஆனைக்கோட்டை, சுதுமலை, சங்குவேலி, நவாலி முதலாய ஊர்கள் அமைந்துள்ளன. ஆனைக்கோட்டையின் அண்மைக் கால அகழ்வாராய்ச்சி அதனை ஆதித்த நல்லூர்ப் பழைய நாகரிகத்தோடு அடைவுடையதாக்குவதற்குரிய அறிகுறிகளைக் காட்டி நிற்கிறது.

பழைய ஆனைக்கோட்டையிலே பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த பொன்னம்பலத் தருமவான் என்பவரின் வழித் தோன்றலே அருணாசலம் பொன்னம்பலம் என்னும் முதலியாராவர். இவரே குமாரசுவாமி, இராமநாதன், அருணாசலம் என்னும் பேர் படைத்த சகோதரர் மூவரின் தந்தையாவர்.

மானிப்பாயின் மகிமையறிந்த புறச் சமயத்தவர் தெல்லிப்பழை, மல்லாகம், வட்டுக்கோட்டை முதலிய ஊர்களோடு இதனையும் மதித்துத் தங்கள் மதம் பரப்புவதற்கு இதனையும் மையமாகக் கொண்டதும் உண்டு. இதனால் கிறிஸ்தவ மதம் பரவிய வேகத்திற் பார்க்கச் செந்தமிழ் செழித்து வாழ்ந்து பரவியமையே அதிகமாயிற்று, அவர்களின் முயற்சியால் இங்கே தலைசிறந்த வைத்தியசாலை, அச்சகம், பாடசாலை ஆகியவை நிலவுவனவாயின. செந்தமிழ் வளர்த்த மானிப்பாய் ஊரினருள் பழைய பெரியவர் சுவாமிநாதன் என்பவரே, இருபாலைச் சேனாதிராய முதலியாருக்கு இராமாயணஞ் சொன்னவராவர்.

## தோற்றம்

மானிப்பாயை அடுத்த நவாலி பல வகையான பெருமைகளும் வாய்க்கப் பெற்ற பழையவூர். அங்கே வாழ்ந்த சைவப் பெருங்குடி வழியில் வந்த கதிரித்தம்பி என்னும் சட்டம்பியார் மைந்தன் அருணாசலம் அவ்வூர் காசிநாதர் என்னும் கணக்கர் மகள் ஆனந்தப்பிள்ளை என்னும் மாதரசியை மணந்து 11-10-1820ஆம் நாளில் பெற்ற மைந்தனே சதாசிவம்பிள்ளை ஆவர்.

அக் காலத்தில் பிள்ளைகள் பன்னிரண்டாண்டுப் பருவத்திலேயே தமிழில் படிக்க வேண்டிய பெரும்பாலான அறிவு நூல்களை, ஆதார நூல்களைத் தக்க பெரியவர்களை அடைந்து கற்று முடித்துக் கொள்ளல் வழக்கம். பின்னர் மேற்படிப்புக்கான வழிகளில் சென்று மேம்பாடு அடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக் காலத்தில் அமெரிக்க மிசனரிமார் வட்டுக்கோட்டையில் தங்கள் சாத்திரசாலை என்னும் செமினரி ஒன்றைப் பல்கலைக்கழகம் அனைய தரத்தில் நிறுவிப் பல கலைகளையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் பயிற்றி வந்தார்கள். மேலைத்தேய விஞ்ஞானம், வான சாத்திரம், கணிதம், தர்க்கம், புவியியல், வரலாறு முதலிய பல துறைகளோடு பன்மொழிகளும் அங்கே பயிலக்கூடிய பெருவாய்ப்பு நிலவியது. ஏறக்குறைய பன்னிரண்டாண்டுப் பராயத்து பாலர்கள் அங்கே சேர்ந்து மனிதராய் உருப்பெற்றார்கள். பட்டதாரிகளுக்கான பாடத் திட்டத்தைக் கரைகண்ட நன்மாணாக்கர் பலருக்குச் சென்னைப் பல்கலைக்கழகப் பட்டம் பெறுதல் மிகவிலகுவாயிருந்தது.

## மேற்படிப்பு

சதாசிவம்பிள்ளை வட்டுக்கோட்டையில் மேற்படிப்புப் படித்த காலத்தில் சாத்திரசாலையில் சண்முகச் சட்டம்பியார் என்னும் பெரியார் அறிவுச் செங்கோல் செலுத்தி வந்தார். இன்னும் வடமொழிப் புலமை வாய்ந்த வட்டுக்கோட்டை ஊரினராய சுப்பையர் என்பாரும் ஹென்றி மாட்டின் என்னும் வரலாற்றுப் பேராசிரியரும் இருந்தார்கள்.

அங்கே அக் காலத்திற் படித்து வந்த மாணாக்கர்களுள் பிற்காலத்தில் பெரும் புகழீட்டிய புத்தூர் வேலாயுதர் சிதம்பரப் பிள்ளை, மானிப்பாய் சின்னத்தம்பி சரவணமுத்து, மானிப்பாய் முருகேசு முதலியார், பன்னாலை பொன்னம்பலம் சின்னக்குட்டி, சுதுமலை வைரவநாதர் விசுவநாதபிள்ளை, சங்குவேலி முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை, அளவெட்டி சின்னத்தம்பி, தெல்லிப் பழை அப்புக்குட்டி குமாரகுலசிங்க முதலியார், மானிப்பாய் கணபதிப்பிள்ளை, பண்டத்தரிப்பு இரா. கூல்ட், மானிப்பாய் சரவணமுத்து சின்னத்தம்பி, தெல்லிப்பழை அம்பலவி கதிரேசர், சங்கானை கதிரேசர் பெரியதம்பி, சிற்றம்பலம் வைரமுத்து, சாமுவேல் மேர்வின் முதலானோரும் ஒருசாலை மாணாக்கர்களா யிருந்தார்கள்.

இவர்கள் கோணிலியஸ், ஹலக், டேவிற்றிக்ஸ், டானியல் கரோல், விலியம் நெவின்ஸ், எலிசா றொக்வுட், யோசேப்பார், டேவிட் ஸ்ரோவல், றோபேட் பிறக்கன் பிரிட்ஜ், யோசுவாடான் போத், கிறேவ்ஸ், ஆர்னோல்ட் என்றெல்லாம் வழங்கியவர்கள் ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் வெவ்வேறு காலங்களில் அங்கே மாணாக்கர்களுக்கு அதிகாரிகள் வழங்கிய பெயர் வரிசையில் பிறவுண், போட், வைமன், வில்சன், குக், மேதர், குறோசெற், பிளாக், நைல்ஸ், பாட்லெட், வின்ஸ்லோ, அலன் என்பன யாவும் சம்பிரதாயச் சடங்கின்போது வழங்கப் பெற்ற பெயர்களாம்.

## ஆசிரியர் வேலை

இந்த வகையில் அருணாசலம் சதாசிவம்பிள்ளை பெற்ற பெயர் யோவல். ஆர். ஆர்னோல்ட் என்பதாகும். சதாசிவம்பிள்ளை நன்றாகப் படித்துப் பெரும் புலமையும் சீரிய கூரிய அறிவுத் திறனும் பெற்றுப் பெருமையடைந்தார். நல்லாசிரியருக்கான பயிற்சித்திறன் பெற்ற இவரின் தமிழ்ப் புலமையை அறிந்த பெரியவர்கள் இவரைப் பேராசிரியர் எனவே மதித்துப் புகழ்ந்தனர். இவர் சாத்திரசாலைப் படிப்பை நிறைவு செய்து கொண்டு, ஆசிரியர் வேலை பார்க்கச் சென்ற, இருபதாம் வயதிலேயே உள்ளூரில் படிப்பிக்கத் தொடங்கினார். பின்னர் உடுவில், சாவகச்சேரி ஆகிய ஊர்களிலும் ஆசிரியராயிருந்தார். அங்கெல்லாம் இவர் கற்பித்து வந்தபோது சென்ற காலத்துச் செந்தமிழ்த் திறனை வழுவிலா வகையில் வருஞ் சந்ததியினருக்கு வழங்கி நல்ல பெயர் பெற்று வந்தார்.

## திருமணமும் மக்கட்பேறும்

சதாசிவம்பிள்ளை தமது இருபத்தாறாம் வயதில் கோவிந்த உடையார் வழிவந்த முத்துப்பிள்ளை என்னும் மாகரற்றிற்சி அம்மையாரை மணந்து சேராபொன்னு, இராசா சின்னத்தங்கச்சி, எஸ். ரீ. ஆர்னோல்ட், எஸ்.சி. ஆர்னோல்ட் ஆகிய பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தார்.

இவர் 1848ஆம் ஆண்டில் கிறிஸ்தவ பெரியார்களாய சந்திரசேகர பண்டிதர், ஸ்போல்டிங் பாதிரியார் முதலானோருடன் கூடித் தமிழ்நாடு சென்று அங்கே நடைபெற்ற கிறிஸ்தவ மாநாடொன்றிற் கலந்து பெருமை பெற்று மீண்டார். சென்னைக் கிறிஸ்தவ சங்கம் அக் காலத்தில் செந்தமிழ் வளர்த்தவாறே தம் மதத்தையும் பரப்பி வந்தனர். ஆறுமுக நாவலர் அவர்கள் மொழி பெயர்த்துக் கொடுத்த பைபிள் என்னும் சமய நூலின் தமிழ் நடையைப் பாராட்டியவர்கள் அச் சங்கத்தினரேயாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திராதிபர் பணி

சதாசிவம்பிள்ளை 1854ஆம் ஆண்டில் உடுவில் பெண்கள் பாடசாலையில் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்றுப் பணி புரிந்த வேளையில், மேலதிக சேவை செய்தல் கருதித் தமது ஓய்வு நேரப் பணியாகப் பத்திராதிபர் வேலையை ஏற்று நடத்தி வந்தார்.

அக் காலத்தில் சாண்டேர்ஸ் என்னும் பாதிரியார் நடத்தி வந்த உதயதாரகை என்னும் சஞ்சிகை தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் நற்பெயர் எடுத்து வந்தது. சதாசிவம்பிள்ளை அவர்கள் 1857ஆம் ஆண்டில் உதயதாரகை ஆசிரியர் வேலையைப் பொறுப்பேற்று நல்ல முறையில் நடத்தி வந்தார். நீண்டகாலம் உடுவிற் பெண்கள் பாடசாலையை அலங்கரித்த பின், இவர் 1881ஆம் ஆண்டு முதல் 1891 ஆம் ஆண்டுவரையும் யாழ்ப்பாணக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தமை, கற்றுவல்ல பெரியவர்கள் உருவாவதற்கு ஏதுவாயிற்று.

சதாசிவம்பிள்ளை அவர்கள் உதயதாரகைப் பத்திரிகையை உன்னதமாக நடத்தி வந்த காலத்தில் செந்தமிழ் ஆர்வமும் சட்டத்துறை அறிவும் நிரம்பிய வைமன் கதிரைவேற்பிள்ளை அவர்கள் ஊர்க்காவற்றுறை நீதவானாக நியமனம் பெற்றார். அன்று 1872-11-7 ஆம் நாள் சதாசிவம்பிள்ளை அவர்கள் தமது பத்திரிகையில் எழுதி வெளியிட்ட தலையங்கம் சனரஞ்சகமானது. பெருமதிப்பு வாய்ந்தது. அது படித்து இன்புறற்பாலது.

''ஊர்க்காவற்றுறை நீதவான் கதிரைவேற்பிள்ளைத் துரையின் தோற்றத்தோடு தீவுப்பற்றுக் கள்ள வழக்குகள் சூரியன் முன் திமிரப் படலம் போற் பறந்தோடுமென்று நாம் எண்ணிய எண்ணம் சரிவர நிறைவேறுகிறதென்று கேட்டதுங் காண்பதும் எமக்குச் சொல்லிலடங்கா மகிழ்ச்சியாயிருக்கிறது. அப்பகுதியிலிருந்து வந்த கடிதமொன்று அவரை மிக மெச்சிப் புகழுகின்றது. காலமே 9 மணி தொடக்கம் பின்னேரம் 5 மணி வரையில் கோட்டுடனேயிருந்து விசாரணை நடாத்துகிறாரென்றும் வழக்குத் தொகைகள் குறைகின்றனவென்றும், பணக்காரருடைய செல்வாக்கும் கசடறக் கற்ற நியாய துரந்தரருடைய சாதுரியமான பேச்சும் எங்கள் பாத்திரமான நீதவானில் சற்றும் பலிக்கவேயில்லை''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக ஆறுமுகநாவலர் அவர்கள் மறைந்த காலத்தில் 13-12-1879 ஆம் நாளில் மலர்ந்த உதயதாரகையிதழில் சதாசிவம்பிள்ளை எழுதிய வாசகத்தையும் அறிந்து கொள்ளுதல் நன்றாகும்.

''மஹாஸ்ரீ க. ஆறுமுகநாவலர் இலங்கை யாழ்ப்பாணம் வடகரை எங்கும் ஓர் கல்விமான் எனப் பெரும்புகழ் படைத்த இவரும் பிறக்கிட்ட ஆறாந்திகதி தேகவியோகமாயினர். இரண்டொரு வருடங்களாகவோ கூடவோ யாமறியோம் இவர்க்குத் தொய்வு உபத்திரவஞ் சொற்ப காலமாயிருந்தும் கடைசியில் இக்காலச் சுகசீவிகளுக்கு நேரிடும் இரட்டை நோக்கங்களிலொன்றாம் நீரிழிவே இவர்க்குக் கண்டு மின்னாமல் முழங்காமற் சட்டென இடிவிழுந்தாலொத்து நாலைந்து தினங்களுள் இவருயிரை எடுத்தது. அடுத்தநாட் சாயந்தரம் இவர் பிரேத தகனம் நிறைவேறிற்று. ஆதியில் அநேக வருடங்களாக இவர் எம் பத்திரிகை மேல் அபிமானங் கொண்டிருந்தவர். நல்லூர் கந்தர் குமரர் ஆறுமுகவர் என்னுங் கையொப்பங்களுடன் எம் பத்திரிகையிற் றோன்றிய கடிதங்கள் இவரால் வரையப்பட்டனவே. இவரது தேகவியோகத்தால் யாழ்ப்பாணம் தகுந்த கல்விமானை யிழந்ததென்றதை மறுக்கத் துணிபவரார். ஆயின் மரணம் யாரைத்தான் விட்டது''

## செந்தமிழ் வளர்த்தமை

சதாசிவம்பிள்ளை அவர்கள் நல்லாசிரியராயும், தரமான பத்திராபதிபராயும் இருந்த தகைமையோடு செந்தமிழ் வளர்த்த செம்மலாயும் இருந்து மெய்வேதசாரம் இயேசுநாதர் திருச்சதகம், நன்னெறி மாலை, நன்னெறிக் கொத்து, சற்போத சரணம், இல்லற நொண்டி, நன்னெறிக் கதாசங்கிரகம், சாதாரண இதிகாசம், வான சாஸ்திரம் முதலாய பேர் படைத்த நூல்களையும் காலத்துக்குக் காலம் செய்து வெளியிட்டுள்ளார். இன்னும் வெல்லையந்தாதி, ஞான வெண்பா, கீர்த்தனா சங்கிரகம் ஆகிய நூல்களையும் செய்துள்ளார். இவர் வசன நடை கைவந்த எழுத்தாளனா யிருந்தமையோடு பாவினங்கள் பலவற்றை இசையோடு யாத்தமைத்த புலவனாயுமிருந்தார்.

இவருடைய நொண்டிச் சிந்து நாடகப் பாணியிலமைந்ததாகவே, இவர் இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழ் வல்லவராயுமிருந்தார் எனலாம். இவருக்கு வரலாற்றுத் துறையும் வானசாஸ்திரமும் கைவந்த கலைகளாகும். இவர் இக் காலத்தவர் மதிக்கும் இலக்கியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையையும் நன்கறிந்து முகஞ் செய்துள்ளார். இக்காலத்து அகராதி போலமைந்த உரிச்சொல் நிகண்டினையும் நன்காராய்ந்து பதித்துள்ளார். இந்நிகண்டு தொண்டை மண்டலத்தப் புலவரான காங்கேயர் என்பார் பதினேழாம் நூற்றாண்டிற் செய்ததாம் என்பர்.

## பாவலர் சரித்திர தீபகம்

சதாசிவம்பிள்ளை அவர்களுக்குப் பெரும் புகழளித்த நூல், புலவர் பெருமக்கள் பற்றி இவர் எழுதிய பாவலர் சரித்திர தீபகம்'' என்னும் நூலாகும். ஆங்கிலத்தில் கலாநிதி யோண்சன் என்பார் ஆங்கிலப் புலவர் தம் வரலாற்றை விமர்சனக் கண் கொண்டு எழுதியமை ஒரு முன்மாதிரியான படைப்பு, அதற்கு முன்னர் எப்பவோ புளூட்டாக் என்னும் இத்தாலியப் புலவர் பெருமகன் தம் காலத்துக்கு முந்திய உரோமானியப் பெரியவர்களைப் பற்றி எழுதிய நூல் அவர் பெயரால் வழங்கியது.

அந்த வழியில் எங்கள் தமிழ்ப் புலவன் புத்தளத்தைச் சேர்ந்த கற்பிட்டிவாசி, சைமன் காசிச்செட்டி என்பார் தமிழ்ப் புலவர்கள் வரலாற்றைத் தமக்குத் தெரிந்த வகையில் எழுதி றிப்ளி அன்ட் ஸ்ற்றோவ் அச்சகத்தில் 15-8-1859ஆம் நாளில் வெளியிட்டார். அவருடைய படைப்பு ஆங்கிலத்தில் அமைந்ததாயினும் அது அக் காலத்தவருக்கும் பெரும் பயனளித்து வந்தது. செட்டியார் தாம் அறிந்த வகையில் தொகுத்துக் கூறிய புலவர்களின் தொகை 197 வரையிலாகும். இன்னும் பிறிது மொழிந்த வகையிலும் அவர் ஐவரைப் பற்றி எழுதியுள்ளார்.

செட்டியாரின் புளூட்டாக் என்னும் நூலைப் படித்துச் சுவைத்த நண்பர் ஒருவர் அதைப் பற்றிச் சதாசிவம்பிள்ளை அவர்களுக்குத் தகவுரை கூறி, அதனை நல்ல தமிழில் மொழிபெயர்க்குமாறு வேண்டினார். பிள்ளை அவர்களும் நன்றெனக் கூறி அந்நூலைக் கருத்தூன்றிப் படித்தார்.

பிள்ளை அவர்கள் வெறும் மொழிபெயர்ப்பாளராக அமைய விருப்பமின்றித் தாமே தரமான நூலைத் தமிழில் தருவதற்கு ஆயத்தமானார். முன்னோர் தந்த நூலைப் பொன்னே போலப் போற்றிய இவர், செட்டியார் தந்த 202 புலவர்களோடு இன்னும் 209 புலவர்களைத் தாமறிந்த வகையில் அரங்கேற்றித் தமது நூலுக்குப் **பாவலர் சரித்திர தீபகம்** எனப் பெயரிட்டு அறிஞர்கள் வியந்து போற்ற அரிய முறையில் அச்சேற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய தமிழ் கூறும் உலகில் தமிழ்நாடு முதலாகவும் ஈழம் இரண்டாவதாகவும் நிலவுகின்றனவாயினும், இவை தாயும் சேயும் எனக் கருதப் பெறுவனவாயினும், ஈழத்துப் புலவர் பரம்பரை தனித்துவம் வாய்ந்தது என்பது என்றோ எப்பவோ கண்ட முடிபு. இத்தகைய முடிபின் வழி அன்று சைமன் காசிச் செட்டியார் ஈழத்தவர் எனப் பதின் மூன்று புலவர்களையே குறிப்பிட்டுள்ளார். ஆனால், சதாசிவம்பிள்ளை அவர்கள் அறுபத் தொன்பது ஈழத்துப் புலவர்களைப் புதிதாகச் சேர்த்து முன்னர் இடம் பெற்ற புலவர்களைப் புதிதாகச் சேர்த்து முன்னர் இடம் பெற்ற புலவர்களோடு இருத்தி ஈழத் திருநாட்டின் இணையில்லாப் புலவர் வரிசையில் எண்பத்திரண்டு பெரியார்களை அறிமுகஞ் செய்துள்ளார். பிள்ளை அவர்களின் பெருமையையும் அறிவாற்றலையும் நல்ல அணுகு முறையில் அறிந்து, பீடுபெற எழுதியுள்ள பெருமை மதிப்புக்குரிய செந்தமிழ்க் கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்களுக்கே உரியதாகும்.

சைமன் காசிச் செட்டியார் காலத்தில் அறியப்படாத பல நூல்கள் சதாசிவம்பிள்ளை காலத்தில் உலாவந்த வரலாற்றையும் அவற்றைப் பிள்ளை அவர்கள் உசாத்துணையாகக் கொண்ட வாய்ப்பினையும் பூலோக சிங்கத்தார் குறிப்பிட்டுள்ளார். இன்னும் கிடைத்தற்கரிய திரவியமாக இருந்த பாவலர் சரித்திர தீபகத்தை எங்கள் கைகளில் தவழ்ந்து பேச வைத்த பெருமை கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்கே உரியதாயினும் இதன் உலாச் சிறப்பை உரைத்த பூலோக சிங்கத்தாரின் பேருழைப்பு பெருமைக்குரியதாகும்.

இனிப் பாவலர் சரித்திர தீபகம் என்னும் அணையா விளக்கைக் கலங்கரை விளக்கமெனப் பிரகாசிக்கச் செய்து, பெரும் புலவர்கள் வரலாறுகள் ஒளிக்கதிர்கள் எனக் காலச் செய்த சதாசிவம்பிள்ளை அவர்களின் பெருமை கூறின் பக்கங்கள் அதிகரிக்கும்.

வட இலங்கையில் எழுந்த முதற் பத்திரிகை உதயதாரகை என்பதில் கிறிஸ்தவர்கள் பெருமைப்படுதல் வேண்டும். அது 1841ஆம் ஆண்டில் கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், விவசாயம், அரசியல், சமயம் முதலியனவோடு சிறிதளவு செய்தித் திரட்டும் சேர்த்து மாதமிருமுறை வெளியிடப் பெற்று வந்தது. அதனைத் திறமையாக நடத்தியவர் ஹென்றி மார்ட்டின் அவர்களை இலங்கையின் முதற் பத்திராதிபர் எனக் கொண்டாடுவர். அவரின் மைந்தனர் ஜேம்ஸ் மார்ட்டின் அவர்கள் சத்திய வேத பாதுகாவலன் என்னும் பத்திரிகையை நடத்தியவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை அவர்களின் பாவலர் சரித்திர தீபகம், ஆங்கிலத்தில் Galaxy of Tamil Poets எனப் பெயர் பெற்றது. இதனைக் கருத்தூன்றிக் கற்று மகிழ்ந்த அஸ்பரி என்பார் எழுதிய பாராட்டுரை ஆங்கிலத்திலேயே உள்ளது.

"I have carefully read Mr. Arnold's Galaxy of Tamil Poets. It supplies a real deficiency in our literature and may help much in increasing a regard for the national authors. Its popular form and interesting style make it very readable. I have no doubt that both in India and Ceylon it will be Universally sought after and read with avidity"

## சிறந்த எழுத்தாளன்

பாவலர் பலரின் வரலாற்றை எழுதிய சதாசிவம்பிள்ளை தாமே தலைசிறந்த எழுத்தாளனாயிருந்ததோடு பாவாணராயும் இருந்தார். அவரின் பாடல்களுள் வெல்லை அந்தாதி பெரும் சிறப்புப் பெற்றதாகும். ஓசை நயஞ் செறிந்த கட்டளைக் கலித்துறைப் பாடல்களான இவ்வெல்லையந்தாதியில் இறை விசுவாசம் முதலிடம் பெறுகிறது.

*"காத்தவனே யிந்தக் காசினி தன்னைமுன்*
*காதலொடு*
*பூத்தவ னேயருள் பூப்பவ னேவெல்லைப்*
*பொற்புரியிற்*
*சாத்திரி மார்வந்து சாட்டாங்க*
*தண்டஞ்செய் தற்பரனே*
*போத்துறை வாருளம் போகா தடியனைப்*
*போற்றுவாயே"*

சைவ வைணவ மதங்களின் கோட்பாடுகள் பல அம்மதத்தவரின் ஏகபோகவுரிமையில்லாமல் உலக மக்களுக்கே உரியனவாயுள்ளன. இறைவன் எங்குமுள்ளவன், அவனே உயிர்களின் புகலிடம், அவனிடம் சரணடைதலே முடிந்த முடிபான முத்திப் பேறு. இவற்றையெல்லாம் சதாசிவம்பிள்ளை அருமையாக அமைத்து அந்தாதி பாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"புகலிட நீயன்றி வேறா ரெனக்கிப்*
*புவனமதன்*
*அகலிட மெங்கணு மாராய்ந் திடிலகி*
*லாண்டமுதற்*
*சகலவி டந்தொறுஞ் சர்வ வியாபக*
*தாரகமாய்ப்*
*புகல விடமிருந் தும்வெல்லை தோற்றும்*
*புராதனனே"*

மீளா அடிமை என்று ஆன்மாக்கள் ஆன்ம நாயகனான இறைவனை அன்றுதொட்டு வணங்கும் வழக்கம் உண்டு. மொகஞ்சதாரோ வாழ்விலும் பெரியவர் ஒருவரைச் சூழ உயிரினங்கள் பொம்மை வடிவில் இருக்கக் கண்டனர். ஆன்ம நாயகன் பசுபதியாவர். இந்தக் கோட்பாட்டையும் சதாசிவம்பிள்ளை மறக்கவில்லை.

*"இன்றுதொட் டேநின் கயிங்கரி யந்தனை*
*யின்பமுடன்*
*நன்றுகொண் டேனடி மைமுறி நிற்றர*
*நாடிவந்தேன்*
*தொன்றொரு நாற்பது நாளுப வாசஞ்செய்*
*தொல்பரனே*
*சென்றுவெல் லைப்பதி வாழ்திரு ஞானத்*
*தினகரனே"*

சுந்தரமூர்த்தி நாயனார் புராணத்தில் இறைவன் நாயனாரைத் தடுத்தாட் கொள்வதற்கு ஆவண வோலை காட்டியருளினார் என்பது எல்லோருக்கும் தெரிந்த செய்தி. இங்கே புறமதத்தவராயிருந்தபோதிலும் சதாசிவம்பிள்ளை அவர்கள் தமது அந்தாதிப் பிரபந்தத்தில் இறைவனுக்கு அடிமைத்திறம் பாடும்போது ஆவணவோலை பற்றிப் பாடுகிறார்.

*"ஆவண வோலை யுனக்குத்தந் தேனடி*
*யானுமலை*
*ஆவண மென்றனை யாண்டுகொள் வாயிங்கு*
*மங்குமொன்றி*
*ஆவண மல்கிடு வெல்லைப் பதியி*
*லணியணியாய்*
*ஆவண வுங்கொட்டி லுறபவ னேயென்னை*
*யாள்பவனே"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாசிவம்பிள்ளை அவர்கள் உதயதாரகையின் பத்திராதிபராவதற்கு முன் அதனை நடத்தியவர் சுதுமலை கரோல் விசுவநாதபிள்ளை அவர்களாவர். விசுவநாதபிள்ளை 1857ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்துப் பட்டம் பெறச் சென்றபோது, பத்திராதிபர் பொறுப்பை ஏற்ற சதாசிவம்பிள்ளை அதனை நீண்ட காலம் நடத்தி வந்தார்.

உதயதாரகை 1841ஆம் ஆண்டு முதல் மாதமிருமுறை செந்தமிழ் ஆங்கில வெளியீடாகவே உதயமானது. இதனைச் சுதேசிகளாய ஹென்றி மார்ட்டின், செத்பேசன் ஆகிய இருவரும் இணையாக நடத்தி வந்தார்கள். மாட்டின் அவர்களின் தலையங்கங்கள் அருமையாக அமைந்திருந்தன என்பர். அன்றி அதில் பஞ்ச தந்திரக் கதைகளும், பரமார்த்தகுரு கதைகளும் ஒழுங்காக வெளிவந்துள்ளன. மார்ட்டின் அவர்கள் உதயதாரகையின் முதல் தொகுதியோடு தமது பதவியை விட்டு விலகினார் என்பர்.

அமெரிக்கப் பாதிரிமார் பலர் தமிழ் பயில்வதற்கு உதவி செய்த சதாசிவம்பிள்ளை அவர்களின் சேவையை அக்காலத்து அறிக்கைகள் வெகுவாகப் புகழ்ந்தன. செந்தமிழ் வளர்த்த செல்வரும் செம்மலுமாய இவரை, வைமன் கதிரைவேற்பிள்ளை அவர்கள் பெரிதும் அபிமானித்து அன்பு ததும்ப ''என்னாசை நண்பன் சதாசிவ நாவலன்'' என்று பாடிப் புகழ்ந்துள்ளார். இவர் உத்தம நண்பராயும் பரோபகாரியாயும் இருந்தவர் என்ப.

## வழுவில்லாத அகராதி

*அகராதிப் பணிக்குப் பெயர் போன யாழ்ப்பாணத்தாருள் வழுவில்லாத அகராதி ஒன்றை முதலில் வெளியிட்ட பெருமை புலோலியூர் சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களையே சாரும். வழுவில்லாமல் பேசவும் எழுதவும் வல்ல, வாய்ச் சாதுரியமுள்ள அவர் வழுக் களைவதிலும் முன்னிலையில் முதலில் நின்றவர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹென்றி மாட்டின்

(கிறிஸ்தோபர்)

(1811 - 1861)

## இளமைக் காலம்

**சை**வ சமய சந்தான குரவர் வரிசையில் வந்த அருணந்தி சிவாசாரியாரைச் சகலாகம பண்டிதர் என்றும் வழங்கினர். சென்ற நூற்றாண்டில் கிறிஸ்தவ சமய போதகருள் ஹென்றி மாட்டின் என்னும் பெரியவரைச் சகலாகம பண்டிதர் எனப் போற்றினாலும் அமையும். இந்த மகானுபாவர் இளமையிலேயே குறும்புத்தனமும் விவேகமும் உள்ளவராயிருந்தமையோடு, கல்வி கற்றபோது, எதனையும் ஒரு முறையில் கற்று உளத்தமைத்துக் கொண்ட ஏகசந்தக்கிராகியாயும் இருந்தார் என்ப.

மாட்டின் அவர்கள் தம் அறிவாற்றலை நல்ல வழியில் நெறிப்படுத்தி ஆசிரியராயும், போதகராயும், பத்திராதிபராயும், படிப்பாளியாயும், புலவராயும், கலைஞராயும், பொறியியலறிந்த வராயும் இருந்தார் என்ப.

இவரைப் பெற்றோர், உற்றோர், அயலவர், ஆசிரியர்கள் நன்கறிந்தவாறே அரசினரும் அரசாங்க அதிபர், தேசாதிபதி ஆகியோரும் அறிந்து கௌரவித்து மதித்தனர் என்ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்துச் சுண்டிக்குழி என்னும் இடத்தில் நெருக்கமாயும் பெருக்கமாயும் வாழ்ந்த கிறிஸ்தவ குடும்பத்திலே 1811ஆம் ஆண்டில் தோன்றிய குழந்தைக்கு உரிய வேளையில் தேவாலயத்தில் நடைபெற்ற மதச் சடங்கின்போது, குரவரிட்ட பெயர் கிறிஸ்தோபர் என்பர்.

கிறிஸ்தோபர் ஏழு வயது தொடக்கம் அயலில் வாழ்ந்த பெரியவர்களிடம் உரிய முறையில் ஊக்கத்தோடு கற்று வந்தபோது, இவருடைய கல்வித் தரத்தை ஆசிரியர்கள் வெகுவாக மெச்சக் கேட்ட தந்தையார், இவரை இவருடைய மேற்படிப்புக்காகத் தெல்லிப்பழைக்கு அழைத்துச் சென்றனர்.

அக் காலத்தில் தெல்லிப்பழையில் அமெரிக்க பண்டிதராய பூர் என்பார் அதிபராயிருந்தார். தெல்லிப்பழை, மானிப்பாய், உடுவில், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு முதலிய இடங்களிலும் கிறிஸ்தவ பாடசாலைகள் நிலவின. இவற்றுள் தெல்லிப்பழையில் நிலவிய பாடசாலைக்கு நல்ல புகழ் பரவியிருந்தது.

அதிபர் பூர் அவர்களைக் காணச் சென்ற கிறிஸ்தோபரின் தந்தையார் தம் மைந்தனுக்கு ஓர் இடம் கேட்டு நின்றபோது, அதிபர் அந்நாளில் குறிக்கப்பட்ட தொகையினருக்கு மேல் மாணாக்கருக்கு அங்கே இடமில்லை என்று கையை விரித்தார்.

இது கேட்டுத் தந்தையார் மனமுடைந்து மீள்வதற்கு முயன்றபோது, இளைஞராய கிறிஸ்தோபர், ''அப்பா! இன்னும் கொஞ்ச நேரம் இங்கே தங்கி நின்று இன்னுமொரு முறை கேட்டுப் பார்ப்போம்'' என்று இரக்கத்தோடு விண்ணப்பிக்கத் தந்தையும் உடன்பட்டு, இருவரும் அங்கே தாமதித்து நின்றார்கள்.

இவ்வாறாக மத்தியானமாகி, பொழுது சாயும் வேளையில் இளைஞன் பெரியவரான பூர் அவர்களைக் காண நேர்ந்ததும், அவரிடம் இதமாக, ''ஐயா நூறு ஆடுகள் மேய்கின்ற நிலத்திலும் கிடக்கின்ற பட்டியிலும் ஓர் ஆட்டுக் குட்டிக்கு இடம் இருக்காதே?'' என்று கேட்டதும், பெரியவரான பூர் இளைஞனின் விவேகத்தை மெச்சி இவனை வாரியணைத்துப் படிக்க வைத்தார் என்ப.

இவ்வாறாகப் பதினொராம் வயதில் கிறிஸ்தோபர் தெல்லிப் பழையில் படித்து வந்த காலத்தில் அமெரிக்க நாட்டுப் பெரியார்கள் சிலர் தம் பணவுதவி கொண்டு இலங்கையிலே யாழ்ப்பாணத்திலே நல்லதொரு இடத்திலே பல்கலைக்கழகம் போன்றதொரு சாஸ்திர சாலையை நிறுவுவதற்கு உபகரிப்பாராயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டை செமினரி

சாஸ்திரசாலை நிறுவுவதற்குச் சாதகமான இடம் வட்டுக் கோட்டை எனக் கண்ட பேராசிரியர் பூர் முதலானோர், அங்கே, 1823 ஆம் ஆண்டில் செமினரி நிறுவுவாராயினர். அங்கே படிப்பதற்குத் தகுதியான மாணாக்கர்களைத் தெரிந்தபோது, பூர் அவர்கள் தமது அபிமானத்துக்காளாய கிறிஸ்தோபருக்கும் ஓரிடம் கொடுத்து, அவருடைய பெயரை மாற்றி, ஹென்றி மாட்டின் என வழங்கினார்.

செமினரியென்னும் சாத்திரசாலையின் கல்வித் தரத்தை மதிப்பிட்ட இலங்கை அரசின் மேலதிகாரிகளுள் ஒருவராய யேம்ஸ் எமெர்சன் ரெனன்ற் என்பார் அது ஆங்கிலேயருடைய பல்கலைக் கழகத்தின் தரத்தோடு அடைவுடையது என்று பாராட்டியுள்ளார்.

பல்கலைக்கழகமனைய படிப்பகத்திலே அந்த நாளில் படிப்பதற்குரிய பாடநெறியில் ஆங்கிலம் முதலாய மொழிகளும், அங்காதிபம் முதலாய விஞ்ஞானப் பாடங்களும், இன்னும் கலைப் பாட வகைகளும், தத்துவம், சமயம் முதலானவையும் கணித வகைகளும் இடம் பெற்றிருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாகக் கற்றுவல்ல பேராசிரியர்கள் மத்தியில் அவர்களோடு உடனுறைந்து மாணாக்கர்கள் கற்கும் வசதி கிடைத்தமை பெறற்கரிய பேறாக இருந்தது. பிள்ளைகளை மனிதராக்குவதற்கு அது சிறந்த வழியுமா யிருந்தது. இங்ஙனமாக ஹென்றி மாட்டின் அவர்கள் அங்கே கற்று வந்தமையைக் கூறும் பாடல் ஒன்றின் சில அடிகளை நாம் அறிந்தின்புறலாம்.

*"ஆங்கிலங் கணிதம் துங்க சோதிடங்கள்*
*அங்காதிபாதம் மங்காதபூவகம்*
*தத்துவமுதலா மெத்தகைக்கலையும்*
*ஐயந்திரிபறக் கைவரக்கண்டவன்*
*விந்தைத் தமிழொடு ஐந்திலங்கணங்களும்*
*சந்தமிகுந்த சமஸ்கிருதமுதலாம்*
*வடமொழி தென்மொழி திடமுறக்கற்றனன்*
*கைத்தொழில் சித்திர மெத்தவுங்கற்றவன்*
*சிற்பங்கம்மியம் கற்றச்சுவேலை*
*தையல்வேலை துய்யநற்சாயம்*
*ஊட்டிவேலையும் நாட்டமாய்க் கற்றவன்*
*கட்டுவேலை திட்டமாய்ப் பயின்றவன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விளையாட்டிலுங் களையாத்தீரன்*
*தேகசவுரியம் வாகாயுடையான்*
*செப்படிவித்தையும், ஒப்பவே செய்வான்*
*சர்வபண்டித சாகரமாமிவர்"*

## முதன்மைச் சித்தியும் ஆசிரியர் பணியும்

இவ்வாறாகச் சகலாகம சாத்திர நிபுணன் என மதிக்கப் பெற்ற ஹென்றி மாட்டின், 1832ஆம் ஆண்டு அங்கே நடைபெற்ற இறுதித் தேர்வில் முதன்மைச் சித்தி பெற்றுப் பேராசிரியர்களை மகிழ்வித்து அங்கே ஆசிரியர் வேலை பெற்றார். அதனைத் தொடர்ந்து போதகர்க்கான பயிற்சியும் பெற்றுப் போதகர் வேலையும் பார்த்து, எழுத்துத் துறையில் ஆர்வமிக்கவராய்க் கட்டுரைகள் பல எழுதிய வாறே உதயதாரகை என்னும் பத்திரிகையையும் நடத்தி வந்தார்.

தமது முப்பத்திரண்டாம் வயதில் குத்தகைக்காரன் எனப் பெயர் பெற்ற சந்தியாபிள்ளை என்பாரின் மகள் மேரி என்பாரை மணந்து இல்லறமேற்று நல்ல தந்தையாயினார். இவர் தமது ஓய்வு நேரங்களில் நுணுக்கமான வேலைகள் பழகியதோடு கடிகாரந் திருத்தவும், புகைப்படக்கருவி திருத்தவும் பழகியிருந்தார். இத்துறையில் முதன் முதலில் தலைப்பட்டனர். இவரே என்பர். இவருடைய ஆற்றலை அறிந்த தேசாதிபதி சேர். வில்மட் ஹோட்டன் 7-1-1833ஆம் நாள் இவருக்கொரு பாராட்டுக் கடிதம் எழுதியதும் உண்டு. இலங்கையருள் இவரே புகைப்படக் கருவியை இயக்கவும் திருத்தவும் முதலில் அறிந்தவர் என்ப.

## பத்திராதிபர் பணி

உதயதாரகை என்னும் பத்திரிகையின் ஆசிரியர் வேலையைப் பொறுப்பேற்ற மாட்டின் அவர்கள் அதனை அக் கால வழக்கப்படி மாதமிருமுறை ஆங்கிலம், தமிழ் என்னும் இரு மொழிகளிலும் அருமையாக வெளியிட்டு வந்தார். இதனால் இவரே முதற் பத்திராதிபர் என்னும் பெருமையையும் பெற்றார். இவர் பத்திரிகைத் துறையில் நல்ல அனுபவமுடையவராய்; கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், விவசாயம், அரசியல், சமயம் முதலிய துறைகள் சம்பந்தமாக எழுதியதோடு; சுருக்கமான செய்தித்திரட்டு என்னும் ஒரு பகுதியும் வெளியிட்டு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு இயல்பாகவே நாட்டுப்புறப் பாடல்களில் அதிக நாட்டம் இருந்தது. அவற்றையெல்லாம் கேட்டும் படித்தும் மனத்தகத்து அமைதி கண்டதோடு, நாட்டு நிகழ்ச்சிகளை நன்றாகக் கவனித்து ஒப்பாரிப் பாடல்களில் வடித்துப் பாடியும் மக்களைத் தமிழார்வம் கொள்ளப் பழக்கினார்.

இவருடைய மொழிப் புலமையை அறிந்த அரசாங்கம் இவரை நீதி மன்றங்களில் மொழி பெயர்ப்பு வேலைக்கு இட்டுப் போனதும் உண்டு. இவர் பாடிய ஒப்பாரிப் பாடல்களுள் இயேசு சிலுவையில் அறையுண்டமை கருதி இரங்கிப் பாடியவை மிக வுருக்கமானவை என்ப.

## பன்முக வேலைகள்

இங்ஙனமாகப் பத்திராதிபர் பணியோடு பன்முகப் பணிகளும் செய்து வந்த மாட்டின் அவர்கள், காளிதாசரின் சகுந்தல காவியத்தைத் தமிழில் நாடகமாகவும் தயாரித்துள்ளார். இதனால் இவர் இதனை மறைமலையடிகளாருக்கு முன்னதாகச் செய்துள்ளார் எனத் துணிந்து கூறலாம். இன்னும் இவர் எஸ்தேர் விலாசம் என்னும் நாடகத்தையும் தயாரித்துள்ளார் என்ப.

இவர் லியனாடோ டாவின்சி என்னும் அபூர்வ கலைஞன் போலப் பல சித்திரங்களைத் தீட்டியதும் உண்டு. இன்னும் கம்மிய வேலை, கற்றச்சு வேலை செய்தமையோடு, தாமே ஒரு நீரிறைக்கும் யந்திரத்தையும் உள்நாட்டு மூலப் பொருள்கள் கொண்டு செய்து இயக்கினார் என்பர்.

இவர் காலத்தில் இவர் தம் அயலிலும் சுற்றுப் புறச் சூழலிலும் கொள்ளை நோய் பரவியபோது இவர் நோயாளிகளுக்குப் பெருமளவில் பால் வாங்கிப் பருக்கி வந்தார். இதனை வாய்ப்பாகக் கொண்ட சிலர் பாலோடு மேலதிக நீரைக் கலந்தமை கண்டு இவர் ஏதோ ஒரு யந்திரங் கொண்டு பாலையும் நீரையும் பிரித்துக் காட்டி விற்பனையாளரை வெட்க வைத்தார் என்பர்.

மாட்டின் அவர்களுக்குப் பெரும் புகழோடு பிரித்தானிய இராசாங்க சபையின் கௌரவ அங்கத்தவர் பதவியும் கிடைக்கச் செய்த படைப்பு, இவர் செய்த வியத்தகு பூகோள உருண்டைகளாகும். இவற்றை இவர் தமது இருபத்து நான்காம் வயதில் செய்திருந்தார் என்ப.

யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபர்களாயிருந்த ஆங்கிலேயருள் மிக நீண்ட காலமாய் இங்கிருந்த டைக் என்பாரை எம்மவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்து இராசா என மதித்ததும் உண்டு. டைக் மன்னர் எனவே புலவர்கள் அவரை மதித்துப் போற்றினர். அவர் மாட்டின்மீது கொண்ட மதிப்பினால் இவருக்கு உப்புத் திணைக்களத்துக் குத்தகைக்காரன் வேலையும் கொடுத்ததுண்டு. இவர் தம் வேலையோடு அரசினர் மரக்காலைக்கு வந்த சகல மரங்களையும் குறிப்பெழுதிக் கொடுத்ததும் உண்டு.

அக் காலத்தில் நம்மவராய ஆண்களும் பெரிய குடுமி முடிந்து வந்தார்கள். சிலர் தலையின் முன்பக்கத்தை மழித்துச் சிறிய பின் குடுமி வைத்திருந்தனர். மாட்டின் அவர்கள் தம்மயலவர் பலரை அழைத்து இதமாகப் பேசி, ஆங்கிலேயர் போலக் கிறில் விடும் வழக்கத்தைப் பரப்பினார். தாமே சேட், பனியன் முதலாய சட்டைகள் தைக்கவும் பழகிப் பலருக்கும் அக் கலையைப் பழக்கினார். குடுமித் தலைகளைக் குறப் தலைகளாக்கிய பணியும் மாட்டின் பணியாயிருந்தது.

## மக்கட் பேறு

மாட்டின் அவர்களுக்குப் பதினான்கு பிள்ளைகள் ஆண்களும் பெண்களுமாகப் பிறந்தர் என்றும், அவர்களுள் எழுவர் இளமையிலேயே மறைந்து போயினர் எனறும், எழுவர் வாழ்ந்து பணிபுரிந்தனர் என்றும் கூறுப. வாழ்ந்த எழுவருள் இருவர் ஆண்கள் என்றும் அவர்களுள் யேம்ஸ் மாட்டின் என்பவர் ஒருவர் என்றும் கூறுப.

யேம்ஸ் மாட்டின் தந்தையாரைப் போல எழுத்தாளராயும் பாடசாலை ஆசிரியராயும், பத்திராதிபராயும் புகழ் பெற்றார். தக்க அறிவுடையவராய் இவர் பெரிய கோயில் பள்ளி என வழங்கிய சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராயிருந்தவாறே சிலகாலம் வித்தியாதரிசியாகவும் கடமையாற்றியவர். கண்டனங்கள் எழுதுவதில் புகழ் பெற்ற இவர், ஆங்கிலம் வல்லவராய், அக் காலத்தில் பெயர் படைத்த நீதிபதி வைமன் கதிரைவேற்பிள்ளை என்னும் தமிழறிஞரின் வரலாற்றையும் நல்ல முறையில் எழுதியவராவர். கதிரைவேற்பிள்ளை அவர்களின் வரலாறும் காலமும் என்னும் அந்த நூல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பழைய செய்திகள் பலவற்றைப் பரவலாகத் தருகின்றது. இன்னும் கத்தோலிக்கப் பாதுகாவலன் என்னும் பத்திரிகையின் ஆங்கிலப் பகுதியையும் பலகாலம் எழுதி வெளியிட்டு வந்தவராவர்.

இளைய மைந்தனாய யோண் மாட்டின் என்பவரும் பன்மொழிப் புலவராய், பல துறைகளறிந்தவராய் பத்திராதிபராயும் இருந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தங்கள் கோயில் வரலாற்றைத் தமிழில் எழுதிக் கத்தோலிக்க மக்களின் பாராட்டையும் மதிப்பையும் பெற்றவராவர். இன்னும் இவர் செய்த செயற்கரிய படைப்பு யாழ்ப்பாண வரலாற்றுக் குறிப்புகள் என்னும் பெருநூலாகும்.

முந்நூற்றைம்பது பக்கங்களுக்கும் அதிகமாக நீண்ட இப் புத்தகத்தில் யாழ்ப்பாணத்துப் பெருமக்கள் வரலாற்றோடு, போத்துக்கேயர் வருகை, ஆங்கிலேயர் வருகை முதலிய சந்தர்ப்பங்களை எழுதியதோடு பதினாறாம் நூற்றாண்டு முதலாக ஆண்டுதோறும் நிகழ்ந்த சம்பவங்களை மாதந் திகதிகளிட்டு அட்டவணைப்படுத்தி எழுதியுள்ளார். இந்நூல் 1505 முதல் 1920 வரையிலான நிகழ்ச்சிகளைத் தருகிறது. இதில் செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் பற்றியும், சைவம் வளர்த்த சான்றோர் பற்றியும் செய்திகள் கிடைப்பதோடு, யாழ்ப்பாணத்தில் காலந்தோறும் நிறுவப்பெற்ற கல்விக் கூடங்கள், சமயத் தாபனங்கள் முதலானவற்றின் வரலாறுகளும் உள்ளன. இந் நூலை அரியாலைப் பெரியார்களாய காசிப்பிள்ளை அருளம்பலம் அவர்கள், ஆறுமுகம் கனகரத்தினம் அவர்கள், வடமாநிலக் கல்வி அதிகாரி லீம்பிறகன் அவர்கள், கௌரவ அ. சபாபதி அவர்கள், சென் யோன்ஸ் கல்லூரி அதிபர் பீற்றோ அவர்கள், இந்துக் கல்லூரி அதிபர் நவின்ஸ் செல்லத்துரை அவர்கள் முதலானோர் சிறப்புப் பாயிரமனைய பாராட்டுரைகள் வழங்கியுள்ளார்கள். இந் நூலாசிரியர் குடும்பத்துப் பெருமைகளிலொன்று இவர்தம் புதல்வியருள் ஒருத்தி மேரி என்பாள் கன்னியர் மடத்தில் பயின்று முதன் முதலாக இலண்டன் மற்றிகுலேசன் பரீட்சையில் சித்தி பெற்றனள் என்பதாகும்.

## ஹென்றி மாட்டின் அவர்களின் இறுதி நாள்களும் மறைவும்

மாட்டின் அவர்களுக்கு ஐம்பதாம் ஆண்டளவில் துன்பகரமான சம்பவங்கள் சம்பவித்தன. உப்புக் குத்தகையாளராயிருந்த காலத்தில் அங்கே உற்பத்திக் குறைவு கண்ட அரசாங்க அதிபர் டைக் இவரைத் தண்டிக்கு முகமாகக் குறைவை நிறைவு செய்யுமாறு பணித்தபோது, இவர் தேசாதிபதி மெக்காதி அவர்களிடம் விண்ணப்பித்தார். அவ்விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப் பெறாமையால் இவர் சென்னைத் தேசாதிபதி மூலம் மேலிடத்துக்கு விண்ணப்பித்தபின் மீண்ட காலத்தில் காய்ச்சல் உண்டாகி மறைந்தார் என்ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய மறைவை யொட்டிய கிரியைகள் நிகழ்ந்த வேளையில் இங்கிலாந்திலிருந்து சாதகமான தீர்ப்புக் கிடைத்தது. அது டைக் அவர்கள் இவரை வேலையினின்றும் நீக்கியமை தவறு என்றும், இவரை மேற்சொன்ன வேலையில் மீள அமர்த்த வேண்டும் என்றும், வேலையிழந்திருந்த காலத்து முழு வேதனமும் இவருக்கு வழங்க வேண்டும் என்பதுமாகும்.

இவ்வாறாக டைக் அவர்கள் தாம் செய்த பிழைக்கு வருந்தி, மாட்டின் அவர்களின் பெயர் என்றும் மக்கள் மனத்தில் நிலவுமாறு செய்ய நினைத்து இவர் வாழ்ந்த இடத்தில் மாட்டின் வீதியை அமைத்துப் பெயரிட்டு வைத்தார்.

## நிகண்டும் அகராதியும்

*பத்தொன்பதாம் நூற்றாண்டில் செந்தமிழ் வளர்த்த செம்மல்களுட் சிலர் செந்தமிழிலக்கியஞ் செய்தமையோடு, செந்தமிழிலக்கணத்தோடு அடைவுடைய நிகண்டு, அகராதி என்பனவும் செய்துள்ளார்கள்.*

*யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் என்பார் 1874 ஆம் ஆண்டில் வெளியிட்ட சிந்தாமணி நிகண்டு புகழ்பெற்று நிலவியதும் உண்டு.*

*யாழ்ப்பாண அகராதி எனப் பெயர் பெற்ற பேரகராதி ஒன்றைத் தயாரித்த சந்திரசேகரம் என்னும் பண்டிதர் 58500 சொற்களை அளந்துள்ளார். பார்க்கப் போனால் முந்திய சதுரகராதி காற்கொத்தானால், யாழ்ப்பாண அகராதி முழுக்கொத்தாய் நான்கு மடங்கு பெரிதாயுள்ளது. இவ்வகராதி 1842ஆம் ஆண்டிலே வெளிவந்து பெரும் புகழ் பெற்றுலாவியது. இதனைத் தமிழ் கூறும் நல்லுலகம் பேரகராதி என்றும் விரிவகராதி என்றும் வியந்து போற்றி வந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம்பியார் விசுவநாதர்

## இளமைக் காலம்

**செ**ன்ற நூற்றாண்டிலே செந்தமிழ் வளர்த்த செம்மல்களுள் விசுவநாதர் எனப் பெயர் பெற்றவர்கள் பலரிருந்தார்கள். சுதுமலை விசுவநாதர், மல்லாகம் விசுவநாதர் என்பாரின் வேறாய்க் கட்டுவனூர்க் கவிராயர் எனப்பெற்ற ஒருவரிருந்தார். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் தோன்றியவராதல் வேண்டும்.

கட்டுவனூர்க் கவிராயர் கட்டுவனூர் விசுவநாதர் என்றும், சட்டம்பியார் விசுவநாதர் என்றும், நாகக் கவி என்றும், விசுவப்புலவர் என்றும் பலவாறாக வழங்கியவர். மயிலிட்டியை அடுத்த கட்டுவனூரில் உக்குடை என்னும் இடத்தில் வாழ்ந்த காசிநாதர் என்பாரின் காதல் மைந்தனாகத் தோன்றிய இவர், இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தார் என்ப.

பெரும்புலவர் என்று பெயரெடுத்து வாழ்ந்த காசிநாதரை எல்லோரும் காசிப் புலவர் எனவே வழங்கினர். காசிப்புலவர் தம் மைந்தனுக்கு இளமையிலேயே பாடஞ் சொல்லி வந்த காலத்தில், விசுவநாதர் தம் தந்தையார் பாடிய பாடல்கள் பலவற்றை நிறைவு செய்தும் வந்தார் என்ப. இவ்வழக்கம் முன்னர்ச் சின்னத்தம்பிப் புலவர் தம் தந்தையார் வில்வராய முதலியாரின் பாடல்களை நிறைவு செய்து வந்த பாரம்பரியத்தின் பாற்படுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிப் புலவர் என வழங்கிய தந்தையார் சட்டம்பியார் எனப் பெயர் பெற்றமையால் அவர் திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்தியவராதல் வேண்டும். அவருடைய குடும்பத்தில் மைந்தர் மூவரும் சட்டம்பியார் எனவே வழங்கினராதலில் அவர்களும் படிப்பாற்றல் மிக்கவராய் இருந்தார்கள் போலும். சட்டம்பியார் விசுவர், சட்டம்பியார் பூதர், சட்டம்பியார் சின்னர் என்பன ஊரில் வழங்கிய பெயர்களாகும். இவர்களுள் மூத்தவராய விசுவப் புலவர் வரகவி எனவும் பெயர் பெற்றவராவர்.

## புலமை மிக்க ஆசிரியர்

விசுவநாதருக்குத் தந்தையார் வழிவந்த நிலபுலங்கள் நிறையவிருந்தன. மயிலிட்டியிலும் கட்டுவனிலும் அடுத்தவூரான வர்த்தலைவிளானிரும் மருதஞ் சார்ந்த நிலங்கள் நிறையவிருந்தன. அங்கெல்லாம் குளங்களும் கோயில்களும் பொலிந்து விளங்கின. அங்கே வனப்புலம் என்றும் அலவத்தை என்றும் பெயர் பெற்ற வயல்கள் விளைவுப் பெருக்கத்தால் பொலிவு பெற்றிருந்தன.

குளத்தங்கரை நாகரிகத்தால் மேம்பட்ட கட்டுவனூரில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கோயில்கள் மக்களுக்கு வாழ்வளித்தன. கம்மிற்பதி, காண்டைப்பதி என்றெல்லாம் கோயில் களாற் பெயர்பெற்ற ஊர்களில்; பிள்ளையார் கோயில், அம்மன் கோயில், ஐயனார் கோயில், வைரவர் கோயில், வீரபத்திரர் கோயில் எனப் பல கோயில்கள் இருந்தன.

சைவாசார சீலம்மிக்க குடும்பத்தில் தோன்றிய விசுவப் புலவர் தமது புலமையைப் பக்தி வழியில் திருப்பிப் பாடல்கள் பாடி வழிபாடு செய்வராயினர். மக்களுக்கு வாழ்வு வேண்டியும் வளம் வேண்டியும், விளைவு வேண்டியும், நோய் நீக்கம், மனக்கவலை நீக்கம் கருதியும் இவர் அவர்களுக்காக இரங்கிப் பாடுவதும் வழக்கமாயிருந்தது. இக் கோயில்களில் தனிமையாக இருந்து பல பாடல்களை இவர் இயற்றிப் பாடிவந்தார் என்பர்.

தம்மூர்ப் பிள்ளைகளுக்கும் அயல் ஊர்களான வசாவிளான், பலாலி முதலாய ஊர்களில் வாழ்ந்த நண்பர்களின் பிள்ளைகளுக்கும் இவர் பாடஞ் சொல்லி வந்தமையோடு, தாம் கற்ற வித்தையையும் ஒழிப்பு மறைப்பில்லாமல் எல்லோருமறியச் சொல்லியும் வந்தார், இவருக்கு நாடகக் கலையும், மிருதங்க வாத்தியக் கலையும் நன்றாகக் கைவந்திருந்தன. இவற்றையெல்லாம் மற்றவருக்குச் சொல்லி வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர், இயற்றமிழொடு, இசைத் தமிழும், நாடகத் தமிழும் வளர்த்தவராயினார். அக் காலத்துப் புலவர்கள் பலர் முத்தமிழ் வல்லவர்களாகவே இருந்தனர்.

## கலைகளறிந்த கவிராயர்

விசுவநாதர் முத்தமிழ்த் திறமையோடு அருங்கலைவாணராயு மிருந்தவர். அவர் வைத்தியம். சோதிடம், மாந்திரிகம் முதலியவற்றை முறையாயறிந்து மக்களுக்கு உதவி வந்தவர். விஷ வைத்தியத்தில் இவர் திறமை பெற்றிருந்தமை பலருக்கும் பெருமளவில் நன்மையாயிற்று.

எல்லாவற்றுக்கும் மேலாக இவர் தமது பிரதேசத்துக் கோயில்களில் காலந்தோறும் நித்திய நைமித்திய பூசைகள் விழாக்கள் ஒழுங்காக நடைபெறுவதற்கு ஊரவர்களுக்கு ஆலோசனையும் உதவியும் புரிந்து வந்தமையோடு, ஆங்காங்கேயுள்ள கதிரையாண்டவர் மடம், காத்தார் புண்ணிய மடம் ஆகிய இடங்களில் கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், பெரிய புராணம் படிக்கச் செய்து, நாயன்மார் குருபூசைகளையும் நல்ல முறையில் செய்வித்துக் கிராம மக்களிடையே செந்தமிழையும் சைவசமயத்தையும் செவ்வனே வளர்த்து வந்தார். இவருடைய பற்றற்ற பெரும்பணியைக் கண்ணுற்ற பெரியவர்கள் பொருளுதவி செய்தபோது வயற்காரர் தமது விளைவில் ஒரு பகுதியைக் கோயில்களுக்கும் மடங்களுக்கும் வரையாது வழங்கி வந்தார்கள். முருக உபாசகரான விசுவநாதர் தமக்கும் ஊருக்கும் வில்லங்கங்கள் நேரிட்ட வேளையில் சத்துரு சங்கார வேல் மீது பாடல்கள் பாடி இடர்நீங்க மகிழ்ந்திருந்தார் என்ப.

## தனிப்பாடல் திரட்டு

இவர் காலந்தோறும் தலங்கள் தோறும் பாடிய பாடல்கள் சிலவற்றை வயாவிளான் நியாயதுரந்தார் இராசநாயகம் அவர்கள் தேடித் தொகுத்து வெளியிட உதவி வந்துள்ளார். அவற்றுள் மருதடி விநாயகர் துதி, வீரபத்திர நாடகக் கவிகள், கற்பக விநாயகர் துதி, கதிரைப் பதிகம், வள்ளியம்மானை, சுப்பிரமணியர் ஊஞ்சற் பதிகம், வீரபத்திரர் ஊஞ்சற் பதிகம், அந்தாதிமாலை, ஞான வைரவர் துதி, வீரபத்திரர் துதி முதலியவற்றுள் சில கவிகள் இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கிடைத்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதடி விநாயகர் துதி

*"ஆரணப் பொருளுநீ அகரமுத லாய்நின்ற*
*ஐம்பத்தோ ரக்கரமுநீ*
*அமலநீ விமலநீ அரியயன் முதற்றேவ*
*ரனைவர்க்கு முதலானநீ*
*வாரணப் பரஞான வான னத்திறையுநீ*
*வண்மையுருநீ யென்மனம்*
*வந்திப்பி னன்றியேனை நிந்திப்பர் யாவரும்*
*வழியடிமை யருளுமையா*
*தாரணி தனிற்சூர சங்கார வேலன்*
*தனக்காய் வனக்குறப்பெண்*
*தன்னைப் பயங்காட்டி மீண்டுறவு கூட்டியருள்*
*தற்பரா பரமூர்த்தியே*
*காரணக் கடவுளே மயிலைசேர் வர்த்தலைக்*
*கம்மிலம் பதிவாசனே*
*கருதடியர் மிடிகளையு மருதடியி லைங்கரக்*
*கற்பகப் பிள்ளையாரே."*

இனி மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய சங்க வெள்ளி விழாப் பொலிவு கண்ட வியத்தகு மலரில் தொகுக்கப் பெற்ற பாடல்களும் ஒரு சில படித்தின்புற வாய்த்துள்ளன. இன்னும் பண்டிதர் முத்துக்குமாரு என்பாரும் அரிதின் முயன்று இவர் பாடல்களை வெளியிட்டுமுள்ளார்.

## நாட்டுப் பற்று

தமிழ்மொழிப் பற்றுள்ளம் கொண்டுள்ள விசுவநாதர், சின்னத்தம்பிப் புலவர் தமது பள்ளுப் பாடல்களில் எமது உள்ளங்களைத் துள்ளவைத்துப் பாடிய பான்மையில் தமது நாட்டுப் பற்றைக் காட்டு முகத்தால் நாட்டுச் சிறப்புப் பாடியுள்ளார். துள்ளிக் குதித்துக் கும்மியடித்துப் பாடுவோமாக.

*"சீர னைத்தும்பொ ருந்திய நாடு*
*சிவனை யர்ச்சிக்கும் தெய்விக நாடு*
*வீர பத்திர சுவாமியை யென்றும்*
*வியந்து வாழுநன் னாடெங்கள் நாடே.*

*கந்த சுவாமி வரந்தரு நாடவர்*
*காவி யத்தின் சுவைபகர் நாடு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விந்தை சேர்வீர பத்திர நாமம்*
*வியந்து வாழுநன் நாடெங்கள் நாடே.*

*கம்ப யானை முகத்தவ னாடு*
*கவின்க ரண்டைப் புரத்தவ னாடு*
*நம்பு மன்பர்க் கருள்செய் வயிரவ*
*நாத ருக்கிர நாதர்செந் நாடே.*

*முத்து மாரிய ருள்செய்யு நாடு*
*முகில்கள் நாளு மழைபெய்யு நாடு*
*வித்தியே நல்வி ளைவுகொள் நாடெங்கள்*
*வீர பத்திர சுவாமிகள் நாடே''*

## இயற்கை வர்ணனை

விசுவநாதர் பிறந்தவூரில் மலைகள் கிடையா, ஆறுகள் கிடையா. இங்கே மாரியல்லது காரியமில்லை, எனவே ஊரவர் மழை எப்போது பெய்யும், மண் எப்போது குளிரும் என எதிர்பார்த்திருந்தார்கள். இறைவியின் கருணை போல மழை பெய்தது. புலவர் மழையைக் கண்டு ஆனந்த பரவசமுற்றுப் பாடினார். நாடகம் வல்லவர், இசை நுணுக்கம் தெரிந்தவர். எனவே மழை பெய்யும் ஓசை நயத்தைக் கூறும் பாடலும் இசைநயம் ததும்புகிறது.

*தனதன தன்னத் தனதன தன்னத்*
*தனதன தன்னத் தனதானா*
*தனனா தனனத் தனனா தனனத்*
*தன்னா தனதத் தனதன்னா*

*புவிமிசை வளர்பற் பலபயிர் வகைநற்*
*புனலில் வயலிற் குறைந்ததாற்*
*புகலென வருசற் குணமனு டர்களப்*
*பொழுதுவிண் ணரசைத் துதிக்கவே*
*செவிமிசை யிவர்சொற் புகமக பதியத்*
*தினமுள மதுசற் றிரங்கியே*
*செறிமுகில் களையிற் கணமழை புவனித்*
*திசைபொழி யெனவத் திறங் கொளாக்*
*குரைகடல் பருகி கருநிறமருவிக்*
*கொளமினல் விரவிப் பரந்துராய்க்*
*குலகிரி யசையப் பலபணி நெளியக்*
*குமுறி முழங்கித் துளங்கியே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தரையிடை திவலைத் துளிமழை வரமுற்*
*றகுபெரு மலவைப் படங்கலும்*
*சடசட சடெனச் சடசட சடனெச்*
*சடசட சடனெப் பொழிந்ததே,"*

மேகநாதனாய இந்திரன் ஏவலில் வெண்முகில்கள் கடல்நீரை வேண்டிய மட்டும் முகந்து கருக்கொண்டு கரு முகலாகி இடி முழக்கம் மின்னலுடன் கனமழை பெய்தன. பெய்தமழை மிகுதியாய் ஊரில் வெள்ளம் உண்டாகிப் பாய்ந்தது. வெள்ளம் பாயும் வண்ணத்தைக் கண்டு மகிழ்ந்த புலவர் அதன் பாய்ச்சலுக்கும் தாளம் பிசகாமல் பாடுகிறார்.

*தெனதெந் தெனனத் தெனதெந் தெனனத்*
*தென்னா தெனனத் தென்தெனா*
*தென்னா தெனனத் தென்னா தென்னத்*
*தென்னா தெனனத் தெனதென்னா*

*தேசுற் றலர்ந்த வாசக் கமலச்*
*செடியைப் பிடுங்கிக் கடுகுலாஞ்*
*சிலையைப் புரட்டி மலையை யுருட்டித்*
*திரைஎறிந் திருகரை யெலாம்*
*வீசிக் குமட்டிக் கோலக் கரும்பின்*
*வேரு டன்பறித் தாசினி*
*வீட்டிச் சந்தகிற் கூட்ட மானவை*
*வேய்ந்து வெள்ளநீர் பாய்ந்ததே.*

இயற்கைக் காட்சிகளை நன்கு கவனித்துப் பாடிய இன்கவிப் புலவர் ஓரளவுக்குக் கற்பனையுலகிலும் சஞ்சாரஞ் செய்து, வெள்ளத்தில் அள்ளுண்டு துள்ளிப் பாயும் பலவித மீன்களையும், அவை சமுக மரங்களின் உயரத்திற்குப் பாய்ந்து பலவகையான பறவைகளையும் வெருட்டின என்றும் பாடுவர்.

*பாலை காலை நெத்தலி கத்தலை*
*பருத்த சுறவு பெருத்தசேல்*
*பாய்ந்து துள்ளியே கந்தற் கமுகின்*
*படப்பையுந் தள்ளிக் கடக்கவே*
*வேலை ஞாலம் மேலும் பரவி*
*விரைந்தும் இரைந்தும் தரங்கமேல்*
*வீசிப் புட்குலங் கூசிப் பறக்க*
*வெருட்டி வெள்ளநீர் பாய்ந்ததே.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாரும் நடுங்கத் திசையு நடுங்கப்*
*பணியு நடுங்கப் பணிகிலார்*
*பதறி நடுங்கத் திசையு நடுங்கப் புவியின்மேல்*
*ஆரும் கொன்றையும் அகிலும் பலவும்*
*ஆலும் நற்கரு வேலுடன்*
*அரிய தருக்கள் பிடுங்கி நடுங்க*
*அவனிமேல் வெள்ளம் பாய்ந்ததே.*

மரம் நாட்டுங்கள் ஆளுக்கொரு மரம் அவசரம் நடுங்கள், பிறந்த நாள் நினைவாக ஒரு மரம் நடுங்கள், இலுப்பையும் வேம்பும் இன்னும் நடுங்கள், நிழல் தரு மரங்கள் நிரையாய் நடுங்கள், பழந்தரும் மரங்கள் பலவும் நடுங்கள் என்றும்; மரவளம் இருந்தால் மழை வளம் பெருகும் என்றும் மண்ணரிப்பைத் தடுக்க மரங்கள் அவசியம் என்றும், விறகுப் பஞ்சம் போக்க விரைவில் மரங்கள் நடுங்கள் என்றும், நாங்கள் சோலைகள் உண்டாக்கப் பாடுபடுகிறோம். அன்று எங்கள் பிரதேசமெங்கும் சோலைகளும் தோப்புகளும் அதிகமாக இருந்தன என்று புலவர் பாடிக் காட்டுகிறார். பலவகை மரங்களின் பெயர்களைத் தருகின்றார்.

## ஊஞ்சல் ஆட்டிய நாகரிகம்

தமிழர் நாகரிகத்தில் நங்கையர் ஊஞ்சலாடி மகிழ்ந்தனர். என்பது பழைய வரலாறு. பண்டைத் தமிழ்ப் பண்பாட்டைக் கூறும் கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை என்னும் நூல், நங்கை யொருத்தி ஊஞ்சலாடிய வேளையில் நம்பி யொருவன் ஊஞ்சலை மெதுவாக ஊக்கிவிட்டான் என்று பாடுகிறது. இந்த ஊஞ்சலாட்டம் தமிழ் நாகரிகம் தென்கிழக்காசிய நாடுகளில் பரவிய போது, அங்கெல்லாம் வியாபகமுற்று இன்று வரை நிலவி வருகிறது.

எங்கள் புலவர்கள் பாடிய ஊஞ்சற் பதிகங்கள் எண்ணிலடங்கா. ஊர்ப்புறக் கோயில்களுக்கும் ஊஞ்சற் பதிகங்கள் உள்ளன. சேனாதிராய முதலியார், ஆறுமுகநாவலர், சுன்னாகம் குமாரசாமிப் புலவர் முதலான பெரியவர்களே சிற்றிலக்கியங்களாய ஊஞ்சற் பாக்களை உள்ளம் மகிழப் பாடியுள்ளார்கள்.

இவ்வாறாக விசுவநாதப் புலவர் நாடு சிறக்க நல்ல மழை பெய்ய வேண்டும், நாகரிகம் பண்புகள் பரவ வேண்டும், பயிர்கள் விளைவு தருதல் வேண்டும், கடவுள் நம்பிக்கை உறுதியாக வேண்டும் என்றெல்லாம் வாழ்த்திப் பெண்களை ஊஞ்சலாட வைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பொய் களவு மாறிடவே
புண்ணியங்கள் ஏறிடவே
மெய்வளர்ந்து தேறிடவே
வேண்டி ஊஞ்சல் ஆடுவமே.

பாரின்மிடி கூடாமல்
பயிர்களொன்றும் வாடாமல்
மாரிமழை தான்சொரிய
வாழ்த்தி ஊஞ்சல் ஆடுவமே.

வீரபத்திர சுவாமியருள்
மெய்ம்மை என்றே நாந்துதிக்க
நீருமிழ்ந்தே கார்பொழிய
நினைந்து நினைந்தாடுவமே''

## துன்பங்கள் நீங்கப் பாடியவை

தெய்வ பக்தி மிகவுடைய சீலரான செந்தமிழ்ப் புலவர் தந்தேசமெங்கும் உள்ள கோயில்களைப் போற்றிப் பாடிய வரிசையில் கற்பக விநாயகப் பெருமானைப் பரவிப் பாடி நாட்டில் பேதி நோய் முதலான துன்பங்கள் பரவுதலைத் தடுத்தல் வேண்டும் என முறையிட்டும் பாடியுள்ளார். புலவரின் சமூகப்பற்றும் சகோதரத்துவ மனப்பான்மையும் போற்ற வேண்டிய பண்பாடு.

வந்தவினை விக்கிநம் பனிபோல மாறவும்
வருமிடர் பயந்தோடவும்
வஞ்சனைசெய் பேய்பில்லி சூனிகுட் டிச்சாத்தான்
வழிகூழி யணுகாமலும்
அந்தியிற் பேயென்றும் உச்சியிற் பேயென்றும்
அணுகாது அகன்றோடவே
அக்கிரம துர்ச்சன ரிரண்டும்செய் யாலே
அஞ்சலென் றெனையாளுவாய்
சந்தனம் குங்குமம் சவ்வாதுபட் டுப்புனுகு
சார்ந்தொளி செய்மார்பனே
சர்க்கரை அவல்பயறு மிக்கபால் அமிர்தமும்
தானிடுங் குடவயிறனே
கந்தர்க்கு முன்வந்த விகடதட கஜமுகக்
கடவுளே மேல் வாயினிற்
கனகச் சதங்கையொலி கலகலென நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கைதரு பால நீ செங்கையைந் துடைய நீ
மாயவன் மருகனும் நீ
மாமறைக் கெட்டாத தூமறைப் பொருளும் நீ
வலவைத னிடத்தவனும் நீ
கங்கை பிறை சடையிலுறை சங்கரன் அருள்கின்ற
காரணக் கடவுளும் நீ
கனகமால் வரையினிற் பாரதக் கதையினைக்
கரமதால் எழுதியவன் நீ
சங்கையுறு வேடுவ குலத்திலுறு வள்ளியைத்
தம்பிக்கு மணமுடிக்கத்
தந்தியுரு வானநீ தொந்திவயி றான நீ
தமிழுக்கு முன்னவனும் நீ
செங்கைமலர் கொண்டுன்ப தாம்புயந் துதிப்பவர்கள்
தெருளவருள் புரியுமிறை நீ
திவ்யமுறு மாணிக்க கங்கைதனில் உறைகின்ற
சிவவிநா யகனு நீயே.

## முருகனைப் பாடியமை

தென்னிலங்கை மாணிக்க கங்கை வரை சென்று தேசீயம் கண்ட புலவர் செல்லக் கதிர்காம விநாயகனைப் பாடிய பின் திவ்வியம் பழுத்த திருக்கதிர்காம வேலனையும் கதிரைப் பதிகம் பாடிப் போற்றுகிறார் கந்தனுறையும் கதிர்காம மாமலை நம்மவர் சிந்தையில் என்றும் நீங்காதிருந்து வருகின்றமை பண்பாட்டு வரலாறு. கதிர்காம வேலனைக் காணலாம் கவிஞர் பாட்டிலே.

தாருற்ற வேலொருகை தனுவொருகை சரமொருகை
சங்கொருகை சக்ரமொருகை
தந்த்ரவித ரணகிரண மந்தரவா ளொருகை விறல்
தவிராத பாசமொருகை
ஏருற்ற திரிசூல ஒருகைவச் சிரமொருகை
எழிலான அங்குசமோர்கை
எறியும்வில் லயமொருகை சந்திரா யுதமொருகை
இத்தகைப் பன்னிருகையும்
பேருற்ற சூரனொடு சமராடி மார்பைப் பிளந்திந்த்ர
லோகம் வாழப்
பெட்போடு முதவியென் கட்பார்வை யருள்மகிமை
பேசுதற் கெளிதாகுமோ
சீருற்ற செல்வநிறை நின்கமல பொற்பாத
தெரிசனை எனக்கருளுவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செங்கடக நகரில்வளர் கந்தசர வணமுருக*
*தென்கதிரை வடிவேலனே.*
*வீரப்ர சண்டமயி லேறிவரு கடவுள் நீ*
*வெற்றிவடி வேன் முருகன் நீ*
*விண்ணாடர் மண்ணாடர் கண்ணாக வேதொழும்*
*மெய்ஞ்ஞான மெய்ப் பொருளு நீ*
*சூரைப் பிளந்தண்டர் ஆளப் பதந்தந்த*
*சுப்பிரமணி யக்கடவுள் நீ*
*சோதிசே ரீராறு தோளோடு கரமுடைய*
*சோராத சேவகனு நீ*
*காரைப் பழித்தகுழ லாள்வள்ளி யம்மைதன்*
*கணவனென வருபவனு நீ*
*காராழி மீதிலே மகரமாய்ச் சோங்கெனுங்*
*கப்பலை யுடைத்தவனு நீ*
*பாரத் தனத்தளுமை யாள்பெற்ற பால நீ*
*பச்சைமால் மருகனு நீ*
*பரிமளச் சோலை சூழ் கதிரையம் பதியில்வாழ்*
*பரிவுடைய கந்தவேளே.*

## வீரபத்திர வசந்தன் நாடகம்

அன்று என்றோ தவறான வழியில் தக்கன் செய்த வேள்வியைத் தகர்த்துத் தவிடு பொடியாக்கிய தெய்வ மூர்த்தம் வீரபத்திர மூர்த்தம். அந்த மூர்த்தத்தைப் போற்றி ஒட்டக் கூத்தர் தக்கயாகப் பரணி பாடியுள்ளார். வீரபத்திர மூர்த்தம். கணபதி, கந்தன், வைரவன் என வரும் மூர்த்த வரிசையில் நான்காவதாகும். சிவதத்துவத்திலிருந்து பிறந்த மூர்த்தங்கள் எனவே சிவபிரானின் மைந்தர்கள் திருக்குமரர் என வழங்க நிலவுபவர்கள் இவர்கள். இவர்கள் சிவனைப் போல வேண்டியவர்களுக்கு அருள் பாலிப்பவர்கள்.

விசுவநாதர் வீரபத்திர வசந்தன் நாடகம் பாடி, மேடையேறி ஆடிப் பாடிப் பெரும் புகழ் பெற்றவர். நாடகமெழுதிய போது கணபதி கந்தன் கண்ணகி முதலானோரைத் தம்மைக் காக்குமாறு காப்புப் பாடுகின்றார். இதற்கு முன்வரும் பாடல்கள் பலவும் வீரபத்திர வசந்தன் நாடகக் கவிகளேயாம்.

*செந்திரு வாழல வத்தை நகர்*
*சித்திர வத்ர சகத்திரித்தோன்*
*சுந்தரஞ் சேர்வீர பத்திரன் மேற்*
*சொற்றமிழ் சேர் வசந் தன்பாட*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மந்திர வேதமு தற்பொருளாய்*
*வந்துகற் றோட்ட வளம் பதிவாழ்*
*சந்திரக் கொம்பரே ரம்பர் துணைத்*
*தாண்மல றென்றும் பணிவோமே*
*உந்துபு கழல வத்தை நகர்*
*உத்தமி பத்திரை காளியுடன்*
*வந்துறை யுஞ்சென வீரபத்ர*
*வரதன் மேல்வசந் தன்பாட*
*செந்தமிழ்க் காரிது றட்டையிட்டி*
*சேரும் வயிரவ நாதருடன்*
*கந்தகிரு பாகர ருந்துணையாக*
*கைதொழு தென்றும் பணிவோமே.*

*ஆயிரஞ் சென்னியி ராயிரங்கை*
*ஆளியிவர் பத்திர காளியுடன்*
*சேயென்னும் வாள் வீரபத்திரன் மேற்*
*சேரும்வ சந்தன் இசைபாட*
*தாயென்னும் கம்மிலிற் கண்ணகியுந்*
*தண்டமிழ்சேர் கரண் டைப்பதிவாழ்*
*தூயன் பெரும்படை நாதனையன்*
*துணையென் றென்றும் பணிவோமே.*

தமக்குத் துணைநிற்குமாறு பல தெய்வ மூர்த்தங்களை வணங்கும் புலவர் தம் தாய்மொழியாய தமிழைச் சொற்றமிழ், நற்றமிழ், செந்தமிழ், தண்டமிழ் என்றெல்லாம் சிந்தையில் வைத்துப் போற்றும் போது அவரை நாம் பாராட்டாமல் இருக்கவியலாது. இனி நாடகத்தின் நாயகராய வீரபத்திரர் பவனி வரும் போது தாயும் சேயும் உரையாடி மகிழும் பாடல்கள் இரண்டேயேனும் படித்து மகிழ்வோமாக.

*தத்தன தனத்ததன தானின தனத்த தன*
*தானா தனத்ததன தானின*

*செக்கரஞ் சடைகுலுங்கத் திரிசூல வேலிலங்கச்*
*செகசோதித் தேரில்வாற தாரன்னே?*
*முக்கனாதி கற்பகப்போர் முதல்வன் முன்னாகவர*
*மூர்த்திவீர பத்திரன்வாறார் காண்மின்னே*

*சங்கர சிவாயவென்று சிங்கவாக னத்திலேறித்*
*தையல்பாக மாகவாற தாரன்னே;*
*பங்கமலை யைத்துளைத்துக் கங்கணமா கத்தரித்த*
*புயவீர பத்ரன்வாறார் காண்மின்னே.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரவநாதபிள்ளை விசுவநாதபிள்ளை

**டானியல் எல். கறோல்**

**(1820 - 1880)**

**பா**ரத நாட்டின் பழம் பெரும் பல்கலைக் கழகங்கள் பம்பாய், சென்னை, கற்கத்தா ஆகிய முப்பெரு நகரங்களில் முதன் முதலாக 1857 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பெற்றவை. சென்னைப் பல்கலைக் கழகத்திலே 1954ஆம் ஆண்டின் பட்டமளிப்புப் பேருரை நிகழ்த்திய கலாநிதி அழகப்பா செட்டியார் அவர்கள் தமதுரையில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பாரம்பரியம் பற்றிப் பேசியபோது அங்கே முதலிற் பட்டம் பெற்றவர்கள் இருவர் யாழ்ப்பாணத்தார் என்றும், அவர்கள் வைரவநாதர் விசுவநாதர், வைரவநாதர் தாமோதரம்பிள்ளை என்னும் அறிஞர் இருவர் என்றும் அடுத்து மூன்றாமவராகப் பின்னர் பட்டம் பெற்ற வரும் மோசேஸ் வேலுப்பிள்ளை என்றும் யாழ்ப்பானத்தவரேயாவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முன்சொன்ன இருவரும் பட்டம் பெற்றதோடு அமையாது சென்னையிலேயே உயர் உத்தியோகம் வகித்தவாறு பல்கலைக் கழகத்தின் பரிபாலனத்திலும் வளர்ச்சியிலும் பாரிய பணிபுரிந்து பரீட்சகர்களாகவும் உயர் உறுப்பினர்களாகவும் இருந்தார்கள் என்று இளைஞர்கள் மத்தியில் உரையாற்றிப் பாராட்டினார்.

சென்னைப் பல்கலைக் கழகம் தானும் வளர்ந்து படிப்பாற்றலை வளர்த்து இளைஞர் பலரை மனிதராக உருவாக்கியபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாளிகளானவர்கள் பலருள் இராசகோபாலாசாரியர் இராமசாமி ஐயர், இராதாகிருஷ்ணன், ஸ்ரீநிவாசசாஸ்திரி முதலானோர் ஒரு சிலர் என்றும், பின் சொன்ன ஸ்ரீநிவாச சாஸ்திரியார் மகாகனம் என வழங்கியதோடு உலகப் புகழ்பெற்ற ஆங்கிலப் பேச்சாளர் என்றும் அவரின் ஆங்கிலப் பேராசான் கோப்பாய் வணக்கத்துக்குரிய யேம்ஸ் ஹென்ஸ்மன் என்பவராவர் என்றும் பாராட்டினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் அவர்களோடு சமகாலத்தவராய்ச் சிலகாலம் கொள்கை வேறுபாடு கொண்டவராய்ப் பின் நாவலர் வழிக்குத் திரும்பி அவருடன் இணைபிரியாது தமிழ்ப் பணி, சமூகப்பணி புரிந்தவர் சுதுமலை வைரவநாதர் விசுவநாதர் என்னும் பேரறிஞராவர்.

## தோற்றமும் இளமைக் காலக் கல்வியும்

யாழ்ப்பாணத்தில் பழைய நாகரிகத்துக்குப் பெயர் போன ஆனைக்கோட்டைக்கும் புதிய நாகரிகத்திற்கும் புகழ் பெற்ற மானிப்பாய்க்கும் இடையில் சுதுமலை என்னும் அமைதியான பழைய ஊர் அமைந்துள்ளது. அங்கே அம்மை புவனேஸ்வரி அம்பாளின் அருளாட்சியும் ஆயுர்வேத வைத்தியர்களின் உடலோம்புகையும் பழைமையானவை. அங்கே பரம்பரையாக வைத்திய நிபுணர்கள் குடும்பத்தில் வந்த வைரவ நாதர் என்பார் வைத்தியத்தோடு செந்தமிழ்ப் பணியும் செய்து வந்தவர். பழைய ஏடுகளைப் புதிய ஓலைச் சுவடிகளாகப் புதிக்கி எழுதிப் பரப்புவதில் இன்பங் கண்டவர், சைவாசார சீலர்.

இத்தகைய பெரியாருக்கு விக்கிரம ஆண்டுக்கு அமைவாய 1820 ஆம் ஆண்டிலே கார்த்திகைத் திங்களில் திருவாதிரை நாளில் பிறந்த மைந்தனுக்கு விசுவநாதன் எனப் பெயரிட்டனர். பேரறிஞனாக வரக்கூடிய சாத்தியக் கூறுகள் சாதகத்தில் எழுதப் பட்டதைக் கண்டு மகிழ்ந்த தந்தை தங்கள் ஊரிற் சைவசாரசீலராயும் ஆசிரியராயுமிருந்த வைரவநாதர் என்னும் பெரியாரைக் கொண்டு வித்தியாரம்பஞ் செய்வித்துப் படிக்க வைத்தார்.

மைந்தன் நன்றாகப் படித்து முன்னேறுவதைக் கண்டு மகிழ்ந்த தந்தையார் அவ்வூரில் வாழ்ந்த வடமொழி விற்பன்னராய கங்கபட்டர் என்னும் பெரியாரிடம் மைந்தனை அனுப்பி வடமொழியும் பயில வாய்ப்பளித்தார். மைந்தன் விசுவநாதன் பன்னிரண்டாம் வயதிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு மொழிகளிலும் போதியளவு பாண்டித்தியம் பெற்றுப் புகழீட்டுவராயினார்.

## வட்டுக்கோட்டை சாஸ்திர சாலை

அமெரிக்க மிசனரிமார் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலேயே யாழ்ப்பாணம் வந்து தமிழ் பயின்று அச்சுக் கூடம் நிறுவி மருத்துவச்சாலை அமைத்துத் தம் மதம் பரப்புவதில் ஈடுபட்ட போது 1823ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டையில் உயர்தரக் கல்வியூட்டுவதற்குச் சாஸ்திரசாலை என்னும் செமினரி ஒன்றையும் நிறுவினார்கள்.

பல்கலைக் கழகம் போலமைந்த அக் கல்லூரியில் பன்முகஞானம் பயிலப் பெருவாய்ப்புக் கிடைத்ததை அறிந்து யாழ்ப்பாணத்தவர் பலர் தங்கள் இளைஞர்களை அங்கே படிக்க அனுப்பினார்கள்.

இலங்கையில் அமைந்த பெரும் கலைக் கல்லூரிகளுள் வட்டுக்கோட்டை செமினரி காலத்தால் முந்தியது. நல்ல மருதநிலச் சூழலில் பனந்தோப்புகளும் புடைசூழ்ந்த நிலத்தில் நன்கணம் அமைந்த கல்லூரியைப் பழைய தேசாதிபதிகளே வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள்.

பல்கலைக் கழகம் போலமைந்த செமினரியில் பயிலவந்தவர்கள் பலரும் பல்வேறு ஊர்களில் அமெரிக்க மிசனரிமார் பரிபாலித்த பாடசாலைகளில் பயின்று வந்தவர்களாவர். இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழை, உடுவில், மானிப்பாய், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு முதலிய இடங்களில் பெரிய பாடசாலைகளும் இருந்தன.

மாணாக்கர்களின் படிப்புச் செலவு, உடைச் செலவு, உடுப்புச் செலவு, உறைவிடச் செலவு முதலியவற்றை அமெரிக்கப் பிரபுக்கள் பலர் தேவாலயம் மூலம் அனுப்பி வைத்தார்கள். அந்த வகையில் அங்கே உயர்கல்வி பயின்ற மாணாக்கர் தங்கள் பெயரோடு, அமெரிக்கப் பெரியார் ஒருவரின் பெயரையும் தரித்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு நியதியும் நிலவியது.

செமினரிப் படிப்பு ஆறாண்டுக் காலத்துக்குரிய பாட விதானத்தில் அமைந்திருந்தது. அதில் தமிழ், வடமொழி, ஆங்கிலம், பழைய மொழிகள், பலவித கணிதங்கள், விஞ்ஞானப் பாடங்கள், வான சாஸ்திரம், சட்டம் முதலிய துறைகள் சிறப்பிடம் பெற்றிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுவல்ல பேராசிரியர்களுக்கு மேலாகக் கலாநிதி டானியல் பூர் என்பார். அங்கே முதலதிபராயிருந்தனர்.

விசுவநாதன் அங்கே கல்வி பயில்வதற்குச் சார்ந்த காலத்தில் கலாநிதி நாதன் வாட் என்பார் அதிபராயும், ஹென்றி மாட்டின் முதலானோர் பேராசிரியர்களாயுமிருந்தார்கள். விசுவநாதனுடன் கல்வி பயின்றவர்கள் வரிசையில் கோணிலியஸ் சரவணமுத்து, ஹலக் சரவணமுத்து, டேவிட் சிதம்பரப்பிள்ளை, ஆர்னோல்ட் சதாசிவம் பிள்ளை, வில்லியம் நெவின்ஸ் சிதம்பரப் பிள்ளை, றொக்வுட் சின்னத்தம்பி, பார்குமாரகுலசிங்கம், இராகூல்ட் முதலானோர் இருந்தார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையில் விற்பத்திமானாய் உருவாகி வந்தார்கள்.

## விசுவநாதர் விற்பத்திமானாய துறைகள்

விசுவநாதன் தமக்கு இயல்பாயமைந்த தமிழாற்றலை விருத்தி செய்தமையோடு, ஆங்கிலம், கணிதம், வான சாஸ்திரம் முதலிய துறை களையும் நன்கறிந்து வந்தார். நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை என்பார் கேத்திர கணிதத்தில் பெருமளவு திறமை பெற்றதுபோல, விசுவநாதர் அட்சர கணிதத்தில் திறமை பெற்று வந்தார். அவர் தமது பெயரோடு டானியல் எல் கரோல் என்னும் பெயரையும் சேர்த்து வழங்கவே எல்லோரும் அவரை, கறோல் விசுவநாதபிள்ளை எனவே வழங்கினர்.

விசுவநாதர் வட்டுக்கோட்டையில் படித்த காலத்திலேயே அட்சர கணிதத்தில் வல்லவராகி, ஆங்கிலத்தில் கொலன்சோ என்பார் யாத்த நூலைத் தமிழில் மொழி பெயர்த்துப் புகழ் பெற்றார். அவர் தமது கணித அப்பியாசங்கள் சிலவற்றைக் கதைகள் மூலம் எழுதியமை அவருக்குப் பெருமை கொடுத்தது.

அவர் தமது நூலில் எழுதிய முன்னுரையின் ஒரு பகுதி கிடைத்துள்ளது. ''தமிழில் முன்னோராற் செய்யப்பட்ட வீச கணித நூலை யாம் யாண்டுங் கண்டதில்லை. தமிழ்ப் பாஷையின் இப்பெருங் குறை ஒருவாறு நிறைதற்கும், தமிழ் மாணாக்கர் கணித அறிவில் வளர்தற்கும் உபயோகமாகவே ஆசிரியர் இங்கிலீசில் சவிஸ்தாரமாக இயற்றிய நூல்களையும் பாஸ்கராசாரியர் முதலியோர் ஆரியத்திற் செய்த சித்தாந்த சிரோமணி, வீச கணிதம், லீலாவதி பிரமஸ்புட சத்தாந்தம் முதலிய கணித நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு இச்சங்கிரகத்தைச் செய்தோம்.

பூர்வீக ராச்சியங்கள் பயபலபராக்கிரமயம் வீரத்தாற் தோன்றியவரோடு நின்றழிந்தது போலச் சில விவேகசிரோண்மளாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிய நூல்களும் அவர் காலத்தில் அவர் மாணாக்கரிடத்தே பிரவிருத்திப் பட்டுப் பின்பு ஒழிந்தன. இங்கிலீசாரின் இராச்சியமும் அவர்களின் நானாவித சஸ்திரங்களும் சனசமுதாய சாமத்தியத்தானின்று பிரகாசிக்கின்றபடியால் ஆயிரக் காலால் விருட்சம் போல நெடு நாளிலே நிற்றல் கூடும். அவரைப் போலாதல் தமிழராகிய எமக்கும் தகுதியா மெனக் கருதிச் சாதாரண சனங்களுக்குப் புலப்பட வாக்கிய ரூபமாக இந்நூலைச் சமைத்தேம்.

இவ்வாறாகப் பிள்ளை அவர்கள் செய்த வீசகணிதத்தில் வரும் வினாக்கள் பலவும் ஒவ்வொரு கதையமைப்பில் கேட்கப்பட்டுள்ளன. உதாரணமாக ஒன்றை இங்கே அறிந்து கொள்ளலாம்.

''ஒரு இராசவிடத்திற் செட்டியொருவன் மாணிக்கங் கொண்டு வந்தான். அதனை விலை மதிக்கும்படி இராசா தனது நாலு மந்திரிகளுக்குங் கற்பித்தான். முதல் மந்திரி தனது சம்பளத்தில் பாதியும் மற்ற மூன்று பேர் சம்பளமும் பெறுமென்றான். இரண்டாம் மந்திரி தனது சம்பளத்தில் மூன்றிலொன்றும் மற்ற மூன்று பேர் சம்பளமும் பெறுமென்றான். நாலு பேர் மதித்த விலையுஞ் சரியென்றால் மாணிக்கத்தின் விலையென்ன? மந்திரிகள் சம்பளமென்ன?

பிள்ளை அவர்கள் வீசகணிதத்தோடு விஞ்ஞான நூல்களிலும் வான நூல்களிலும் நில நூல்களிலும் நிரம்பிய அறிவு பெற்றிருந்தார் என்ப. நில நூல் வல்ல பெருமையினால் அவர் தம் ஊரில் வாழ்ந்த கமக்காரர்களுக்குப் பயிர்விளைவுக்கேற்ற காணிகளை ஆராய்ச்சி செய்து காட்டிக் கொடுத்தார். வான சாஸ்திர அறிவு நுட்பத்தால் நல்ல முறையில் தமிழில் பஞ்சாங்கம் கணித்து எழுதி வெளியிட்டுப் பெருமை பெற்றார். இவரை இப்பணியில் ஈடுபடுமாறு ஊக்கிவிட்ட பாதிரிமார் தமிழர் கண்ட சோதிட முறைகளை நன்கறிந்து மகிழ்ந்தனர்.

பிள்ளை அவர்கள் தமிழபிமானியாயிருந்ததோடு தமிழர் தங்கள் தாய்மொழியிலேயே கலைகளைக் கற்றுணர வேண்டும் எனக் கொண்ட கோட்பாட்டை நடைமுறையிற் காட்டுவதற்கு அவரே பல நூல்களை எழுதியும் மொழிபெயர்த்தும் உதவினார்.

இவ்வாறாகப் படித்துக்கொண்டே செந்தமிழ் வளர்த்து வந்த செம்மலாய அவர் குறிக்கப்பட்ட ஆறாண்டுக் காலப்படிப்பை முடித்த பின் நடைபெற்ற இறுதித் தேர்வில் திறமைச் சித்தியும் பெற்றார், அப்பெறுபேறு பட்டதாரி ஒருவரின் சிறப்புச் சித்திக்கு ஒப்பானது என்று பேராசிரியர்களே எடைபோட்டு மதித்துப் பாராட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியராயிருந்தமை

செமினரிப் பேராசிரியர்கள் நடத்திய இறுதித் தேர்வில் திறமைச் சித்தி பெற்ற விசுவநாதபிள்ளை அவர்களுக்குச் செமனரியிலேயே ஆசிரியர் பதவி கிடைத்தது. அங்கே அவர் படிப்பித்த காலத்தில் படிக்க வந்த இளைஞர்களுள் ஒருவர் சிறுப்பிட்டியூர் வைரவநாதர் மைந்தன் தாமோதரம்பிள்ளை என்பவராவர். அவரும் பன்னிரண்டாம் வயதளவுக்குள் சுன்னாகம் முத்துக்குமார கவிராய சேகரம் அவர்களிடம் முறையாகப் படித்த பின் உயர் கல்விக்காக அங்கே வந்து சேர்ந்தவர்.

விசுவநாதபிள்ளை அவர்கள் தமது ஒய்வு நேரங்களில் தமிழ் தமிழ் என்றே உழைத்தவராதலின் அன்று வட்டுக்கோட்டையிலிருந்து வெளியான உதயதாரகை என்னும் பத்திரிகைக்குப் பலவிதமான கட்டுரைகள் எழுதி வந்தார். மாணாக்கனாகவும் ஆசிரியராகவும் நல்ல புகழ் ஈட்டிய அவர் தலைசிறந்த எழுத்தாளர் எனவும் பெயர் பெற்றார்.

## அறிவாளிகள் இருவரின் விவாதம்

பிள்ளை அவர்கள் இருபதாம் வயதில் சிறந்த பேச்சாளராயும் இருந்தார். அதே காலத்தில் நல்ல எழுத்தாளராயும் இருந்தார் அவர் எழுதிய சில கருத்துகளைப் பதினெட்டு வயதினராய நல்லூர் கந்தப்பிள்ளை ஆறுமுகம் (நாவலர்) மறுத்து வந்ததும் உண்டு. சில நாள்களில் மேடைகளிலும் தர்க்க ரீதியாக இருவரும் வாதப் பிரதிவாதம் நடத்தியதுமுண்டு. பேச்சிலும் எழுத்திலும் இருவரும் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்காமல் தர்க்கித்து வந்த காலத்தில் கண்ணுக்குச் சுய ஒளி உண்டு என்றும் இல்லை என்றும் வாக்குவாதம் செய்து வந்தார்கள். இப்படியாக இவர்கள் போதித்து வந்த காலத்தில் இருவர் தம் கோட்பாடும் கொள்கையும் சமயரீதியாகவும் விவாதிக்கப்பட்டன.

பிள்ளை அவர்களுடன் விவாதங்கள் செய்து வந்த நாவலர் அவர்கள் அன்று பதினெட்டு வயது கண்ட இளைஞனாய் நல்லூர் க. ஆறுமுகம் என்னும் பெயரில் யாழ் மத்திய கல்லூரியில் ஆசிரியராயும், அதிபர் பீற்றர் பேர்சிவல் பாதிரியாரின் தமிழாசானுமாயிருந்தவர்.

கண்ணுக்குச் சுயவொளியுண்டோ இல்லையோ என்னும் புகழ் பெற்ற விவாதம் பல நாள்களாகத் தொடர்ந்து நடைபெற்றமை அக்காலத்து அறிவாளிகளுக்கெல்லாம் பெருவிருந்தாயிருந்தது என்று உதயதாரகை பிரசுரித்து வந்தது. பிள்ளை அவர்கள் வேதம் வேதாங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்த விற்பத்திமானாயிருந்ததோடு, புறச்சமய நெறியையும் அறிந்தவர். அவருக்கு ஸ்போல் டிங் போதகரும் ஆர்னோல்ட் என்னும் சதாசிவம் பிள்ளையும் பக்கத் துணையிருந்தனர். அவர் சமரசஞானம் பேசிவந்தார். ஆறுமுகம் அவர்கள் பழைய வைதிக நெறியில் சைவத் துறையில் இறுக்கமான போக்கில் நெகிழ்ச்சி யில்லாமல் பேசிவந்தார். இவர்கள் இவ்வாறு விட்டுக் கொடாமல் பேசிவந்த போதிலும் ஆளை ஆள் நன்கு மதித்து மனிதாபிமானத்தைக் காத்து வந்தனர். உட்பகை என்பதின்றி மனந்திறந்து விடையத்தையே பேசினார்கள். இவர்களுக்குள் முன் நியூமன், கிங்ஸ்லி என்னும் அறிஞர் இருவர் வாக்கு வாதங் காரணமாக ஆளை ஆள் வெகுவாகப் பகைத்து இறுதிவரை ஒருவரை ஒருவர் காணாமலே மடிந்தனர் என்ப.

ஆனால் ஆளை ஆள் மதித்துப் பிள்ளை அவர்களும் நாவலர் அவர்களும் தொடர்ந்து விவாதங்கள் செய்து வந்த காலத்தில் நாவலர் நாவலர் பட்டமும் பெற்றுப் பெரியவராயினர். அவர் சைவம் வளர்த்த சான்றோராகி அக்காலத்துச் சூழ்நிலை கண்டு வருந்திச் சைவ தூஷண பரிகாரம் என்னும் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டார். நாவலர் அவர்களின் நல்ல முயற்சிகளை அக்காலத்து றொபின்சன் என்னும் பாதிரியார் தமது அறிக்கையில், தாம் கண்ட சைவப் போதகர்கள் என்னும் தலைப்பில் நாவலர் அவர்களின் நன்முயற்சியைக் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறாக சைவ தூஷன பரிகாரம் என்னும் பிரசுரத்தைக் கருத்தூன்றிப் படித்த விசுவாதபிள்ளை அதற்கு மறுப்பாகத் தீபம் சுப்பிர தீபம் என்னும் சுவடி ஒன்றை எழுதி வெளியிட்டார். இது முன்பு நிகழ்ந்தமை போல நட்புரிமையோடு கூடிய அறிவாளிகளின் விவாதமாகவே இருந்தது.

## இருவரும் ஒன்றாயினர்

இவ்வாறாக நாவலர் அவர்கள் நியதி தவறாமல் இடையிடையே சிதம்பர தரிசனம் செய்யப் போயிருந்தார். அங்கே ஆடல் வல்ல அற்புதக் கூத்தனாய நடராசப் பெருமானைக் கும்பிட்டு நின்ற வேளையில் பிள்ளை அவர்களும் அங்கே சென்றார். வாருங்கள்! வாருங்கள்! என்று ஒருவரை ஒருவர் வரவேற்று எவர்தம் முன் அணைந்தவர் என்று எவரும் அறிந்து கொள்ள முடியா வகையில் தழுவி ஒன்றாயினர். பிள்ளை அவர்கள் நாவலர் அவர்களைக் குரு என்றே இதயபூர்வமாக அழைத்து மகிழ்ந்தனர். ஆட்டுவித்தால் ஆரொருவன் ஆடாதாரே என்ற பிரகாரம் இருவரும் ஆடல்வல்ல பெருமானுக்கு ஆட்பட்டுச் சைவம் வளர்க்க உறுதி பூண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை அவர்கள் அதுகாறும் தாம் சைவ நிந்தனை பேசியதற்கும் எழுதியதற்கும் பிராயச் சித்தமாகத் தமது சட்டையில் குற்றியிருந்த பொன்னூசியைக் கழற்றி நெய்விளக்கிற் காய்ச்சித் தமது நாவைச் சுட்டுக் கொண்டார். இத்தகைய கழுவாயைக் கண்ட தீட்சிதர்களும் பிறரும் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டைப் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார்கள். நடராசப் பெருமான் சந்நிதானத்தில் காந்தமேற்றப்பட்ட பிள்ளை அவர்கள் அன்று முதல் தமது பாரம்பரியச் சைவத்துக்கே மீண்டார். பிள்ளை அவர்களும் நாவலர் அவர்களும் நாவுக்கரசர் ஞானசம்பந்தர் எனச் சைவம் வளர்ப்பாராயினர். பிள்ளை அவர்கள் சைவசமயத்திற்கு மீண்ட பின் எழுதிய நூல் காலதீபிகை என்பதாகும். அது காகிதப் பிரதியாய் இருந்த போதே சங்கானையில் மனைவியார் மனையில் காணாமற் போய்விட்டதென்ப. அது எதுகை மோனை நயந்ததும்ப நல்ல செந்தமிழில் எழுதப் பெற்றதென்பர். அவர் எழுதிய சுப்பிர தீபத்திலும் சில தொடர்கள் நயந் ததும்புவன என்பவர்கள் காட்டிய ஒரு தொடர் ''அச்சிற்கும்பி தொடுத்தனர் நச்சுக் கும்மியடித்தனர்'' என்பதாகும்.

## சென்னைப் பிரயாணம்

விசுவநாதபிள்ளை அவர்கள் வட்டுக்கோட்டை சாஸ்திர சாலையில் பேராசிரியராயிருந்த காலத்தில் அந்நிறுவனம் 1855ஆம் ஆண்டில் மூடப்படலாயிற்று. அமெரிக்கப் பண்டிதர்களும் போதகர்களும் கிறிஸ்து மதம் பரப்புவதற்காக வந்த விடத்தில் தமிழ் பயின்று அதனை வளர்த்தும் சைவத் திறன் அறிந்தும் அதனை வியந்தும் வந்தார்கள் என்று ஒரு விசாரணைச் சபையின் அறிக்கை மூலம் அறிந்த மேலிடத்தார், அந்த நிறுவனத்தை உடனடியாக மூடிவிட்டார்கள் என்பது வரலாறு.

இந்த வேளையில் விசுவநாதபிள்ளை அவர்கள் சாஸ்திர சாலையில் கற்று வல்லவராய சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களையும் அழைத்துக்கொண்டு சென்னைப் பட்டணத்துக்குப் புறப்பட்டார்' அங்கே அவர் பன்முகப் பணிகளில் ஈடுபட்டிருந்த காலத்தில் 1857ஆம் ஆண்டில் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப் பெற்று முதன் முதலாக பீ.ஏ. பட்டத்துக்குரிய பரிட்சை நடைபெற்றது. அதற்குத் தாமும் தம்மாணாக்கனாய தாமோதரம்பிள்ளை அவர்களும் விண்ணப்பித்து எழுதினார்கள். அந்த ஆண்டில் முதன் முதலாகச் சித்தி பெற்றவர்கள் இவர்கள் இருவருமேயாவர் என்பது யாழ்ப்பாணம் பெற்ற பெரும் புகழாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமோரம்பிள்ளை அவர்கள் தொடர்ந்து சட்டம் பயின்று பி.எல் என்னும் பட்டமும் பெற்றுப் புதுக்கோட்டை என்னும் நகரில் நீதிபதி உத்தியோகமும் பெற்றுப் பதவி உயர்ச்சி பெற்றுச் சீரும் சிறப்பும் பெருவாழ்வும் பெற்றுப் பெரும் பணிபுரியத் தொடங்கினார்.

விசுவநாதபிள்ளை அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே உத்தியோகம் பெற்று, மேலிடத்தார் பணித்தவாறு பல ஆங்கில நூல்களைத் தமிழிற் பெயர்த்தும் தாமே பல நூல்களை எழுதியும் வந்தார். அந்நூல்கள் பலவற்றைச் சென்னைக் கலைச் சங்கத்தார் அருமையாக அச்சிட்டுப் பாடசாலைகளில் பாடநூல்களாகப் பரப்பினார்கள். பிள்ளை அவர்கள் பல்கலைக்கழகப் பரீட்சகராகவும் பதவி பெற்றதோடு தமது ஓய்வு நேரங்களில் அகராதி ஒன்றைத் தயாரிப்பதற்காகக் கடுமையாக உழைத்துத் தமிழ் ஆங்கில அகராதியை எழுதி முடித்தார். சென்னைக் கலாசங்கத்தார் அதனை உவந்தேற்று அச்சிட்டுப் பரப்பினார்கள்.

## வித்துவக் காய்ச்சல்

விசுவநாதபிள்ளை அவர்கள் மொழி பெயர்த்த நூல்களுள் சாள்ஸ்லாம் என்னும் ஆங்கிலப் புலவர் எழுதிய சேக்ஸ்பியர் கதைகளும் சிறப்பிடம் பெற்றன. அவை பாடசாலைகளில் பாடப் புத்தகங்களாகிப் பரவக் கண்ட பட்டண வாசிகள் சிலர் மனநோய் காரணமாக யாழ்ப்பாணத்துப் புலமையும் படிப்பாழத்தையும் பாரம்பரியத்தையும் சாடிவந்தார்கள்.

அக் காலத்தில் சென்னையில் யாவரும் மதிக்கச் சிறப்புடன் தமிழ்ப் பணி, சைவப் பணி புரிந்துவந்த நாவலர் அவர்கள் விசுவநாதபிள்ளை அவர்களின் படிப்பாழத்தை அறியாது சாடிய பட்டணவாசிகளை விட்டு வைக்கக் கூடாது என்று கருதிப் பெரியவர்கள் மத்தியில் பிள்ளை அவர்களைப் பற்றிப் பேசியும் எழுதியும் வந்தார். உண்மையைப் பொய்யால் மூடி மறைக்கும் போலிப் புலவர்களை நாவலர் அவர்கள் வன்மையாகக் கண்டித்து எழுதத் தொடங்கினார். அறிவுச் சுடராய விசுவநாதபிள்ளை அவர்களால் யாழ்ப்பாணத்துக்குப் பெருமை, தமிழுக்குப் பெருமை, என்றெல்லாம் தகர்க்க முடியாதவாறு எழுதினார். விசுவநாதபிள்ளை அவர்களின் பணி சாதாரணமானதல்ல என்று விளக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசுவநாத பிள்ளை அவர்களின் பெருமை

நாவலர் அவர்கள் விசுவநாதபிள்ளை அவர்களின் பெருமையைப் போற்றி எழுதியபோது குறிப்பிட்டவை கருத்திற் கொள்ள வேண்டிய செய்திகளாகும். ஒரு சமயம் நரசிங்கபுரம் வீராசாமி முதலியார் என்பாருக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தியபோது சென்னை சிவபாதசேகரப்பிள்ளை மூலம் நாவலர் அவர்கள் யாழ்ப்பாணத்தாரின் உபகரிப்பைப் பற்றிக் குறுப்பிட்டபோது, விசுவநாதபிள்ளையின் பெருமையையும் குறிப்பிட்டுள்ளார்.

''இங்கிலீசினின்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுத் தமிழ்நாடெங்கும் கெவரன்மென்ட் பாடசாலைகளெங்கும் வழங்கும் தமிழ்ப் புத்தகங்களுக்கு ஆசிரியராகிய விசுவநாதபிள்ளை அவர்களும் யாழ்ப்பாணத்தாரன்றோ? ஓகோ! நீர் இவர்களை நியோகித்த கெவண்மென்ட்டாரைக் கண்டிக்கவும், இவர்களாலே பரீட்சிக்கப் பட்டு, இவர்கள் கீழிருந்து தமிழ் உபாத்தியாயர்களாய்த் தொழில் செய்து சீவனம் செய்யும் இந்நாட்டுப் புலவர்களைத் தடுக்கவும் அறிந்தீரோ? உமது தேசாபிமானம் எங்கே பறந்தது?''

நாவலர் அவர்கள் பிள்ளையவர்களின் மும்மொழிப் புலமையையும், பன்முக அறிவையும் வெகுவாகப் பாராட்டி அவர் செய்த நூல்களின் தரத்தையும் மதிப்பிட்டுச் சென்னைப் பட்டண வாசிகளுக்கு உண்மையை நுட்பமாக விளக்கினார். பிள்ளை அவர்களின் அருமையையும் பெருமையையும் மதிநுட்பத்தையும் யாழ்ப்பாணத்தார் கொண்டாடியமையையும் விளக்கினார். தமிழ்ப் புலவராய பிள்ளை அவர்களை அருட்புலவராய ஆறுமுகநாவலர் அவர்கள் இதயபூர்வமாகப் பாராட்டியமையைக் கண்டு எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

## அகராதிப் பணி

தமிழ் மொழியில் வெளிவந்த அகராதிகளுள் யாழ்ப்பாணத்தார் தயாரித்த அகராதிகள் பலவாகும். வீரமாமுனிவர் என்பார் தமிழ் நாட்டிலிருந்து தயாரித்த சதுரகராதி காலத்தால் முந்தியது. அவர் இத்தாலி நாட்டினர். அவருக்குப் பின் தயாரிப்பதில் யாழ்ப்பாணத்தார் முன்னோடிகளாயுமிருந்தனர். பண்டிதர் சந்திரசேகரர், வைமன் கதிரைவேற்பிள்ளை, புலோலி கதிரைவேற்பிள்ளை, மானிப்பாய் முத்துத் தம்பிப் பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் பிள்ளை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறை சுப்பிரமணியசாஸ்திரிகள் காலந்தோறும் அகராதி வேலைகள் செய்திருந்தனர். அவர்கள் தம்மளவில் வெவ்வேறு விதமாகத் தயாரித்தபோது விசுவநாதபிள்ளை அவர்கள் தமிழ் - ஆங்கில அகராதி ஒன்றைத் தயாரித்தார். சென்னைக் கலாசங்கத்தார் அதனை 1929ஆம் ஆண்டு வரை ஐந்து பதிப்புகள் வெளியிட்டுள்ளார்கள். மிகப்பெரிய அளவில் 676 பக்கங்களைக் கொண்ட அகராதி, தமிழுக்குத் தமிழ்க் கருத்தும் தொடர்ந்து ஆங்கிலக் கருத்தும் தருகிறது. சில சொற்களுக்குப் பல கருத்துகள் தருவதோடு, சைவசமய சம்பந்தமானவை, வானசாத்திரம் சம்பந்தமானவை, தாவரவியல் சம்பந்தமானவை யாவும் அருமையாக விளக்கம் பெறுகின்றன.

ஆசிரியரின் பெயருக்கருகில் அவர் கல்வித் திணைக்களத்து மொழிபெயர்ப்பாளர் என்றும், இந்நூல் கல்விப்பணிப்பாளரால் ஏற்றுக் கொள்ளப் பெற்றது என்றும் கல்வித்திணைக்களத்துக்கே உரியது. என்றும் விளக்கப் பெற்றுள்ளது. இத்தகைய புகழ் பூத்த பிள்ளை அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்து உயர் உறுப்பினராயும் இடம்பெற்றுப் பெருமை பெற்றவர். அவர் சங்கானையில் திருமணஞ் செய்து இனிது வாழ்ந்தவர் என்றும் அறியக் கிடக்கிறது.

பிள்ளை அவர்கள் நாவலர் அவர்களோடு இணைந்து சமூக சேவை செய்து வந்தகாலத்திலேயே இலங்கைச் சட்டசபையில் தமிழ்பேசும் மக்களின் பிரதி நிதியாயிருந்த சேர். முத்துக்குமாரசுவாமி அவர்கள் 1879ஆம் ஆண்டிற் காலமானார். அவரிடத்தில் அங்கத்துவம் பெறுவதற்குத் தமிழ்த் தலைவர்களுள் ஒருவரான பிரிட்டோ என்னும் முதிய நியாயவாதி முயற்சி செய்தார். அவர் கொழும்பில் பெருஞ் செல்வராயிருந்த நன்னித்தம்பி முதலியார் அவர்களின் மூத்த புதல்வியை மணந்த சிறப்பும் பெற்றவர்.

ஆனால், நன்னித்தம்பி முதலியாரின் இளைய புதல்வியை மணந்த இளைஞராய பொன்னம்பலம் இராமநாதன் அவர்களே தகுதியான பிரதிநிதி என்பது ஒரு சாராரின் விருப்பம். விசுவநாதபிள்ளை அவர்களும், ஆறுமுகநாவலர் அவர்களும், லோட்டன் கனகசபை அவர்களும் இணைந்த சபையினர் நாவலர் பாடசாலையில் கூட்டம் கூடினர். அக் கூட்டத்தில் பிரிட்டோ அவர்களின் ஆதரவாளர்கள் பலர் தலையெடுத்துப் பேசியபோது நாவலர் அவர்கள் தமது தொய்வு நோயையும் பொருட்படுத்தாது எழுந்து பல பழைய தகவல் தடதாசிகளை எல்லோருக்கும் படித்துக் காட்டி பிரிட்டோ அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைக்குரியவர் அல்லர் எனக் கூறியதும் எல்லோரும் இராமநாதன் அவர்களையே ஏகமனதாக ஆதரித்துத் தேசாதிபதிக்குப் பரிந்துரை அனுப்பி இராமநாதன் அவர்களை அங்கத்தவராக்கினர்.

இவ்வாறாக நாவலர் அவர்கள் 1879ஆம் ஆண்டின் மார்கழி மாதத்திலேயே மறைந்தார். அடுத்து 1880ஆம் ஆண்டின் கார்த்திகை இருபத்தொராம் நாள் விசுவநாதபிள்ளை அவர்களும் மறைந்தார்கள். இவர்கள் இருவரின் மறைவு சைவசமயத்தவருக்குப் பேரிழப்பா யிருந்ததைக் கண்டு வருந்திய சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் இரங்கிப் பாடினார்.

நாவலர் அவர்களும் பிள்ளை அவர்களும் சைவமதத்தாபனஞ் செய்வதிலும் பிரசாரஞ் செய்வதிலும் வல்லவர்கள் எனக் கண்ட இறைவன் நாவலர் அவர்களை அன்றழைத்தார். அவர் தனியாகப் பணி செய்ய மாட்டார் எனக் கண்டு இன்று வீறு கொண்ட பிள்ளை அவர்களையும் அழைத்தார். இருவரும் தேவருலகில் சைவசமயத்தாபனஞ் செய்வதற்காகவோ?

*"ஆறுமுக நாவலரை அன்றழைத்தார் போதாதே*
*வீறுவிஸ்வ நாதனையும் வேண்டினார் - நீறுதிகழ்*
*சைவந்த னையங்குத் தாபிக்க வோவிவர்கள்*
*கைவந்த வர்கள்எனக் கண்டு"*

விசுவநாதபிள்ளை அவர்கள் மறைந்த போது தாமோதரம்பிள்ளை அவர்கள் சென்னையில் தங்கியிருந்தார். தமிழ் வளர்த்தலையே தமது பணியாகக் கொண்டிருந்த தாமோதரனார் தம்மை உருவாக்கிய பிள்ளை அவர்களை நினைந்துருகிப் பாடிய பாடல்கள் பலவாகும்.

*"ஏது மறியாத வென்னையோ ராளாக்கி*
*மேதினியோர் மெச்ச விடுத்தவிஸ்வ - நாததுரை*
*சென்றானோ வாழ்வோர்இச் செய்ய புகழுடம்பி*
*நின்றாரில் யாரிவற்கு நேர்"*

*"வெல்லுந் தகைத்தோ விசுவநா தத்தகையைச்*
*சொல்லுதமி ழிங்கிலிஷ்சூரர் மொழிசேர் - வல்லொளியைச்*
*சந்திரன்றி யாதித்தன் றம்மிலொன்றி னாற்சீர்த்தி*
*முந்தியமு வேந்தருடை மொய்ம்பு."*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புவியிற் புலவ ரறுபத்து நான்கெனப் போற்று கலைகட்*
*கிவனே யெனமுன் விரனீட்டி யாவரு மெண்ணிய நற்*
*றவனென் றகைக்குர வன்விஸ்வ நாதனின் சாமொழியென்*
*செவியெங்ஙன் றாங்கியதோ வுள்ளமே இன்னந் தேறிலதே.*

## தமிழ் வளர்த்தவர்கள்

*சென்ற நூற்றாண்டிலே செந்தமிழ் வளர்த்த செம்மல் களானோருட் சிலர், நீண்ட காலம் தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்து நிலையான பணி செய்து உயிர்ப்பாய உபகரிப்புகளும் உதவியுள்ளார்கள். அவர்கள் அரசாங்கத்தில் நீதிபதி உத்தியோகம், கணக்காளர் நாயகம், தபாற் கந்தோர்களின் மேலதிகாரி முதலாய உயர்ந்த உத்தியோகங்கள் வகித்தவாறே தமிழுபகரிப்பும் செய்துள் ளார்கள். சிலர் துறவிகளாய் நைட்டிகப் பிரமசாரிகளாய் வாழ்ந்தும் பணி செய்துள்ளார்கள். சிலர் பேராசிரியர்களாயும் விரிவுரையாளர்களாயும் இருந்திருக்கிறார்கள். இன்னுஞ் சிலர் பத்திரிகைத் துறையில் புகழ் பெற்ற எழுத்தாளராயும் இருந்திருக்கிறார்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லுவெட்டி
# க. குமாரசுவாமி முதலியார்
(1791 - 1874)

**யா**ழ்ப்பாணத்து வடமராட்சியைச் சேர்ந்த கட்டைவேலி, பருத்தித்துறை, உடுப்பிட்டி என்னும் முப்பெரும் பிரிவுகளுள் உடுப்பிட்டியைச் சேர்ந்த வல்லுவெட்டி என்னும் பேரூரில் கதிர் காமபூபதி முதலியார் என்பார் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் பெருமதிப்புக்குரியவராய் வாழ்ந்து வந்தார்.

வல்லுவெட்டியில் பெயரும் புகழும் பெற்று அரசறியப் பெருவாழ்வு வாழ்ந்த மற்றொரு பெரியார் சந்திரசேகர முதலியார் என்பார். சந்திரசேகர் பெரும் புலமையும் பெரு வீரமும் பெற்று, வாழ்ந்தவர். சண்டியன் சந்திரசேகரர் என்று மக்களிடையே மதிப்புப் பெற்றவராயிருந்தவர்.

ஒரு சமயம் வவுனியாவுக்கு இப்பால் வாழ்ந்த வீரமிக்க வன்னியர்கள் ஒல்லாந்த ஆட்சியாளருக்குப் பெருந் தலையிடி கொடுத்து வந்தபோது, ஒல்லாந்தர் வன்னியரை அடக்கும் வகை தெரியாது திகைத்து சந்திரசேகரிடம் தஞ்சம் புகுந்தனர். சந்திரசேகரர் தம் கையாள்களுடன் வெற்றி புரியும் வீரவால் ஏந்திச் சென்று, வன்னியரோடு பொருது அவர்களை அடக்கி மீண்டனர் என்ப. அவர் செய்த உதவிக்காக ஒல்லாந்த அதிகாரிகள் அவருக்குப் பட்டமும் பதக்கமும் பதவியும் அளித்து கப்ரின் சந்திரசேகர முதலியார் எனப் பெருமைப்படுத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரம் மிக்க சந்திரசேகர முதலியார் புலமை மிக்கவராதலின் அக் காலத்திற்கேற்ற கவிகள் பாடி மக்களை மகிழ்வித்து வந்தார். அவர் அன்று பாடியனவாக இடம் பெற்ற கவிகளுள் கூளப்ப நாயக்கன் விறலி விடு தூதுப் பிரபந்தத்தின் அமைப்பில் அமைந்த நொண்டிச் சிந்து என்பதும் ஒன்று. இன்னும் சுவை மிக்க தனிப்பாடல்கள் பலவும பாடினார் என்ப.

சந்திரசேகரருக்கு முத்துக்குமாரு, குமாரசுவாமி என்றிரு மைந்தரும் வள்ளியம்மை என்றொரு பெண்ணும் பிறந்திருந்தனர். அவர் தம் அருமை மகளை முன் சொன்ன கதிர்காமபூபதிக்கு மணஞ்செய்து கொடுத்திருந்தார். சந்திரசேகரர் *96* வயது வரையும் வாழ்ந்தவர் என்பர்.

சந்திரசேகரரின் மைந்தர் இருவரும் தக்க புலவர்களிடம், முறையாகக் கற்று அறிவாளிகளாயிருந்தனர். மூத்தவராய முத்துக் குமாரர், ஐந்திலக்கணங்களும் நன்கறிந்த செந்தமிழ்ப் புலவரா யிருந்தார். அவர் பல தனிப்பாடல்களும், பல திருக்கோயில்களுக்கான ஊஞ்சற் பதிகங்களும் பாடியிருந்தார். தம்பியார் குமாரசுவாமி என்பாரும் அண்ணனைப் போன்ற புலமையுள்ளவராய்ப் புரந்தர நாடகம் பாடிப் புதுமை செய்ததோடு, புலவர்களை ஆதரித்த புரவலராயும் இருந்தார்.

## புலமையோடு பிறந்த
## குமாரசுவாமி முதலியார்

மரபு வழிவந்த புலவர்களான முத்துக்குமாரு, குமாரசுவாமி ஆகியோரின் சகோதரியான வள்ளியம்மையை மணந்த கதிர் காமபூபதி இல்லறத்துக்கேற்ற பல்லறங்கள் செய்து இனிதிருந்த காலத்தில் *11.8.1791* ஆம் நாளில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றார். குழந்தைக்குக் குமாரசுவாமி என்று பெயரிட்டு வளர்த்த காலத்தில் குழந்தை குமாரசுவாமி மழலைப் பருவத்திலேயே பிஞ்சுக் கவிகள் பாடத் தொடங்கினார்.

இவன் வரப்பிரசாதத்தால் வந்த மைந்தன் எனச் சிந்தை மகிழ்ந்த வள்ளியம்மை குழந்தையை நல்ல படிப்பாளிகளிடம் படிக்க வைத்தார். முதலில் தாய் மாமன் முத்துக்குமாரரிடமே முறையாகக் கற்ற குமாரசுவாமி, புலமை முறுக்கேறி எடுத்ததற்கெல்லாம் இன்தமிழ்ப் பாடல்கள் பல எளிய நடையில் பாடி எல்லோரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்புறுத்தி வந்தார். பெற்றோர்களுடன் திருக்கோயில்களுக்குச் சென்ற போதெல்லாம் தாமே புனைந்த பாடல்களைப் பாடியும் வணங்கி வந்தார்.

அவர் அக் காலத்தில் பாடியனவாகக் கணிக்கப் பெற்ற பல பாடல்களுள், கந்தவனநாதர் ஊஞ்சல், மூளாய் சித்திவிநாயகர் ஊஞ்சல், திருவிற் சுப்பிரமணியர் பதிகம், நல்லைக் கலித்துறை முதலியன ஒரு சில பாடல்களாகும். நல்லைக் கலித்துறையில் பன்னிரு மாதங்களின் பெயர்களும் பயின்று வர அவர் பாடியுள்ள அருமை ஒரு விருந்தின் பாற்பட்ட படைப்பாகும். விருந்து புதுமைக் கவிகள் எனப் பெயர் பெறும் என்ப. இப்படைப்பில் கலித்துறைப் பாடல்களில் பல விடங்களில் சிலேடை நயங்களும் சீரிய முறையிலமைந்துள்ளன. அன்றி நல்லைப் பெருமானை மெய்யன்போடு வணங்கித் துதிப்பவர்களைப் பிறவித் துன்பம் அணுக மாட்டாது என்று பாடலின் பயனும் பயின்று வரப் பாடியுள்ளமை பக்தித் துறையை இவர் நன்கறிந்துள்ளார் என நயக்கவும் இடமளிக்கின்றது. இன்னும் இங்கே குறிப்பிடப் பெற்ற பக்தர்களை மீளப் படைப்பதற்குப் பிரமதேவனுக்கு எவ்விதமான ஏதுக்களும் இல்லை என்றும், இவர்கள் மூவகை வினைகளையும் வழிபாட்டின் திறமையால் ஒழிப்பவராவர், என்றும் பாடியுள்ளார்.

*"பங்குனி சித்திரை யாகவை காசிப் பரமனிட*
*மங்கை தருங்கந்த வேடங்கு நல்லை மயில் பிரிபோ*
*தெங்குஞ் செலுஞ் சம்பந்தன் வித்தைகள் றெய்துமென்ற*
*தங்கறிந் தும்வல வாகார்முன் றேர்பின்ன ராக்கினையே.*

*அல்லற் பழனங்கள் சூழ்நல்ல நாதனை வந்தடைந்தோர்க்கு*
*இல்லைப் பிரமக் குயவன் வனைவதற் கேதுக்களே"*

குமாரசுவாமி முதலியார் வளர வளரப் புலமையும் வளர்ந்து பெருகியது அவர் இளைஞனாயிருந்த காலத்தில் காங்கேயன்துறை வர்த்தகத் துறையில் மெத்தப் பெருக்கம் அடைந்து பலவிதமான பண்டங்களும் விலைபோன கடைகள் பலவற்றை உடையதாய்க் காலை மாலை ஆகிய வேளைகளில் பெருந்தொகையான மக்கள் அங்கே கூடித் தமக்கு வேண்டிய பல பண்டங்களையும் பெற்றுப் போனார்கள்.

முன்னர்ப் புத்தகாயாவுக்குப் போன சிங்கள யாத்திரிகளும் கல மேறிய காயாத்துறை, மாவிட்டபுரத்துக் காங்கேய மூர்த்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திறங்கிய துறையாதலின் காங்கேயன்துறை எனப் பெயர் பெறுவதாயிற்று. அங்கே குலோத்துங்கன் என்னும் பெருவணிகன் ஒருவன் பெருமளவில் இறக்குமதி செய்த கும்பகோணம் புடைவை வகைகள், பண்ட வகைகள் விலைபோனவேகம் அதிகரித்த வண்ணமிருந்தது.

பெரிய முதலாளி எனப் பெயர் பெற்ற குலோத்துங்கன், பெரும் வள்ளலாகவும், முருக பக்தனாகவும் இருந்தான். அவன் தினந்தோறும் மாலைப்பூசை கண்டு கும்பிடுவதற்குக் குதிரையேறி மாவிட்டபுரஞ் சென்று வந்தான். அவன் அழகிய குதிரையில் இளவரசன் போல் ஏறிப் போன அழகைக் கண்ட குமாரசுவாமி முதலியார் புலமைப் பெருக்கினால் அவன் மீது கற்பனைக் காதலைப் பாவனையிற் கொண்டு பெண்ணாகி இருந்து குலோத்துங்க வள்ளல் மீது தூதுப் பாடல் பாடிக் கிளியைப் போய்க் காதல் உரைத்து வருமாறு பறக்கவிட்டார். முன்னர்த் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கண்ட கிளியிடம் திருவாளனாகிய சிவபெருமானின் திருநாமத்தைத் தமக்கொருகாற் சொல்லுமாறு பாடியருளினார். இங்கே குமாரசுவாமி முதலியார் குலோத்துங்கன் மீது மாவிட்டபுரத்துக் குமரி ஒருத்தி இச்சை வைத்தாள் என்று சொல்லிவிட்டார். தூதுபோன பசுங்கிளிக்கு அமுதம் போன்ற பால் தருவதாக வாக்களித்தார்.

*"கொச்சைக் குறத்திதன் கோமானைக் கும்பிட மாவைப்பதிக்*
*கச்சைக் குதிரையின் மேலே குலோத்துங்க வள்ளல் செல்வான்*
*இச்சைப் பட்டாள் மாவையம்மாளென விங்கழைத்து வந்தால்*
*பச்சைப் பசுங்கிளியே பாலமிர்தம் பருகுவனே."*

இப்படியாக இவர் பாடிய பாடலை நயந்த நண்பர்களுள் ஒருகூர் உடுப்பிட்டியைச் சேர்ந்த அருளம்பலம் என்பவராவர். உடுப்பிட்டி அத்தி மாப்பாண கதிர்காம முதலியார் வழிவந்த வன்னி நாச்சன் என்னும் அதிகாரமுள்ள பெண் அம்பலவாணர் என்பாரை மணந்து பெற்ற மக்களுள் அருளம்பலம் என்பவர் ஒருவர். இந்த அருளம்பலம் என்பவர் தமிழ்நாட்டில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் நடைபெறும் விதத்தையும் பாடசாலைகள் ஆரம்பிக்கப் பெறும் விதத்தையும் பார்த்தறிந்து வருவதற்காக அங்கே சென்றபோது, விவேகியாய கந்தப்பிள்ளை ஆறுமுகம் என்னும் இளைஞனையும் அழைத்துச் சென்றார். (ஆறுமுகநாவலர் அவர்கள் பேர்சிவில் பெரியாரோடு போவதற்கு முன் தமிழ்நாடு கண்டுள்ளார் என்பது ஆராய்ச்சி)

இவ்வாறாகக் குமாரசுவாமி முதலியாரின் துடிப்பான தூதுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டைக் கேட்டு இரசித்த அருளம்பலம் அவர்கள் முதலியாரிடம் பழைய காலத்துக் கோவையிலக்கியம் போலப் பாவினம் பாடக்கூடிய புலவர்கள் இருக்கிறார்களோ எனக் கேட்டார். அதற்கு முதலியார் தரமான புலவர்கள் இன்றும் இருக்கிறார்கள் நாங்கள் தேடியறிதல் வேண்டும் எனக் கூறினார்.

இரண்டு மூன்று நாள்களின் பின் குமாரசுவாமி முதலியார் அருளம்பலம் அவர்களைக் கண்டபோது பல பாடல்களைப் பாடிக் காட்டினார். அருமையான கட்டளைக் கலித்துறையாலமைந்த கோவைப் பாடல்கள் அவை புதியனவாக இருப்பக் கேட்டு அதிசயித்து அருளம்பலம் அவர்கள் தம்மையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு முதலியார் பாடிவந்த அருளம்பலக் கோவை என அறிந்து ஆராமையோடு முதலியாரைக் கட்டித் தழுவி முத்தமிட்டுக் கண்ணீர் விட்டார். ஆனந்தக் கண்ணீர் வடிக்கச் செய்த அருளம்பலக் கோவையிற் சில பாடல்கள் அகப்பட்டுள்ளன என்பர். எமக்குக் கிடைத்த ஒன்றையாவது நாம் சுவைக்கலாம்.

*"திங்கா ளுடலகந் தேய்வுற மாய்வுறச் சித்தரைப்போல்*
*தங்காமல் அந்தர மார்க்கந் தவம்புரிந்தாலுந் தமிழ்*
*மங்கா துடுவை வருமரு ளம்பல மன்னன்வரை*
*கொங்கார் குழலி முகம்போன் மெனநினைக் கூறரிதே"*

இவ்வாறாகக் குமாரசுவாமி முதலியார் அவ்வப்போது பாடிய பல தனிப் பாடல்களுக்கப்பால் பாடிய அருளம்பலக் கோவையை அடுத்து, திருவிற் சுப்பிரமணியர் பதிகம், மூளாய் சித்தி விநாயகர் ஊஞ்சல். நல்லைக்கலித்துறை, கந்தவன நாதர் ஊஞ்சல் என்பனவோடு இந்திர குமார நாடகம் என சயந்தன் மீதும் ஒரு நாடகம் பாடியுள்ளார்.

முதலியாரின் தாய்வழிப் பேரனார் இரகுநாதர் என்பார் கோப்பாயில் இருந்தவர். அங்கே வாழ்ந்த ஒட்டு சுட்டான் ஊர்சுவாமியார் ஒருவர் கொட்டிலமைத்து வேல் வைத்துப் பூசித்தவர். அவர் இந்தியாவுக்கு யாத்திரை சென்று மீளாமையினால் இரகுநாதர் அந்த வேலை கண்ணகி அம்மன் கோயில் பிராகாரத்தில் கொட்டகை அமைத்து எழுந்தருளச் செய்தார். அந்த வேலை வணங்கிய முதலியார் ''சீரிய செய்யா மொழி'' எனத் தொடங்கும் ஊஞ்சற் பதிகம் பாடியுள்ளார். இவ்வாறாக முதலியார் முருக பக்தராகவே இருந்தார் என அறியக்கிடக்கிறது. அவர் திருவிற் சுப்பிரமணியர் மீது பாடிய பதிகத்தில் ஒரு பாடலைப் படித்தின்புறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'பூமேவு வாவிப் பொறிச்சிறகர் வண்டினம்*
*பொதியிணர் முறுக்கவிழ்த்துப்*
*புதுமது வருத்தியிசை கூடக் கருங்குயில்கள்*
*புத்தமிழ் துறந்து பாட*
*மாமேவு களிமயில் சிறப்பறை யடிக்கமட*
*வஞ்ச நடமாடநீடி*
*மன்னுதண் டலைதலை யசைத்து நனி நாடமிடை*
*வண்டான நன்று புகழுந்*
*தேமேவு வளமருத வயல்புடை யுடுத்திலகு*
*செங்கமலை தங்குவல்வைத்*
*திருவிலை நற்றான மாவெண்ணி வள்ளியொடு*
*தேவகுஞ் சரியுமகிழத்*
*தூமேவு சத்திகைத் தலமொளிர வெம்மனோர்*
*துயர்தீர்க்க வந்த முருகே*
*சூரநீ லக்கலப மயில்மீ துலாவிவரு*
*சுப்ரமணி யக்கடவுளே,*

இவர் இசைத்துறையும் நாடகத்துறையும் நன்கறிந்தவராய் இருந்தார் என்ப. இவர் பாடிய தனிப்பாடல்கள் பல இசைத் தமிழ்ப் பாடல்களாயிருந்தன வென்பர். இவர் வசைபாடுவதிலும் நையாண்டிப் பாடல்கள் பாடுவதிலும் வல்லவராயிருந்தார். இவர் பெரியவர்களை மதித்துப் புகழ்ந்து பாடுவதிலும் வல்லவர் என்பதும் அறியக் கிடக்கிறது. ஒரு முறை இவருடைய மனைவியாரின் நோயைக் குணமாக்கிய இருபாலைப் பரிகாரியார் ஒருவரை வெகுவாகப் புகழ்ந்து பாடியிருக்கிறார்.

இசை நுணுக்கம் அறிந்திருந்த இவர் அக் காலத்துச் சின்னமேளம் என வழங்கிய தாசி ஒருத்தியின் இசைப் பாடலைக் கேட்டு மகிழ்ந்து பாடியுமுள்ளார். சமகால நிகழ்ச்சிகளுள் ஒன்றாய அக் காலக் கொள்ளை நோய் குறிக்கும் அதனை வெகுவாக இகழ்ந்தும் பாடியுள்ளார். பகிரங்க வேலைப் பகுதியில் ஓவசியர் என்னும் உத்தியோகத்தர் ஒருவர் இவர் வளவை ஊடறுத்துப் போகுமளவில் தெருகுகட்டிய ஒழுங்கீனத்தைக் கண்டித்து வசை பாடியுமுள்ளார்.

தம்காலத்தில் வண்ணார் பண்ணையில் வாழ்ந்த சரவணமுத்துப் புலவர் அவர்களைக் காணவிரும்பி தம் விருப்பத்தை அருமையான விருத்தமொன்றில் யாத்து அனுப்பியிருந்தார். இவ்வாறாக இப் பாடல்கள் பலவாக இருந்தமையால் இவை இசைப்பாடற் கோவை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்க்கிரங்கல் பதிகம் என்றெல்லாம் பெயர் பெற்றிருந்தன.

இவர் நாடகத் துறையிலும் ஈடுபட்டவராகையால் இந்திர குமார நாடகம் என்னும் தலைப்பில் ஒரு நாடகம் எழுதியிருந்தார். இஃது இந்திரனின் மைந்தனாய அருச்சுனன், பொன்னவிர் மேனி சுபத்திரை மாதைப் புறங் கொண்டு போன காதற் சங்கதியை அருமையாகப் பாடியதாகும். இந் நாடகத்தில் வரும் அவையடக்கப் பாடல், கம்பர் பாடிய ''அறையும் ஆடரங்கும் படப் பிள்ளைகள் தரையிற் கோடிடில் தச்சரும் காய்வரோ, முறையில் ஞானமில்லாத வென் புன் கவி, முறையில் நூலுணர்ந்தாரும் முனிவரோ என்னும் அமைவில் வந்துள்ளது.

*''எழுத்தசை சீர்தளை பந்தத் தொடைபா வினமுதலாம்*
*விழுப்பொரு ளாய்ந்துண ராதவென் புன்சொற்கு மேலவர்கள்*
*வழுச்சொல்வ தென்மைந்தர் செய்தசிற் றிற்கு மரவினையோர்*
*இழுக்குரை யாரிக ழார்மிக வுண்மகிழ வெய்துவரே''*

## திருமணமும் மக்கட் பேறும்

குமாரசுவாமி முதலியாருக்குத் தாய் வழியாலும் தந்தை வழியாலும் பெரு நிலப்பரப்பு வயல்களாயும் தோட்டங்களாயும் உடுப்பிட்டியிலும் அயல் ஊர்களிலும் உரிமையாகக் கிடைத்த வழியில் ஊரிக்காடு என்னும் இடத்தில் பெருநிலப்பரப்பும் கிடைத்திருந்தது. நிலச்சுவான்தர் என அக் காலத்தில் புகழ் பெற்றிருந்த பிரபுக்களுள் இவரும் ஒருவர். புலத்தைக் கொண்ட நிலச்சுவான்தர் என்பது மாத்திரமல்ல அவர் நலம்புரி சுற்றத்தோடு புலம் புரிந்து உறைந்த மன அபிவிருத்தியாளருமாவார்.

இன்ன தகைமைகள் பல இயல்பாகவும் இயற்கையாகவும் மன்னிவளர அவர் புகழும் வளர அவருக்குப் புண்ணிய மணியகாரன் என்பாரின் புதல்வியார் சிவகாமிப்பிள்ளை என்பார் நல்லறஞ் செய்வதற்கு வாய்த்த இல்லக் கிழத்தியாயினர். இவர்கள் செய்த இல்லறச் சிறப்பினால் இவர்களுக்கு முதலில் வாய்த்த மைந்தன் சபாபதி என்பவராவார். அவரும் கல்வி கேள்விகளிற் சிறந்து யாழ்ப்பாணத்துக் கச்சேரியில் பிஸ்கால் என்னும் உத்தியோகத் துறையிற் பணியாற்றி இளமையிலேயே 1884ஆம் ஆண்டில் இறந்தார் என்பர்.

முதலியாரார் குடும்பத்தில் அடுத்துப் பிறந்த மைந்தன் கதிரைவேற்பிள்ளை என்பவராவர். அவர் 1829ஆம் ஆண்டிற் புகழோடு தோன்றினர் என்ப. கதிரைவேற்பிள்ளை இளமையிலேயே இயற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகியாய்ப் பெரும் படிப்பாளியாவதற்கு அறிகுறிகள் காணப் பெற்றன. உள்ளூரிலும் அயலூர்களிலும் படிக்கக் கூடியவற்றை இளைஞன் படித்த பின், முதலியார் தம் மகனை அவரின் பன்னிரண்டாம் வயதுப் பிராயத்தில் வட்டுக்கோட்டையில் அன்று நிலவிய சாத்திரசாலை என்னும் செமினரியில் படிக்க வைத்தார்.

பிற நாட்டினரை மிலேச்சர் எனக் கருதிய அக் காலத்து வழக்கத்தின் பிரகாரம், முதலியார் கருதித் தம் மைந்தனுக்குத் தனிவீடு எடுத்துச் சைவக்காரச் சமையலாளையும் நியமித்திருந்தார். பெரும் புரவலராகிய முதலியார் அமெரிக்க மிஷனரிமாரின் கல்விப் பணியைப் பாராட்டி அவர்களுக்குத் தானமாக ஊரிக்காட்டுப் பெருநிலப்பரப்பையும் எழுதிக் கொடுத்தார்.

கதிரைவேற்பிள்ளை இனிய சுபாவம் உள்ளவராய் எவரோடும் இணங்கி வாழும் இயல்புடையவராய்க் கற்றுவந்த காலத்தில் அக் கால வழக்கத்தின் வண்ணம் அமெரிக்கப் பெரியார் ஒருவரின் பெயரைச் சூடிக்கொள்ள வேண்டும் என்னும் நியதியின் வண்ணம் வைமன் என்னும் பேராசிரியர் ஒருவரின் பெயரைச் சூடிக் கொண்டார். பல துறைகளிலும் பெரும்புலமை பெற்ற கதிரவேற்பிள்ளை அவர்களின் பெருமையை அக் காலத்துத் தேசாதிபதி அவர்களும் அறியுமாறு அறிமுகம் செய்யப் பெற்றார்.

கதிரைவேற் பிள்ளை அவர்கள் பெரும் படிப்பாளியாகி வெளியேறி ஆசிரியர் பணி. சட்டத்தரணி வேலை, நீதவான் உத்தியோகம் எல்லாம் பார்த்துப் புகழ் ஏணியில் உச்சப்படியில் உய்ந்து பத்திரிகைத் துறையிலும், தமிழ்ப் பணியிலும், அகராதிப் படைப்பிலும் பெரும் புகழ் பெற்றுச் செந்தமிழ் வளர்த்த செம்மல் என வாழ்வாங்கு வாழ்ந்த சிறப்பைத் தாய் தந்தையர்கள் நீண்ட காலம் வாழ்ந்து கண்டு மகிழ்ந்தார்கள்.

குமாரசுவாமி முதலியார் தம்பதிகளுக்குச் சபாபதி, கதிரைவேற்பிள்ளை ஆகிய மைந்தர்களைவிட சிவகாமிப்பிள்ளை என்னும் புதல்வியும் பிறந்திருந்தார். முதலியார் தமது எண்பத்து மூன்றாம் வயதில் 30-12-1874ஆம் நாளில் மறைந்த பின்னும், அவர் மனைவியார் நீண்ட காலம் வாழ்ந்து தமது நூற்றிரண்டாம் வயதில் 1901 ஆம் ஆண்டில் மறைந்தார் என்ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை

(விலியம் நெவின்ஸ்)

(1820 - 1889)

வட்டுக்கோட்டை வேளாளன் முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை என்று தம்மைக் கூறிக்கொண்ட சிதம்பரப்பிள்ளை அவர்கள், முத்துக்குமாரு என்னும் அறிஞரின் மைந்தராவர். வட்டுக்கோட்டையை அடுத்த சங்குவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட போதிலும் அவர் தாம் வட்டுக்கோட்டையூரினர் என்றே கூறி வந்தார்.

சிதம்பரப்பிள்ளை 1820ஆம் ஆண்டில் தோன்றி, அயலில் உள்ள பெரியவர்களிடம் நாடிச் சென்று பன்னிரண்டாம் வயது வரை தாய்மொழியை நன்றாகக் கற்றறிந்தார். பன்னிரண்டாம் வயதில் வட்டுக்கோட்டையில் நிலவிய செமினரி என்னும் சாத்திரசாலையில் சேர்ந்து, விவேகிகளாய பள்ளித் தோழர்கள் மத்தியில் மிகப்பெரிய விவேகியாய்ப் படித்து வந்தார்.

செமினரியிற் சேர்பவர்கள் அக்காலத்து வழக்கத்தின் வண்ணம் ஒரு கிறிஸ்தவப் பெயரைப் புனைந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் விலியம் நெவின்ஸ் என வழங்கினார். நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் நன்கு கற்றதோடு, அம்மொழிகளின் இலக்கணங்களையும் துருவி ஆராய்ந்து பெரும் பண்டிதராயினார்.

மொழியிலக்கணங்களை விரிவாகக் கற்று விற்பத்திமானாய வேளையிலேயே, கணிதத்தையும் நியாயவிலக்கணம் என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்க்கத்தையும் கருத்தூன்றிக் கற்று, அத் துறைகளிலும் வல்லவராயினார். இவர் எட்டு ஆண்டுக் காலத்தில் செமினரியிற் கற்க வேண்டியவை அனைத்தையும் குறைவறக் கற்று முடித்தார். இவர் 1840 ஆம் ஆண்டில் பண்டிதர் தரமும், பட்டதாரித் தரமும் பெற்று ஆசிரியராய் அமர்வதற்குரிய தகுதி பெற்றார்.

கற்றுத் துறைபோன வித்தகராய நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை 1840 ஆம் ஆண்டிலேயே மொழிபெயர்ப்பாளராகச் செமினரியிலே சேவை செய்து, பல தரமான நூல்களைத் தமிழுக்கும், தமிழிலிருந்தும் மொழிபெயர்த்து வந்தார். நல்ல மொழிபெயர்ப்பாளரென நாட்டிலும் ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் பெயர் பெற்ற சிதம்பரப்பிள்ளை 1846ஆம் ஆண்டிலே செமினரியிலேயே பேராசிரியராயினர்.

ஆசிரியத் தொழிலை மேற்கொண்ட பிள்ளை அவர்கள், அன்பாதரவோடும் ஆராமையோடும் தம்மை அடைந்த மாணாக்கர்களுக்கு அருமையாக அறிவுப் பசியைத் தீர்த்து வைத்தார். இவர் ஆசிரியராயிருந்த காலத்திலும் தம் ஓய்வு நேரங்களில் அருமையான ஆங்கில நூல்களை மொழிபெயர்த்துச் செந்தமிழ்த் தொண்டு செய்து வந்தார்.

பிள்ளை அவர்கள் செமினரியில் மாணாக்கனாயிருந்த காலத்தில் கணித பாடத்தில் கடும் விவேகியாயிருந்த காரணத்தால் ''கணிதப்புலி'' எனவும் வழங்கி வந்தார். கேத்திர கணிதத்தில் எந்தக் கண்களையும் வெள்ளையர் வியக்கும் வகையில் புதுவழியாலும் சுருக்க வழியாலும் செய்தும் நிரூபித்தும் வந்தாரெனவே பெரியவர்கள் இவரின் விவேகத்தை மெச்சி 'யூகிளிட்' என்று அழைத்து மகிழ்ந்தனர்.

யாழ்ப்பாணத்து இளைஞர் பலரைச் சீரிய கூரிய அறிவாளிகளாக்கிவிட்ட செமினரி, 1823ஆம் ஆண்டிலே நிறுவப் பெற்றது. அதற்கு நான்கு ஆண்டுகளுக்குப் பின்னரே கொழும்பில் கோட்டே என்னும் நகர்ப்புறத்தில் மற்றொரு செமினரி நிறுவப் பெற்றது. வட்டுக்கோட்டை செமினரி 1823இல் தொடக்கம் 1853 வரை என்ன செய்தது என்று ஆராய்ந்து அறிக்கை அனுப்புவதற்கு ஓர் ஆணைச் சபையார் 1855இல் வந்திறங்கினர்.

கலாநிதி றூபுஸ் அண்டர்சன், வணக்கத்துக்குரிய ஏ.ஆர். தோம்சன் 22-5-1855 முதலாய் விசாரணை நடத்தியபோது, செமினரிப் பேராசிரியர்கள் சுவிசேசத்தைப் பரப்புவதற்குப் பதிலாகக் கலைத்துறை, விஞ்ஞானத் துறைகளைக் கற்பித்து, சுதேசிகளை விவேகிகளாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியதோ டமையாது, அதிபர் வணக்கத்துக்குரிய ஹொசிங்ரன் முதலானோர் தமிழ்த் தாகங் கொண்டு தமிழ் பருகியும், சைவசித்தாந்தத் திறன் இங்குத் தெளியக் கற்றும், சித்தாந்த சாஸ்திரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் வந்தனர் என்று கண்டனர்.

இங்ஙனம் குறுகிய மனப்பான்மையில் கண்ட ஆணையாளர், பரந்த மனப்பான்மையில் பணிபுரிந்த பல்கலைக்கழகமனைய செமினரியை 1855ஆம் ஆண்டிலேயே மூடும் வகைக்கு முறையிட்டனர். செமினரி முப்பத்திரண்டாண்டுப் பணியுடன் கதவுகளை மூடிக்கொண்டது.

செமினரி மூடப்படவே முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை அவர்கள் உத்தியோகமின்றி இருந்தால் புருட லட்சணம் இருக்காது எனக் கருதி, உடனடியாகத் தமிழ்நாட்டுக் கேகினார். அங்கே சென்னைப் பட்டினத்தில் உவின்சிலோ என்னும் பெரியார் பாரிய தமிழ் அகராதி ஒன்றைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். அவர் இவரை நன்கறிந்தவராகவே, இவரைத் தம்மோடு சேர்த்துக் கொள்ளவே, இவர் அவருக்குப் பக்கபலமாயும் பேருதவியாளராயுமிருந்து அகராதியைத் திறம்படத் தொகுத்து வந்தார். அகராதி வேலையில் ஐயாண்டுகள் பணிபுரிந்த பிள்ளை அவர்களுக்குப் பிறந்த நாட்டிலிருந்து பெரிய அழைப்பு வந்தது பிறந்த நாட்டை நினைத்துப் பார்த்துப் புறப்பட்டு வாருங்கள் என்பது அழைப்பின் சுருக்கம்.

ஆறுமுகநாவலர் அவர்கள் ஏழாண்டுகள் படித்த ஏழாண்டுகள் படிப்பித்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 1834ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பெற்றது. வணக்கத்துக்குரிய பேர்சிவல் பாதிரியார் நாவலரின் ஆசிரியராய், நண்பராய், சீடராய் இருந்த காலம் ஒரு காலம். பாதிரியார் நாவலரிடம் நல்ல தமிழும் வடமொழியும் பயின்று குரு விசுவாசத்தோடு ''மமகுரு'' எனப் போற்றியும் வந்தார்.

பேர்சிவல் பாதிரியார் அவர்கள் நாளடைவில் தமிழ்நாட்டுக்குச் சென்று, தினவர்த்தமானி என்னும் பத்திரிகை ஆரம்பித்து அதனைத் தமிழ்த் தாத்தா தாமோதரம்பிள்ளை அவர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் கீழைத் தேய மொழிகளின் பேராசிரியராயும் இருந்தார்.

இப்பால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வணக்கத்துக்குரிய கிரிபித், வால்ரன் முதலானோரால் நடத்தப்பெற்று வந்த காலத்தில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே தரமான புலவர்கள் ஆசிரியர்களாயிருந்தார்கள். அந்த நிரையை அலங்கரிக்கும் வண்ணம் முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை அவர்களுக்கு 1860ஆம் ஆண்டில் அழைப்புக் கிடைத்தது.

மத்திய கல்லூரி அக் காலத்தில் தலையாய தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கல்லூரி. அங்கேதான் ஒரு காலத்தில் பிறவுண் சின்னத்தம்பி என்பார் தலைமையாசிரியராயிருந்தார். அதிபரின் வேறாய் ஆளுமை வாய்ந்த ஓர் ஆசிரியர் தலைமையாசிரியர் என இருந்த காலம் ஒரு காலம். இன்னும் வைமன் கதிரைவேற்பிள்ளை மக்கென்சி கனகரத்தினம் முதலானோர் ஆசிரியர்களாயிருந்தனர்.

பின்னர் சாமுவேல் கிறினியர் தலைமையாசிரியராயிருப்ப, பீற்றர் வைரமுத்து, யோசேப் வல்லிபுரம், பிலிப் தம்பர் முதலானோர் நல்லாசிரியர்களாயிருந்தனர். இவ்வாறாகத் தலைமையாசிரியர் கிறினியர் தந்தந்தையார் மறைவு காரணமாக மனம் நொந்து, வேலையை விட்டுக் கொழும்புக்குச் சென்றார்.

தலைமையாசிரியர் பதவி வட்டுக்கோட்டை வேளாளன் முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை அவர்களைத் தேடிப்பிடித்துக் கொண்டு வந்து வரவேற்று இருத்தியது. அவரை வில்லியம் நெவின்ஸ் என்றும், நெவின்சர் என்றும் பெரியவர்கள் வழங்கினார்கள்.

மத்திய கல்லூரியில் மதிப்புக்குரிய தலைமையாசிரியராயிருந்த பிள்ளை அவர்கள் உயர்ந்த கம்பீரமான தோற்றமும் தலைப்பாகை, நீண்ட கோட், உத்தரியம், பஞ்சகச்சம் அணிந்தவராய்ச் சங்குவேலி யிலிருந்து தாளங்குடை பிடித்து காலையிற் புறப்பட்டு மத்திய கல்லூரிக்கு வந்து மாலையில் வீட்டுக்கு மீள்வது வழக்கம். வரும் போதும் போகும் போதும் ஆறுதலாக நடக்கும் அவரைப் பின்தொடர்ந்து பலர் ஓடி ஓடிப் படிப்பார்கள். நடமாடும் பல்கலைப் புலவராாய் இவர் இருந்தார் என்பர். கல்லூரி தரம் உயர்ந்து சென்னைப் பல்கலைக் கழகத்தோடு பரீட்சையின் பொருட்டு இணைக்கப்பெற்ற பெருமையும் வாய்ப்பும் பெற்றது.

போலிப் புலவர்களைக் கிட்ட அணுகவொட்டாதவராய் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள், எங்கள் பிள்ளை அவர்களை வெகுவாக வியந்து, ''அரம் போலும் கூரிய விவேக சீலர், இரு மொழிகளிலும் அரிதுணர் சொற்கள் பல அறிந்தவர். ஆங்கிலச் சொற்களைத் தமிழில் பெயர்க்குங்கால் அவற்றுக்குப் பொருளாலே நன்கியையுந் தமிழ்ச் சொற்களையும் தெரிந்தெடுத்துச் சேர்த்து வாக்கியந் தொடுக்கும் வன்மையிற் சிறந்தவர். ஆங்கிலமும் தமிழுமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகராதியும் ஒன்று செய்தவர். உவின்சிலோ அகராதிக்குத் துணை நின்றவர்'' என்றெல்லாம் எழுதியுள்ளார்.

பிள்ளை அவர்கள் பாடசாலைக் கணிதம் என்னும் துறையிலே சில திருத்தங்கள் செய்தல் வேண்டும் என்பதைத் தம் காலத்தில் வெளிவந்த இலங்கை நேசன் பத்திரிகையில் எழுதி வந்தார்.

இவருடைய கருத்தின் வண்ணம் பத்து, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது என வந்தமைந்தாற்போல் ஒன்பது பத்து (தொண்டு) தொண்பது என வருதல் வேண்டும். இங்ஙனமே ஒன்பது நூறு **தொண்ணூறு** என வருதல் ஏற்புடைத்தாகும் இவ்வாறே பத்தொன்பதாம் **பதின்றொண்டு** என வரும்.

பிள்ளை அவர்களின் பெயர் நிலைக்குமாறு அன்னார் செய்த நூல்களுள். முதலில் வந்ததும் தலையாயதுமானது நியாய இலக்கணம் என்பதாகும். இதில் மேற்கு நாட்டவரின் தர்க்கவிதிகளோடு சிவஞான சித்தியாரில் பயின்று வரும் அளவைநூலும் கலந்து வருகின்றன. இந்நூல் 1850ஆம் ஆண்டில் வெளிவந்தது. இதன் முன்பக்கத்தில் இதைப் பற்றிய விளக்கம் வருகின்றது.

''இந் நூல் தமிழிலும் இங்கிலிசிலுமுள்ள நியாய நெறிகளின் அரிய விதிகளை ஒருசார் விளக்குகின்றது. இதனை மூலமும் உரையுமாகச் செய்தவர் வட்டுக்கோட்டை சாத்திரசாலையில் உபாத்தியாயர், வட்டுக்கோட்டை வேளாளன் முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை (alias William Nevins) என்பவராவர்.''

பிள்ளையவர்கள் கருத்தாழம் மிக்க செந்தமிழ்க் கவிதைகளை உடனுக்குடன் எதுகை மோனை நயம் ததும்பப் பாடுவதில் திறமை பெற்றவராயிருந்தார். இவர் பாடிய நூற்றுக்கணக்கான சுவையுள்ள கவிதைகள் பல காற்றோடு காற்றாகப் பறந்து போனவையுமாம்.

இவர் ஆங்கிலத்திலும் புலமை வாய்ந்தவராய்த் தமிழ்ச் சந்தப் பாக்களைப் போல ஆங்கிலத்திலும் பாடி வெள்ளைக்காரரை வியக்கவும் வைத்தார். இவர் செய்த ஓய்வுநேர வேலைகளில் மதிப்புக்குரியதாயிருந்தது. இவர் குவீன்ஸ் இங்கிலிஷ் என்னும், சேஸ்ற் இங்கிலிஸ் என்னும் வழங்கிய தூய ஆங்கிலப் பதங்களுக்கு நேரொப்பான செந்தமிழ்ச் சொற்களைத் தேடித் தொகுத்தமையாகும். இந்த முயற்சி ஆங்கிலத் தமிழ் அகர வரிசை எனப் போற்றப் பெற்றது.

செந்தமிழில் உள்ள சங்க நூல்கள், காப்பிய நூல்கள், நீதிநூல்கள், இதிகாச நூல்கள் என உள்ளனற்றுள் மிக்க நயமான பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவற்றைத் திரட்டி, இலக்கியஞ் சுவைப்பவர்களுக்குப் பெருவிருந்தாய் இலக்கிய சங்கிரகம் என வெளியிட்டார். அஃது ஆங்கிலப் புலவர்கள் தங்கள் கவிதைகளைத் திரட்டும் முறையிலமைந்ததாகும்.

தமிழில் இலக்கியங் கண்டு இலக்கணம் இயம்புதல் தொன்மை மரபாகலின், இவர் இலக்கிய சங்கிரகத்தைச் சுவைக்க வைத்த பின் இலக்கணக் கடலில் மூழ்கி முத்தெடுத்துக் கோத்துப் பலவிதிகளை இலகுவாக விளக்கித் தமிழ் வியாகரணம் என்னும் நூலைச் செய்தார். இதனால் இவர் இலக்கணத்தை இலகுபடுத்திய விற்பன்னருமாவார். இன்னும் நியாயவிலக்கணம் என்றும், தர்க்கம் என்றும், அளவை என்றும் பலவிதமாக வழங்கும் துறையையும் இவர் தொட்டார். தமிழ்நாட்டில் பிற்காலத்து அந்தணர் சிலர் நையாயிக சிரோமணி எனத் தாங்களே நியாயம் கைவந்த காலம் ஒரு காலம். இவர் அவர்களுக்குப் புறநடையாக இத் துறையில் விற்பத்திமானாகி யாவரையும் வியப்படையச் செய்தார். இவருக்குப் பின் தருக்கம் வல்லவர்களுள் தருக்ககோடரி தம்பு என்னும் திருஞானசம்பந்தபிள்ளையும், சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களும் குறிப்பிடத்தக்க பெருமை வாய்ந்தவர்களாவர்.

சிதம்பரப்பிள்ளை அவர்களின் நியாயவிலக்கண நூலை முகஞ் செய்த பாடல் ஒன்று அருமையாக அமைந்துள்ளது.

*"உலகம் புகழும் நியாயலக்கணம் யுத்தியதன்*
*கலைவித்தை யென்ப நியாயநடையினுக் காதாரமாய்*
*உலருமிலக்கண மேதெளி யுங்கலை வித்தையென்ப*
*தலமின்று புந்தி யனுமிக்க வேவிதி யாய்ந்திடுமே"*

சிதம்பரப்பிள்ளை அவர்கள் இளமையிலேயே புலமை பெற்றவர். இவர் தமிழ்ப் பாவினங்கள் பாடிவந்தமையோடு, ஆங்கிலப் புலமையிலும் வெகுவாக ஈடுபட்டு, அம்மொழிப் புலவர்கள் கையாண்ட யாப்பு வகைகளையும் நன்கறிந்தவர். ஆங்கிலப் பாடல்களில் எதுகை மோனை தவழ்ந்து வருகின்றனவாயினும், எதுகை அடிகளின் இறுதிச் சீரில் அமைவதே வழக்கமாகும். இந்த மரபில் அலெக்சாண்டர் பொப் என்பார் இளமையிலேயே திறமையுற்றவர்.

இவ்வாறாக எங்கள் பிள்ளை அவர்கள் ஆங்கில யாப்பில் தமிழ்ப் பாக்கள் பாடியமை நகைச்சுவையுள்ளனவாயிருந்தன வென்பர். இவர் இளமையில் கரிக்குருவியின் மரணம் பற்றி ஓர் இரங்கற்பா பாடினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பர். ஆங்கிலத்தில் மில்ரன், கிறே முதலானோர் இரங்கற் பாடல்கள் பாடினார்கள். இன்னொரு புலவர் இறந்து போன விசர்நாயின் மீது பாடியமை நகைச்சுவையாயுள்ளது.

பிள்ளை அவர்கள் மத்திய கல்லூரியில் மதிப்புக்குரிய பெரிய உபாத்தியாயராயிருந்த காலத்தில், அக் கல்லூரிக்கு தேசாதிபதி வருகை தந்தபோது அருமையான யாப்பில் ஒரு வரவேற்பு மடல் பாடியளித்தார் என்ப.

சிதம்பரப்பிள்ளை அவர்களின் சமகாலத்தவரான தெல்லிப் பழை பார் குமாரகுலசிங்க முதலியார் என்பார் எழுதிய பதிவிரதை விலாசம் பலவூர்களிலும் நடிக்கப் பெற்றுப் பாராட்டுப் பெற்றது. அதனைப் படித்தும் பார்த்தும் மகிழ்ந்த சிதம்பரப்பிள்ளை அவர்கள் அதனைப் பாராட்டிப் பாடியுள்ளார்.

*"ஆசார ரதி வனிதை பதிவிரதை*
*விலாச தமிழமிழ்த மாந்தித்*
*தேசாரு மிதய கமலங்கள் மலர்ந்*
*தின் பசுகந் திளைக்கச் செய்தான்*
*வாசால சித்திர வித்தாரகவி மேக*
*மதி மந்த்ர மதி யூகி*
*யோசீழ உவில்யம் பார்க்குமார*
*குலசிங்க முதலிச்சுபேசன்"*

சிதம்பரப்பிள்ளை அவர்கள் மத்திய கல்லூரியிலே தலைமை யாசிரியராயிருந்த காலத்தில், அதிபராயும் உடனாசிரியர்களாயுமிருந்த ஆங்கிலேயர் பலர் இங்கிலாந்தின் பல்கலைக்கழகங்களில் விவேக முறுக்கேறி வந்தவர்களாவர். அவர்களுள் சிதம்பரப்பிள்ளை அவர்கள் கணித மேதையாகவும் ஆங்கிலப் புலமை கைவந்தவராயும், சொற்சோர்வு படாமல் விவேக பூர்வமாக உரையாடும் விற்பத்தி மானாயும் பெரும் புகழீட்டி வந்தார். இவர் மேல் வகுப்புகளிலேயே கற்பித்து வந்தார்.

இங்ஙனமாக இருபத்தாறாண்டுகள் மத்திய கல்லூரியில் கற்பித்து வந்த இவருக்கு ஒரு மனக்கசப்பு உண்டாகியது. அது மாணாக்கன் ஒருவன் பூசிச் சென்ற திருநீற்றை யாரோ ஆசிரியர் ஒருவர் அழிக்கச் சொன்னதிலிருந்து உண்டானது என்று ஊகித்துக் கூறுவாருமுளர்.

சிதம்பரப்பிள்ளை அவர்கள் சுயகெளரவத்துடன் 1886ஆம் ஆண்டில் கல்லூரியை விட்டு விலகிச் சென்ற நாளில், நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேய்ப்பனைப் பின் தொடரும் ஆட்டுக் குட்டிகள் போல மாணாக்கர் சிலர் பின் தொடர்ந்தனர். ஆட்டுக் குட்டிகளுக்குத் தகுந்த மேய்ச்சல் நிலம் காட்ட வேண்டிய மேய்ப்பனைப் போல நல்லாசிரியரான பிள்ளை அவர்கள், மாணாக்கர்களுக்கு ஒரு சைவாங்கில வித்தியா சாலையை ஆரம்பிக்க வேண்டியவரானார். ஓர் உயர்தர ஆங்கிலப் பாடசாலையை 27-12-1887ஆம் நாளில் "The native Town High School" என்னும் பெயரில் ஆரம்பித்தார். இவர் பாடசாலையை ஆரம்பித்த காலம் யாழ்ப்பாணத்தில் விக்ரோரியா மகாராணியின் ஆட்சியின் ஐம்பதாம் ஆண்டு நிறைவின் பொன் விழாக் காலமாகும். அன்று ஆனி இருபத்தெட்டாம் நாள் முற்றவெளியில் வாணவேடிக்கைகள், நாடகங்கள் நடைபெற்ற வைபவங்கள் பல. அங்கே நடிக்கப்பெற்ற நாடகங்களுள் ஒன்று 'அரிச்சந்திரவிலாசம்' என்பதாம்.

சிதம்பரப்பிள்ளை அவர்களின் தூய சைவ இதயத்திற் கருக்கொண்ட எண்ணம் உயர்தர ஆங்கிலப் பாடசாலையாக உருப்பெற்றதும், அக் காலத்தில் பெரும் புகழ் பெற்று விளங்கிய பிரவுண் சின்னத்தம்பி அவர்களின் மைந்தன் அப்புக்காத்து நாகலிங்கம் அவர்கள் சிதம்பரப்பிள்ளை அவர்களிடமிருந்து பாடசாலையைப் பொறுப்பேற்று நடத்தினார். பாடசாலையைப் பொறுப்புக் கொடுத்த பிள்ளை அவர்கள் 1889ஆம் ஆண்டின் பங்குனி மாதத்திலே இறைவனடி சேர்ந்தார்.

பாடசாலையைப் பொறுப்பேற்ற நாகலிங்கம் அவர்கள் அதனை அக் காலத்திலே தான் ஆரம்பித்து நடைபெற்று வந்த யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரிடம் 1890இல் பொறுப்புக் கொடுத்தார். அக்காலத்தில் சபையின் தலைவராயிருந்தவர் நாகலிங்கம் அவர்களின் மைத்துனரான தா. செல்லப்பாபிள்ளை என்பவராவர். இப்பெரியார் B.A.B.L. பட்டதாரியாய்த் திருவனந்தபுரத்தில் பிரதம நீதியரசராயிருந்து ஓய்வுபெற்ற உத்தமர். இவரின் அருமைத் தம்பியாரே தா. பொன்னம்பலபிள்ளை என்னும் பெரியார். இவர் தமிழ்நாட்டில் மதுபரிபாலனத் திணைக்களத்து ஆணையாளராயிருந்தவர். அருங் கலைவாணர்.

இவர்கள் சபை பொறுப்பேற்ற பாடசாலையை இந்து உயர்நிலைப் பாடசாலை என வழங்கி நல்ல இடத்திற்கு மாற்றினார்கள். அஃது இன்று இலங்கையிலேயே முதற்றரமான இந்துக் கல்லூரியாக மலர்ந்துள்ளது. 1989இல் நூற்றாண்டு கண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக் கல்லூரியின் ஆரம்ப காலத்தில் புகழ்பூத்த அதிபராய் 1892 ஆம் ஆண்டில் பதவி ஏற்ற நெவின்ஸ் செல்லத்துரை என்னும் பட்டதாரி. சிதம்பரப்பிள்ளை அவர்களின் மைந்தனாவார். இந்துக் கல்லூரி இலங்கைச் சட்டசபை யறியப் பதிவு செய்யப்பெற்றது. அதன் நிருவாகிகளுள் கௌரவ சேர் அம்பலவாணர் கனகசபை என்னும் பெரியார் குறிப்பிடத்தக்கவர்.

அடுத்த பெரியவர் அரியாலையூர் காசிப்பிள்ளை என்னும் புறொக்ரராவார். இன்னும் பசுபதிச் செட்டியார் முதலானோரும் கல்லூரியைக் கண்காணித்து வந்தனர்.

அன்று 1887ஆம் ஆண்டில் விக்ரோரியா மகாராணியின் ஆளுகையின் பொன்விழாக் கொண்டாட்டம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. அடுத்த ஆண்டில் 1888இல் பிள்ளை அவர்கள் ஐம்பதாண்டுகள் அருமையான ஆசிரியர் பணியாற்றியதால் ஒரு பொன்விழாவை அவரின் அத்தியந்த நண்பரும் உதயதாரகை ஆசிரியருமான ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை அவர்கள் அறியத் தந்துள்ளார்.

''பழைய வட்டுக்கோட்டைச் சாத்திரசாலையில் அரங்கேறிய வரும் எம்வகுப்புத் தோழருமாகிய இவர், உரையாசிரியர் நூலாசிரியர், போதகாசிரியர் என்னும் முத்திற ஆசிரியத் திறமையிற் பிந்திய இரண்டுக்கும் பாத்தியப்பட்டவர். அவற்றுள்ளும் போதகாசிரியத் திறமையிற் பெரும் பிரஸ்தாபமுற்றவர். கற்றரங்கேறிய சாத்திரசாலையிலும், அதுவொழிந்த போது அதனடியில் உற்பத்தி பெற்ற வட்டுக்கோட்டை உயர்ந்த வித்தியாசாலையிலும் அப்பால் வெஸ்லியன் மிசன் வித்தியாசாலையிலும் இப்போது பட்டினத்திலுள்ள உயர்ந்த விதாலயத்திலுமாய் முன்பின் ஐம்பது வருஷம் கணக்கற்ற மாணவர்களுக்குக் கற்பித்தாராதலில், ஆசிரியத் தொழிலில் இவரோர் சுத்தவீரரென்றாலொப்புக் கொள்ள பின்னிற்பாருளரோ? காந்தத்தால் ஈர்ப்புணும் உருக்கென இவரில் அபிமானமுறா மாணாக்கர் அரியராக இவரது ஐம்பதாம் வருட உபாத்திமை மகோற்பவங் கொண்டாடப்படலும் அருமையன்று. சென்று போன 10-10-1988ஆம் நாள் சாயந்தரம் இவர் மாணாக்கரும் நேசரும் வட்டுக்கோட்டையில் இவரிருக்கு மனைக்கு மேளதான வாகனங்களுடனே சென்று உகசரித்தழைத்து இரதமேற்றி அவருடன் பெரும் பரிவாரத்திற் செல்ல, வழியிலே நவாலியிலே இதற்கென்றிடப்பட்ட சிங்காரப் பந்தலொன்று வாரும் இங்கு தங்கிப்போமென்றழைக்க, அங்ஙன் சென்று நின்றார். வந்தார் இருந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிக்கச் சிலர் அந்நேரந் தங்கித் தாம்பூல சந்தன புஷ்ப பன்னீராதியால் உபசாரம் பெற்றனர்.

அங்கிருந்து எழுந்து வாணவேடிக்கையுடன் தொகை கொண்ட இடபரதங்கள், துரகரதங்களுடன் வரப் போய் ஒட்டு மடத்தைச் சமீபிக்க, அவ்விடத்திலே யிடப்பட்ட அலங்காரப் பந்தரும் நேசரும் இங்கு வருகவென வரிசையோடு உபசரித்தழைக்க, அங்கேயும் சில நேரந் தரித்தனர். பந்தரிரண்டிலும் உபசாரப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. ஆசிரியர் ஈரிடப் பத்திரங்களுக்குத் தக்க பிரதியுபகார வாக்கீய்ந்தனர் திரளாய்ச் சனங்கள் வெள்ளத்தோடு வெள்ளஞ் சார்ந்தாலென வந்தாரோடு வந்து சகிதமாய் வர விதாலயஞ் சென்றார். இராத்திரி காலம் அந்நாளைக் கொண்டாட்டத்தைத் தடுக்க, அடுத்த நாள் முன் நேரமும் பின்னேரமுமாய் வெகு வேடிக்கையாய் உற்சவம் நடந்தேறிற்று.

விதாலயத்திலே திருவாங்கூர் பழைய நீதியரசர் செல்லப்பா பிள்ளை அக்கிராசனராயிருந்து கூட்டத்தை நடத்தினர். உபசாரப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. தக்க பிரதியுத்தரத்தை ஆசிரியர் மொழிந்தனர்.''

பிள்ளை அவர்களின் மைந்தர்களுள் மூத்தவர் சென்னையில் வக்கீல் என்னும் சட்டத்தரணியாயிருந்து புகழ் பெற்றவர். இளையவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், கண்டி திரினிற்றி கல்லூரியிலும் அதிபராயிருந்தமையோடு, இலங்கை அரசாங்க சபையிலும் சிலவாண்டுகள் தெரியப்பெற்ற பிரதிநிதியாய், ஊர் காவற்றுறைத் தொகுதியைச் சிறப்பித்தவர். *(1934-1936)* சிதம்பரப்பிள்ளை அவர்களின் சிறந்த மாணாக்கர்கள் பலராவர். அவர்களுள் யேம்ஸ் ஹென்றி மாட்டின் என்பார் பெரும்புகழ்பெற்ற எழுத்தாளராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆராய்ச்சியார் கந்தப்பிள்ளை

(1766 - 1842)

## குலச் சிறப்பு

ஆறுமுகநாவலர் அவர்களின் அருமைத் தந்தையார் கந்தப்பிள்ளை, கந்தர் எனவும் வழங்கியவர். அவர் பன்மொழிப் புலவராயும் வைத்தியராயும், நாடகாசிரியராயும் அரசாங்க உத்தியோகத்தராயும் நூலறி புலவராயும் புகழ் பெற்றவர். அவர் நல்லூரையடுத்த கைலாசநாதர் கோயிலடியில் பரம்பரை பரம்பரையாகச் சகல செல்வங்களும் பூத்த குடும்பத்தில் வந்தவர். கல்வியும் செல்வமும் தானமும் தருமமும் பூத்த குடும்பத்தில் வந்த மூத்த தம்பியார் என்பார். ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் முதலியாராயிருந்தவர். அவரின் சந்ததியில் வந்தவர்கள் பரம்பரை சோதிநாதர், இலங்கைக் காவலர், பரமானந்தர், கந்தப்பிள்ளை ஆகியோராவர்.

## படிப்பும் உத்தியோகமும்

பரமானந்தர் புலவராயும் முதலியாராயும் இருந்தவர் உலகாத்தை என்னும் மங்கை நல்லாளை மணந்து 1766ஆம் ஆண்டில் பெற்ற மைந்தனே கந்தப்பிள்ளை. கந்தப்பிள்ளைக்கு இலங்கைக் காவலர் என்றும் பெயர் வழங்கியதும் உண்டு. இப்பெயர் இவரின் முன்னோர் ஒருவரின் பெயராகும்.

கந்தப்பிள்ளை இளமையில் சண்முகச் சட்டம்பியார் என்னும் பெரியாரிடம் படித்தவர். அக் காலத்தில் சண்முகம் என்னும் பெயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற பெரியவர்கள் மூவர் இருந்தார்கள். முதலாமவர் வெஸ்லியின் மதத்தில் சேர்ந்த பிலிப் சண்முகம் என்பவர் போதகராயிருந்தார். இன்னொருவர் பெரும் படிப்பாளியாய்ப் பிற்காலத்தில் யாழ். மத்திய கல்லூரியில் தலைமையாசிரியராய் இருந்தார். இவர்களின் வேறாய் நல்லூரடியில் வாழ்ந்த சண்முகச் சட்டம்பியார் சைவாசார குலதிலகராய், வித்தியாரம்பம் முதலியன செய்து மதிப்புடன் திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்தி வந்தார்.

இத்தகைய புகழ் பூத்த சைவப் பிரபுவாய சண்முகச் சட்டம்பியாரிடம் கந்தப்பிள்ளை ஆரம்பக் கல்வி பயின்ற பின், மேல்தரப் படிப்புப் பெறுவதற்கு வண்ணார்பண்ணையில் வைத்தீஸ்வரன் கோயிலடியில் வாழ்ந்த கனகசபாபதி என்னும் கூழங்கைத் தம்பிரானிடம் சென்றார். கூழங்கைத் தம்பிரான் தமிழ்நாட்டுத் திருவண்ணாமலை யாதீன குருவாயிருந்தவர். இங்கே எழுந்தருளியிருந்து மாதகல் மயில்வாகனப் புலவர், இருபாலைச் சேனாதிராய முதலியார் முதலானவர்களுக்கு ஆரம்ப காலத்தில் கற்பித்தவர். அவர் தமது முதுமைப் பருவத்தில் திருநெல்வேலி, அரியாலை முதலிய இடங்களிலும் சென்றுறைந்து படிப்பித்தவர். இவர் 1795ஆம் ஆண்டில் காலமானார் என்ப.

கந்தரின் இளமைக் காலத்தில் யாழ்ப்பாணம் வந்திருந்த கொழும்புத் தமிழன் ஒருவன், பிலிப் த மெல்லோ என்னும் பெயர் தழுவிக் கிறிஸ்தவரானவர். ஒல்லாந்தர் கொண்டு வந்த புறட்டஸ்தன் மார்க்கத்தைத் தழுவிய இவர், தம்மொழியோடு எபிரேயம், கிரேக்கம், இலத்தீன், உலாந்தா, போத்துக்கேயம் ஆகிய மொழிகளையும் நன்கறிந்தவர். இவர் தமிழனாய் இருந்தமையால், தமிழில் உயர்தர நூல்களை அறிந்தமையோடு மண்டல புருடர் செய்த சூடாமணி நிகண்டின் ஒரு பகுதியில் இருபது உவமைப் பாடல்களைப் பாடிச் சேர்த்தவராவர். அடுத்துப் பன்னிரண்டாம் தொகுதியிலும் நூறு பாடல்கள் பாடிச் சேர்த்தவர். யேசு மதத்தில் விசுவாசம் கொண்டிருந்த இவர், பைபிள் நூலை முதலில் தமிழில் மொழிபெயர்த்திருந்தார். இவர் கந்தருடன் நன்கு பழகி அக்காலத்து ஆட்சி மொழியாய் ஒல்லாந்த மொழியையும் சொல்லிக் கொடுத்தார்.

கந்தர் தமிழோடு வடமொழியும் நன்கறிந்து வைத்தியஞ் செய்து வந்தார். ஒல்லாந்து மொழியறிந்தவராகவே இவருக்கு அக்காலத்து முறையிலமைந்த கச்சேரியில் உத்தியோகமும் கிடைத்தது. இவர் உத்தியோகம் ஏற்றுப் பெயரும் புகழும் பெற்றுக் கடமையாற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் 1795ஆம் ஆண்டில் ஒல்லாந்தர் தமது பரிபாலனத்திலிருந்த இலங்கைக் கரைநாடுகளை ஆங்கிலேயரின் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தாரிடம் ஒப்புவித்தனர். ஆங்கிலேயர் 1796முதல் ஆட்சி தொடங்கிய வேளையில், கந்தர் சல்பேட் என்னும் பறங்கியரிடம் ஆங்கிலம் கற்றார். கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தார் சென்னையில் பழகிய முறையில் தங்கள் அரசியல் பரிபாலன அலுவலகத்தைக் கச்சேரி என வழங்கினர். கச்சேரி முறையில் கந்தர் ஆராய்ச்சி என்னும் உத்தியோகம் பெற்று, ஆராய்ச்சி கந்தர் எனப் பெயர் பெற்றார். குடிப் பிறப்பும், படிப்பாழமும் ஒழுக்க சீலமும் வாய்ந்த கந்தரை அரசாங்க அதிபர்களாய யோன் யாவிஸ், பேட்டன் பாபட், லுசிக்னன், காடெல், மொன்கொமெரி முதலானோர் நன்கு மதித்து வந்தார்கள். கந்தர் வைத்தியராயும் இருந்தமையால் கச்சேரியை விட்டுச் சென்று நோயாளரைப் பார்க்கவும் விசேட அனுமதி பெற்றிருந்தார். அவர் இளமையிலேயே நாடகங்கள் தயாரிப்பதில் ஈடுபாடு கொண்டிருந்தமையைக் கச்சேரி அலுவலர்களும் அறிந்திருந்தனர்.

## திருமணமும் மக்கட் பேறும்

யாழ்ப்பாணத்து நல்லூரைப் போல அதன் அயலில் திருநெல்வேலியும் பெருமை வாய்ந்த ஊராயிருந்தது. அது தமிழரசர் காலத்துக்குப் பின்னரும் சைவம் கமழ்ந்த ஊராயிருந்தமையால், 1622 ஆம் ஆண்டளவில் அங்கே வாழ்ந்த காராளபிள்ளை ஞானப்பிரகாசர் என்னும் பெரியார் பறங்கிய அரசாங்க அதிபருக்குப் பசுக் கன்று கொடுப்பதற்கு மறுத்தார்.

பழைய காலத்து பகாசுரனுக்கு ஒவ்வொரு வீட்டினரும் உணவளித்த முறையில், போர்த்துகேசிய அதிபருக்கு ஒவ்வொரு வீட்டாரும் முறையாகப் பசுக் கன்று கொடுக்க வேண்டியவராயினர். அந்த முறையில் ஞானப்பிரகாசர் பசுக் கன்று கொடாமலே ஊரை விட்டு நாட்டை விட்டுப் பாரதநாடு சென்று துறவியாய் தம்பிரானாகிச் சிதம்பரத்தில் திருக்குளமும் மடமும் 1650ஆம் ஆண்டளவி லமைந்ததோடு வடமொழியிலும் செந்தமிழிலும் பல நூல்கள் செய்து ஆதீனப் பெருமை பெற்றவர். சிவஞான சித்தியாருக்கு அறுவர் செய்த உரைகளுள் அவருரையும் ஒன்று.

இத்தகைய தம்பிரான் சுவாமிகள் மரபில் வந்த வேதவளத்தார் என்பார் பெற்ற சிவகாமி எனனும் பெண்ணை ஆராய்ச்சி கந்தர் திருமணம் செய்து இல்லறம் நடத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தப்பிள்ளை அவர்களின் முன்னோரும் ஒல்லாந்தர் காலத்தில் அரசாங்கத்தில் முதலியார் உத்தியோகம் பார்த்தவராவார்கள். இவர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பதினெட்டு ஆண்டுக் காலம் ஆராய்ச்சி என்னும் உத்தியோகம் பார்த்திருந்தார்.

கந்தரின் இல்லறத்தின் பயனாக மைந்தர் ஆறு பேரும் பெண்கள் ஆறு பேரும் பிறந்தனர். மைந்தருள் மூத்தவர் தியாகர், அடுத்து, சின்னத்தம்பி, பூதத்தம்பி, பரமானந்தர், தம்பு, ஆறுமுகம் ஆகியோர் பிறந்தனர்.

தியாகர் நொத்தாரிசு வேலையோடு பரம்பரை வைத்தியத்தையும் பார்த்தனர். சின்னத்தம்பி உடையார் வேலை பார்த்தார் பூதத்தம்பி இளமையிலேயே இறந்து போனார். பரமானந்தர் நொத்தாரிசு வேலையோடு நூலறி புலவனாய் கவி பாடுவதில் ஆற்றலுள்ள வராயிருந்தார். தம்பு ஓரளவுக்கு ஆங்கிலம் பயின்று அரசாங்க உத்தி யோகம் பெற்று எழுதுவினைஞராயிருந்தார். ஆறுமுகம் கடைக் குட்டி படிப்பார்வம் மிக்கவராய்ச் செல்லப் பிள்ளையாய் வளர்ந்தார். இளமையிலேயே சைவத்தை நன்றாகப் பேணி வளர்க்க வேண்டும் என வைராக்கியம் கொண்டு அதற்காகவே வாழ்ந்தார். அவரே ஆறுமுகநாவலர் என்பது இங்குக் கூறாமலே அமையும். நாவலரைப் பெற்றுத் தந்த பெருந்தவம் கந்தப்பிள்ளை அவர்களதுவாகும்.

## நாடகங்கள் எழுதியமை

ஆராய்ச்சியாளர் கந்தர் அக் காலத்தில் பிரபலிக்கமாயிருந்த நாடகக் கலையில் வெகுவாக ஈடுபட்டு இருபத்தொரு நாடகங்கள் எழுதினார் என்ப. அவர் எழுதிய நாடகங்களுள் சந்திரகாச நாடகம், இராம விலாசம், நல்லை நகர்க் குறவஞ்சி, கண்டி நாடகம், ஏரோது நாடகம், இரத்தினவல்லி நாடகம் முதலியன என்பர். இவர் இரத்தினவல்லி நாடகத்தை எழுதிக் கொண்டிருந்த போது, ஏடும் எழுத்தாணியும் கைகளில் தாங்கிய வண்ணம் 2-6-1842ஆம் நாளில் மாரடைப்புக் காரணமாக இயற்கை யெய்தினாரென்ப. இவர் சில சித்த வைத்திய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார் என்ப.

கந்தர் பாடிய இராம விலாசத்தில் இராமாயணக் கதை ஒரு பாடலில் அடங்கப் பாடியுள்ளார். இப் பாடல்களைப் போன்ற ஏனையவை கிடைத்தற்கரியனவாய் விட்டன. இவருடைய நாடகங்கள் கூட நமக்குக் கிடைப்பனவாகவில்லை. இராம விலாசத்துப் பாடலையாவது பாடியின்புறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"தருவளர் வனஞ்சூ ழயோத்தியம் பதியில்*
*த்சரத னருள்பெறு ராமன்*
*தகுகவு சியர்க்காய்த் தம்பிலட் சுமணன்*
*தன்னொடுந் தனிவனம் புகுந்து*
*செருவளர் படைகள் செலுத்துதா டகையைச்*
*சிதைத்துயா கமுநிறை வேற்றித்*
*திசுழக லிகைதன் சிலையுரு அகற்றிச்*
*சீதையைக் கண்டுவின் முரித்து*
*மருவளர் மிதிலை மணம்புரிந் தேதம்*
*வனநகர்க் கேகுமவ் வழியில்*
*வரும்பர சிராமன் வலியொடும் வில்லு*
*வாங்கியே சென்றுவாழ்ந் திருந்த*
*திருவளர் கதையை விலாசம தாகச்*
*செப்பினேன் பிழையிருந் தாலும்*
*செந்தமிழ்ப் புலவீ ரவைபொறுத் தருள்வீர்*
*தேவசா ரித்திர மெனவே."*

இங்ஙனம் செந்தமிழ்ப் புலவர்களுக்கு அவையடக்கம் போலக் கந்தர் பாடிய காலத்தில் யாழ்ப்பாணத்தில் படித்தவர் தொகை அதிகமாகவே இருந்தது. இயல் இசை நாடகம் அறிந்த மக்கட் கூட்டம் ஊர்கள் தோறும் இருந்தன. பூரணை நாள்களில் பொதுவிடங்களில் தரமான நாடகங்கள் மேடையேறி மக்களை மகிழ்வித்தன. நாடகக் கலை, முதியவர் கல்வியை வளர்த்து வந்தது.

கந்தர் ஆராய்ச்சி உத்தியோகத்தோடு வைத்தியத் தொழிலும் பார்த்தவாறே எழுத்தாளராயும் நாடகாசிரியராயும் இருநதவர். அவர் புலமையாளராயிருந்தமையோடு தம் பிள்ளைகளையும் தமிழறிந்த பெருமான்களாக உருவாக்கியவர். அவரின் பிள்ளைகளேயன்றிப் பேரப் பிள்ளைகளும் புலமை பெற்றுயர்ந்தவராயினர். அவர்களுள் மகளொருத்தி வயிற்றில் பிறந்தவரே வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளை அவர்களாவர். மைந்தன் தம்பு என்பாரின் மைந்தனே கைலாசபிள்ளை என்னும் கண்டனப் புலியாவார். இன்னும் கந்தரின் மூத்த மைந்தன் தியாகர் என்பாரின் புதல்வியை மணந்த நீர்வேலிப் பீதாம்பரப் புலவர் பெரும் புலமையாளராயிருந்தார். கந்தர் வளர்த்த செந்தமிழ், பாரம்பரியங்கள் கண்டதாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்டுவச் சுப்பையனார்

(1820 - 1896)

**ப**தினெட்டாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வாழ்ந்த சுப்பிரதீபக் கவிராயர் என்பார் மதனாபிஷேகம் என்னும் பெயர் பெற்ற மாயக் கன்னியாய பொதுமகள் ஒருத்தியிடம், பலர் வந்து பொருளிழந்து நோய் கொண்டு போன இழிவை அம்பலப்படுத்தி விறலி விடு தூது என்னும் மக்கள் இலக்கியத்தைப் பாடினார்.

ஒரு காலத்தில் திருக்கோயில்களில் மெய்யடியார்களாய், கோயிற் பெண்டுகளாய் தொண்டு புரிந்த பெண்கள் சிலர், ஆடல் பாடல் வல்லவராய்த் தம்மைத் திருக்கோயிலுக்கே அர்ப்பணித்து மனமும் உடம்பும் பரிசுத்தராய்த் தேவரடியாள் என வழங்கி வந்தனர். அவர்கள் சுவாமி வலம் வந்தபோது நடனமாடிய சிறப்பைத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், ''வலம் வந்த மடவார்கள் நடமாட'' என்றருளிப் பாடியுமுள்ளார். இத்தகைய ஆடல் மகளிருக்குப் பொன்னும் பொருளும் இன்னும் போதிய இருப்பிட வசதியும் விளைநிலமும் வழங்கிய பெருமைக்குரியவன் இராசராச சோழப் பெருவேந்தன். இப்பெண்கள் தங்கள் அபிநயத்தால் தொண்டு புரிந்து வந்தமை, ஒதுவா மூர்த்திகள் தேவாரமருளிப் பாடிய வகையிலமைந்ததாகும்.

தேவரடியார் நாளடைவில் தேவடியாளாகி, தாசியாகி, பொதுமகளாகி, ஈட்டுந் தனத்தைத் தான் விரும்பி இரண்டு தனங்களையும் தோள்களையும் பிறர்க்கு ஈந்து, ஈனமான செயல் புரிந்து சமூகத்தைக் கெடுத்து வந்தனர். இவர்களையே திருவள்ளுவர் வரைவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் என்றும், இருமனப் பெண்டிர் என்றும், பொருள் விழையும் ஆய்தொடியார் என்றும், பண்பில் மகளிர் என்றும், மாயமகளிர் என்றும் பலவாறாக இகழ்ந்து, வன்மையாகக் கண்டிப்பர்.

இவ்வாறாகக் கூழங்கைத் தம்பிரான் என்னும் பெரும் புலவரின் புரவலரும், யாழ்ப்பாணத்து அரசாங்க அதிபராய பெரியாரோடு நெருங்கிப் பழகியவரும், வணிகருமான கோபாலுச் செட்டியாரின் மைந்தன் வைத்திலிங்கச் செட்டியார், முத்துக் குளிப்பில் பெற்ற பெருஞ்செல்வத்தின் ஒரு பகுதி கொண்டு அமைத்த வைத்தீஸ்வரன் கோயில் என்னும் செட்டியார் சிவன் கோவிலில் அக் காலத்து நடனமாதாக இருந்த பெண் ஒருத்தி பேரழகி. அவளின் அழகிலீடுபட்டு மயங்கியவர்களில் ஒருவர் சுப்பையனார். அவர் மேளகார வகுப்பைச் சேர்ந்தவராகவே, அவரை நட்டுவச் சுப்பையா எனவே வழங்கினர். ஆனால் அவர் தன் தொழிலில் -ஈடுபடாது, எவருக்கும் கட்டுப்படாது கண்டதே காட்சி, கொண்டதே கோலமெனக் கொண்டு வாழ்ந்தவராவர்.

சுப்பையனார் தமது சொந்தவூராய வண்ணார்பண்ணையை விட்டு நீங்கித் தெல்லிப்பழையில் குடியேறிப் பாதிரிமாருடன் பழகிக் கிறிஸ்தவ சமயத்திலும் சில காலம் பழகி, அதனை விட்டு மீண்டுஞ் சைவராகி, ஏழாலையில் குடியேறி வாழ்ந்தவர் என்ப. அங்கே தமது உறவினரொருவரின் இரு புதல்வியர்களை மணந்து வாழ்ந்தார். இவர் காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் 1820 முதல் 1896 வரையிலான காலமாகும் என்பர்.

இவ்வாறாகச் சுப்பையனார் நடனமாது கனகியிடம் தொடர்பு கொண்டோ, அன்றி அவளால் புறக்கணிக்கப்பட்டோ அவளைப் பாட நினைந்து அவளைப் பாட்டுடைத் தலைவியாக்கி, அவளுக்குப் பழைய பாரம்பரியத்தில் நிலவிய சுயம்வரம் ஒன்றைக் கற்பனை செய்து, அவளை விரும்பியவர்களையும், அவளை அடைந்தவர்களையும் நிரையிற் கொண்டு வந்து, அவள் தோழி அவர்களைப் பற்றி அவளுக்கு அறிமுகஞ் செய்யும் பாணியில் பாடல்களைப் பாடுவாராயினார்.

அவருடைய பாடல்களில் அவர் அக் காலத்தவர் சிலர், கலையை நயக்கத் தெரியாமல், கலாவல்லியர்களைக் காமக் கிண்ணங்களாக்கிய சமூகக் குறைபாட்டை வன்மையாகக் கண்டிக்கும் நோக்கத்தோடு பச்சையாக, யதார்த்தமாகப் பாடியுள்ளார். பறங்கியர் பெயரால் நாட்டில் மர்மமாக நிலவிய நோய்களுக்குக் காரணம் அவர் பாடலிற் புலப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பையனார் நானூறு பாடல்கள் பாடியிருக்கலாம் என்பர். ஆனால் காலகதியில் ஏடுகள் சிதைந்தும் மறைந்தும் போக ஒரு சில பாடல்களைக் கண்டு அவற்றை முதலில் அச்சிட்டவர் நவாலியூரினரான தமிழறிஞன், ந.சி. கந்தையாபிள்ளை என்பவராவர். அவர் கனகி புராணம் (தெரி கவிகள்) என்னும் தலைப்பில் தாம் தொகுத்தவற்றைத் தியாகராயநகரில் ஒற்றுமை ஆபீஸ் என்னும் நிறுவனத்தின் மூலம் சத்தியநேசன் அச்சகத்தில் 1937ஆம் ஆண்டில் அச்சிட்டு மூன்றணாவுக்கு வெளியிட்டார். பதினாறு பக்கங்களுள், ஒரு முகவுரையோடு இருபத்தெட்டுப் பாடல்களையும் வெளியிட்ட அவர், தமக்குக் கனகி புராணக் கவிகளைத் தொகுத்தனுப்பியவர் நீர்வேலி வாசரும், பிறப்பு இறப்புப் பதிவாளரும் புலவருமான சிற்சபேசன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் ஒரு பக்கத்தில் முன்னர் பாவலர் சரித்திரதீபம் எழுதி வெளியிட்ட யே. ஆர். ஆணல்ட் என்னும் சதாசிவம்பிள்ளை அன்று 1886ஆம் ஆண்டில் எழுதிய சுப்பையாப் புலவர் வரலாறு என்னும் பகுதியையும் தந்துள்ளார்.

''யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேளகாரப் பகுதியைச் சேர்ந்த இவர் தஞ் சுயசாதித் தொழிலிற் பயின்றிராத போதும் வழக்கமாக ''நட்டுவச் சுப்பையன்'' என்றே அழைக்கப்பட்டார். சிறுவயதிலே இவர் தெல்லிப்பழையிலே இருந்த அமெரிக்க மிசனரிமாரைச் சேர்ந்து கிறீஸ்து மதானுசரியாய் நடந்தும், மறுபடி மதம் மாறி மல்லாகம் கோயிற்பற்றைச் சார்ந்த ஏழாலைக் குறிச்சியிலே விவாகஞ் செய்தும் அவ்வூரைத் தம் உறைபதியாக்கினர்.

இவரை நாம் கண்டிருந்தும் இவரது கல்வி சாதுரியங்களைக் குறித்து யாதும் உணரோம். இலக்கண இலக்கியங்களிற் பயின்றவரோ, அன்றி வாணி வாக்கில் உறையப் பெற்றவரோ, யாதுமறியோ மாயினும், வண்ணார்பண்ணைச் சிவன்கோயில் தாசிகளுள் ஒருத்தியும், இற்றைக்குச் சிலநாள்களின் முன் இறந்தவளுமாகிய கனகி என்பவள் மீதிற் ''கனகி சுயம்வரம்'' எனப் பாடிய பாடலால் நல்ல சாமளமான புலராயிருந்தாரென்று அறிகின்றோம். அப் பாடலில் முன்பின் நானூறு விருத்தங்கள் ஒவ்வொன்றும் பாரத காவியம் துரௌபதி மாலையிட்ட சருக்க விருத்தங்கள் போல்வன.''

கந்தையாபிள்ளை தமது முகவுரையில் சுப்பையனாரைப் பற்றிக் கூறும்போது, அவர் சொற்சுவை, நகைச்சுவை, ததும்பும் செய்யுள் பாடுவதில் இணையற்றவர்'' என்றும் ''கனகியின் மோகவலையிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டோர் எய்திய எள்ளத் தகுந்த கீழ்மையினை எடுத்துக் காட்டி, என்றும் தாசிகள் நேசம் மோசம் என்பதை உலகிற்கு வலியுறுத்தற்கே நம்புலவர் கனகி புராணம் என்னும் நூலையாத்தனர்'' என்றும் கூறுவர்.

இன்னும், ''சுப்பிரதீபஐயர் மதனாபிஷேகத்திற் சிக்கித் தான் பட்ட பாட்டையும் கெட்ட கேட்டையும் உலகுக் குணர்த்தப் பாடிய விறலிவிடு தூதை நிகர்ப்பது இந்நூல்'' என்பர்.

கந்தையாபிள்ளை அவர்கள் தமக்குக் கிடைத்த பாடல்களைத் தெரிகவிகள் எனத் தலையங்கமிட்டு இருபத்தெட்டுப் பாடல்களைத் தந்துள்ளார். இவை பிள்ளையார் காப்பு ஒன்று. நாட்டுப்படலம் ஒன்பது, மகளிர் புனலாடல் என ஏழு, சுயம்வரப் படலம் பதினொன்று, வெட்டை காண் படலம் ஒன்று என வந்துள்ளன. இப் பாடல்களை இவ்வாறாகத் தொகுத்துத் தமக்கு அனுப்பியவர் நீர்வேலி வாசர் சிற்சபேசன் என்பர். சிற்சபேசன் தமது ஞாபகத்திலிருந்து எழுதி அனுப்பினார் என்பது தேற்றம். இது நிற்க.

## வெள்ளிப் பாடல்கள்

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்துப் பெரும் புலவர்கள் வரிசையில் வந்த வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் இடைச் செருகல் பாடுவதில் இணையற்றவர். அவர் பல புராணங்களின் ஏடுகளுள் தாம் பாடிய பாடல்களையும் செருகிப் பெரும் புகழ் பெற்றவர். அவர் தம் பாடல்கள் அவர் பெயரால் வெள்ளிப் பாடல்கள் என வழங்குவன. இன்றைய ஆராய்ச்சிப் புலவர்கள் இடைச்செருகல்களைத் தரம் கண்டு பிரித்தறியும் தனியாற்றல் பெற்றுள்ளார்கள்.

இவ்வாறாக சிற்சபேசன் தொகுத்தனுப்பிய பாடல்கள் அவர் ஞாபகத்திலிருந்து வந்தனவோடு, தாமியற்றினவாகவும் வந்தன என்பது அவரே மெய்ப்பாட்டோடு ஒப்புக்கொண்ட உண்மையுமாயிற்று. எனவே இன்று கனகி புராணத்துள்ள பாடல்களில் உள்ள நாட்டுப்படலம் பதினாறு பாடல்களும் இடைச்செருகலானவை.

இவற்றுள் ஒரு பாடலே விஞ்ஞான முதுமானிப் பட்டதாரியும், வித்தியாதிகாரியும் செந்தமிழன்பருமான அருணந்தி அவர்கள் வெகுவாக நயந்து 1946ஆம் ஆண்டில் வானொலியில் இரசித்தது. அவ்வொலி கேட்டு உவகையோடு மெய்ப்பாடுற்ற நீர்வைவாசன் சிற்சபேசன் ''ஐயோ இது நான் பாடிய பாட்டு'' என்று அழுதழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியது, தன்பாட்டிற் பாடிய சிற்சபேசனின் பாட்டு உண்மையில் சுவையானதுதான்.

*"புல்லைமேய்ந் தங்குநின்று திமிர்புரி யிடபக்கன்று*
*முல்லைசார் வழியதாக முடிமிசை குடையைக் கொண்டு*
*செல்லுவார் தம்மைக் கண்டு சினந்துவா லெடுத்துமூசிக்*
*கல்லையுங் கயிற்றி னோடுகாட்டிடை யிழுத்துச் செல்லும்"*

இவ்வாறாக வருமானவரிக் கந்தோரில் உயர் உத்தியோகம் வகித்த வட்டுக்கோட்டை மக்கள் கவி மு. இராமலிங்கம் அவர்கள் தாம் சென்ற விடமெங்கும் நாட்டார் பாடல்களைத் தேடித் தொகுத்துச் சுவைத்துச் செந்தமிழ் வளர்த்தவர். அவர் தாம் தேடித் தொகுத்த பாடல்களை அருணந்தி அவர்களின் முன்னுரையோடும் புலவர் சிவங்கருணாலய பாண்டியனார் விரிவுரையுடனும் சுதந்திரன் அச்சகத்தில் கொழும்பில் 1961ஆம் ஆண்டில் அழகாக ஐம்பது சத விலையில் வெளியிட்டார். அனுபந்தத்தோடு இருபத்தைந்து பக்கங்கள் கொண்ட இந்நூல் இலக்கிய இரசிகர்களுக்குப் பெருவிருந்தாயிருந்தது.

இராமலிங்கர் பதிப்புக்கு உதவியாயிருந்தவர் வவுனியா நகரச் சங்கத்து முன்னாள் தலைவர் தருமலிங்கம் என்றும், இவர் கொடுத்த பிரதியுள் சிற்சபேசரின் இடைச் சொருகுதல் இல்லை யென்றும் காட்டியுள்ளார். இப்பதிப்பில் பிள்ளையார் காப்பு ஒன்று, நாட்டுப் படலம் இரண்டு, சுயம்வரப் படலம் பத்தொன்பது. வெட்டைகாண் படலம் மூன்று என எல்லாமாக இருபத்தைந்து பாடல்கள் வந்துள்ளன.

இவ்வாறாக இப்பதிப்பில் சுயம்வரப் படலத்தைச் சேர்ந்த ஒன்பது பாடல்கள் புதிதாகப் புகுந்துள்ளன. இப் பதிப்புக்கு வாய்த்த பெருஞ் சிறப்பு பாண்டியனாரின் பரந்தவுரையாகும். பைந்தமிழ்ச் சுவை பருகுவதற்குப் புலவர் பாண்டியனாரின் உரை பாயசம் போலுள்ளது.

நட்டுவச் சுப்பையனார் கனகி சுயம்வரம் எனப் பெயரிட்டுப் பாடிய நூலில் எடுத்த எடுப்பிலேயே கனகியின் கட்டழகை எமக்குக் காண்பிக்கின்றார். அவளின் தனங்கள் அருந்தவத்தவர் உயிரையும் குடிக்குமளவில் புடைத்து அடங்காமல் சுணங்கு பரந்து பருமித்துக் குத்துந் தன்மையில் நின்றன என்பர்.

அவளுடைய கொங்கைகளாகிய குடங்கள் அசையக் கண்டு, அவளுடைய ஒயிலைக் கண்டு, அரசர்களும் அவளுக்குப் பின்னே தொடர்ந்து போனார்கள். முற்றுந் துறந்த முனிவர்களும் யோக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதியை விட்டு அவளைப் பற்றித் தியானஞ் செய்தார்கள். சுத்த சைவ மடாதிபதிகள் யாவரும் தங்களுடைய மடத்தைக் கதவடைத்துவிட்டு, சிவபூசையையும் தம் பெட்டகத்துள் கட்டி வைத்துவிட்டார்கள்.

*நடந்தா ளொரு கன்னி மாராச*
*கேசரி நாட்டிற் கொங்கைக்*
*குடந்தா னசைய வொயிலா*
*யது கண்டு கொற்றவருந்*
*தொடர்ந்தார் சந்நியாசிகள் யோகம்*
*விட்டார் சுத்தசை வரெல்லாம்*
*மடந்தா னடைத்துச் சிவ*
*பூசையுங் கட்டி வைத்தனரே.*

சுயம்வரப் படலத்திலே வரும் பத்துச் செய்யுட்களும் சுவையானவை. அவை கனகியின் அழகையும் அவளின் கபடச் செய்கைகளையும், அவள் கவர்ந்த கட்டிளங் காளைகளின் ஊர் பேரையும். அவர்கள் வீரப் பிரதாபங்களையும், அவர்கள் கொண்ட காமத்தையும் இன்ன பிறவற்றையும் ஒளிப்பு மறைப்பில்லாமல் பச்சையாய் யதார்த்தமாய்க் கூறுவன.

கனகியின் தோழி கனகியை மானே, மரகதமே, தேனே என்றெல்லாம் விளித்துப் பாடும்போது, உவமான சங்கிரகத்தில் உள்ள உவமைகள் எல்லாம் அள்ளிச் சொரியும் தன்மையில் புலவர் சுப்பையனார் நன்றாகக் கற்றவர் என்பது புலனாகிறது. சங்கீன்ற முத்துப் போன்றவள், அவளுடைய முலை பாற்கடலைக் கடைந்த மந்தரமலை போன்றவை. அன்றி, தாமரையின் அரும்பு, கோங்கின் மொட்டு, யானையின் கொம்பு, மன்மதனின் முடி, வில்வப்பழம் என்பனவும் மேலானவையென இனி உவமை கூற முடியாத உவமேயமாயுள்ளவை என்பர்.

கனகியின் கபடம் அவள் தன் மேல் படர்ந்த தேமல் ஊரார் கண்ணுக்குப் புலப்படாத வகையில் உயர்ந்த சாந்து அணிந்தும் கட்டுக்கடங்காத் தனங்களை இரட்டைப் பட்டு இரவிக்கை கொண்டும் இறுக்கிக் கட்டியும், பொருள் கவரும் வேளையில் பாதி திறந்து காட்டியும் கொள்பவள் என்பர்.

தனமும் கூந்தலும் அழகு தருவன என்பதோடு, கண்ணும் அழகை அதிகரிப்பது என்பது தோன்றப் புலவர் சுப்பையனார் கனகியின் கண்களையும் வருணிக்கிறார். புள்ளிமான், கயல் மீன், கருங்குவளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூ, மாம்பிஞ்சு, வேல் என்பனவெல்லாம் கூறி, அக் கண்கள் நஞ்சோ, அமுதோ, கூற்றோ எனக் கூறும் வகையில், ''நஞ்சி னமுதினோ டுறவு கொண்டிடும் விழியுடைக் கனகே'' என்பர்.

இனி எங்கள் பிரதேசத்தின் கற்பகத் தருவாய பனையையும் காமதேனுவாய பசுவையும் கருத்திற் கொள்ளும்போது, பனை முன்னணியில் நிற்கிறது பனை எமக்கு அன்று பஞ்சம் தாங்கிப் பயிராய் நிலவிய காலத்தில் ஒவ்வொரு பழமும் பெறுமதியானதாயிருந்தது. பனம் பழம் விழக் கேட்டதும் தோப்பையடுத்து வாழ்ந்த மக்கள் இருளைப் பாராமல் ஓடிப் பொறுக்கி எடுப்பது வழக்கம். அதனால் பெரிய கைகலப்பு உண்டானதோடு ஊரவர் கூடி ஆயுத வகைகளைக் கையாண்ட வைபவத்தையும் அருமையாகப் பாடுவர். ''தாலக்கனி யொன்றினுக்காகத் தரைமேல் மாந்தர் பலர் திரண்டு வேல் கத்திகள் கொண்டெறிந்து மிகவிசயம் பொருந்தும் வளநாடன்'' என்பது பனையின் சிறப்பு.

இவ்வாறாகச் சுயம்வரத்தில் வந்திருந்தோரில் தோழியின் தகவுரை பெற்றவன், திருமலைச் சின்னையன் என்பவனாவன். ''கனக மின்னே! மனத்துக்கிசைந்த மணவாளன் இவன்றான், மகிதலத்தில் தனத்துக் கிவனே, சரச மொழி தனக்குமவனே, தான் கொள்ளும் சினத்துக்கிவனே'' என்பது பாடல்.

இனி கனகியிடம் விளக்கை நாடிப்போன விட்டில் கெட்டொழிந் தாற் போலப் பலர் கெட்டொழியப்பட்ட பாடெல்லாவற்றையும் புலவர் கூறுவதோடு, அவர்கள் கொண்ட வெட்டை நோய் காரணமாகச் சிறுநீர் கழிப்பதற்கு முட்டுப்பட்டனர் எனவும் பாடுவர்.

இவ்வாறாக இன்னிசை, சொற்சுவை, நகைச்சுவை, அழுகைச் சுவை யாவும் ததும்பும் இந்நூலின் முழுச் செய்யுள்களையும் தேடிப் பெறுவதற்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் 1935ஆம் ஆண்டு முதலாக அரும்பாடுபட்டதோடு, இவற்றைத் தேடிக் கொடுப்பவர்களுக்கு ஐந்நூறு பொற்காசுகள் கொடுப்பதாகவும் வேண்டுகோள் விடுத்திருந்தனர் என்ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டை வேலாப் போடியார்

(1804 - 1880)

இலங்கையில் தமிழ் கூறும் நல்லுலகம் என வழங்கும் வடமாகாணம் போலக் கிழக்கு மாகாணமும் பண்டைக்காலம் முதலாக நிலவி வருகின்றது. கிழக்கு மாநிலமென வழங்குகின்ற போதிலும், அது வடக்கோடிணைந்த இரட்டை மாநிலமேதான். கிழக்கிலங்கைக் கரையோரமெங்கும் குடியிருந்த பழந்தமிழர் அங்கே குடியிருப்பு எனவும், வெளி என்றும், ஊர் என்றும், பட்டி என்றும், பற்று என்றும் இன்னும் பலவாய தமிழ்ப் பெயர்கள் இட்டும் வாழ்ந்து வந்தார்கள். அங்கே சங்க காலத்துச் செந்தமிழ் பேச்சுவழக்கிலே வழங்கி வருகின்றதென்றால் தமிழர் வந்தேறு குடிகள் அல்லர் என்பது பெற்றாம். மட்டக்களப்பின் பண்பாடு தனித் தமிழ் மயமானது அங்கே காலத்துக்குக் காலம் தரமான தமிழ்ப் புலவர்கள் தோன்றிச் செந்தமிழ் வளர்த்து வந்துள்ளார்கள்.

பழைய புலவர்களை விட்டுப் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புலவர்களை ஆராயும்போது, நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே 1804 ஆம் ஆண்டில் மருதநில வாசியாய ஒரு பெரும் புலவர் தோன்றியிருந்தமையை அறியலாம். இப் புலவர்பிரான் கேள்வி ஞானத்தால் புலமைபெற்றதோடு மக்கள் கவி என மதிக்கத் தக்கவராய்ச் சனரஞ்சகமான பாடல்களை எடுத்த எடுப்பிலே பாடி வந்தமையை அறியலாம். இவர் ஐந்திலக்கணங்களில் எதனையுமே அறியாதவர் என அறியக் கிடக்கிறது.

இவர் மக்களை மகிழ்விப்பதற்காக அவ்வப்போது பாடிய பாடல்கள் இலக்கிய நயம் நிறைந்தனவாயுள்ளன. இவருடைய கவிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழ்த் திறனுள்ளனவாகப் பிறந்து, நாளடைவில் மந்திரசக்தி வாய்ந்தனவாயும் மலர்ந்துள்ளன. ஒழுக்கந் தவறியவர்கள் மீது பாடிய வசைக் கவிகள் சிலவிடங்களில் கேடுகளையும் ஆக்கங்களையும் விளைவித்துள்ளன.

## தோற்றமும் இளமைக் காலமும்

மட்டக்களப்பு மாநிலத்தில் பெருமளவு மருதநிலச் சொந்தக் காரனாய சின்னத்தம்பி என்னும் செல்வருக்கும் அவர் மனைவி கெங்காத்தை என்னும் மாதரசிக்கும் மைந்தனாக 1804ஆம் ஆண்டில் பிறந்த மைந்தனுக்கு முருகப் பெருமானின் திருநாமங்களிலொன்றாய வேலன் எனப் பெயரிட்டனர். இவர் வளர்ந்து பெரியவராய காலத்தில் எல்லாரும் வேலாப் போடியார் என மரியாதையோடு வழங்கினார்கள். வேலாப் போடியாரின் தலைமயிர் உதிர்ந்து தலை வழுக்கையானதால் எல்லோரும் இவரை மொட்டை வேலாப்போடியார் என வழங்கியதும் உண்டு.

போடியார் இளமையில் அவ்வூர் வழக்கத்தின் வண்ணம் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தார். இவர் படித்த காலத்திலே இளமையிலேயே விட்டகுறை, தொட்ட குறை என்னும் முதுமொழிக்கிணங்க, இவருக்குப் படிப்பு நன்றாக வந்தது. இளமையிலேயே பாரிய வயல் நிலத்தை விளைவு செய்தும், ஓய்வு நேரங்களில், மக்கள் இலக்கியங்கள் என மதிக்கப்பெற்ற பள்ளு, ஊஞ்சல், அம்மானை, சிந்து என்னும் பிரபந்தங்களையும், பலவாய தனிப் பாடல்களையும் நன்றாகப் படித்துச் சுவைத்து வந்தார். இவர் பாடல்களைச் சுவைத்த அளவில் நில்லாது, அந்த அந்தப் பாடல்கள் போலத் தாமும் பாடவும் ஆரம்பித்தார். பாடல்கள் தாமாகவே இவர் நாவில் வந்தன. இத்தகைய பாடல்களை ஓய்வு நேரங்களில் மரத்தடிகளிலமர்ந்து நண்பர்களுக்குப் பாடிக்காட்டி இலக்கிய ரசனை செய்து வந்தார்.

பாடல்கள் பாடும் வல்லமை வாய்ந்த இவர் ஒழுக்கங் கெட்டவர் களைத் திருத்துவதற்காக நிந்தனையாகவும், நையாண்டியாகவும் சில பாடல்கள் பாடியதும் உண்டு. இவரும் நண்பர்களும் ஒரு மரநிழலில் மண்மேட்டிலமர்ந்து இலக்கிய ரசனை செய்து வந்தமையைக் கண்டு பொறாமை கொண்ட செல்வன் ஒருவர் அந்த மருத மரத்தின் கிளைகளை வெட்டுவித்தார். இவருக்கும் நண்பர்களுக்கும் நிழலில்லாது போகவே, இவர் கோபித்துப் பாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"முத்தர் பாண்டியர் மூவர் இருக்கின்ற*
*மத்தியான மருத நிழல் தனைக்*
*கத்தி கொண்டதன் தந்தற வெட்டினான்*
*சத்தி வேலவன் தலையற வெட்டுவாய்"*

இவ்வாறாக மருதங் கிளைகளை வெட்டிய கூலியாள், தன் மாடுகளை வீடு நோக்கிச் சாய்த்துக் கொண்டு போன வழியில் மயங்கி வீழ்ந்து இறந்தான் என்பர். பாட்டில் வரும் முத்தரும் பாண்டியரும் இவர் தம் நண்பர்கள் என்றும், அவர்கள் இவருடன் மரத்தடியில் வழக்கமாகக் கூடிப் பேசுபவர்கள் என்றும் கூறுப.

இவ்வாறாக மட்டக்களப்பில் கோளாவில் என்னும் பகுதியில் முத்தி என்பாள் ஒருத்தி, வலியன் என்னும் சிங்கள வாலிபனோடு தொடர்பு கொண்டிருந்த காலத்தில் அவன் மந்திரவாதியாகிக் கழிப்புகள் செய்து பிழையான வழியில் நடந்தான். இவர்கள் செயலைக் கண்டு கோபங் கொண்ட போடியார், இவர்களின் சீர்கெட்ட தொடர்பைச் சிலேடையாகக் குறிப்பிட்டு வசை பாடவே அவ்வாலிபன் ஊரைவிட்டு ஓடிவிட்டான் என்பர்.

"ஒன்பது கிரகங்கட்கும் மண்களால் உருவஞ் செய்யும் சிங்கள வலியன் அவன் எங்கடி தொட்டான்?" என்று தொடங்குவது அப் பாடல்.

இவ்வாறாக இவர் தனிப் பாடல்களேயன்றி ஊஞ்சற் பதிகங்கள் முதலான இலகுவான இனிய பாடல்களையும் இலகுவாகப் பாடி மக்களை மகிழ்வித்து வந்தார். இவர் ஒரு சிறு சம்பவத்தை வைத்து ஒரு பள்ளுப் பிரபந்தம் பாடினார் என்பர்.

தம்பிலுவில் என்னும் ஊரில் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வேலை பார்க்க வந்தவர் ஒருவர், அங்கே பிழையான வழியில் ஒருத்தியோடு தொடர்பு கொண்டிருந்தமையை அறிந்த ஊரவர் அந்த உத்தியோகத்தருடைய காதை எட்டின மட்டில் அறுத்துவிட்டனர். காதறுந்த அவர் ஊரை விட்டுப் போனதற்கு வருந்திய அப்பெண் அவர் மீதிரங்கி பசுமாட்டையும் கன்றையும் இரகசியமாக அனுப்பினாளாம். புலவர் நாவிற் பிறந்த தம்பிலுவில் பள்ளு என்னும் மக்கள் இலக்கியத்தைப் பாடினார்.

*"காதறுந்த வேதனைக்குப் பால்கறந்து உண்ணவென்று*
*காரிகையாள் மாடுகன்று தான் கொடுத்தாளாம்*
*காதறுந்து நாவரண்டு காமவிடாயால் மெலிந்து*
*காட்டகத்திற் பேயதுபோல் ஓடலுற்றானாம்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாகப் போடியார் காலத்துக்குக் காலம் ஊரவர், நண்பர்கள் வேண்டுகோளை மீற முடியாமற் பல பாடல்கள் பாடிய வகையில் அயலிலுள்ள சில கோயில்களுக்கு ஊஞ்சற் பதிகமும் பாடினார் என்ப. அப் பாடல்கள் யாவும் வருணனை அழகு மிக்கனவாய்ச் சொல்லலங் காரச் சிறப்புடையனவாயிருந்தன வென்ப. அவர் பாடிய பாடல்கள் இன்று கிடைப்பதில்லை. அவரைப் பற்றி மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நூலியற்றிய பண்டிதர் வீ.சீ. கந்தையா அவர்கள் ஓரளவுக்கு எழுதியுள்ளார்.

போடியார் பாடிய சந்தப் பா வகையில் ஒரு பெண்ணின் அங்க லட்சணத்தைக் கூறி அவளின் காதல் வரலாற்றையும் குறிப்பிட்டுள்ளார்.

*செம்பவ ளப்பொருள் திங்கள் முகத்துதி*
*தேன்மொழி யாளுடைய - நல்ல*
*கும்பமு லைக்கிணை வெங்கட கக்கரிக்*
*கோடென ஓதிடலாம்.*

*ஆசை மிகுந்தஎன் நேசஞ் சிறந்தபெண்*
*ஆடர வப்பதுமை - நல்ல*
*மோகந் தணிந்தஎன் நேசம் மிகுந்தநல்*
*முலையில் தேமலுமாம்.*

*தங்கத் தகடும் குவளைக் குமையும்*
*சரிந்த இளமுலையாள் - அந்த*
*மங்கைக் கொருவர் வடுவுகள் சொல்ல*
*மனதில் முடியாதாம்.*

*மின்னற கொடியிடை கன்னித் திருவுரு*
*மெல்லிநல் லாளுடைய - அந்த*
*வண்ணத் தொடைக்கிணை கன்னிச் சினையின்*
*வராலென ஒப்பிடலாம்.*

*பச்சை நரம்பும்வெண் பால்முலைக் கோடும்*
*பசும்பொன் னரத்தொடையும்*
*அச்சமில் லாததோர் நெஞ்சு முடைய*
*அரிவையும் வந்தனளாம்.*

*(வேறு)*

*பாலைப் பழித்தசொல் லாளைச் சிறந்த*
*பதியில் மணம்மு டித்து*
*வேலப்பர் தன்திருக் கோயிலிற் பூசை*
*விரும்பி நடத்தினராம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பாடல்கள் பாடி வந்த போடியார் என்னும் புலவர் எழுபத்தைந்து வயதளவும் வாழ்ந்து 1850ஆம் ஆண்டில் இயற்கையெய்தினார் என்ப. இவரின் குடும்பத்தில் பேரனாகப் பிறந்த இளைஞன் ஒருவன் புலவராகிப் பல பாடல்கள் பாடி வந்தாரென அறியக் கிடக்கிறது. இவர் பாடிய நூல்கள் கும்மி, சிந்து வகைகளைச் சேர்ந்தவையாம் என்ப. இவர் பாடிய கதிர்காம விருத்தத்தில் ஒரு பாடல் தந்துள்ளார்கள்.

*"ஊரிலுள்ள பேர்களெல்லாம் வளைத்தி ருக்க*
*ஒடுங்குகின்ற பிரணவந்தான் ஓங்கி நிற்கச்*
*சாடுகின்ற எமதூதர் தலைமேல் நிற்கத்*
*தனைமறந் தெனதுயிர்தான் சாகும் போது*
*ஆதியென்ற அட்சரத்துள் அடங்கி நின்ற*
*அறுமுகனே வந்தெனக்கு அபயந் தாதா*
*தேடிவந்துன் கதிரைமலை தன்னில் வாழும்*
*சுவாமிசிவன் மகனே உனைநாளும் தெரிசிப்பேனே."*

## தமிழில் மிகப் பழைய நூல்

*இன்றுள்ள தமிழ் நூல்களுள் மிகப் பழையது தொல்காப்பியம். தொல்காப்பியம் செய்த தொல்காப்பியனார் தமக்கு முன் வாழ்ந்து நூல்கள் செய்தவர்களைப் பற்றி இருநூற்றறுபது இடங்களில் குறிப்பிடுகின்றார். இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்னரே பல இலக்கண நூல்கள் இருந்தன. இலக்கணஞ் செய்வதற்கு இலக்கிய நூல்கள் இன்றியமையாதவை. எனவே இலக்கிய நூல்களின் காலம் இன்னும் முற்பட்டதாகும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை வே. அகிலேசபிள்ளை
(1853 - 1910)

சிவபூமியாய இலங்கையில் தென்கலை எனவும், பெயர் பெற்ற புனிதபூமி, கிழக்கு மாகாணத்தின் ஒரு மாவட்டமாய் நெடும் பண்டைக் காலம் முதலாகச் சைவத் தமிழர் வாழ்விடமாயமைந்துள்ளது. வரலாற்றுக் காலத்திற்கு முந்திய இதிகாச காலத்துப் பெருமையும் வாய்ந்த திருக்கோணமலை, அகத்தியர் முதலாய முனிவர்களாலும், இராவணன் முதலாய அரசர்களாலும் புகழ் பெற்றது. பழைய காலத்து கிரேக்கர், உரோமர், பினிசியர், பாரசீகர், அரேபியர் திருக்கோண மலையிலுள்ள உலகப் புகழ் பெற்ற இயற்கைத் துறைமுகத்தை நன்கறிந்திருந்தனர். அவர்கள் பொன்னொடு வந்து பொருளொடு போன வரலாறு உலகமறிந்தது.

பல்லவ வேந்தர் காலத்தில் பத்தியிலக்கியஞ் செய்த திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் இதன்கண் அமைந்திருந்த திருக்கோணேசுவரர் ஆலயத்தையும் இறைவனையும் இறைவியையும் தீர்த்தத்தையும் அருமையாகப் பரவிப் பாடியருளியுள்ளார். அப்பரடிகளும் சிவபெருமான் இங்கே எழுந்தருளியுள்ளார் என்று பாடியருளியுள்ளார். முருக பக்தராய அருணகிரிநாதர், முருகன் குன்றுதோறாடல் புரியும் திருவிளையாடலில் திருக்கோணமலையிலும் விளையாட்டயர்ந்து வருகிறார் என்பர்.

சிவாலயங்களும் சிவலிங்கங்களும் தேவியாலயங்களும் முருகனாலயங்களும் மலிந்து, சிவம் பூத்த பூமியில் தமிழ் செழித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்து வந்துள்ளது. சிவமணம் கமழும் திருக்கோணமலைக்குத் திரிகூடம் என்றும், மச்சேசுரம் என்றும் திருநாமங்கள் வழக்கிலிருந்தன. சுவாமிமலை எனவும் மக்கள் பயபக்தியோடு வணங்கும் மலை. திருக்கோண மலையின் இதிகாசப் பெருமையெல்லாம் தெட்சிண கைலாச புராணத்தில் தெளிவாகவுள்ளன. ஈழத்துப் பழைய புலவர்களாற் பாடப்பெற்றதும், ஈழத்து மக்களுக்கு வாழ்வளிப்பதுமான வற்றாத வளமுள்ள மாவலி என்னும் ஆறு கடலொடு கலக்குமிடமும் திருக்கோணமலையாகும்.

அணித்தாயுள்ள தம்பலகாமம் என்னும் மருதவள நாடு சைவப் பாரம்பரியத்திற்குப் பழைமை வாய்ந்தது. தம்பலகாமத்துச் சிவாலயமொன்றை வரலாற்று முக்கியம் பெற்ற விஜயன் என்பான் திருத்திக் கட்டினான் என்பர். திருக்கோணமலையின் அண்மையிலேயே உடல் நலம் தரும் வெந்நீர் ஊற்றுகளும் அமைந்துள்ளன.

திருக்கோணமலை இயற்கைத் துறைமுகமாயமைந்தமையாலும் நிரம்பிய பாதுகாப்பமைந்தமையாலும் உலக வல்லரசுகள் இதன்மேல் கண்ணும் கருத்தும் வைத்திருக்கின்றன. தென்னாசிய நாடுகளில் ஆதிக்கம் செலுத்துவதற்கு இது பெரும் மையத்தானமாய்க் கேந்திரத்தானமாயுள்ளது.

யாழ்ப்பாணத்தை யாண்ட ஆரிய சக்கரவர்த்திகள் திருக் கோணேசுவரப் பெருமானை வணங்கி வந்ததோடு, பரிபாலனத்துக்கும் அமுது படைப்பதற்கும் பெருநிலப் பரப்பை வழங்கியிருந்தனர். செகராசசேகர மாலை திருக்கோணமலை பற்றியும் பாடுகின்றது.

இலங்கையின் மலை தரு திரவியங்கள் யாவும் மணங் கமழக் கமழத் திருக்கோணமலைத் துறைமுகம் வழியாகவே உலக நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. இதனை மோப்பம் பிடித்த போர்த்துக்கேயர் துறைமுகத்திலேயேயன்றிக் கரைநாடுகளிலும் கால்வைத்தனர். அவர்கள் திருக்கோயில்களை அழிக்கப் பிறந்த சாதியினராய் வந்து 1624ஆம் ஆண்டில் திருக்கோண மலையைக் கைப்பற்றினர்.

போத்துக்கேயருக்குப் பின்வந்த ஒல்லாந்தர் இங்கே நிலையான கோட்டையும் கட்டி வர்த்தகஞ் செய்தனர். அவர்களைத் தொடர்ந்து வந்த ஆங்கிலேயர் திரைகடலை யாள்வதற்குத் திருக்கோணமலையே கேந்திரத்தானம் எனக் கொண்டு, 1796 முதல் 1956 வரை இதை இறுகப் பற்றியிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை தமிழருடையது, தமிழ் வளர்த்தது, சைவங் காத்தது, சிவனுக்குரிய பூமி என்பதற்கெல்லாம் போதிய கல்லெழுத்துகள் ஆங்காங்கேயுள்ளன. கோணேசப் பெருமானையும் மாதுமையாளையும் நம்பி வாழ்ந்த தமிழர் அங்கே பெருக்கமா யிருந்தனர். பழைய ஊர்கள், குளங்கள், காடுகள் முதலான இடங்களின் பெயர்களை அத்து மீறிப் புகுந்தவர்கள் மாற்றியமைத்து வழங்கினாலும், பழைய கறுப்பன் கறுப்பனே என்ற பிரகாரம் திருக்கோணமலை சிவபூமியே, தமிழர் வாழ்வகமேயாம்.

## புலமைப் பாரம்பரியம்

திருக்கோணமலையில் நிலவிய தமிழ்ப்புலமைப் பாரம்பரியத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலிருந்து ஆராய்ந்தால் ஆறுமுகம் என்பார் சைவ ஆதீனம் ஒன்றின் சார்பில் பாட ஆரம்பிக்கிறார். இவர் சுப்பிரமணியர் என்னும் பெரியவரின் மைந்தவ ராவார். இவர் தமது தாயகத்தின் பெருமையையும் பழைமையையும் புனிதத்தையும் திருக்கோணமலை அந்தாதி என்னும் நூலில் பாடுகிறார்.

எடுத்த எடுப்பிலேயே விநாயகர் துதியாகப் பாடும் பாடலில் மாதருள் நிறை பொற்கோண வெற்பிறை பூத்தபுக ணாமாதருளிய லந்தாதி கூற நகவிமயக் கோமா தருளொரு கொம்பிரு காதொளி கூரு முக்கட் டேமா முகவைங்கரதன் பூங்கழல் சேர்துணையே'' வளம் நிறைந்த திருக்கோணமலையைப் புகழ்வர். ''மறைமுதலாமரன் வைகிய கோணமலை'' என்று திருக்கோணமலை வேதங்கள் சொன்ன சிவபெருமானுக்குரிய பூமியே என்று தொடர்ந்து பாடுவர். இவ்வாறு சைவத்தமிழ்ப் பாரம்பரியம் பாடிய புலவரைத் தொடர்ந்து பல்வேறு புலவர்கள் தனிப் பாடல் வரிசைகள் பாடித் தமிழ் வளர்த்துப் போனார்கள். அவர்கள் வழியில் வந்தவர்களுள் ஒருவரே செந்தமிழ்ப் புலவராய அகிலேசபிள்ளை அவர்கள்.

## தோற்றமும் இளமைக் காலமும்

திருக்கோணமலையிலே சைவப் பெருங்குடியில் உழுதுண்டு வாழ்ந்து வந்த பெரியவர் தம்வழியிலே அழகைக்கோன் என்பார் ஒருவர். அவரின் மைந்தன் வேலுப்பிள்ளை. வேலுப்பிள்ளையின் மரபு தழைக்க 1853ஆம் ஆண்டில் தோன்றிய மைந்தன் அகிலேச பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலேசபிள்ளை அயலிடத்தில் வாழ்ந்த குமாரவேலுப்பிள்ளை என்னும் பெரியாரிடம் இளமையில் தமிழ் மொழியை நன்றாகக் கற்று வந்தார். நீதி நூல்களையும் நிகண்டையும் நன்றாகப் படித்து வந்த அகிலேசபிள்ளை நல்ல நினைவாற்றல் உதவி புரிய அரிய நூல்களை ஏட்டிலிருந்தவாறே கேட்டுப் பாடமாக்கி வந்தார்.

இவருடைய நினைவாற்றலையும், விடாமுயற்சியையும் இயற்கை விவேகத்தையும் மட்டிட்டு மதித்த இவர் தம் சிறிய தந்தையார் தையல்பாகம்பிள்ளை என்பார், இவருக்குப் பெரிய இலக்கண நூல்கள், இலக்கியங்கள் கற்பித்ததோடு, தமிழ்க் கல்விக்கு உதவியாய வடமொழியையும் கற்பித்து வந்தார். அன்று ஆங்கிலேயராட்சிக் காலத்தில் மதிப்புக்குரியதாயிருந்த ஆங்கிலத் தையும் தாமறிந்த அளவில் சொல்லிக் கொடுத்தார்.

இவ்வாறாக இருபதாம் ஆண்டு வரை இடைவிடாது படித்து வந்த இவர், 1872ஆம் ஆண்டளவில் ஆசிரியர்க்கான தகுதியடைந்து அரசாங்கத்தாரின் பாடசாலை யொன்றில் ஆசிரியராயிருந்து சிலவாண்டுகளின் பின் தலைமையாசிரியராயினார். இவ்வாறு ஏறக்குறையப் பத்தாண்டுக் காலம் படிப்பித்து வந்தவர் 1882ஆம் ஆண்டளவில் தாம் சிவப்பணி வேலைகள் செய்தல் வேண்டும் எனத் துணிந்து, ஆசிரியர் வேலையை உதறிவிட்டு அயலில் இருந்த ஆலயம் ஒன்றை மையமாகக் கொண்டு இளைஞர்களுக்குச் சைவ சமய நூல்களையும் ஆசாரத்தையும் பழக்கி வந்தார். சைவநெறி இந்துப் பண்பாடு, இந்து நாகரிகம் என்றெல்லாம் எடுத்துப் பேசுகின்றவர்கள், அதற்குச் செயல்முறையான அநுட்டானங்கள், சமஸ்காரங்கள் உள்ளன என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். தீட்சை வகைகள், தியானம், ஜெபம் முதலியன செயல்முறையானவை.

## நூற் பரிசோதனையும் வெளியீடும்

பழந்தமிழேடுகளைப் பரிசோதித்துப் புத்தக வடிவில் அச்சேற்றி வந்த ஆறுமுகநாவலர் அவர்கள், சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் சேவையைக் கண்டறிந்து தாமும் தம்மாலியன்ற வரையில் தம் பிரதேசத்துப் பழந்தமிழ் ஏடுகளை நூலுருவாக்குவதற்கு வேணவாக் கொண்டு, இரவு பகலாக ஏடுகள் தேடிப் பரிசோதித்து வருவாராயினர்.

திருக்கோணாசல வைபவம், கோணேசர் கல்வெட்டு, திருக்கரவைப் புராணம் முதலிய நூல்கள் இவர் முயற்சியால் நூலுருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றன வென்பர். இன்னும் கண்டியரசனாயிருந்த நரேந்திர சிங்கன் வசந்தன் சிந்து, வெருகல் சித்திர வேலாயுதசுவாமி காதல் முதலாய சிறு நூல்களையும் ஆராய்ந்தார் என்ப.

பிள்ளையவர்கள் சைவப்பற்று மிகுந்தவர் என்பது இவர் அரிதின் முயன்று பதிப்பித்த திருக்கரசைப் புராணத்தால் அறியக் கிடக்கிறது. திருக்கோணமலையில் கடலொடு கலக்கும் மாவலி கங்கைக் கரையிலே அகத்தியத்தாபனம் எனவும் வழங்கும் திருக்கரசைப் பதியிலே எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது என்றோ எப்பவோ யாரோ பாடியருளியதிருக்கரசைப் புராணத்தின் பத்துப் பழைய ஏடுகளைத் தேடிப் பரிசோதனஞ் செய்து, நூறாண்டுகளுக்கு முற்பட்ட தாகிய புராதன ஏட்டை ஆதாரமாகக் கொண்டு கையெழுத்துப் பிரதியாக ஓர் பிரதி தயாரித்துத் தம் சமகாலப் புலவரும் நெருங்கிய நண்பருமாய சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் அவர்களைக் கொண்டு அரியதோர் உரை எழுதுவித்தார். உரை எழுதி முடிந்ததும் அதனை மயிலிட்டி அச்சியந்திரசாலையில் 1893ஆம் ஆண்டிற் பதிப்பித்தார்.

பிள்ளை அவர்கள் காலத்திற்கு முன் இப்புராணம் ஏட்டி லிருந்தவாறே ஆடி யமாவாசைக் காலத்தில் திருக்கோணமலையில் மாவலிக் கரையில் நீராடி விரதமநுட்டிப்போர் நலன் கருதிப் புராண படனமாகப் படிக்கப்பெற்று வந்தது. இது நூலுருவில் அமைந்தால் நன்மை பயக்கும் என்று நண்பர்கள் வேண்டிக் கொள்ள அதனைச் சிவப்பணியெனக் கருதிய அகிலேசபிள்ளை அவர்கள் பதிப்பித்துதவினார்கள்.

## நூல்கள் செய்தமை

நுண்மான் நுழைபுலம் மிக்க நிபுணராயிருந்த இவர் பல ஏடுகளை நுணுக்கமாக ஆராய்ந்தமையும் வெளியிட்டமையும் ஒருபுறமாகத் தாமே தரமான புலவராய்த் தமிழ் நயம் செறிந்த பல பிரபந்தங்கள், பதிகங்கள், வைபவங்கள், நாடகங்கள் என இயற்றியுமுள்ளார். எல்லாமாக இவர் இருபதுக்குமதிகமான நூல்கள் செய்துள்ளார். இவற்றின் வேறாகப் பல தனிப் பாடல்களும் செய்துள்ளார் என்ப.

பலவாய பாவினங்கள் பாடும் வகையறிந்த பாவலராய் இவர் பாடிய விருத்தப் பாவரிசையில் திருக்கோணமலை சிவகாமியம்மன் விருத்தம், வெருகல் சித்திர வேலாயுதசாமி விருத்தம், விசுவநாதர் விருத்தம், விசாலாட்சி விருத்தம் என்பன இவருக்குப் பெருமை தருவனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலாட்சி யம்மை பெருங்கழிநெடில் விருத்தம் என்பது பத்துப் பாடல்களோடு காப்புப் பாடலாக மாணிக்க வீரகத்திப் பிள்ளையார் பாதம் வணங்கி அன்பைக் காணிக்கையாக வைக்கும் திறன் பக்திபூர்வமாகவன்றி இலக்கியத் திறத்திலும் இனிமையாயிருக்கிறது.

**கட்டளைக் கலித்துறை**

*மாணிக்க வீரகத் திப்பிள்ளை பாதம்*
*வணங்கியன்பைக்*
*காணிக்கை யாகக் கொடுத்தேன்*
*மதியொடு கங்கைதனை*
*வேணிக்குள் வைக்கும் விசுவேசர்*
*பாங்கரின் மேவிவளர்*
*பாணிக் கொணாத விசாலாட்சி*
*கீர்த்தியைப் பாடுதற்கே.*

**விருத்தம்**

*திருவார் கரிய குழலழகுந்*
*தேங்குங் கருணை விழியழகும்*
*செவ்வா யுறுபுன் சிரிப்பழகுந்*
*திகழு நான்கு புயத்தழகும்*
*மருவார் மலர்வெண் டரளமணி*
*மாலை யொளிருந் தனத்தழகும்*
*வன்ன விடையிற் பட்டழகும்*
*வயங்குங் கமலப் பதத்தழகும்*
*இருமா நிலத்தி லனுதினமென்*
*னிதயத் திருத்தித் துதிப்பதல்லா*
*லின்னு முனைவிட் டொருதெய்வம்*
*இருக்கு மெனநான் நினைத்தறியேன்*
*அருமா மறைசொல் கோணமலை*
*யதனில் விசுவநாதரிடத்*
*தமரும் குயிலே விசாலாட்சி*
*யம்மே யெனைநீ யாள்வாயே.*

*வேதன் புவியைப் படைப்பதுவும்*
*விளங்க நெடியோன் காப்பதுவும்*
*விடைமீ திவரு மெம்பெருமான்*
*விரும்பி யவற்றைத் துடைப்பதுமுன்*
*பாதம் படியு மணுத் துகளின்*
*பலனென் றரிய மறைகளெலாம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பகரு மெனிலுன் மகிமைதனைப்*
*படிறே னுரைக்கும் பண்பாமோ*
*காதங் கமழ்தா மரையணங்குங்*
*கலைவா ணியுநின் பணியியற்றக்*
*கவினுங் கனக மணிக் கொலுவின்*
*கண்ணே விளங்குங் கற்பகமே*
*சீதம் புனையும் விசுவேசர்*
*சிறப்போ டுவக்குந் தீங்கனியே*
*திகழு மெழில்சேர் விசாலாட்சி*
*திருவே யெனைநீ யாள்வாயே.*

இவ்வாறு தம்மையாண்டு தமக்கு அருளுமாறு அம்பிகையைப் பத்து முறை வேண்டியபின், தொண்டர்கள் புனைந்து சாத்தும் பூமாலையோடு தம் பாமாலையையும் புனைந்தருளுமாறு ஒரு வெண்பாப் பாடல் மூலம் வேண்டுகோள் விடுப்பர்.

**வெண்பா**

*ஐயைவிசா லாட்சியெனு மன்னையே நின்புயத்தில்*
*வையகத்திற் றொண்டர் மகிழ்ந்தணியும் - துய்யநறும்*
*பூமாலை யோடு புனைந்தருள்வாய் யானுரைத்த*
*பாமாலை தன்னையுமன் பாய்.*

இனி இவர் தம் புலமைப் பெருக்கில் கனிந்த பாடல் வரிசையில் ஊஞ்சற் பாடல்களும் வருகின்றன. அவை சிவகாமியம்மன் ஊஞ்சல், சித்தி விநாயகர் ஊஞ்சல், பத்திரகாளி ஊஞ்சல் என்பனவாம். அடுத்து சித்திரவேலாயுதர் தரிசனப் பத்து, வேற்பத்து, மயிற் பத்து என்னும் மூவகைப் பத்துகளில் முப்பது பாடல்கள் வருகின்றன. இன்னும் பதிகம் என்னும் பாடல் வரிசையில் திருக்கோண நாயகர் பதிகம், வில்லூன்றிக் கந்தசாமி பதிகம் என்பனவும், கந்தசாமி கலிவெண்பா, சிவகாமி அம்மன் கும்மி என்பனவும் இவர் பாடியுள்ளார். இவர் நாடகக் கலையையும் நன்கறிந்து கண்டி நாடகம் என்னும் பெயரில் ஒரு நாடகம் எழுதியுள்ளார். இவர் வசன நடை கைவந்தவராய்ப் பல கண்டனங்களும் எழுதி மக்களைத் திருத்தியுள்ளார்.

இவ்வாறெல்லாம் இவர் பாடிய பாடல்களை இவருக்கு இரண்டாண்டுகளுக்கு இளையவராய சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் வெகுவாகப் பாராட்டிச் சிறப்புப் பாயிரமும் கொடுத்திருந்தார் என்ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலேசபிள்ளை பாடிய பாடற்றொகுதிகளுள் ஒன்று நெஞ்சறிமாலை என்பதாகும். தம் நெஞ்சைத் திருத்துமுகமாக உலகத்தவர் நெஞ்சைத் திருத்திச் சைவசித்தாந்த முத்தி நிச்சயம் என்றெல்லாம் கூறி நெறிப்படுத்தும் முறை அருமையாயுள்ளது.

*"பாசியை ஒத்த குழலார் முகத்திற் பளபளக்கும்*
*நாசியைப் பார்த்துக் களிப்படைந் தாய்ந்த நாட்டம் விட்டு*
*வாசியை ஏற்றிநன் னாசியைப் பார்த்து மகிழ்ந்திருந்தால்*
*தேசிகன் வந்தருள் செய்வான் இதுதிண்ணம் தேர்நெஞ்சமே."*

இங்ஙனமாக ஐம்பதாண்டுகள் வாழ்ந்த பிள்ளை அவர்கள் 1910 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாளில் உலக வாழ்வை நீத்துப் புகழுடம்பு எடுத்தார். இவர் பெற்ற மைந்தர்களுள் அளகைக்கோன் படிப்பாற்றல் உள்ளவர் என்ப.

## தமிழ் லெக்சிகன்

*செந்தமிழ் வளர்த்த செம்மலாய உடுப்பிட்டியூர்க் கதிரைவேற்பிள்ளை செய்த அகராதி, மதுரையில் வளர்ந்து பேரகராதியானது. அதனை அடிப்படையாகக் கொண்டு தமிழ் - ஆங்கில அகராதி ஒன்றை லெக்சிகன் என்னும் பெயரில் சென்னைப் பல்கலைக்கழகம் 1939ஆம் ஆண்டில் வெளியிட்டார்கள். அது மிகப் பெரியதாயிருப்பக் கண்டு அதைச் சுருக்கி* "Concise Tamil Lexecon" *வெளியிட்ட முயற்சியில் வையாபுரிப்பிள்ளை சேதுப்பிள்ளை துரைஅரங்கசாமி முதலாய பெரியவர் முன்னின்றார்கள். இச்சுருக்க லெக்சிகன் 1955ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் வெளிவந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை
# யே. டபிள்யூ. பார் குமாரகுலசிங்க முதலியார்
(1826 - 1883)

**யா**ழ்ப்பாணப் பிரிவின் முப்பத்திரண்டு கோயிற்பற்றுகளில், ஒரு காலத்தில் தலைசிறந்து விளங்கிய தெல்லிப்பழையூரில் படிப்பாற்றல் மிகவதிகமாக வளர்ந்து வந்தது. அவ்வூரிலேயே அமெரிக்க மிசனரிமாரும் கல்வித்துறை வளர்ச்சிக்குத் தங்கள் மகத்தான பங்களிப்பை அளித்தனர். பத்தொன்பதாம் நூறுறாண்டின் ஆரம்ப ஆண்டுகளையடுத்து வந்த காலத்தில் அங்கே அவர்கள் செல்வாக்கு அதிகரித்தது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த சுப்பிரமணியம் குமாரகுலசிங்க முதலியார் என்பார் குடும்பமே படித்தவர்களாற் புகழ்பெற்றதாகும். முதலியார் தம் முப்பதாம் வயதளவில் எழுதிய பதிவிரதை விலாசம் என்னும் நாடகம் படித்த பெரியவர்களையும் வெகுவாகக் கவர்ந்தது. அது தெல்லிப்பழை, இணுவில், அளவெட்டி முதலான ஊர்களில் மேடையேற்றப் பெற்றது என்பதோடு, அக் காலத்துப் பெரிய படிப்பாளியாக விளங்கிய வட்டுக்கோட்டை முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை என்னும் வில்லியம் நெவின்ஸ் அவர்களுடைய பாராட்டையும் பெற்றதாகும்.

*"ஆசா ரதி வனிதை பதிவிரதை*
*விலாச தமிழமிழ்த மாந்தித்*
*தேசாரு மிதய கமலங்கண் மலர்ந்*
*தின்பசுகந் திளைக்கச் செய்தான்*
*வாசால சித்திர வித்தாரகவி மேக*
*மதி மந்த்ர மதியூகி*
*யோசேப் உவில்லியம் பார்க்குமார*
*குலசிங்க முதலிச்சுபோசன்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பாடிய சிதம்பரப்பிள்ளை அவர்களும் குமாரகுல சிங்க முதலியாரும் இன்னும் பதினைவரும் வட்டுக்கோட்டை செமினரியில் ஹென்றி மாட்டின் என்னும் பேராசானிடம் ஒரு வகுப்பில் படித்தவர்களாவர். குமாரகுலசிங்க முதலியாருக்குக் குடும்பப் பெயர் அப்புக்குட்டி என்ப. இவர் பன்மொழிப் புலவராய், அரசாங்க உத்தியோகம் பெற்றுக் கீழ்க் கோடுகள் என்னும் நீதிமன்றங்களில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றியவர் என்ப. இன்னும் 'C.C.' என வழங்கிய பிரதம எழுதுவினைஞராயுமிருந்தவராவர்.

இவருடைய மகள் மங்களநாயகம் என்பார் தந்தையாரைப் போல நல்ல படிப்பாளியாய் எழுத்தாளராய்த் திகழ்ந்து ''உடைந்த உள்ளம்'' என்னும் நவீனமும் எழுதியவராவர். மங்களநாயகத்தை மணந்த மணவாளன் மிகப் பெரிய படிப்பாளி எனப் புகழ்பெற்ற அப்புக்காத்தரும் புலவருமான மதிப்புக்குரிய ஐசாக் தம்பையர் என்பவராவர்.

தம்பையா அவர்கள் சட்டத்துறையில் மெத்தப் பிரகாசித்தமை யோடு, இலண்டன் பட்டமும் பெற்ற கலாநிதியுமாவர். அவர் தமிழ் பற்றியும், தமிழர் சால்பு பற்றியும் ஆங்கிலத்தில் எழுதியமை இராசாங்க ஆசிய சங்கத்தாரால் மதிக்கப் பெற்றவை. அவர் தாயுமான சுவாமிகளின் சமரச மெய்ஞ்ஞானத்தில் வெகுவாக ஈடுபட்டுச் சைவத் துறவியின் பாடல்கள் என்னும் மகுடமிட்டு ஆங்கிலத்தில் செய்யுள் நடையிலேயே மொழி பெயர்த்துள்ளார். கடவுள் ஒருவரே என்னும் பகுதியை மேற்குநாட்டு மெய்யியல்வாணர்கள் நன்கு மதித்துள்ளார்கள்.

தமிழில் எழுதாவிட்டாலும் தமிழர் பெருமையையும் தொன்மையையும் விளக்கும்போது யாழ்ப்பாணத்தின் பழைய தமிழரையும் குறிப்பிட்டுள்ளார். இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தைப் பற்றி உரோமர் நன்கறிந்திருந்தனர் என்றும், தமிழகம் என்றும் ஊர் என்றும் அவர்கள் குறிப்பிடப்பட்டிருந்தனர் என்றும் கூறுவர்.

சிங்கள வரலாற்றாசிரியர்கள் திரித்து எழுதும் முறையில் தமிழர் இங்கே படையெடுத்து வரவில்லை என்றும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் இருந்தனர் என்றும், கி.பி. 40 ஆண்டளவில் உரோமாபுரியை ஆண்ட குளோடியஸ் காலத்தில், அவருடைய அவைக்களத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் தமிழன் அரச தூதுவராய் இருந்தார் என்றும் இலங்கை வரலாறு எழுதிய ஆங்கிலப் பிரபுவாய எமர்சன் ரென்னன்ற் எழுதியமையைச் சான்றாகக் காட்டியுள்ளார்.

ஒரு சமயம் உரோமாபுரியைச் சேர்ந்தவர்கள் செங்கடலில் கலமூர்ந்து போனபோது சூறாவளியினால் அவர்களின் கப்பல் வட இலங்கைக் கரைக்கு அடித்து வரப்பட்ட செய்தியும் ஆதாரமாகக் காட்டுவர். பழைய இபுறூ மொழியில் பல தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன என்றும், அவை கபி, தோகை, இபம் முதலியன என்றும், கிரேக்க மொழியில் அரிசி, இஞ்சி, கறுவா என்பன இடம்பெற்றுள்ளன என்றும் கூறுவர்.

இவ்வாறாகத் தமிழர் பற்றிக் கூறிய கலாநிதி தம்பையா அவர்கள் வட இலங்கையில் நிலையான தமிழரசு நிலவியது என்பதை விளக்கிய பின், தமிழர் கண்ட சித்தாந்தக் கோட்பாட்டைத் தாயுமான சுவாமிகள் பாடல்கள் மூலம் நன்கு போற்றி விளக்குவர். சித்தாந்தம் உண்மையான முடிந்த முடிபு என்று அவர் ஆங்கிலத்தில் எழுதி உலகெலாம் அறிய விளக்கிய விளக்கத்தை என் சொல்லிப் போற்றுவது?

முதலியாரின் மைந்தன் கனகநாயகம் சாள்ஸ் குமாரகுலசிங்க முதலியார் தந்தையை விஞ்சிய பெரிய முதலியாராகித் தேசாதிபதி அவர்களின் மாளிகையில் பிரதம மொழி பெயர்ப்பாளராயுமிருந்தவர். அவரின் சேவை நலனைத் தேசாதிபதிகளுள் ஒருவராய சேர். உவெஸ்ற் றிச்வே என்பார் தமது பரிபாலன அறிக்கையில் பாராட்டி எழுதியுள்ளார். அவர் பதினேழாண்டுக் காலம் பணிபுரிந்தமையை வியந்துமுள்ளார்.

குமாரகுலசிங்க முதலியாரின் மற்றொரு மைந்தன் இராசநாயகம் றிச்சாட் குமாரகுலசிங்க முதலியார், யாழ்ப்பாணம் கலிகாமம் வடபகுதியின் மணியகாரனாய் இருந்து புகழ்பெற்றவராவார்.

இன்னும் சிங்கநாயகம், அரியநாயகம், செல்வநாயகம் என்னும் புகழ் பூத்த மைந்தர்களும் இருந்தார்கள்.

குமாரகுலசிங்க முதலியார் ஆரம்பத்தில் நில அளவைத் துறையில் நிபுணராயிருந்தவர் என்றும், அவ்வறிவுக்கேற்ற உத்தியோகம் பார்த்தவர் என்றும், பின் மொழிகளறிந்த புலமையாளரெனக் கண்ட அரசாங்கம் இவரை முதலியார் வேலையில் ஈடுபடுத்தியதாகவும் கூறுவர். இவர் எத்தகைய பெரிய சபைகளிலும் அஞ்சாது நின்று செந்தமிழ் பேசும் பேச்சாளரென்றும் பலவித கீர்த்தனங்கள் பாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை மகிழ்வித்தவர் என்றும் கூறுப. இவர் இசைத்தமிழும் நன்கறிந்தவர் என்பது இவருடைய கீர்த்தனங்களாலும் இவரியற்றிய பதிவிரதை விலாசத்தாலும் அறியக் கிடக்கிறது.

*திவ்வியமெய்ஞ் ஞான மோங்கச்*
*செறியுமஞ் ஞான நீங்க*
*அவ்விய மிலா மனத்த*
*னாகிய வித்து வாம்சன்*
*நவ்விநேர் விழியாள் பாரி*
*நற்றவப் புதல்வன் கூடச்*
*செவ்விய சபையின் மீது*
*சிறப்புடன் வருகின் றானே.*

இத்தகைய நாடகம் பல காலமாகக் கையெழுத்துப் பிரதியாகக் கிடந்ததோடு, சில பாகங்கள் உருக்குலைந்து போயின என்றும் கூறுப. பின்னர் 1909ஆம் ஆண்டில் முதலியாரின் மைந்தன் இராசநாயகம் அவர்கள், வசாவிளான் சுதேச நாட்டியப் பத்திராதிபர் கல்லடி வேலுப்பிள்ளை அவர்களைக் கொண்டு சிதைந்துபோன பகுதிகளைச் செம்மையாக்கி அச்சேற்றினார்.

இவ்வரிய நூலை உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், மானிப்பாய் முத்துத்தம்பிப்பிள்ளை, சென்பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் சுபவாக்கியம்பிள்ளை முதலானோர் படித்துப் பாராட்டுக் கவிகள் பாடிக் கொடுத்திருந்தார்கள்.

## பதிவிரதை விலாசம்

பதிவிரதை விலாசம், ஒரு காதற் கதையைச் சித்திரிப்பதாயினும், இடையில் பல துன்பகரமான நிகழ்ச்சிகளின் பின் முடிவினிதாக அமைந்துள்ளது. நேபாள தேசத்தில் வித்துவாம்சர் என்னும் குரு சிரேஸ்டரிடம் வித்தியாசம்பன்னன் என்னும் நம்பியும், பதிவிரதை என்னும் நங்கையும் படித்தபோதே காதல் கொண்டிருந்தனர்.

படிப்பு நிறைவேறியதும் வித்தியாசம்பன்னன் அயோத்திக்குச் சென்றபோது அங்கே அரண்மனையில் உத்தியோகம் பெற்றான். அவனழகைக் கண்டு விரும்பிய இளவரசி மனோன்மணி அவனை வெகுவாக விரும்பினாள். அவன் இடங்கொடாமை கண்டு அவள் அவன் மீது இல்லாத பொல்லாத குற்றங்கள் கூறித் தந்தையைக் கொண்டு தண்டிப்ப, வித்தியாசம்பன்னன் சிறையிலடைபடுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாள்களில் உற்றதுணர்ந்த மன்னன் அவனைச் சிறை நீக்கிப் பாராட்டி மேலுத்தியோகம் கொடுத்தான்.

இவ்வாறாக நேபாள தேசத்து மன்னன் பதிவிரதையின் அழகைக் கண்டு காமுற்று அவளை அடைவதற்கு வழிகோலினான். பதிவிரதை அரசனுக் கஞ்சிக் காட்டு மார்க்கமாகப் போன வழியில், காவலர்கள் அவளை அகப்படுத்தியபோது வேடர் தலைவன் தலையிட்டு அவளை விடுவித்து, அழைத்துச் சென்று வேடர் சேரியில் வாழவிடுத்தான். வேடர் சேரி அயோத்தியாபுரியிலமைந்ததாகவே, நேபாள வேந்தன் அயோத்தி வேந்தனிடம் பதிவிரதையைத் தன்னிடம் சேர்க்கும் வண்ணம் தூதுவரை அனுப்பினான்.

அயோத்தி மன்னனுக்கு அக் காலத்தில் மந்திரியாயிருந்த வித்தியாசம்பன்னன், மன்னனுக்கு அரச நீதியையும் தருமத்தையும் விளக்கி, அவளை அனுப்புதல் தகாது எனக் கூறவே, மன்னன் நேபாள வேந்தனின் வேண்டுகோளுக்கு மறுப்புத் தெரிவித்தான்.

இது கேட்ட நேபாள வேந்தனாய விஜயரங்கன், அயோத்தி மன்னனாய மனுநீதிசேகரனுடன் போரிடப் போய்த் தோற்றுக் கைதியாயினான். தோற்ற மன்னன் ஒருவனைக் கைதியாக்குதலிற் பார்க்க அவனுடன் உறவு பூண்டு பரிசளிப்பதே நன்றென மந்திரியாய வித்தியாசம்பன்னன் ஆலோசனை கூறக் கேட்டு மகிழ்ந்த அயோத்தி மன்னன் மனுநீதிசேகரன், விஜயரங்கனை மன்னித்து, அவனுக்குத் தன் மகளாய மனோன்மணியை மணம் செய்வித்தான். இந்த மணத்தால் விஜயரங்கன் அயோத்திக்கு அரசனாயினான். தான் பதிவிரதைக்குச் செய்யத் துணிந்த பழிக்கு நாணித்தன் நாட்டையே அவளுக்குப் பரிசாகக் கொடுத்து மன்னிப்புக் கோரினான். இவ்வாறாக வித்தியாசம்பன்னனுக்கும் பதிவிரதைக்குமிடையிலான உண்மைக் காதலை அறிந்த வேந்தர்கள் இருவரையும் திருமணப் பந்தரில் சந்திக்க வைக்கின்றனர் பதிவிரதையை மணந்த வித்தியாசம்பன்னன் நேபாள தேசத்து மன்னனாயினான். இதுவே கொமெடி, 'Comedy' என்னும் முடிவினிய நாடகமாகும்.

பதிவிரதை நாடகத்தில் வரும் பாடல்களும் அருமையானவை. உரையாடலாக அமைந்த சில பாடல்களை, மக்கள் கவிமணி வட்டுக்கோட்டை இராமலிங்கம் அவர்கள் எடுத்துக்காட்டும் வகையில் படித்து இன்புறலாம். வித்தியாசம்பன்னனைக் கண்டு காதல் கொண்ட மனோன்மணி அவனுடன் உரையாடியபோது வரும் விருத்தங்களை அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனோன்மணி கூற்று**

*பிரசையாயிருப் போர்க் கென்ன*
*பிரபல மிருந்தும் வாய்ந்த*
*அரசர்க் கீடல்லத் தீபமாதவற்*
*கொப்போ முந்த*
*வருமங்கை தன்னைவிட்டு மகிதல*
*மாளப் பெற்ற*
*அரிவையை மணம் முடித்த*
*அதிர்ஷ்டமாம் ஐயமுண்டோ?*

**வித்தியாசம்பன்னன் கூற்று**

*ஐயமுண் டென்பதற்கு ஆட்சேபந்*
*தான்சொல் வானேன்*
*வையகம் வரினுமென்ன மகிமைகள்*
*வரினு மன்றே*
*துய்யக மொன்றா யுற்ற தோகையை*
*விட்டு மன்றல்*
*செய்வது முறையோ ஈதைச்*
*சிந்தையில் தேர்ந்திடீரே.*

**மனோன்மணி கூற்று**

*எட்டாதபுட்பமெல்லா மிறைவனுக்*
*கென்று யாரோ*
*விட்டவம் முறையின்பற்றி வீண்*
*பேச்சுச் சொன்னீரையா*
*அட்டதிக்கும் மதிக்க அரசனா*
*யிருக்க வேசிற்*
*கிட்டுமோ கிட்டிலிங்கே கிளத்திய*
*தடைகொள் வாரோ.*

**வித்தியாசம்பன்னன் கூற்று**

*பூதல மீதனேகர் புந்தியில்லார்*
*பொல்லாங்குக்*
*கேதலமாக வார்வா ரியற்கையா*
*லிதனைக் கண்டோம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆதலால் நாந்து ரோக மதுசெய்ய*
*ஞாய முண்டோ*
*நீதியை யாய்ந்து செய்ய நினைவதே*
*சரியாமம்மா.*

**மனோன்மணி கூற்று**

*பாவமேதுலகை யாளும் பார்த்திபன்*
*மகளா மென்னை*
*மேவியுன்னிதய மொத்து விளங்கு*
*நல் விவாகஞ் செய்து*
*தேவியாய்ப் பெறி லயோத்தி*
*தேசமும் அரசும் பெற்றாய்*
*தாவுமென் விருப்பம் போலத்*
*தயவுசெய் தாளுவாயே.*

**வித்தியாசம்பன்னன் கூற்று**

*மன்னவன் பேறேவிந்த மகிதலம்*
*போற்றுஞ் செய்ய*
*அன்னமே நானோர் மங்கைக்கான*
*கண்ணாள னென்று*
*முன்னமே சொன்னே னந்த*
*முறைமையை மனத்தி லோர்ந்து*
*இன்னவாசகத்தை நீக்கி யென்னை*
*யாதரித்தி டீரே.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி கனகசபைப் புலவர்
(1829 - 1873)

**யா**ழ்ப்பாணக் குடாநாட்டில் செந்தமிழ் வளர்த்த பண்ணைகளுள் ஒன்றாய அளவெட்டியூரில் பெண்கள் சிலர் ஔவையாரைப் போலப் படிப்பறிவு பெற்றவராயிருந்தார்கள் என்ப. கிறிஸ்தவ மிசனரிமாரின் வருகைக்கு முன்னரே அங்கே பெண்கள் இருவரின் படிப்பாழம் அதிகமாயிருந்தது என்று பாவலர் சரித்திர தீபகம் எழுதிய சதாசிவம்பிள்ளை பாராட்டியுள்ளார்.

அளவெட்டியில் படித்த பெண்களுள் ஒருவர் மல்லாகம் மனுநாயக முதலியார் என்பாரின் மகளாய நாகமுத்து என்பார் என்றும், அப்பெருமாட்டியை மணந்த அளவெட்டியூர் வேலுப்பிள்ளை என்பார் *1829-2-12* ஆம் நாளிற் பெற்ற மைந்தனுக்கு கனகசபை எனப் பெயரிட்டு மகிழ்ந்தனர் என்றும் கூறுப.

வேலுப்பிள்ளை அவர்கள் பரம்பரையாக ஆயுர்வேத வைத்திய நிபுணராயிருந்தாரென்றும் அவரிடம் மருந்துதவி பெறவந்த பெரியவர்களின் உரையாடல்களைக் கனகசபை இளமையிலேயே கேட்டு வந்தார் என்றும், அவருக்கு இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் உண்டானது என்றும், அவர் ஓடியாடி விளையாடும் போதெல்லாம் தன்பாட்டிற் புதுப்பாட்டுகள் இயற்றிப் படித்து வந்தார் என்றும் கூறுப. அவர் பாலப் பருவத்திலேயே பாட்டியற்றக் கேட்டு மகிழ்ந்தவர்கள் அவரைப் புலவர் என்றும், கனகசபைப் புலவன் என்றும் வழங்கி வந்தனர். அவருக்குக் கனகசபாபிள்ளை என்றும் பெயர் வழங்கியது.

தாய் தந்தையர் இருவரும் சுத்த சைவர்களாக இருந்தபோதிலும், பிள்ளையைப் பெரிய கல்லூரியில் படிக்க வைக்க வேண்டும் என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசை தூண்டவே, கனகசபையை வட்டுக் கோட்டை செமினரிக்கு அனுப்பினார்கள். அங்கே சம்பிரதாய பூர்வமாக இவருக்கு எவாட்ஸ் என்னும் பெயர் வழங்கப் பெற்றது. எவாட்ஸ் கனகசபை என்பது பெயராயமைந்த போதிலும் இவருடைய புலமை மிகுந்து நின்றமையால் இவர் புலவர் கனகசபை எனவே வழங்கி வந்தார். இவர் இளமையில் பாடிய பாடல்கள் பலவும் காற்றோடு கலந்து பரவி விட்டனவாதலால் ஏட்டில் அவை எழுதப் பெறாமற் போயின எனலாம்.

கனகசபைப் புலவர் செமினரியில் படித்து வெளியேறியதும் அங்கே தொடர்பு பூண்டிருந்த உவாட் என்னும் ஆங்கில மருத்துவ நிபுணரிடம் மேற்கு நாட்டு வைத்திய முறைகளை நன்கறிந்தார். வீட்டில் தந்தையாரின் பாரம்பரியத்தில் வந்த ஆயுர்வேத வைத்தியத்திலும் நிபுணராயிருந்தார்.

இவர் வட்டுக்கோட்டையில் பழகிய கிறிஸ்தவ மதத்தைக் கைவிடாமல் அதனைப் பேணிக் கிறிஸ்தவராகவே வாழ்ந்தர். அந்நாளில் சுன்னாகம் முத்துக்குமார கவிராஜ சேகரம் என்பார், கிறிஸ்தவ பாதிரிமாரின் போக்கைக் கண்டித்து ஞானக்கும்மி பாடியிருந்தார். ஞானக்கும்மியை வரிவரியாகப் படித்த கனகசபைப் புலவர் அதனைக் கண்டித்து, அஞ்ஞானக் கும்மி மறுப்பு என்றொரு கும்மி பாடி வெளியிட்டார்.

கனகசபைப் புலவரின் மறுப்புக் கும்மியைப் படித்த கொக்குவில் சிலம்புநாதபிள்ளை என்னும் புலவர் மறுப்புக் கும்மிக்கு மறுப்பாக ஒரு சைவக்கும்மி பாடி வெளியிட்டார். சிலம்புநாதபிள்ளை ஒமையந்தாதி பாடியவர், கொக்குவில் சின்னத்தம்பி என்பாரின் மைந்தன், வண்ணை அமரசிங்கம் உபாத்தியாரிடம் கற்றவர். உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், ஊரெழு சரவணமுத்துப் புலவர் முதலியோராற் பாராட்டப் பெற்றவர்.

கனகசபைப் புலவர் மேற்கொண்டு மறுப்புக் கும்மிகள் பாடுவதை நிறுத்திவிட்டு, கிறிஸ்துமத நூலின் வரலாற்றைத் திருவாக்குப் புராணம் என்னும் காவியமாக 1751 விருத்தப்பாக்களில் பாடினார். முன்னர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் ஆசானாயிருந்த கோப்பாய்க் கிறிஸ்தவ பாடசாலையில் ஆசிரியராகச் சேர்ந்த இவர், அங்கே எவாட்ஸ் எனவே வழங்கி வந்தார்.

அந் நாளில் கோப்பாயில் ஹென்ஸ்மன் குடும்பத்தார் தம் மதப் பிரசாரஞ் செய்து வந்தனர். யோன் ஹென்ஸ்மன் என்பவர் மூத்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எவாட்ஸ் பாடிய திருவாக்குப் புராணத்தின் முதற் பகுதியை அச்சிட்டுத் தங்கள் மதப் பாடசாலைகளிற் படிப்பிக்க ஒழுங்கு செய்தார். வணக்கத்துக்குரிய யோன் ஹென்ஸ்மன் அவர்கள் அத்துமீறி மதப் பிரசாரஞ் செய்த வேளையில் நான்கு பேர் அவர் வீட்டுக்கு நெருப்பு வைத்த விபரத்தை 1868ஆம் ஆண்டில் முருகேச பண்டிதர் பாடிய போது ''கோவையிற்றன் மதங் காட்டு கென்சுமன் வீட்டை நெருப்புறீக் கொள்ளை கொள்ள'' என்று பாடியுள்ளார். அது நிற்க.

கனகசபைப் புலவர் பாடிய திருவாக்குப் புராணத்திலிருந்து வரலாறு எழுதுவோர் கையாண்டிருக்கும் பாடல் ஒன்றை நாமும் சுவைக்கலாம்.

*''அனைத்துலகுந் திருவாக்கா லளித்தகில*
*சராசரமு மருடசித் தத்தே*
*நினைத்துளவப் படியமைத்துக் காத்தளிக்குந்*
*தனிமுதலா நிகரி லாதான்*
*தனைத்துதிசெய் தெண்ணுகின்ற தகுங்கருமஞ்*
*சித்திபெறத் தருக வென்றே*
*இனைத்தெனவொப் போதரிய விணைமலர்த்தாள்*
*சிரத்தேந்தி யிறைஞ்சு வாமே''*

(வேறு)

*''ஆதி அந்தமற் றற்புத மூர்த்தியாய்*
*நீதி அன்பொடு நித்திய மேமுதல்*
*ஓதி நின்ற உயர்குணன் ஆதியம்*
*போதில வானமும் பூமியும் நல்கினான்''*

புலவர் அவர்கள் சாதாரண பேச்சு வழக்கில் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிலேடையாகப் பேசுவர் என்பர். அவரூரில் வாழ்ந்த பெண் ஒருத்தி தையல் வேலையில் கைவந்தவளாய்ப் பூவேலைகள் செய்வதில் திறமைசாலியாய் இருந்தாள் எனக் கண்டு, நகைச்சுவையாய், ''நீ ஒரு பூத்தை'' என்றாராம். ஆங்கிலம் அறிந்தவர் ஒருவர், இவரிடம் தங்களைக் காண எந்த நேரம் வரலாம் என்று கேட்டதும், "You must come after ten" என்றாராம். ஆங்கிலத்தில் T U எழுத்துகள் வரும் ஒழுங்கில் U என்பது T என்பதன் பின்னே வருவது காண்க.

இன்னோரிடத்தில் இவர் ஒருவரோடுரையாடியபோது, அவர் அத்துமீறிப் பேசினார், இவர் ''போங்காணும் பேய்க் கூதி மகன்'' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினமில்லாமல் கூறினார். ஏச்சு வாங்கிய அவர், பேய்க்கு ஊதி மந்திரம் சொல்லும் பரிகாரி ஒருவரின் மைந்தன் என்பது விளக்கம்.

கனகசபைப் புலவர் சென்னையில் தங்கியிருந்த காலத்தில் அட்டாவதானம் வீராசாமிச் செட்டியாரின் அகராதித் தொகுப்புக்கு உதவி செய்து வந்தார். வீராசாமிச் செட்டியார் சென்னைப் பல்கலைக் கழகத்து தலைமைத் தமிழாசானாயும் இருந்தவர். தினவர்த்தமானி என்னும் செய்தித்தாளில் பழம் புலவர்கள் வாழ்வைத் தம் மனம் போனபடி எழுதி வந்தவர். அக்கட்டுரைகளை ஒருங்கு திரட்டி விநோத ரசமஞ்சரி என்னும் நூலாக வெளியிட்டவர் அவரேதான்.

கனகசபைப் புலவர் நகைச்சுவையாகப் பேசும் இயல்பினர் அவரின் பாடலில் நகைச்சுவையமைதல் வேண்டும் எனக் கருதிய நண்பர் ஒருவர், வீராசாமிச் செட்டியாரின் நரைத்த குடுமியைக் குறித்து ஒரு பாடல் பாடுமாறு பணித்தார். கனகசபைப் புலவர் சிறிதும் தயங்காமல் பாடினார்.

*"நாவலர் வியக்கப் பாவலர் நாவான்*
*நன்கலை மதிவளர்ந் தோங்கிப்*
*பாவலர் முகஞ்செம் பதுபமாக் குவிக்கும்*
*பான்மையோன் மாயனோ டுளத்து*
*மாவலர் வீரா சாமிவேள் குஞ்சி*
*மலரயன் தேவிவெண் கஞ்சப்*
*பூவலர்ந் திருப்ப வதன்மிசை யிருந்த*
*பொற்பெனப் பொலிந்திலங் குறுமால்"*

ஆங்கிலேயர் 1815ஆம் ஆண்டில் கண்டி நாட்டை ஆண்ட அரசனைச் சிங்கள மந்திரிமார் செய்த சூழ்ச்சி துணைக் கொண்டு நாடு கடத்தினார்கள். நல்லவராய தேசாதிபதி பிறவுண்றிக் குமாரசுவாமி முதலியார் சொற்கேட்டு, மன்னன் குடும்பத்தாரை வேலூரில் வாழவைத்து ஓய்வூதியமும் கொடுக்க ஒழுங்கு செய்தார். மன்னன் வழித்தோன்றல்களும் ஓய்வூதியம் பெற்றுப் பிரபுத்தன்மையாய் வாழ்ந்த காலத்தில் அழகர்சாமி என்பவர் அந்தப் பரம்பரையில் வந்திருந்தார். அவரின் வள்ளற் குணத்தைக் கேட்டறிந்த கனகசபைப் புலவர், அவர் மீது பழைய பாணியில் சீட்டுக் கவிபாடிப் பரிசு பெற்றார்.

இச் சீட்டுக் கவியில் கண்டியரசின் பழைய புகழையும் செல்வாக்கையும் வீரத்தையும் கொடையையும் குணத்தையும் பாடி, அந்தப் பாரம்பரியப் பண்புகள் இவரிடமும் உள்ளனவெனக் கண்டு, முன்னர், தம் முன்னோரான வைத்தியரொருவர் கண்டி மன்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனையில் மருத்துவஞ் செய்து புகழ் பெற்றதையும், தாம் அந்த மரபில் வந்த கனகசபை என்பவர் என்பதையும் இசைபடப் பாடியுள்ளார்.

### அழகர்சாமி மடல்
சீட்டுக் கவி

"நிறைநிலவு பொழியமுத கிரணசந் திரனென்ன
நின்றிலகு கின்ற தொடையாய்
நேரலர் படைக்கடலை வீரவே கங்கொண்டு
நிருமூல மாக்கு படையாய்,
நெடியதரு வைந்துமெழு முகிலுமிணை யல்லவென
நித்தமருள் கின்ற கொடையாய்,
நிலவலைய மெங்கணுங் கல்விநிலை பெற்றிலகு
நிகரற்ற கீர்த்தி யுடையாய்,
திறைநிலவு தவமுமுயர் பொறைபலவு மெணவெளவு
செங்கையுத் தண்ட தீரா
செயமாது குடிகொண்ட திண்புயா சலவுளந்
திருமா துவக்கு நெறியாய்,
தென்னிலங் கேசவெழின் மன்னுமங் கசரூப
திறலழகர் சாமி யென்னுஞ்
சிங்கவே ளனையவுத் துங்கவுள் ளக்களி
சிறந்திட மகிழ்ந்து காண்க:
துறைநிலவு கலைவாரி கரைகண் டுயர்ந்துநின்
றொல்குலத் தரசா தம்பாற்
றோமிலா நண்புபெற் றோங்குவைத் தியநாத
சுகுணன் குலத்து தித்தோன்.
துகளற்ற சீரளவை நகரத்து வருகனக
சபைமிக்க துன்று பத்தி
தூண்டநின் மாபெருமை பூண்டசுமு கம்பெறச்
சோர்விலா தெழுது நிருபம்,
முறைநிலவு மிறைமைபெறு முடிமன்னர் திலகநீ
முகமலர்ந் தகமு வந்தே
முளுமன் பாலணிய நீளுமின் பானவிசை
மெய்த்தமடன் மாலை தரவும்
முகதரிச னங்கண்டு மிகுகரிச னங்கொண்டு
முன்பெய்த வுங்கரு திநின்
முன்னணுகு மென்றனக் கின்னருள் சுரந்தூழி
முதுலகி னீவாழி யே!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தரமுயர்ந்த புலவர்கள் தருகை நீண்ட மன்னர் முன் சென்று அவர்தம் புகழ் வீசும் குணம்பாடிப் பரிசு பெற்று மீளும் போது, தாம் பெற்ற இன்பம் பிறர் பெறுமாறு மற்றப் புலவர்களை ஆற்றுப்படுத்தல் தமிழ்ப் புலவர் மரபு. அந்த வகையில் இவரும் வேறு புலவர்களையும் விரைந்து கவி பாடிப் போய்ப் பரிசு பெறுமாறு பாடுவர். இத்தகைய ஆற்றுப்படைப் பாடல் மரபு பத்துப் பாட்டு என்னும் சங்க இலக்கியத்தில் ஐந்து நூல்களில் வருகிறது.

## புலவராற்றுப் படை

*"பூவின் மீதெவரு மெச்சு பாவருளில்*
*புல்லர் மீதுசொரி நெஞ்சுகால்*
*புண்கள் பட்டுவரு பாவ லீரெனையொர்*
*புரவ லன்கொலென வெண்ணலீர்,*
*யாவின் மீதுமுய ரோவில் சீருறு*
*மிலங்கை நாடர சியற்றுபேர்*
*இசைவி ளங்கழகர் சாமி யண்ணலரு*
*ளீகை பெற்றுவரு புலவன் யான்,*
*நாவின் மீதுலவு பாவி னத்தருமை*
*நன்கு ணர்ந்தமி ழறிவினான்,*
*நாவ லர்க்குதவு வள்ள லங்கவனை*
*நண்ணி வின்னபரி செய்துவீர்*
*மாவின் மீதரச னந்த மத்திமிசை*
*மருவு பேரரச னந்தநீள்*
*வைய மீதரச னந்த மென்றுமவன்*
*வாயின் முன்னடை யாளமே"*

பிள்ளை அவர்களின் தாய் மாமனாராய சுப்பிரமணியர் என்பார் இளமையிலேயே சிதம்பரத்தில் துறவு பூண்டு வாழ்ந்ததோடு திருக்கைலாய பரம்பரையில் தீட்சையும் உபதேசமும் காவியும் பெற்றுத் தம்பிரான் சுவாமியாக இருந்தார்.

கனகசபைப் புலவரின் அகால மரணஞ் சம்பந்தமான செய்தி யொன்று கிடைத்துள்ளது. இவர் ஒருசமயம் பூநகரி ஊரில் வைத்தியஞ் செய்யப் போனபோது, கேணி யொன்றில் நீராடிய வேளையில் கிறுதி வந்து மூழ்கியதைக் கண்டவர்கள் தூக்கிக் காப்பாற்றிய போதும் குளிர் சுரத்தால் இறந்தார் என்பர். இவருடைய மரணச் செய்தி, *1873-1-16* ஆம் நாள் வெளிவந்த உதயதாரகையில் உள்ளவாறு காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*''ஆ! அளவையம்பதித் தமிழ்ப் புலவன் ஸ்ரீவே கனகசபா பிள்ளையின் மரணத்தால் யாழ்ப்பாணம் ஓர் சிரேட்ட அறிஞன், புலவன், லவத்தியன், வாசாலன், இலக்கண இலக்கியன், கனவான், தனவானை இழந்ததென்று துன்புற்றுப் புலம்புகிறோம். ஆ! மரணமே! நீ பெருங் கொடியன்! எத்தனையோ பெயரை உன்வாயிலிருந்து இவர் தப்ப வைத்தார் என்று வன்மஞ் சாதித்தார். எத்தனையோ பேர் பிலாபிக்க இவரை இத்தனை சீக்கிரத்தில் மடித்தாய்? கெட்டி! கெட்டி! உன் கெட்டித்தனம் என்ன! நீ கொடியனே கொடியன்! ஆயிற் பிறந்தாருள் இறவாதார் யார்? நீ செய்ததில் ஓர் திறமை இல்லை என்று எண்ணுகிறோம்.''*

*(இவ்வாறெழுதியவர் பத்திராதிபர் ஆர்னோல்ட் சதாசிவம் பிள்ளை ஆவர்.)*

இனி யாழ்ப்பாணத்துக்குப் பெருமை தரும் அகராதிகளுள் ஒன்றாய சந்திரசேகர பண்டிதர் அகராதியை அக்காலத்தவர் பெரிதும் பாராட்டி வந்தனர். சந்திரசேகர பண்டிதரின் படிப்பாழமும் அவர் பல நூல்களை அச்சேற்றிய திறமையும் கண்ட கனகசபைப் புலவர் அவருக்குப் பாயிரம் போலமைந்த பாடல் தந்துள்ளார், தமிழ்ச் சுவை ததும்பும் பாயிரச் செய்யுளைப் படித்தின்புறலாம்.

*''ஆக்கினன் பெயரக ராதியா மிதனைக்*
*கல்வியும் செல்வமும் காசினி யனைத்தினும்*
*நல்லிட மி:தென நயந்துறைந் திடுதகை*
*எட்டுள திசையினும் எழில்மிகப் பெற்றிடும்*
*வட்டுநன் நகரினன் வண்குண சாகரன்*
*குசைநுனி தன்னினுங் கூர்மைகொண் மதியினன்*
*இசைவள வளர்ந்துய ரிரும்புகழ் நிதியினன்*
*முத்தமிழ்ப் புலமையன் மூதுணர் கலையினன்*
*சத்தியத் தலைமையன் தருமநன் நிலைமையன்*
*கங்கா குலத்தினன் கலைமகள் வலத்தினன்*
*மேழியம் பதாகை மேவிய செல்வன்*
*ஆழிசூழ் புவிபுகழ் அம்பல வாணவேள்.*
*பொருவருள் தவத்தாற் புதல்வனா யுதித்துமெய்*
*அருமை யுடன்பல ஆகமங் கற்றோன்*
*சுந்தர நாற்கவி சொலும் வல்லோன்*
*சந்திர சேகரத் தமிழ்ப்புர வலனே.''*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லுவெட்டி
# கு. வைமன் கதிரைவேற்பிள்ளை
(1829 - 1904)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் 1857ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்ட ஆவேதனம் ஒன்றில், பெருந்தன்மை வாய்ந்த இளைஞன் ஒருவரைப் பற்றி ஒரு குறிப்புத் தந்திருக்கிறார். ''பிங்கள வருடம் மாசி மாதம் பதினான்காம் திகதி இராத்திரியில் இவ்வித்தியாசாலையிலே ஒரு சபை கூட்டி இதன் வரலாற்றைப் பிரசங்கித்தேன். அச் சபையிலே கு. கதிர்வேற்பிள்ளை தாம் சௌமிய வருடம் வைகாசி மாதம் சேர்த்த விதரணத்தை வட்டியோடு என்னிடத்தில் ஒப்பித்தனர்.''

நாவலர் அவர்கள் குறிப்பிட்ட கு. கதிரைவேற்பிள்ளை அவர்கள் அன்று இருபத்தெட்டு வயது இளைஞராயிருந்தவர். நாவலர் அவர்களின் நற்பணிகளுக்குத் தம்மாலியன்றளவு நிதி திரட்டி அதற்குரிய வட்டியும் சேர்த்துக் கொடுத்தவர் என்பதற்கு நாவலர் அவர்களே நற்சான்று பகர்ந்துள்ளார். பிள்ளை அவர்களின் முன்னோர் செந்தமிழ் வளர்த்த பரம்பரையினர். செல்வம் மிக்கவர்கள். பெருந்தன்மையோடு வாழ்ந்தவர்கள்.

கதிரைவேற்பிள்ளை அவர்களைப் பலகோணங்களிலிருந்து அறியலாம். உடுப்பிட்டியைச் சேர்ந்த கதிர்காமபூபதி முதலியார் என்பார், சந்திரசேகர முதலியாரின் மகள் வள்ளியம்மை என்பாரை மணந்து பெற்ற மைந்தன் குமாரசுவாமி முதலியாராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசுவாமி முதலியார் பெரும் புலவராயும் புரவலராயு மிருந்தவர். அவர் தம் மாமனார் முத்துக்குமார முதலியாரிடமும் பிற புலவர்களிடமும் கல்வி கற்று இளமையிலேயே பெரும் புலவராய். இந்திர குமார நாடகம், அருளம்பலக் கோவை, நல்லைக் கலித்துறை முதலிய நூல்களும், பல ஊஞ்சற் பதிகங்களும் செய்தவர்.

குமாரசுவாமி முதலியார் புண்ணிய மணியகாரன் எனக் காரணப் பெயர் பெற்று விளங்கிய பெரியவரின் மகள் சிவகாமிப் பிள்ளை என்பாரை மணந்து சபாபதி என்னும் மைந்தனைப் பெற்ற பின்னர், 1829 ஆம் ஆண்டிற் பிறந்த இரண்டாம் மைந்தனுக்குக் கதிரைவேற்பிள்ளை எனப் பெயரிட்டு மகிழ்ந்தார்.

கதிரைவேற்பிள்ளை இளமையிலேயே படிப்பாற்றல் உள்ளவராய் ஊக்கத்தோடு படித்து வந்ததோடு இயற்கை விவேகியாயுமிருந்தார். அவர் தம் தந்தையாரைப் போன்று இளமையிலேயே புலமைத் திறமும் பெற்றுப் பன்னிரண்டாம் வயதெல்லைக்குள் பண்டிதருக்குரிய படிப்பாழம் பெற்று விளங்கினார். எனவே அவருக்கு வேண்டிய வேற்றுமொழிகள், பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் பயிற்று விப்பதற்காக அன்று வட்டுக்கோட்டையில் பிரபலிக்கமுற்றிருந்த சாத்திரசாலை என்னும் செமினரியில் படிக்க வைத்தனர்.

பிறவிச் சைவராய தம் பிள்ளை பிற மதத்தவர் உண்ணும் புலால் உணவு வழங்கும் விடுதிச்சாலையில் உறைதலை விரும்பாத தந்தையார், செமினரியின் அணித்தாக வீடு வாங்கிச் சைவச் சமையற்காரன் ஒருவனை நியமித்து ஒழுங்கு செய்து கொடுத்தார். செமினரியார் செய்த சேவையை மெச்சிய அவர் தந்தையார் வடமராட்சியில் ஊரிக்காடு என்னும் தமது ஊரில் பெருநிலப் பரப்பினையும் செமினரிக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.

செமினரியில் பணியாற்றிய பேராசிரியர்களுள் முன்னணியில் இருந்த வணக்கத்துக்குரிய ஹொசிங்ரன் என்பார் வட்டுக்கோட்டையை அடைந்து சில நாள்களுள் தமிழ் மொழியையும், சைவசித்தாந்த நெறியையும் நன்றாக அறிந்து கொள்வதில் நாட்டங் கொண்டு படித்து வந்தவராதலால் கதிரைவேற்பிள்ளை அயலிடத்தில் தங்கியிருந்து வருவதற்குப் புறநடையாக உத்தரவு வழங்கியதோடு சைவ உணவின் மகிமையையும் அறிந்துகொண்டார்.

ஹொசிங்ரன் விடாமுயற்சியால் ஊக்கத்தோடு படித்து வந்த சைவத்துறையில் பாண்டித்தியம் பெற்று, அங்கே பயின்று வந்த சைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களோடு உரையாடி மகிழ்ந்து, சிவஞானபோதம் சிவப்பிரகாசம், தத்துவக் கட்டளை ஆகிய முப்பெரு நூல்களை முறையாக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, 1854ஆம் ஆண்டளவில் வெளியிட்டிருந்தார். இந்நூல் Treatises on Hindu Palosophy எனப் பெயர் பெற்றதாகும்.

இலங்கைத் தேசாதிபதி தொறிங்ரன் பிரபு யாழ்ப்பாணத்திற்கு வந்து, வட்டுக்கோட்டை செமினரியைப் பார்வையிடப் போன போது, அங்கே பயின்று வந்த சிறந்த மாணாக்கன் என்ற முறையில் கதிரைவேற்பிள்ளை தேசாதிபதிக்கு அறிமுகம் செய்து கொள்ளப் பெற்றார், கதிரைவேற்பிள்ளை மொழித்துறை. கலைத்துறை கணிதத்துறை, விஞ்ஞானத்துறை ஆகிய பல்வேறு துறைகளிலும் சமகால மாணாக்கர்களை விஞ்சி நின்றார். அவர் மொழித்துறையில் ஆங்கிலம், சமஸ்கிருதம், இலத்தீன், கிறீக், ஹிபுறூ முதலிய மொழி களை நன்றாக அறிந்திருந்தார். இளமையில் தமிழில் பாண்டித்தியம் பெற்றிருந்த அவர், ஆங்கிலப் பேராசிரியர்களோடு தமிழாழம் பேசும் போதெல்லாம் ஆங்கில மொழி மூலமே விளக்கி வந்தார். ஆதலால், ஆங்கிலத்தில் பேச்சு வன்மையிலும் திறமை பெற்றிருந்தார். கணிதத்துறையில் தூயகணிதம், பிரயோக கணிதம், அட்சர கணிதம், கேத்திர கணிதம், எண்கணிதம் முதலிய துறைகளையும், அளவை இயலில் இந்திய தர்க்கசாஸ்திர முறையையும் மேற்கு நாட்டவர் நோக்கினையும் அறிந்து கொண்டார். செமினரியில் பேராசிரியர் சிலர் வானசாத்திர நிபுணராயிருந்தமையால், கதிரைவேற்பிள்ளை அந்தத் துறையையும் வளம்படுத்திக் கொள்வாராயினர்.

கதிரைவேற்பிள்ளையின் மதிப்புக்குரிய பேராசான் வணக்கத்துக்குரிய ஹொாசிங்ரன் வேலை மாறிப் போனதும், கலாநிதி வாட் வணக்கத்துக்குரிய வைமன் முதலானோர் வந்தார்கள். வேலை மாறிப் போன ஹொாசிங்ரன் மீண்டும் இங்கே வந்தபோது அமெரிக்காவிலிருந்து நூதனமான விஞ்ஞான ஆய்வுக் கருவிகளையும், உபகரணங்களையும் கொண்டு வந்தார். தெரிவு வகுப்பு என்னும் சிறப்பு வகுப்பில் படிப்பதற்கு மாணாக்கர்கள் தரம் பிரிக்கப் பெற்றபோது, கதிரைவேற்பிள்ளை முதலிடம் பெற்றுப் பெருந்துறைகளையும் படித்தறிந்தார். இங்ஙனம் படித்தபோதுதான் பேராசிரியர் வைமன் அவர்களின் பெயரை இவர் சம்பிரதாய பூர்வமாகத் தம் பெயரோடு இணைத்து வைமன் கதிரைவேற்பிள்ளை என வழங்கினார் என்ப.

அக் காலத்துப் பேராசிரியர்கள் வரிசையில் பிறெக்கென்ஸ், ஹிட்ஜ், டான்வேர்த், றைஸ், லீ என்பவர்கள் கதிரைவேற்பிள்ளையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுபேறுகளை வெகுவாக மெச்சினார்கள். கதிரைவேற்பிள்ளை தத்துவம், தர்க்கம், கணிதம் ஆகிய துறைகளில் மிக்க திறமை பெற்றிருந்தார்.

செமினரிப் படிப்பு நிறைவேறியதும் திறமைச் சித்தி பெற்ற கதிரைவேற்பிள்ளை, அங்கேயே ஆசிரியராக நியமனம் பெற்றார். தம்மை உருவாக்கிய பேராசிரியர்கள் மத்தியில் தாமும் ஓர் ஆசானாக இருக்கும் பாக்கியம் பெற்ற கதிரைவேற்பிள்ளை அவர்கள் பெருந்தன்மையோடு பாடஞ் சொன்ன சிறப்பினை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் வால்ரன் அவர்கள் அறிந்து, செமினரியாரோடு தொடர்பு கொண்டு பிள்ளை அவர்களைத் தம் கல்லூரியை அலங்கரிக்கு முகமாக 1-8-1851 முதல் பெற்றுக் கொண்டார். அக் காலத்தில் மத்திய கல்லூரியில் மதிப்புக்குரிய ஆசிரியர்களாயிருந்தவர்கள் மேதைகளாய கில்னர், கிறிபித் முதலானோர் அவர்கள் பிள்ளை அவர்களின் பன்முக ஞானத் திறமைக்கு மதிப்புக் கொடுத்து வரிசையறிந்து தங்களுள் ஒருவராக இருத்தி மகிழ்ந்தார்கள்.

பிள்ளை அவர்கள் காலத்தில் ஆசிரியர்களாயிருந்தவர்கள் வரிசை பெரிது. அவர்களுள் நிக்கொலஸ், சவுரிமுத்து, யொனாதன், கிறவுதர் முதலானோரும் ஒரு சிலர். பிள்ளை அவர்கள் எல்லோரோடும் நெருங்கிப் பழகி வந்தார்.

பிள்ளை அவர்கள் காலத்தில் மாணாக்கர்களாயிருந்தவர்கள் சிலர். பிற்காலத்தில் பென்னம் பெரிய பதவிகள் வசித்தவர்களாவர். அவர்களுள் சி. வை. தாமோதரம்பிள்ளை, தா. செல்லப்பா பிள்ளை, சாமுவேல் கிறேனியர், கபிரியல், றொக்வுட், ரி.எம். தம்பு, புவிராசசிங்கம் முதலானவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

தமிழ் தந்த தாதாவான தாமோதரம்பிள்ளை அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்து முதற்பட்டதாரியாய்ப் புகழ்பெற்றதோடு, செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் வரிசையிலும் சிறப்பிடம் வகித்தவர்.

தா. செல்லப்பாபிள்ளை திருவாங்கூரில் பிரதம நீதியரசராய் இருந்து, மலையாளம் இராசா எனப் பெயர் பெற்று ஓய்வு பெற்று மீண்டு தாயகம் வந்து சீரிய கூரிய முறையில் சைவம் வளர்ப்பதற்குச் சைவப் பத்திரிகையின் ஆசிரியராயிருந்து அரும்பணி புரிந்தவராவர். இந்து ஒகன் செல்லப்பாபிள்ளை என வழங்கியவர் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திரிகைத் துறை

கதிரைவேற்பிள்ளை அவர்களின் பன்முகஞானம் அவரைப் பத்திரிகை வெளியிடும் அளவுக்குத் தூண்டியது. இலங்கையில் பத்திரிகை உலகம் பல சுவையான சம்பவங்கள் நிறைந்த வரலாற்றுப் பெருமை உடையது. முன்னர் *1-1-1831*இல் ஜோர்ஜ்லீ என்பார் கொழும்புச் சஞ்சிகை என்னும் பெயரில் ஆரம்பித்த பத்திரிகை, *31-12-1833* இல் நின்றுவிட்டது. பின்னர் வின்ரர் என்பார் ஒப்சேவர் பத்திரிகையினை *1-2-1834*இல் ஆரம்பித்து நடத்தினார். அதனை வர்த்தகர்கள் ஆதரித்து வந்தபோது, *1857*இல் பேர்குசன் என்பார் பொறுப்பேற்று, *1867* இல் சிலோன் ஒட்சேவர் எனப் பெயரிட்டு நடத்தி வந்தார்.

இதைவிட *3-5-1837*இல் வணக்கத்துக்குரிய கிறனி என்பார் சிலோன் குறொணிக்கல் என்னும் பத்திரிகையை ஆரம்பித்து *30-9-1838* வரை நடத்தினார். இன்னும் *7-9-1838* முதலூல் *30-6-1846* வரை சிலோன் ஹெறல்ட் என்னும் பத்திரிகையும் வெளிவந்தது.

இவ்வாறாக யாழ்ப்பாணத்தில் *1841*இல் உதயதாரகை என்னும் மோணிங் ஸ்ரார், கல்வி, கலை, விஞ்ஞானம், இலக்கியம், வேளாண்மை, அரசியல், சமயம் முதலிய துறைகளை அலசி வெளிவரத் தொடங்கியது. வட்டுக்கோட்டை செமினரியின் புகழ் பெற்ற ஹென்றி மார்ட்டின் என்பார் பத்திராதிபராயிருந்து மாதமிருமுறை செந்தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் செய்தி வெளியிட்டார். அவருக்கு உதவியாக செத்பேசன் என்னும் போதகர் உடனிருந்தார் என்ப.

இன்னும் சிலோன் அட்வெட்டைசர், ஜெனரல் இன்ரெலி ஜென்ஸ், சிலோன் எக்சாமினர், சிலோன் ரைம்ஸ் முதலான தாள்களும் அக் காலத்தில் வெளிவந்தன. சுதந்திர தாகம் கொண்ட ஒரு சிலர் சிலோன் இன்டிபென்டென்ற் என்னும் செய்தித்தாளை வெளியிட்டு வந்தனர்.

## பிள்ளை அவர்களின் லிற்ரறறி மிறர்

இவ்வாறான சூழலை நன்கறிந்திருந்த கதிரைவேற்பிள்ளை அவர்கள் இலக்கியக் கண்ணாடி எனப் பொருள் தரும் லிற்ரறறிமிறர் என்னும் சஞ்சிகையை கிறவுதர் என்பாரின் உதவியுடன் *6-5-1853* இல் ஆரம்பித்து ஆங்கிலத்தில் வெளியிட்டு வந்தார். அது ஆங்கிலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்த போதிலும் எங்கள் செந்தமிழையும் சைவ சமயத்தையும் வெகுவாக ஆதரித்து எழுதி வந்தது. பிள்ளை அவர்கள் முதல் இதழிலேயே தமது நோக்கத்தைத் தெளிவாக எழுதியுள்ளார் என்பது படித்தின்புறற்பாலது.

''எங்கள் சமூகத்தார் எங்கள் மாநிலத்திலிருந்து எங்கள் இலக்கியம், எங்கள் சமயம் என்பன சம்பந்தமாக இதுவரையும் ஒரு பத்திரிகை வெளிவரவில்லையே என இக் காலத்திலே தான் அதிகமாகக் கருதுகிறார்கள். இன்று எங்கள் பிரதேசத்து மக்கள் முன்னென்று மில்லாவகையில் கல்வித் துறைகளில் விஞ்சி வாழ்கிறார்கள். மனோபக்குவம் வாய்ந்த எங்கள் மக்களுக்குப் பொருத்தமான பத்திரிகையொன்று இப்பொழுது வெளிவருகிறது.

இந்து சமய விஞ்ஞானம், இலக்கியம், இறையுணர்வு முதலியன சம்பந்தமான அறிவுத் துறையை நாடுகின்ற நன்நெஞ்சோடு சீர்தூக்கிப் பார்த்து எழுதி வெளியிடுதல் எங்கள் நோக்கமாகும்.

எங்கள் சின்னஞ் சிறிய பத்திரிகை சைவசமயத்தவர்களுக்குச் சைவசித்தாந்தங்களின் அருமை பெருமை கோட்பாடுகளை விளக்கி, அவர்களைத் தங்கள் சாத்திரங்களை நன்கு கற்குமாறு தூண்டுவ தாயிருக்கும். தமிழிலும் வடமொழியிலும் உள்ள உயர்ந்த ஞான நூற் கருத்துகளை வெளியிடுவதாயிருக்கும். நாட்டின் நன்மையின் பொருட்டு வேளாண்மை, வர்த்தகம், கப்பற்போக்கு, கலை, கலாசாரம், விஞ்ஞானம் என்பனவும் இடம் பெறுவதாயிருக்கும். தர்க்கம், நல்லொழுக்கம், இலக்கியம், தத்துவம், வரலாறு என்பனவும் வாசகரின் நன்மையின் பொருட்டு இடம் பெறும்.''

இலக்கியக் கண்ணாடி இரண்டு ஆண்டுகள் வரை ஆங்கிலத்திலும் செந்தமிழிலும் அரிய கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தது. இப் பத்திரிகையின் பெருமைக்கு முதுபெரும் புலவராய அறிவு முதிர்ந்திருந்த தந்தையார் குமாரசுவாமி முதலியாரும் நண்பர் கிறவுதர் அவர்களும், லேயாட் என்னும் பெரியாரும் காரணமாயிருந்தனர். லேயாட் என்பவர் எல்லாச் சம்பத்துகளும் நிறையப் பெற்றுப் பம்பலப்பிட்டியில் வாழ்ந்த ஒரு பறங்கிப் பெரியாராவர்.

## சட்டத்தரணி

கதிரைவேற்பிள்ளை அவர்கள் தமது இருபத்தாறாம் ஆண்டுப் பிராயத்தில் 24-4-1985 ஆம் நாளில் ஆசிரியர் பதவியை விடுத்துச் சட்டம் பயில விரும்பினார். அந்நாளில் வெஸ்லியன் மிசனரிமாரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவராயிருந்த வணக்கத்துக்குரிய கிரிபித் என்பார் பிள்ளை அவர்களைப் பற்றி எழுதிய வாசகம் படித்தறிய வேண்டியது..

''கதிரைவேற்பிள்ளை அவர்களைப் போல வடமாகாணத்தில் வேறொரு பிரபுவைக் காண முடியாது. அவருடைய கல்வியின் ஆழம் அதிகம். வயதில் இளைஞராயிருந்தும் முதிர்ந்த அனுபவம் வாய்ந்த அறிஞர் அவர். அவர் ஒரு பூரண மனிதர்.''

இலக்கியக் கண்ணாடி மூலம் நாடறிந்த பெரியவராயிருந்த கதிரைவேற்பிள்ளை அவர்களை நன்கு மதித்தவர்களுள் ஒருவர் பருத்தித்துறை நீதிபதி லீச்சிங் என்பவராவர். அவர் இவரின் நியாய சாத்திரத் திறமையை நேரிலறிந்தவராதலின், இவரை யாழ்ப் பாணத்தில் மன்றாடி எனப் பொருள் தரும் 'பிளீடர்' வேலை பார்க்க அனுமதி அளித்திருந்தார். வழக்காடுபவரின் ஒரு தரத்தினரை பிளீடர் என வழங்கும் வழக்கம் அக் காலத்தில் நிலவியது.

உந்தரவு பெற்ற மன்றாடியான பிள்ளை அவர்கள் தம் தொழிலில் மேலும் உயர்வடைவதற்கு விரும்பிச் சட்டத்துறையில் மெத்தப் படித்தவர் ஒருவரிடம் பழகித் தொழில் கற்க விரும்பினார் அக் காலத்தில் கொழும்பில் சீமையப்புக்காத்தர் வரிசையினர் சிலர் தகுதி வாய்ந்த இளைஞர்களுக்குச் சட்டத் துறையில் பயிற்சியளித்தல் வழக்கம். அன்று கொழும்பிலிருந்தவர்களுள் தோமாஸ் றஸ்ற் என்பாரும் ஒருவர். அவர் நூறு பவுண் வேதனமாகப் பெற்றுக் கொண்டு இரண்டாண்டுகள் பயிற்சியளித்து மேலிடத்தாரின் நேர்முகப் பரீட்சைக்கு அனுப்புதல் வழக்கம். பிள்ளை அவர்களைப் பயிற்றிய றஸ்ற் அவர்கள் இவரின் திறமையைக் கண்டு பயிற்சி முடிவில் ஐம்பது பவுண் நாணயங்களைத் திருப்பிக் கொடுத்து வாழ்த்திவிட்டார்.

இவர் நேர்முகப் பரீட்சைக்குப் போன மேலிடத்தில் றிச்சாட் மோகன், சாள்ஸ் அம்புறோஸ் ஆகிய பெரிய அப்புக்காத்துமார், இவரின் திறமையையும், சட்டத்துறையின் அணுகுமுறையையும் அறிந்து இவரைப் பாராட்டி, அப்புக்காத்தராகப் பதிந்து கொண்டார்கள். இவர் 5-5-1858ஆம் நாளில் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டு சட்டத்தரணியாய் யாழ்ப்பாணம் மீண்டார்.

பிள்ளை அவர்கள் தொழில் நடத்திய காலத்தில் யாழ்ப்பாணத்தில் மறே என்பவரும், முத்துக்கிருஷ்ணா என்பவரும் மூத்த சட்டத் தரணிகளாய், சீமை அப்புக்காத்தர் எனப் பெயர் பெற்றிருந்தார்கள். இன்னும் நெல், கூல்ட் முதலாய புதியவர்களும், புகழ்பெற்ற டெனிஸ்பார்ல் என்னும் ஐறிஸ்காரனும் இருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக் காலத்தில் புகழ்பூத்த புறொக்ரர்மார் வரிசையில் முன்னணியில் முடிக்குரிய புறக்ரராய் இருந்தவர், பிரவுண் சின்னத்தம்பி என்பவராவர். இவர் முன்னர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பெரிய ஆசிரியர் என்னும் 'ஹெட் மாஸ்ரா' பதவி வகித்தவர். இவர் வாழ்ந்த நீராவியடி வீதி இன்று பிறவுண் வீதி என வழங்குகின்றது. பிறவுண் சின்னத்தம்பி அவர்களை அடுத்து தோமாஸ், அண்டர்சன், சைறஸ்கோ, மாட்டின்ஸ் முதலானவர்களும் இருந்தார்கள்.

கதிரைவேற்பிள்ளை அவர்கள் உடை வழக்குகள் என வழங்கிய ''சிவில் லோ'' துறையில் மிகுந்த பாண்டித்தியம் உள்ளவராய், யாழ்ப்பாணத்தப் பாரம்பரியந் தழுவிய தேச வழமைச் சட்டங்களில் நன்கு தோய்ந்தவராய், அவற்றின் முன்னோடி வழக்குத் தீர்ப்புகளை நன்காராய்ந்து தம்மைத் தாடனப்படுத்தியவராய், வெற்றாரவாரம், வீண் பேச்சு எதுவும் இன்றி, எடுத்த வழக்கை நுணுக்கமாக சுருக்கமாக இறுக்கமாக ஆணித்தரமாக விவாதித்து வந்த விதத்தை நீதவான்மார், நீதிபதிகள், நீதியரசர்கள் பெரிதும் பாராட்டியுள்ளார்கள். இவரின் ஆழமான ஆங்கிலப் புலமை நீதானம் இருந்தவர்களுக்குப் பெருவிருந்துமாய் இருந்தது என்ப.

## திருமணமும் மக்கட்பேறும்

பிள்ளை அவர்கள் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்த காலத்தில் உடுப்பிட்டியைச் சேர்ந்த முருகேசர் என்னும் பெரியார் 1862ஆம் ஆண்டில் தம் புதல்வியை இவருக்கு மணஞ் செய்து வைத்தார். இத் திருமணத்தால் இவருக்கு மைந்தன் ஒருவனும், புதல்வியர் மூவரும் பிறந்தனர். பன்னிரண்டாண்டுக் காலத்தின் பின் மனைவி காலமானதும் இவர் கோப்பாயைச் சேர்ந்த கதிரேசர் என்பாரின் புதல்வியை மணந்த காலத்தில், தம் சகோதரியைக் கதிரேசரின் மைந்தன் சுப்பிரமணியம் என்பாருக்கு மாற்றுச் சம்பந்த முறையில் மணஞ் செய்து கொடுத்தார்.

கோப்பாய் மனைவியின் வயிற்றில் மைந்தன் ஒருவரும், புதல்வி ஒருத்தியும் பிறந்தனர். அந்த மைந்தனே கௌரவ பாலசிங்கம் எனப் புகழ்பெற்ற சட்டசபை அங்கத்தவராவர். சுப்பிரமணியம் பெற்ற பிள்ளைகளுள் ஒருவரே புகழ் பூத்த இந்து போட் இராசரத்தினம் அவர்களாவர்.

பிள்ளை அவர்களின் முதல் தாரத்து மைந்தனுக்குத் தந்தையாரின் நினைவாகக் குமாரசுவாமி எனப் பெயரிட்டார். குமாரசுவாமி அக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துத் தமிழ் இறைஞருள் எல்லோரையும் விஞ்சிய விவேகியாய்ப் படித்துவந்தபோது, அவரைக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்துக்குப் படிப்பதற்கு அனுப்புவதற்குத் தந்தையார் ஆயத்தஞ் செய்த வேளையில், மைந்தன் முள்ளுக் குத்திய விடங் காரணமாக ஏற்பு வலி உண்டாகி மாண்டார் என்பர்.

இங்ஙனமாகக் கதிரைவேற்பிள்ளை அவர்கள், இலங்கைச் சட்ட சபையினை இடைக்காலம் ஒன்றில் அலங்கரிப்பதற்கு ஏதுவாய சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தது. ஆனால் தேசாதிபதி மக்காதி என்பார் செய்த சூழ்ச்சியினால் அப்பெருமை தவறிவிட்டமை இலங்கைப் பெரியவர்கள் மனத்தில் கவலையை உண்டாக்கியது.

சட்ட சபை அங்கத்தவராயிருந்த சேர் முத்துக்குமாரசுவாமி அவர்கள் 1862இல் இங்கிலாந்துக்குப் போன வேளையில், சபையின் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியாகப் பிள்ளை அவர்களை நியமிக்குமாறு பத்திரிகைகள் யாவும் பரிந்துரை பகன்றபோது, மக்காதி அவர்கள் ஈற்றன் என்னும் பறங்கியரையே தம் விருப்பத்தின் பிரகாரம் நியமித்தார் என்ப.

## இலங்காபிமானி

சட்டத்துறையில் மெத்தப் பிரகாசித்துப் பெரும் புகழ் பெற்று வந்த போது, நாட்டின் முன்னேற்றத்துக்குத் தாம் மீண்டும் நல்லதொரு பத்திரிகையை நன்கணம் நடத்த வேண்டுமெனத் துணிந்தார். துணிந்தவர் ஆர்வ மிகுதியினால் 1863ஆம் ஆண்டில் இலங்காபிமானி என்னும் பொருள் தரும் சிலோன் பேற்றியட் பத்திரிகையை ஆரம்பித்தார்.

இவர் இலங்காபிமானியை ஆரம்பித்த காலத்துக்கு முதலாண்டில் அப்புக்காத்தர் கூல்ட் அவர்கள் யாவனா பிறீமன் என்னும் சுதந்திரன் பத்திரிகையை 1862இல் ஆரம்பித்து நடத்தி வந்தார். கூல்ட் அவர்களின் கண்டனப் போக்கு, தீவிரவாதம் முதலியவற்றால் மக்கள் அவருடைய பத்திரிகையை அதிகமாக விரும்பவில்லை என்ப.

இலங்காபிமானி 6-2-1863 முதலாக வார வெளியீடாக மலர்ந்தது. அது பெயருக்கமைய நாட்டுக்குத் தேவையானவையும் நன்மை பயப்பனவுமான விடயங்களைக் கொண்டமைந்து வெளிவந்தது. முந்திய நூற்றாண்டில் இங்கிலாந்தில் அடிசன், கோல்ட்சிமித், ஸ்ரீல் முதலாய ஆங்கில வசனகர்த்தாக்கள் எழுதி வெளியிட்ட தரமான, ரசமான கட்டுரைகள் சமூகத்தைத் திருத்திய வகையில், பிள்ளை அவர்களும் எழுதினார்கள் என்ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை அவர்களின் எழுத்தாற்றலைக் கருத்தூன்றி ஆராய்ந்த இலங்கை ஒப்சேவர் பத்திராதிபர். இலங்கை எக்சாமினர் பத்திரிகையாளர் ஆகியோர் இலங்காபிமானியைப் பெரிதும் பாராட்டி எழுதவே, பொதுமக்கள் பலர் அதனைத் தொடர்ந்து வாங்கிப் படித்துப் பயனடைந்தார்கள்.

பிள்ளை அவர்கள் தமது பத்திரிகையில் இந்து நாகரிகம் பற்றியும், சுதேச வைத்தியம் பற்றியும், தமிழரின் இசைக் கலை பற்றியும் எழுதி வந்தமையை ஆங்கிலம் அறிந்தவர்கள் நன்றாகப் பாராட்டினார்கள். ஆங்கிலேயரும் பெரிதும் விரும்பிப் படித்துப் பாராட்டினார்கள். பிள்ளை அவர்கள் பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் பல விடயங்களைத் தமிழில் எழுதிச் செந்தமிழ் வளர்த்த செம்மலாகி வந்தார்.

இவ்வாறாக இலங்காபிமானியைப் பெரிதும் விரும்பிய லீச்சிங், கில்னர் முதலாய ஆங்கிலேயர் தாமும் பல கட்டுரைகள் எழுதி வந்தார்கள். இலங்கையருள் சொலமன், யோண்பிள்ளை ஆகியோர் கட்டுரைகள் எழுதியதோடு, இரண்டாண்டுகள் பத்திரிகையைத் தம் பொறுப்பில் நடத்தியும் உபகரித்தார்கள்.

பின்னர் சுதுமலையூர் கறோல் விசுவநாதன், லோட்டன் கனகசபை, சவுந்தரநாயகம் முதலானோரும் கைகொடுத்து நடத்தினார்கள். பின்னர்ச் சிலகாலம் சொலமன், யோண்பிள்ளை என்பார் பிறீமன் பத்திரிகையையும், இலங்காபிமானியையும் இணைத்து நடத்தி வந்தார்கள். அக் காலத்திலே சென்னை அப்புக் காத்தர் சவுந்தரநாயகம், முனிசீப் வேதநாயகம்பிள்ளை, கறோல் விசுவநாதபிள்ளை முதலானோர் அதிகமாக எழுதி வந்தார்கள். பின்னர் காசிச்செட்டி முதலானோரும் சேர்ந்து அதனை நடத்தி வந்தார்கள். இவ்வாறாக இலங்கைப் பத்திரிகைகள் இலக்கிய ரசனையுள்ளனவாக மலர்ந்து வெளிவந்த காலம் அக் காலம்.

## நீதவான் உத்தியோகம்

ஆங்கிலேயர் இலங்கையை ஆண்ட காலத்தில் அரசறிந்த பெரிய உத்தியோகங்களை வெள்ளைக்காரரும் பறங்கியருமே பார்த்து வந்தார்கள். இலங்கையரும் பெரிய உத்தியோகங்கள் வகிக்கத் தொடங்கிய காலத்தில், ஊர்க்காவற்றுறையில் நீதவானாய் இருந்தவர் அம்பலவாணர் என்பார். அவர் 1-1-1864ஆம் ஆண்டில் ஒய்வு பெற்ற பின், நிரந்தரமான நீதவான் அங்கே நியமனம் பெறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக் காலத்து மூத்த அப்புக்காத்தர் வரிசையில் இருந்த நிக்கலஸ் கூல்ட் என்பாரும், ஆனைக்கோட்டை இராமலிங்கம் என்பாரும் 1868 ஆம் ஆண்டில் பொய்யான மரணசாதனம் தயாரித்துக் குற்றவாளி களானமையால், பெரிய அப்புக்காத்தர் வரிசையில் அழுக்கற்ற பெரியவராயிருந்தவர் கதிரைவேற்பிள்ளை அவர்களேயாவர்.

பிள்ளை அவர்களின் பெருமையைக் கொழும்பில் மேலிடத்தாரும் அறிந்திருந்தனர். தேசாதிபதி கிரகரி அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த வேளையில் பிள்ளை அவர்களைக் கண்டு, பெரியவர்கள் முன்னிலையில் அவரைப் பாராட்டியதோடு, அன்று 27-5-1872ஆம் நாள் பிள்ளை அவர்களுக்கு நீதவான் உத்தியோகத்தை நேரில் வழங்கி உபகரித்தார், அவருக்கு ஆரம்ப வேதனமாக ஆண்டுக்கு 3000 ரூபா வழங்க ஒழுங்கு செய்தார்.

பிள்ளை அவர்கள் நீதவானாக நியமனம் பெற்ற வைபவம் அக் காலத்தில் வெளிவந்த உதயதாரகையில் செந்தமிழ் கமழ வெளிவந்தது. அன்று 7-11-1872இல் வெளியான பத்திரிகையின் தலையங்கமே பிள்ளை அவர்களைப் பெருமளவில் புகழ்ந்து பாராட்டியது.

''ஊர்க்காவற்றுறை நீதவான் கதிரைவேற்பிள்ளைத்துரையின் தோற்றத்தோடு தீவுப் பற்றுக் கள்ள வழக்குகள் சூரியன் முன் திமிரப் படலம் போற் பறந்தோடுமென்று நாம் எண்ணிய எண்ணம் சரிவர நிறைவேறுகின்ற தென்று கேட்டதும் காண்பதும் எமக்குச் சொல்லிலடங்கா மகிழ்ச்சியாயிருக்கிறது. அப் பகுதியில் இருந்து வந்த கடிதமொன்று அவரை மிக மெச்சிப் புகழுகின்றது. காலமே ஒன்பது மணி தொடக்கம் பின்னேரம் ஐந்து மணி வரையில் கோட்டுடனே இருந்து விசாரணை நடத்துகின்றாரென்றும், பணக்காரருடைய செல்வாக்கும், கசடறக் கற்ற நியாய துரந்தரருடைய சாதுரியமான பேச்சும் எங்கள் பாத்திரமான நீதவானில் சற்றும் பலிக்கவேயில்லை.''

பிள்ளை அவர்கள் ஊர்க்காவற்றுறையில் நீதவான் உத்தியோகம் பெற்றுயர்ந்த போது அங்கே நிலவிய சுற்றாடலைப் பற்றி உதயதாரகை விபரமாக எழுதிப் புகழுகின்றது. நீதித்துறையில் நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு முதலிய பெருங் குணங்களோடு கடமையாற்றிப் புகழ்பெற்ற பிள்ளை அவர்களைச் சிவில் சேவையில் சேர்க்குமாறு தேசாதிபதி சேர் ஆர்தர் கோடன் அவர்கள் குடியேற்ற மந்திரிமாருக்கு எழுதியதும் அவரும் அங்ஙனமே பதவி உயர்வு கொடுத்துப் பெரியவர்கள் பெயர் வரிசையில் இடம் பெற வைத்தும், தேசாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இவரை யாழ்ப்பாணம் பெரிய கோடு என்னும் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றி உயர்வு கொடுத்தும், பிள்ளையவர்கள் மல்லாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி முதலாய இடங்களிலமைந்த நீதிமன்றங்களுக்குச் சென்று வந்ததும், இவர் வருடம் 4000 ரூபா சம்பளம் பெற்றதும், இன்ன பிறவும் புகழேணியின் சேர்பான படிக்கிரம உயர்வாயின.

## வைமன் வீதி

பன்னிரண்டாண்டுகள் ஊர்க்காவற்றுறையில் மஜிஸ்றேற் என்னும் நீதவான் உத்தியோகம் பார்த்தபின், 1884ஆம் ஆண்டில் உயர்சி பெற்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் ஜட்ஜ் என்னும் நீதிபதி யானதும், இவர் மல்லாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களிலமைந்த மன்றங்களுக்குச் சுற்றுலாச் சென்று வருவதற்கு வசதியாக நல்லூரின் மேற்குத் திசையில் இராச வீதி என வழங்கிய வழியில் மனையோடு கூடிய ஒரு வளவை விலைக்கு வாங்கிக் குடியமர்ந்தார். இவருக்கு நாள்தோறும் பல கடிதங்கள் வந்த வகையில் இவர் தம் விலாசத்தை இலகுவில் அறியும் வகையில் அந்த வீதிக்கு வைமன் வீதி எனப் பெயரிட்டனர்.

## தமிழ்ப் பாரம்பரிய வேலை

தமிழன் என்றொரு இனமுண்டு. அவனுக்குத் தனியான பாரம்பரியம் ஒன்றுண்டு. தமிழ் பேசும் நல்லுலகத்தில் இலங்கையும் ஒன்று. இலங்கையில் வடமாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் நெருக்கமாக வாழ்ந்த தமிழனுக்குத் தன்னரசும் நிலவி வந்தது. தமிழரசரை அஞ்சியே சிங்களவர் காலந்தோறும் தங்கள் தலை நகரங்களை மாற்றி அமைத்தனர். புலம்பெயர்ந்து வந்த வேற்று நாட்டவர் நாகரிகங்கள் வேர் கொள்ளாமல் போனமையையும் கண்டவர்கள் தமிழர்.

இத்தகைய புகழ் பூத்த பழந்தமிழர்களின் பாரம்பரிய பழக்கவழக்கங்கள், சட்ட மூலங்கள், தேசவழமைகள், மலையாள மரபுகள், திருமணத் தொடர்புகள், உரிமைகள், ஆதனங்கள், முதுசொம்கள், தேடிய தேட்டங்கள் என்றித்திறத்தன யாவற்றையும் முன்னர் 1706ஆம் ஆண்டளவில் ஒல்லாந்த அதிகாரிகளே ஆராய்ந்து கோவை செய்து எழுதித் தொகுத்து வைத்ததும் உண்டு.

பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாயிருந்த கோணலி என்பார் 1892ஆம் ஆண்டளவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்சொன்ன துறைகளை மீளாய்வு செய்து முறையாக எழுத வல்லவர் கதிரைவேற்பிள்ளை அவர்களே எனக் கண்டு, இவரிடம் அப்பணியை ஒப்படைத்தார். இவரும் தாம் இலக்கியம், வரலாறு, சட்டம் முதலிய துறைகள் வல்லவராயிருந்தமையின் அப்பணியைத் துருவியாராய்ந்து சேவை செய்து கொடுத்தார்.

தமிழன்னைக்கு நிலையான தொண்டு செய்தலே தம் கடனெனக் காத்திருந்த பிள்ளை அவர்கள், ஒரு சமயம் தருக்கம் சொல்லாராய்ச்சி ஆகியவற்றில் வெகுவாக ஈடுபட்டுத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் தருக்க நூலை வெளியிட்டுப் பெருமை பெற்றார்.

இவர் செய்து வந்த பெரும் பணியால் இவர் பெற்ற புகழ் கடல் கடந்து இங்கிலாந்தில் இனிதிருந்த குடியேற்ற மந்திரியாருக்கும் எட்டியது. அவருந்தான் கிழக்கு நாடுகளின் பழைய பழைய நூல்களின் ஏட்டுப் பிரதிகள், கைஎழுத்துப் பிரதிகள், பழைய பதிப்புகள் என்பனவாகிய நூல்களடங்கிய புத்தகக் கண்காட்சியொன்றை இலண்டனில் 1886ஆம் ஆண்டில் நடத்திய வேளையில் இவரின் உதவியையும் உபசரிப்பையும் தேசாதிபதி மூலம் பெற்று மகிழ்ந்தார். பிள்ளை அவர்கள் பழைய கைஎழுத்தும் பிரதிகள் பலவற்றை ஏட்டுருவில் தொகுத்து அவற்றுக்கு வேண்டிய முகவுரை, அறிமுகவுரை யாதியவற்றை இராணியின் ஆங்கிலம் என வழங்கிய அருமையான மொழியில் எழுதி அனுப்பினார். இதனால் இவருக்கு உலகப் புகழ் கிடைத்தது எனக் கூறின் மிகையாகாது.

இங்ஙனம் அமைந்த பாரிய பணி செய்த விற்பத்திமானாய இவரைப் பாராட்டிய மந்திரியார், இராசாங்க ஆணைச் சங்கத்தின் காரியதரிசியாய பிலிப்சி ஓவின் என்னும் பெரியால் மூலம் இவருக்கு அரச முத்திரை பொறித்த தங்கப் பதக்கமும் பாராட்டும் அனுப்பிச் சிறப்பித்தார்.

அன்று இருக்குப் பழைய பனையோலை ஏடுகளை அழகாகப் புதிய ஓலையில் படியெடுத்துக் கொடுத்தவர் காரைநகரைச் சேர்ந்த கார்த்திகேய ஐயர் அவர்களாவர். இவ்வந்தணப் பெரியார் பனையோலையில் அழகாக எழுதும் பழக்கத்தை அவ்வூர் வேளாண் பிரபு சண்முக உபாத்தியாயரிடம் பழகினார் என்பது வரலாறு. ஐயர் அவர்கள் கைப்பட எழுதியவை திருக்குறள், நாலடியார், நிகண்டு என்பனவாம் இவற்றைக் கருத்தூன்றி ஆராய்ந்த ஆங்கிலேயர் தமிழனின் கைவண்ணத்தைப் பெரிதும் பாராட்டினார்கள் என்ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவப்பிரகாசரின் தருக்க நூலின் இரண்டாம் பதிப்பு

கற்று வல்ல பண்டிதர்களுடன் தர்க்கித்து உரையாடிக் கொண்டும் கொடுத்தும் தமிழ் வளர்த்தலில் இன்பம் கண்ட பிள்ளை அவர்கள் தாம் முன்னர் 1862ஆம் ஆண்டில் அச்சேற்றிய தருக்க நூலை மீளாய்வு செய்து மேலும் திருத்தமாக இரண்டாம் பதிப்பு வெளியிடுவதற்குப் பெருமுயற்சி எடுத்தார். இந் நூலை வடமொழியில் சிவகேசவ மிசிரர் செய்திருந்தார்.

கற்பனைக் களஞ்சியம் என்று போற்றப் பெற்ற துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இதனைத் தமிழில் பெயர்த்தெழுதினார் என்ப. இதற்கு வேண்டிய உரைக் குறிப்புகளை முன்னரே எழுதிய பிள்ளை அவர்கள், இவற்றை எல்லாம் திருத்தமாக 1872ஆம் ஆண்டிற் பதித்த போது எழுதிய முகவுரை படித்தின்புறத்தக்கது.

'ஏழு பதார்த்தங்களைக் கூறும் சித்தாந்த முத்தாவலி முதலிய நவீன தர்க்கம் போலல்லாது பதினான்கு பதார்த்தங்களைக் கூறும் பிராசீன தர்க்கமாகிய இந்நூல், சமஸ்கிருத பாஷையிற் சிவகேசவ மிசிரனாலியற்றப்பட்டுத் துறைமங்கலம் சிவப்பிரகாசராற்றமிழில் மொழி பெயர்க்கப்பட்டுக் காலத்துக்குக் காலமொன்றின் பின்னொன்றாயேட்டுப் பிரதிகளிலெழுதப்பட்டு வழுக்களைந்து சைன்மங்கிச் சிக்குண்டு பயன்படாது கிடந்ததனை யாம் பரிசோதித் தெமது கிஞ்சிற் புத்திக்கியன்றவாறே வழுவறுத்துச் சிக்கறுத்துப் பயன்படு நூலாக்கி யச்சிடுவித்தாம்.

இதனை யாம் முதலாம் முறை யச்சிடுவித்தபோது யாழ்ப்பாணத்தில், நமக்ககப்பட்டிருந்த தொரே யேட்டுப் பிரதியே. அப்பிரதியின் கண்ணுள்ள வழுக்களைதற்குச் சமஸ்கிருதத்தி லியற்றப்பட்ட கௌதமரது நியாய சூத்திவிருத்தியும் சித்தாந்த முத்தாவலியும் உபகார கருவிகளாயின.

முதலாம் பதிப்புப் பகிரங்கமாயின பின் சிவகேசவ மிசிரனி யற்றிய சமஸ்கிருதத்து முதல் நூல் நமக்ககப்பட்டமையால், அம்முதனூலோடு தமிழ் மொழி பெயர்ப்பை எதிர்வைத்தாராய்ந்து சுத்தப்படுத்தி யிவ்விரண்டாம் பதிப்புத்தரலாயினோம்.

இந்நூல் கௌதமர் விதித்த தர்க்கத்தின் வழித்தாயினும் கணாதர் தந்த வைசேடிகத்தோடு கலப்புற்றிருக்கின்றது. தர்க்க பாஷையாகிய இந்நூலைத் தர்க்க சூடாமணி, தர்க்க பரிபாஷை யென்றும் வழங்குவர்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகராதி தந்த அறிஞன்

பன்மொழிப் புலவராய பிள்ளையவர்கள் ஆங்கிலத்தில் வெளிவந்த பல அகராதிகளையும் கண்டறிந்தவர். அவருக்குச் சொல்லுக்குச் சொற்பொருள் தரும் செந்தமிழ் அகராதி ஒன்றைச் செப்பமாகச் செய்தல் வேண்டும் என்னும் சிந்தனை உதித்து ஆசையாகி வளர்ந்தது.

அதனால் இவர் நீதிபதி உத்தியோகத்தினின்றும் இளைப்பாறினார் தக்க தமிழறிஞர்களாய சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், வல்வெட்டி ஆறுமுகம்பிள்ளை, நல்லூரு சரவணமுத்துப் பிள்ளை முதலானோரைத் தம்முடன் சேர்த்துத் தமிழகராதி தொகுக்கலாயினார். அவர் தொகுக்க முயன்ற அகராதி முற்றுப்பெறா முன்பே அவர் காலமானார். எனவே அவ்வகராதியில் அகர வரிசை மாத்திரம் அமைந்திருந்தது. அது முதற்பாகமாக அமையுமாறு செய்து அரியதொரு முகவுரையும் எழுதிய அவருடைய மைந்தன் அப்புக்காத்தர் க. பாலசிங்கம் அவர்கள், அவ்வகராதியை மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பெரியவரும், கலா விநோதருமாய பாண்டித்துரைத் தேவர் அவர்களிடம் கையளித்தார். அகராதி அரைகுறையாக அமைந்த போதிலும் மதுரை நான்காம் சங்கத்துக் கவியரங்கேறிய பண்டிதர்கள் சேர்ந்து 1910ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளிப்படுத்தினர். அது ''கதிரைவேற்பிள்ளைத் தமிழகராதி'' என்றே முதலிற் பெயர் பெற்றிருந்தது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தாருக்குப் பின், மதுரை கோபால கிருஷ்ணகோன் பேரகராதி என்னும் பெயரில் வெளியிட்ட பெரிய அகராதியின் மூலவூற்று, கதிரைவேற்பிள்ளை அகராதியேயாம்.

மதுரைப் பேரகராதி பல்லாயிரம் பதங்களுக்குப் பொருள் கூறுமளவில் பாரிய தொகுதியாய் அமைவதற்கு யாழ்ப்பாண அகராதி, நா. கதிரைவேற்பிள்ளை அகராதி, வைமன் கதிரைவேற்பிள்ளை அகராதி யாவும் சங்கமித்துமுள்ளன. ஈழத்தில் செந்தமிழ் வளர்த்த செம்மல்களின் வரலாற்றில் அகராதிகளின் ஆக்கமும் பெருமுபகரிப்பாகவே அமைந்துள்ளன.

கதிரைவேற்பிள்ளை அவர்கள் 1904-4-14 ஆம் நாளில் நல்லூரில் வைமன் வீதியில் தமது இல்லத்தில் காலமானார். அவரின் மைந்தர் புகழ்பூத்த அப்புக்காத்தர், பொருளாதார நிபுணர், சட்டசபை சட்ட நிரூபண சபை அங்கத்தவர், சைவத் தமிழ் வளர்ச்சியில் ஈடுபாடுடையவர் தந்தையாரின் பணிகளைத் தொடர்ந்து செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். புதல்வியர் இருவர் புகழ் பெற்ற புறொக்ரர்கள் கதிரேசு, சிவப்பிரகாசம் ஆகியோரை மணந்தினிதிருந்தனர்.

வைமன் கதிரைவேற்பிள்ளை அவர்களின் வரலாறும் காலமும் என்று பெயர் பெற்ற எழுத்தாளராய் மாட்டின் எழுதியதோடு உறவினராய மாட்டின் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரக் குறிப்புகள் என்னும் நூலினும் கதிரைவேற்பிள்ளை அவர்களை நன்றாக மதித்துப் பத்து இடங்களில் குறித்துள்ளார். பிள்ளை அவர்களோடு தொடர்பு கொண்டிருந்த பெரியவர்களைப் பற்றியும் மாட்டின் அவர்கள் அருமையாக எழுதிக் கனம் பண்ணியுள்ளார். பிள்ளை அவர்கள் நாவலர் அவர்கள் தமிழ்ப்படுத்திய பைபிள் வேலையிலும் உதவி புரிந்துள்ளார் என அறியக் கிடக்கிறது.

## தமிழ்

*தமிழ் நுதலிய ஒழுக்க சிலங்களுள் கடவுள் வணக்கம், பெற்றோரை வணங்குதல். பெரியவர்களை மதித்தல், பெருந்தன்மையாய்ப் பிரபுத் தன்மையாய் வாழ்தல், அறிவுப் பசியுற்று நல்ல நூல்களைக் கற்று வல்லவராதல் ஒருசில ஒழுக்கங்களாம். தமிழ்ப் பண்பாட்டில் சகிப்புத் தன்மை வாழ்வில் மலர்போல மகிழ்ச்சி தருவதாகும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்
## (1829 - 1910)

ஆறுமுக நாவலர் அவர்கள் தம்மிலும் பார்க்க இளையவராய ஒருவரைப் புலவரே! வாரும் என வரவேற்றாராயின், அப் பெருமைக்குரிய பெரியவர் உடுப்பிட்டியூர் சிவசம்புப் புலவரேயாவர். உடுப்பிட்டியில் அம்பலவாணர் அருளம்பலம் என்பவர் பாரம்பரியமாகப் புகழ் பெற்றிருந்தார். அவரின் சமகாலத்தவரான குமாரசாமி முதலியார் வைமன் கதிரைவேற்பிள்ளை அவர்களின் தந்தையார் குமாரசுவாமி முதலியார் புலமையுள்ளம் பெற்றிருந்தார். அவர் பாடிய பிரபந்தங்களிலொன்று அருளம்பலக் கோவை என்பதாகும்.

புலவர் பாடும் பெருஞ் சிறப்பு வாய்ந்த அருளம்பலம் அவர்களின் மற்றொரு தாரத்து மைந்தனாய சிவசம்புப் புலவர், கதிராசிப்பிள்ளை என்பார் வயிற்றில், இமயானன் என்னும் குறிச்சியில் 1829ஆம் ஆண்டில் தோன்றியவர். பிள்ளையின் சாதகத்தைக் கணித்த சோதிடர்கள், இவன் பெரும் புலவனாய்த் தமிழ் கூறும் உலகெலாம் நல்ல பெயரெடுப்பான் எனக் கூறினர். இவற்றைக் கேட்டு மகிழ்ந்த அருளம்பலம் அவர்கள், தம் மைந்தனைப் பெரிய புலவர்களிடம் ஒப்படைத்து உருவாக்கத் திட்டமிட்டுப் பிள்ளையையும் தாயையும் இருபாலையில் தமது வளவில் குடியிருத்தினார். இளைஞன் சிவசம்பு நல்லூர் சரவணமுத்துப் புலவரிடத்தும், பின் அவர் மாணாக்கர் சம்பந்தப் புலவரிடத்தும் முறையாகக் கற்று வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் பாராட்டியமை

சிவசம்புப் புலவரைப் பேரும் புகழும் படைத்த பெரும் புலவர் என்பர். தமிழ்நாட்டில் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களைப் போல ஆயிரக் கணக்கான பாடல்கள் அசையாமற் பாடிக் குவித்தவர் எனப் போற்றுவர். பிறநாட்டு நாகரிகமும் மிலேச்சரின் போக்கும் மிகுந்திருந்த காலத்திலே சுதேச மொழியாய தமிழை விரும்பிக் கற்றுப் புலமை பெற்றிருந்தவர் என்ப.

தாம் கல்வி கற்ற பாரம்பரியத்தில் நாவலர் அவர்களை நன்கறிந்த சிவசம்பர் நாவலர் சைவப் பிரசங்கஞ் செய்யுமிடங்கள் எங்கும் பின் தொடர்ந்து கேட்டு வந்தார் என்ப. அக் காலத்து வழக்கப்படி நாவலர் பிரசங்கம் நிறைவேறியதும் சிவசம்பர் அதன் சாரத்தைச் சபையோருக்குப் படித்துக் கூறுவராம். ஒருநாள் பிரசங்கத்தின்போது, வெளியில் மழை பெய்ததாகவும், சிவசம்பர் தாமெடுத்த பிரசங்கத்தின் குறிப்போடு மழை பெய்ததையும் குறிப்பிட்டு, அன்றைய சுருக்கத்தைப் பாட்டாகவே பாடினாராம். அது கேட்டு மகிழ்ந்த நாவலர் அவர்கள், ''கம்பனுக்குப் பின் ஒரு சம்பனல்லவோ'' என்று பாடினாராம். சம்பர் பாடிய பாட்டு பலவித மழைகளைக் குறிக்கிறது.

*''அன்பர்கண் ணீர்மழை யும்சிவ*
*னார்மெய் யருள் மழையும்*
*மன்பிர பந்த மழையும்*
*பிரசங்க மாமழையும்*
*கொன்புனை நீலப் பயலின்*
*மழையும் கொடை மழையும்*
*இன்பொடு மல்கப் புலோலிமெய்*
*வாழ்வினி லேறியதே''*

இந்தப் பாட்டைக் கேட்டுருகிய நாவலர் அவர்கள் இவரைப் புலவரே என அழைப்ப, எல்லோரும் இவ்வாறே கொண்டாடி வழங்கி வந்தனர் என்ப. புலவர் அவர்கள் எட்டிகுடி என்னும் தலத்திற்கு யாத்திரை செய்தபோது, அங்கே எட்டிகுடிப் பிரபந்தம் பாடிக் கவியரங்கேறிய புலவராயினார் என்பது வரலாறு.

நாவலர் அவர்கள்மீது பேரன்பு பூண்டிருந்த புலவர், அவர் மறைந்தபோது மனம் நொந்து பாடிய பாடல் தமிழ்ப் பெரியார் தாமோதரம்பிள்ளை அவர்களை வெகுவாக உருக்கியதாம் என்பர். இவர் பாடிய அஞ்சலிப் பாடலையும் அவர் பாடிய பாராட்டுப் பாடலையும் படித்தறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று கந்தமடம் அம்மன் வீதியில் வாழ்ந்த மூ. ம. சின்னத்தம்பி என்பார் தாம் நடத்திய இலங்கை நேசன் பத்திரிகையில் 1880ஆம் ஆண்டில் வெளியிட்ட செய்தியொன்றில் புலவரிருவரின் நேயத்தை வியந்து, இத்தகைய நட்பு மற்றும் புலவர்களிடையே நிலவுதல் வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

அன்று 1879 ஆம் ஆண்டில் ஆறுமுகநாவலர் அவர்கள் மறைந்தமை குறித்துப் புலவர்கள் பலரும் அவர்தம் பிரிவாற்றாமை குறித்துப் பாடியிருந்தனர். உடுப்பிட்டி சிவசம்புப் புலவரும் பல பாடல்கள் பாடியிருந்தார். அப் பாடல்களுள் ஒன்றை அறியலாம்.

*"ஆரூர னில்லை புகலியர் கோனெல்லை யப்பனில்லை*
*சீரூரு மாணிக்க வாசக னில்லை திசையளந்த*
*மேரூரு மாறு முகநாவல னில்லை பின்னிங்கியார்*
*நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கும் நீர்மையரே"*

இப் பாடல் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களை வெகுவாக உருக்கி விடவே, அவர் உடனடியாக இதனை நயந்து, சிவசம்புப் புலவருக்குத் தாமுமொரு நயப்புப்பாடல் பாடியனுப்பினார்.

*ஆரூர னில்லையென் காரிகை யாரிவ் வவனிதொழப்*
*பேரூறு மாறுமுகநா வலர்பெரு மான்பெருமை*
*சீரூரு மாறு தெரித்தாய் சிவசம்பு தேசிகநிற்*
*காரூரி னேரின்றன் றோநின் சொல்வன்மை அறிந்தனனே.*

இவ்வாறு தாமேதரம்பிள்ளை அவர்களின் பாராட்டுப் பாவைப் படித்த சிவசம்புப்புலவர் உணர்ச்சி வயப்பட்டுத் தாமும் தாமோதரம்பிள்ளை அவர்களைப் பல பாடல்கள் கொண்டு பாடி அவர்தம் பண்பினைப் பாராட்டிப் புகழ்ந்தார்.

*கற்றாரைக் கற்றவர் காமுறுவாரெனக் கண்ட மொழிக்*
*குற்றாயி லக்கியமாக வெண்பாவையு வந்துகவி*
*சொற்றாய தென்றலைக் கண்ணதென் னுன்னன்பு தொடர்ந்து கண்டேன்*
*மற்றா ரெணக்கிணை தாமோதரம்பிள்ளை மாணிக்கமே*

*மன்னருத்யோகமும் வான்கலையாய்வும் பொன் மன்றுடையான்*
*பொன்னடிப் பூசையு நீதியு மெய்யும் புகழு முத*
*லின்னவெல்லாங் கொண்ட தாமோதரம்பிள்ளை யென்னும் வள்ளால்*
*நென்னலி லெய்திக் கண்டேனின்றிருமுக நேசத்தினே.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று நாவலர் அவர்கள் மறைந்தபோது சிவசம்புப் புலவர் அவர்கள் வருந்தியமைக்குக் காரணம் முன்னர் சமய குரவர் நால்வரும் மறைய அவர்கள் வழியில் நாவலர் அவர்கள் சைவம் வளர்த்தவர். நாவலர் மறைந்தபின் இனியார் சிவபிரானின் சைவத்தைப் போதிக்கும் திறமையுள்ளவர் எனக் கலங்கியமையாகும்.

சிவசம்புப் புலவர் அறுபதுக்கு மேற்பட்ட பிரபந்தங்களில் மூவாயிரத்திற்கும் அதிகமான செந்தமிழ்ப் பாடல்களைப் பாடிக் குவித்தவர். இவர் ஈழத் திருநாட்டிலே யன்றிச் சங்கம் நிலவிய தமிழ்நாட்டிலேயும் இணையற்ற புலவரெனப் பெயரெடுத்தவர். அங்கே இவர் எத்திசையும் புகழ் மணக்க, இராமநாதபுரம் பாஸ்கரசேதுபதி அவர்கள் மீதும் கவிபாடிப் பொன்னும் பொருளும் இன்னும் பலவும் பரிசாகப் பெற்றுப் பெருமையடைந்தவர்.

இவர் பாஸ்கரசேதுபதிமீது கல்லாடக் கலித்துறை, நான்மணிமாலை, இரட்டை மணிமாலை என்னும் பிரபந்தங்கள் பாடியவர். கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே என்பது பழமொழியாகவும், இவர் கல்லாட யாப்பில் உத்தர கல்லாடம் செய்த தனிச் சிறப்புப் பெற்றவர். கல்லாடக் கவிபாடுவதற்கு வேறெவரும் துணியாத காலத்தில் இவர் அந்த யாப்பைக் கையாண்டமை இவருக்குப் பெரும் பெருமையளித்தது.

சிவசம்புப் புலவர் உரையாசிரியர் வரிசையையும் அலங்கரித்துப் பெருமை பெற்றவர், மறைசையந்தாதி, திருவேரகயமக வந்தாதி, திருச்செந்தில் யமகவந்தாதி, திருச்செந்தில் திருக்கந்தாதி முதலிய அந்தாதி இலக்கியங்களுக்கும்; தஞ்சைவாணன் கோவைக்கும், வள்ளியம்மை திருமணப்படலம், சேது புராணம் முதலிய புராணங்களுக்கும்; நன்னூல் விருத்தி, நேமிநாதம், சிதம்பரப் பாட்டியல், யாப்பருங் கலக்காரிகை, முதலாய இலக்கண நூல்களுக்கும் இவர் அமைவான உரை எழுதிப் புகழ் பெற்றிருந்தார். மறைசையந்தாதிக்கு இவர் எழுதிய மகத்தான உரை தமிழ் நாட்டவராலும் பெருமளவில் மதிக்கப் பெற்று வந்தது.

பிறப்பிலேயே புலமை பெறாதவர் தம் முயற்சியால் புலமை பெறுவதற்கு யாப்பருங் கலக்காரிகை கற்றுக் கவிபாடுவதிலும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே'' என்னும் பழமொழி எழுந்தது, அஃது அவ்வாறிருப்பப் புலவர் அந்நூலுக்கு உரையெழுதிப் பெயர் பெற்றார் என்றால் இவர் புலமையை என் சொல்வது. இவருடைய உரை தமிழ்நாட்டுப் புலவர் பெருமக்களிடையே பெரிய பரபரப்பை உண்டாக்கியும் நிலவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திற் பொதுவாகவும், வடமராட்சிப் பிரிவில் சிறப்பாகவும் செந்தமிழ்ப் புலவர் பரம்பரைகள் உருவாவதற்கு உழைத்தவர்களுள் புலவர் அவர்களும் ஒருவர். ஒரு காலத்தில் ஆண்களேயன்றிப் பெண்களும் புலமை பெற்றிருந்த பெருமைக்குரியது வடமராட்சி. அங்கெல்லாம் சிவசம்புப் புலவர் அமைத்த நாற்று மேடைகள் நற்றமிழ்வல்ல புலவர்களை உருவாக்கி வந்தன.

புலவர் அவர்களிடம் முறையாகக் கற்ற மாணாக்கர் வரிசை பெரிது. இவர்களின் வேறாய் இடையிடை சந்தேகங்கள் கேட்டுத் தெளிந்தவர்களும் இருந்தார்கள். இவரின் மாணவர்கள் என வந்தவர்கள் வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் வைத்திலிங்கம், இலக்கணப் புலி சுன்னாகம் முருகேச பண்டிதர், ஆவரங்கால் நமசிவாயபிள்ளை, புலோலி வடமொழிப் புலவர் கணபதிப் பிள்ளை, இலக்கணக் கொட்டர் குமாரசுவாமிப் புலவர், புலோலிதில்லைநாதப் புலவர், தும்பளை முத்துக்குமாரசுவாமிக் குருக்கள், பருத்தித்துறை வேல் மயில்வாகனச் செட்டியார், வல்வை அருணாசலம், கரணவாய் ஞானப்பிரகாச தேசிகர், திருஞானசம்பந்த தேசிகர், நமசிவாய தேசிகர், நொத்தாரிசு ஆறுமுகம்பிள்ளை, மந்துவில் வைத்திலிங்கச் செட்டியார், கந்தமடம் வை.சி. சிவகுருநாதன், கதிரவேலு சின்னையா, சின்னத்தம்பி சுவாமிநாத பண்டிதர் முதலானோராவர்.

இனி ஈழநாட்டையும், தமிழ்நாட்டையும் அண்மைக் காலத்திலே இணைத்திருந்த உயிர்ப் பாலங்களுள் சிவசம்புப் புலவர் அவர்களும் ஒருவர். இவருடைய உயிர்ப்பான உபகரிப்புகள் தமிழ்நாட்டிலே அரசர் பெருமக்களை அன்றி, மடாதிபதிகள், நாட்டார் என வழங்கும் வணிகப் பெருமக்கள், வள்ளன்மைமிக்க புரவலர்கள் என்றித்திறத்தாரெல்லோரையும், வெகுவாகக் கவர்ந்திருந்தன. பாஸ்கர சேதுபதி அவர்கள் கொடுத்த பொன்னாடையும் பொற்காசுகளும் ஒருபுறமாக, எட்டி குடியாதீனத்தார் இவரை வெகுவாகக் கௌரவித்து உபகரித்தமையும், நாட்டார் முதலானோர் அதிகமாக நல்கியமையும் அதிகமாகும். முன்னர் நாவலர் அவர்கள் வழங்கிய புலவர் பட்டத்தை, எட்டிகுடியாதீனத்தார் அங்கே வழிமொழிந்து அங்கெல்லாம் வழங்கச் செய்து சிறப்பித்தார்கள்.

புலவரவர்கள் வடமொழியறிவும் நிரம்பியவர் என்பது, இவர் தம் பாடல்களில் விரவி வரும் அர்த்தபுஷ்டி நிறைந்த பதங் களாலறியப்படும். அன்றி இவர் ஓரளவு இசை நுணுக்கங்களையும் அறிந்தவரென்றும் கூறுப. தஞ்சாவூர் நாகப்பா என்னும் இசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லாரிடம் இவர் இத்துறையைக் கற்றறிந்தார் என்பது இவரியற்றிய கீர்த்தனங்களிலிருந்து அறியக் கிடக்கிறது.

சைவ சமயத்தில் நிரம்பிய பற்றுள்ளங் கொண்டவர் என்பது இவரியற்றிய பக்திப் பிரபந்தங்களால் அறியக் கிடக்கிறது. இவர் தமது அயலூரிற் கோயில் கொண்டருளிய முருகன் மீது கந்தவனநாதர் பதிகமும், அயலில் உள்ள வல்லிபுரத்தான் மீது ஒரு பதிகமும், செந்தில் மேய முருகன் மீது யமகவந்தாதியும், இன்னும் எட்டிகுடிப் பிரபந்தம், புலோலி நான்மணிமாலை என்பனவும் பிறவும் பாடியுள்ளார். இவர் முருகப் பெருமானை உபாசனா மூர்த்தியாகக் கொண்டிருந்தார் என்பது இவரியற்றிய பிரபந்தங்கள் வாயிலாக அறியவுள்ளது. ''இவர் சொல்லும் பொருளும் தொடை வகைகளும் சிறப்புற வைத்துக் கவியமைக்கும் புலமையிற் சிறந்தவர்'' என்பது சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரவர்களின் கணிப்பு. இவர் சேனாதிராய முதலியாருக்கு அடுத்தபடியில் புலமைப் பெருக்கமுள்ளவர் என்பது பண்டிதமணி அவர்கள் கொண்ட கருத்து தமிழ்நாட்டவர் இவர் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களுக்கு அடுத்தவர் எனக் கொண்டாடியதும் உண்டு. இவ்வாறு பல்வேறு பெரும் புலவர்கள் இவரைப் பல்வேறு துறைகளில் வைத்துப் போற்றியமை ஈழநாட்டுப் புலவர் வரிசைக்கோர் ஏற்றமளித்தமையாகும்.

புலவர் அவர்கள் தமிழ்நாட்டிலே தம் கவிதைகளுள் ஒரு சிலவற்றை அரங்கேற்றிய அரசோலக்கத்திலே செந்தமிழ்ச் சிங்கம் எனப் புகழ் பெற்ற ரா. இராகவையங்காரும் ஒருவராயிருந்து இவர் புலமையை வெகுவாக மெச்சினார் என்ப. அப்பால் புலவர் அவர்கள் தம் புலமை பெருக்கெடுத்துப் பாய்ந்த போது, அடுத்துப் பாடிய பெரியவர், பொன்னுச்சாமி தேவர் என்னும் பெரியாரின் மைந்தன் பாண்டித்துரைதேவராவர். பாண்டித்துரை தேவர் அவர்களே தக்க புலவர்களை அரவணைத்து மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியவராவர். புலவரவர்கள் பாண்டித்துரை தேவரைப் புகழ்ந்து இன்னொரு நான்மணிமாலை பாடியுள்ளார்.

புலவரவர்கள் தம் தந்தையாரின் முதல் தாரத்து மைந்தனாய அம்பலவாணர் என்பார் மீதும், அவர் மைந்தர் மயில்வாகனம் என்பார் மீதும் கொண்ட ஆசை நேசங் காரணமாக அவர்கள் பரம்பரைச் சிறப்பைப் புகழ்ந்து, மயில்வாகன வம்ச வைபவம் என்னும் பிரபந்தம் பாடியதும் உண்டு. ஐம்பத்தொன்பது நெடிய விருத்தப்பாக்களாலான இப்பிரபந்தம், பாட்டுடைத் தலைவர்களின் பாரம்பரியத்தையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் செந்தமிழ் வளர்த்த செம்மையையும், சைவம் வளர்த்த சால்பையும் போற்றுவதாகும்.

புலவரவர்கள் தமது இளமைக் காலத்தில் சரவணமுத்துப் பண்டிதர், சம்பந்தப் புலவர் ஆகிய பெரியவர்களிடம் படிப்பதற்கு ஒப்படைக்கப் பெற்ற நிகழ்ச்சியையும் இப்பிரபந்தத்தில் குறிப்பிட்டுள்ளார்.

*அந்தியகா லத்திற்றமிழ்க் ககத்தி யன்போ*
*லமர்ந்தசர வணமுத்துப் பண்டி தன்சீர்*
*முந்துகுணச் சம்பந்தப் புலவன் றன்னை*
*முற்றொடரன் பினிலழைத்து முகமன் பேசிச்*
*சிந்தையுறும் பெருங்களியா லிவனை யோங்குஞ்*
*செந்தமிழா சிரியயெனத் திருத்தி வைம்மின்*
*சந்ததமு முமைமறவா னென்றன் றோர்கைத்*
*தலத்திலெனை அடைக்கலமாத் தகவி லீந்தோன்.*

அக் காலத்து இல்லறமாய நல்லறமேற்ற சைவத் தமிழ்ப் பெண்ணின் பெருமையை ஓரிடத்தில் அன்னை, அன்னையென விரவிவரப் பாடிய பாடலொன்றை இன்றைய நங்கையர் நன்கறிந்திருத்தல் நன்மை பயக்குமாதலால் அதனை அறிந்து கொள்ளலாம்.

*எம்மையெலாந் தலையளியின் வளர்த்த வன்னை*
*இருமரபுந் தூயவன்னை இரந்து நேர்வார்*
*தம்மையெலாம் புரந்தவன்னை தரும தான*
*தவம்வளர்த்த வன்னைதண் ணளிக்கோ ரன்னை*
*மெய்ம்மையெலாந் திகழ்விரதம் விழைந்தோம் பன்னை*
*விமலசிவ புராணங்கள் வினாய வன்னை*
*செம்மையெலாந் தம்வழிபோற் றிருத்தி நின்ற*
*சிதம்பரநா யகித்திருவை தீமுன் வேட்டான்.*

மயில்வாகனம் என்பார் புலவர் புகழ வாழ்ந்த புரவலர் என்பதோடு, அவர் தமக்குப் பலவூர்களிலும் வாய்த்த பெருநில மெங்கும் குடியேறி வாழ்ந்த மக்கள் குற்றஞ் செய்தாலும் அவற்றைப் பொறுத்து அம்மக்களுக்கு வேண்டியவுதவிகள் செய்ததோடு, குடிக் கூலியாக அவர்கள் கொடுத்த குத்தகைப் பணத்தையும் குறைவு எனப் பாராது தாராளமான மனத்தோடு ஏற்றவர் என்று சிவசம்பப் புலவர் பாடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உன்னிருஞ்சீ ரிருவாலை கோப்பாய் கந்த*
*ரோடைசுன்னை யுருவி லுடுப்பிட்டி யூரின்*
*மன்னியதன் காணிகளில் வைகு மாக்கள்*
*வழுக்களியற் றிடினுமதி கொளுத்தி மாற்றிப்*
*பின்னலுற வவரையெழுப் பாம லெவ்வெவ்*
*விடர்ப்பிணியுற் றாலுமவர்க் கியல வாற்றி*
*அன்னவர்க ளிணங்கியிறை யீப வற்றை*
*யலமலமென் றேற்குமரு ளாழி யன்னான்.*

அண்மையில் வாழ்ந்த பெரும் பண்டிதராய செவ்வந்திநாத தேசிகர் அவர்கள், சிவசம்புப் புலவர் அவர்களின் பிரபந்தத்திரட்டு என்னும் ஒரு தொகுப்பை வெளியிட்டுள்ளார். அதில் முதற்பாகம் எனவே குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் பாகம் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

பண்டிதர் அவர்கள் தமது தந்தையாரும், சிறிய தந்தையாரும் புலவரிடத்து முறையாகக் கற்றவர்கள் என்பர். பண்டிதர் அவர்கள் தொகுப்பிற்குப் புலவரின் மருகரும், மாணாக்கருமாய ஆறுமுக உபாத்தியாயர் உதவி புரிந்தார் என்பர். இவ்வரிய தொகுப்பு ஈழகேசரி பொன்னையா அவர்களால் பிரசுரிக்கப் பெற்றுள்ளமை இதற்கு வாய்த்த மற்றொரு பெருமையாகும்.

புலவர் அவர்கள் காலத்திலே தான் வண்ணை அப்புக்காத்தர் நாகலிங்கம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை ஆரம்பித்திருந்தார். நாகலிங்கம் அவர்களுடைய பெருமையைப் புலவர் அவர்கள் பல பாடல்களிற் பாடியுள்ளவற்றுள் ஒன்றையாவது படித்தின்புறலாம்.

*"மன்னொத்த செல்வப் பெருவாழ்வி*
*னிரென்றும் வாழ்ந்திருக்க*
*வென்னொத்த பாவலர்க் கெய்திரு*
*மோதுய ரின்பவண்ணைத்*
*தன்னொத்த சீர்ச்சின்னத் தம்பி*
*மகீபன் தவத்துதித்த*
*பொன்னொத்த மேனிப் புகழ்நாகை*
*லிங்க புரந்தரனே"*

புலவர் அவர்கள் வாழ்வில் நாமகள் கடாட்சத்தால் புலமை அதிகரித்து வந்தபோது, திருமகள் புறக்கணிப்பாற் போலும் வறுமை விட்டு நீங்காமலே தொடர்ந்தது. இன்னும் புலவர் அவர்கள் ஆறடிக்கு மேற்பட்ட உயரத்தவராய்க் கவர்ச்சிகரமான தோற்றத்தவராய்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையில் தலைப்பாகையும், நெற்றியில் நீறும் சந்தனமும் பூசிக் காதில் கடுக்கனிட்டுக் கம்பீரமாக நடப்பவராம். தினமும் நல்ல உணவையே உண்பவராதலால் நல்ல திடகாத்திரராயிருந்தாராம். அவர் சபைகளிற் புகுந்தால் ஆனைக்குட்டிப் புலவர் வருகிறார் என்று சிலர் நகைச்சுவையாகக் குறிப்பிடுவதும் வழக்கமாம்.

புலவர் அவர்கள் தமக்குக் கிடைத்த பொன்னையும் பொருளையும் பின்னர்த் தேவையெனப் பொத்தி வைக்காமல் ஏழைகளுக்கு வரையாது கொடுத்துதவும் வள்ளல் குணமும் உடையவராயிருந்தாராம். இந்த வகையில் இவருக்கு எந்த நேரமும் பணத் தட்டுப்பாடிருக்கவே, புரவலர்களைத் தேடித் தம் புலமையைக் காட்டிப் பொருள் பெறுபவராயிருந்தாராம். இவர் இராமேஸ்வரத்தில் வாழ்ந்த பெருந்தன்மை வாய்ந்த இபுறாம்கிம் சாகிப் என்னும் பிரபுவையும் புகழ்ந்து பாடிச் சந்மானம் பெற்றிருந்தார் என்ப.

**ஆசிரிய விருத்தம்**

*"சீர்பூத்த புனிதரா மேச்சுர மெனப்படுந்*
*தெய்வ ஸ்கலத்து வாசன்*
*செல்வமீ ராலெவ்வை முன்னா ளியற்றிய*
*திருத்தவத் துற்ற குமரன்*
*செயமுகம் மதுநபி பெரும்புகழ் மறந்திடாச்*
*செபவிரத நிலையினிற்போன்*
*சேதுபதி பாஸ்கர சுவாமிமா ராஜனொரு*
*திரிபிலா துற்றநேசன்*

*வார்பூத்த நதிகுல முதித்தசின் னத்தம்பி*
*வள்ளலரு ணாகைலிங்க*
*மகிபனொடு பிரியாத நண்பினான் சிட்டர்சக*
*வாசனம் புவிவாசவன்*
*வங்கவள மன்னிய கிராமவள மின்பமனை*
*வாழ்க்கைவள முற்றெய்தினோன்*
*வரமுறுஞ் சித்தாந்த வேதாந்த காவிய*
*மதித்திறத் தினிதுணர்ந் தோன்*

*நீர்பூத்த சேதுக் கரைக்கண்யாழ்ப் பாணத்தர்*
*நிருமித்த சத்திரத்தை*
*நிலைமைகுலை யாவண்ண முதவியா யூக்கமொடு*
*நின்றுநிறை வேற்றிவைத்தோ*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நிமலரா மேச்சுரத் துற்றமுத லாளியென*
*நிலவுமோர் சிறப்பு முடையோன்*
*நெஞ்சமுற யாத்திரைக் கெய்திடு பவர்க்கேற்ற*
*நெறிகுலவ வசதிதருவோன்.*

*நார்பூந்த வேணியர ணாலயப் பணிவகையு*
*மன்பனாய்ச் செய்விப்பவன்*
*அதிபர்போற் பிரசைதங் குறைதெரிந் தியனீதி*
*யாம்வகை நிறுத்துமுரவோன்*
*ஆருள மெலிந்து வந்தாமற் றன்னவரை*
*அன்னைபோ லப்பேணுவோன்*
*அரியகுண விபுறாம்கிப் சாகிபு வெனத்தினமும்*
*அளைவரு மதித்த துரையே''*

இன்னும் தொடர்ந்து வரும் கலித்துறைப் பாடல்களில் அவரைக் கற்றார்கள் தாரு, மதிகாண் உளத்தன், உதவி சந்ததஞ் செய்யும் இபுறாம்கிப் சாகிபு என்றெல்லாம் பாடுவர். சாகிப் அவர்கள் புறமதத்தவராயிருந்தும் தமிழ் வளர்த்த செம்மல்களை ஆதரித்த சமரசஞானியாகவே வாழ்ந்தவர் என்ப.

வடமாநிலத்திலே வடமராட்சியிலேயுள்ள வல்லிபுரத்தாழ்வார் திருக்கோயிலிலே எழுந்தருளியுள்ள சக்கரத் தாழ்வாரைத் தங்கத் தகட்டினில் செய்து வைத்த சிதம்பரப்பிள்ளை என்னும் சீமான் புகழையும் புலவர் அவர்கள் பாடியுள்ளார்.

''திருந்து மெழில் வல்லிபுரம்வாழ் சீதரன் திகிரியைத் தங்கத் தகட்டினால் செய்வித்த பத்தியாள'' என்றும், ''பேரேறு தரும தானங்களைச் சந்ததம் பீடுற நடத்தும் அன்ப'' என்றும், ''பசியில் நொந்தவரை அன்னை போற்பேணி அன முதவு செல்வ'' என்றும், ''கோணாமல் ஏற்பவர்க்கு ஈயும் குலப்புகழ்மை குவலயத்துள்ளவர்'' என்றும் ஆசிரிய விருத்தத்திற்பாடி, அப்பால் கலித்துறையிலும் அருமையாகத் தொடர்நது பாடி வாழ்த்துவர்,

*''சங்கக்கை யானமர் வல்லி*
*புரத்தினிற் சக்கரத்தைத்*
*தங்கத் தகட்டின் முழுது*
*மமைத்துத் தழைத்த பத்தித்*
*துங்கச் சிதம்பரப் பிள்ளாய் நின்*
*மேதகை தொல்லை விண்டுணார்*
*சங்கத்து முற்றது நின்பிறப்*
*பேதவச் சால்பினதே''*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற நூற்றாண்டில் மட்டக்களப்பு வைத்திலிங்கம் என்று பெயர் பெற்ற வர்த்தகர் வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்தவர். கப்பலோட்டி நெல் வியாபாரஞ் செய்து ஈட்டிய பொருள் பெரும்பாலும் தருமப் பணிக்கே செலவானது, மனங் கோணாது ஈயும் மார்க்கண்டு முதலாளியும் அந்த வள்ளல் பரம்பரையினரேயாவர். வைத்திலங்க வள்ளலைப் பாடத் தொடங்கிய புலவர் கலித்துறை யாப்பைக் கையாண்டு பதினொரு பாடல்கள் பாடியுள்ளார். பதிகம் போலமைந்த புகழ்மாலை முழுதும் தமிழ்மணங் கமழும் பூக்களாய சொற்களாலாயது.

*"திருவாழும் வட்டு நகர்சித்தங்*
*கேணி செறிந் திருந்தே*
*மருவார் பொழிற்சங்கு வேலியி*
*லோங்கிடும் வாழ்வில் வைகும்*
*பொருவா ரிலாத வைத்திய*
*லிங்க புரந்தர மெய்க்*
*குருவான கந்த னருளால்வந்*
*தேனுன் குலமனைக்கே"*

இவ்வாறு பாடிக் கொண்டே புலவரவர்கள் புரவலர் மனையுட் புகுந்தார். புகுந்தவர் வீட்டுக்கு விளக்காகிய கற்புடை இல்லத்தரசியை வியந்து பாராட்டி, ''செய்யாள் கற்புக்கு வடமீன், வறிஞர்க்குச் சேம வைப்பு'' என்றெல்லாம் வாழ்த்துவர். பின் வைத்திலிங்க வள்ளலை வியந்து பாடுவர்.

*"மானுட யாக்கைக்குள் சைவமெய்ப்*
*பத்திக்கும் வான்புவிக்கு*
*மாநிதி கட்கும் வயித்திய*
*லிங்க வரோதயநே*
*ரானவில் வாழ்வுக்குந் தான*
*தருமங்க ளாற்றுதற்கு*
*மேனனி நீசெய்த மாதவம்*
*வேறெவர் மேவினரே."*

*"வாணிக வாரியு மூர்தொறு*
*மேவிய மட்டகன்ற*
*காணியின் வாரியுங் குன்றென*
*வோங்க... ... ..."*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"இந்திரச் செல்வ மடைந்தும்*
*வைத்திய லிங்க வள்ளல்*
*சிந்தனை சற்றும் பிறிது*
*படாது செருக்க கன்று*
*சந்ததம் யார்க்கும் இதமே*
*புரிந்து தழைத்திட லால்*
*உந்தை உனைப்பெறச் செய்த*
*தவத்தினி லூங்கெதுவே."*

புலவர் அவர்கள் புரவலர்களைப் பாடி வாழ்த்தும் வரன்முறையில் சைவப் பண்பாடு தவறுவதில்லை. "தீர்க்காயுளோ நினக்கீவன் சர்வாபீஷ்ட சித்தியுமே" என்பது இவரின் வாழ்த்து.

வடமராட்சியில் வல்வெட்டித்துறையின் மகத்தான பெருமைகளைக் கூறுமுகத்தால் சிவசம்புப் புலவர் அவர்கள் வல்வைக் கலித்துறை என்னும் நூலைப் பாடியுள்ளார். வீரர்கள், தீரர்கள், வள்ளல்கள் வாழ்ந்த அந்தவூர் என்றுமே பெருமைக்குரியதாயிருந்தது அங்கும் அயலிலும் பழைய வீரர்களின் நினைவாகப் பல ஊர்கள் உருவாகியுள்ளன. சமரபாகுதேவன், வென்றிபாகுதேவன், கல்லிடைத்தேவன் முதலானோர் பழைய வீரர்கள்.

வீரர்கள் ஒரு புறமாக அங்கே பாரம்பரியத்தில் வந்த வள்ளல்களும் இருந்தார்கள் ஆண்களேயன்றி, அவர்கள் வழியொழுகிய பெண்களும் கொடையிற் சிறந்தவர்களாய்க் கணவன் கொடுப்பதைத் தாம் தடாத பிராட்டியராய் இருந்தார்கள்.

புலவர் காலத்தில் கந்தசாமி என்னும் வர்த்தகர் மட்டக் களப்பில் மர வியாபாரஞ் செய்தவர், ஒரு சமயம் தம்மூர்க்கு வந்திருந்தார். புலவர் அவரிடம் சென்று உரையாடிய போது, கந்தசாமி உடனடியாகச் சிறுதொகை கொடுத்துதவியதோடு, மட்டக்களப்புக்கு வந்தல் ஆயிரம் ரூபா தருவதாக வாக்களித்தார்.

அந்த நாளில் ஆயிரம் ரூபா என்றால் யார்தாம் விடுவார். புலவர் அவர்கள் சிரமத்தைப் பாராமல் அங்கே சென்றபோது, கந்தசாமியாரின் இல்லத்தரசி புலவரை வரவேற்று உபசரித்தவாறே கணவன் காட்டுக்குப் போயிருந்தார் என்று கூறினார். புலவரும் தாம் வந்த காரணத்தைக் கூறியதும், இல்லத்தரசியார் இரண்டாம் கதை பேசாமல் ஆயிரம் ரூபாவை எடுத்து வந்து கொடுத்துப் புலவரை வணங்கினாள், தெய்வநாயகி என்னும் பெயரினள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் தமக்கு ஆயிரம் ரூபா பாராமல் தந்த தெய்வநாயகியையும், கந்தசாமியையும் பாடிய பாடல்கள் பிரபாவப் பாமாலை எனப் பெயர் பெற்ற தொகுதியாகும். இதில் கலித்துறை, ஆசிரிய விருத்தம், விரவி வந்துள்ளன. ஈற்றில் கொச்சகம் என்றும் சில அடிகள் வந்துள்ளன.

பிரபாவப் பாமாலையில் எடுத்த எடுப்பிலே இந்திரச் செல்வம் பெற்றுயர்ந்த கந்தசாமி வள்ளலின் கொடைச் சிறப்பைக் கூறுவர். அதில் குறுந்தடி கொண்டு முழக்கும் முரசின் ஒலி ஒருகாத தூரம் கேட்கும் என்றும், அதைவிட உரத்து முழக்கும் ஒலி ஒரு யோசனை தூரம் கேட்கும் என்றும், ஒருவர் கொடுத்தார் என்னும் சொல் மூவுலகும் கேட்கும் என்று கூறும் நாலடியார் பாடலைத் தழுவிக் கந்தசாமி வள்ளலின் கொடைச் சிறப்பைப் பாடுவர்.

**கலித்துறை**

*''எடுத்தாயிரஞ் சொல்ல வேண்டுவ*
*தோநினைக் கென்று நல்லோர்*
*கொடுத்தா ரெனப்படுஞ் சொன்னிமிர்ந்*
*தோடிக் குறைவற் றெழீஇ*
*யடுத்தாரு மூவுல குங்கேட்கு*
*மென்ப தறிந்து ளைகா*
*ணடுத்தாழ் விலாத புகழ்க்கந்த*
*சாமி நரேந்திரனே.''*

அடுத்துவரும் ஆசிரிய விருத்தத்தில், கந்தசாமிப்பிள்ளையே, ''வல்வை நகராச கவிஞர்கள் மதித்த தருவே'' என்றும், ''தேமொழியில் எவ்வெவர் மனத்தையும் உருக்கும் அன்ப'' என்றும், ''வடி தமிழ்க் காவிய புராண சோதிட நூல் வழாத வகை தேர்ந்த நிபுண'' என்றும், ''வரமுறுங் கீரிமலை அறுமுகன் கோயில்தனை மாண்புடன் அமைத்த துங்க'' என்றும், ''மட்டக்களப்பினிற் கடிமணச் செல்வியொடு வாழ்ந்திடும் புருஷோத்தம'' என்றும் பாடுவர்.

அடுத்துவரும் கலித்துறைப் பாடல்களிலொன்றில் பிரமதேவனை நோக்கி, தேவரீர் தாங்கள் கொடுக்கத் தெரியாத புல்லர்கள் வீட்டில் குவித்து வைக்கும் செல்வத்தை, ஓயாமல் கொடுத்து மகிழும் கந்தசாமி வீட்டிலன்றோ குவித்துவிட வேண்டும் என்று குறிப்பிட்டுப் பாடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சேயா யரியுந்தித் தாமரை*
*வந்த திசைமுகனே*
*ஈயாத புல்லர் மனைதோறு*
*நீவைத்த வேமவெற்பை*
*வாயார் சரத மொழிக்கந்த*
*சாமி மனையில் வைத்தால்*
*ஓயாமல் யார்க்கும் மகிழ்ந்தள்ளி*
*அள்ளி உதவுவனே.*

தொடர்ந்து வரும் கலிவெண்பாவில் யாழ்ப்பாணத்துப் புலமையையும் கொடை மகிமையையும் குறிப்பிடுவர். ''ஊரெல்லாம் பண்டிதரும் ஓங்கு கொடைச் செல்வரும் வாழ்பேரெல்லாம் கொண்டு பிரிவின்றிப் பாரெல்லாம் பன்னியிட நின்றொளிர் யாழ்ப்பாணத்தின்'' என்பர். இன்னும் கந்தசாமி அவர்களின் பெருந்தன்மையையும், அவர் தம் தேவியார் தெய்வநாயகியின் மனை மங்கலத்தையும் விரித்துப் பாடுவார்.

அன்று புலவர் மட்டக்களப்பு வீட்டுக்குச் சென்றபோது, மங்கை நல்லாள் அவரை உபசரித்து, ''நீங்கள் உடனே பயணம் போவதாயிருந்தால் என் ஐயா வாக்களித்த தொகையைத் தந்து விடுகிறேன்'' என்று சொன்ன வாய்ச் சொல்லை வியந்து புலவர் அவர்கள் பாடிய பாடல் கலித்துறைக்கு விருந்தாயுள்ளது.

*''ஐயா வனத்துக்கு வாணிகத்*
*துற்றனர் அன்பரிங்ஙன்*
*எய்யா தவர்வர முன்னர்ப்*
*பயணம் இசைவுளதேற்*
*பொய்யா தவர்சொன்ன பொன்னீவன்*
*யானென்ற பூவை வைக*
*மெய்யார் புகழ்க்கந்த சாமிக்கு*
*வான் செல்வம் வேறென்னையே''*

இப்படிப்பட்ட பெண்கொடி எப்படிப்பட்டவள் தெரியுமோ என்று ஏந்திழைமாருக்குப் புலவர் பாடிக் காட்டுகிறார். ஆணாய்ப் பிறந்தவர்கள்கூடச் செந்தமிழ் பயிலல் வீணான செயல் என்று ஒதுக்கிவிடும் இந்நாளில், நாண் முதலாய குண மகிமை வாய்ந்த குணபுஷணியாய் தெய்வநாயகி கோணாது தமிழ் கற்றுப் புலமை பெற்றுள்ளாள் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொச்சகம்**

*ஆணாயி னோரு மரியசுவைச் செந்தமிழை*
*வீணான தென்று வெறுத்துவிடு மிந்நாளில்*
*நாணாதி பூண்டதெய்வ நாயகிமா னன்னதையுட்*
*கோணாது பூணக் குறித்த தெங்கள் புண்ணியமே.*

இத்தகைய தெய்வநாயகி, ''சாற்றுபுகழ்க் கந்தசாமிமனக் கோயிலிடை ஏற்றி வைத்த இன்ப ஒளிவிளக்கு'' என்றும், இவள் ''வசிட்டமுனி தேவிக்கும் புத்தியினால் கற்புரைக்கும் பூங்கிளி'' என்றும் பாடுவர். இத்தகைய பூவை புலவர் அவர்களுக்குப் புருஷன் சொன்ன சொல்லைக் காப்பாற்ற புன்னகை பூத்த முகத்தோடு ஆயிரம் ரூபாவை அள்ளிக் கொடுத்தபோதிருந்த நிலையைப் புலவர் படம் பிடித்துக் காட்டினாற் போலப் பாடலிற் காட்டி மகிழ்வர்.

*''நெஞ்சங் குளிர்ந்து விழிகுளிர்ந்து*
*இன்சொல் நிகழ்த்தி முகக்*
*கஞ்சம் குளிர்ந்து பணிந்துஎன்*
*கவிக்குக் கனகம் தந்தாள்*
*தஞ்சஞ் செறிந்தவர் தாங்கிடுஞ்*
*சீர்க்கந்த சாமியில்லாள்*
*வஞ்சங் கடிந்த மனத்தெய்வ*
*நாயகி மாதரசே.''*

புலவர் அவர்களின் இறுதிக் காலத்தில், இவரை விட்டு என்றுமே நீங்காத வறுமையோடு நோய்களும் தொட்டுக் கொண்டன. தம் நிலையை இவர் சந்தமடம் சுவாமிநாத பண்டிதர் அவர்களுக்கு அறிவித்தார். சுவாமிநாத பண்டிதர் அவர்கள் முன்னர் வை.சி. சிவகுருநாதனுடன் வித்துவ சிரோமணி பொன்னம்பலம் பிள்ளை அவர்களிடம் படித்து வந்தவர். வித்துவ சிரோமணி தமக்கு ஆவகாசமில்லாத வேளைகளில் சிவசம்புப் புலவர் அவர்களை இங்கே பாடஞ் சொல்ல வைத்தவர். அந்த முறையிலும் பின்னர் அவரோடு நெருங்கிப் பழகிய முறையிலும் புலவர் அவர்களும் மண்டிதர் அவர்களும் மிக நெருக்கமாயிருந்தார்கள்.

புலவர் அவர்கள் தம் நிலைமையை அறிவித்ததும் சுவாமிநாத பண்டிதர் அவர்கள் அவரிடம் விரைந்து சென்றார். குருவுக்குச் செய்ய வேண்டிய உதவிகளையும், பணிவிடைகளையும் குறைவறச் செய்தார். அவர் செய்த சேவையைப் பாராட்டிய புலவர்தம் பாடல்கள் சில திருநெல்வேலி சைவசித்தாந்தக் கழகத்தார் பதித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பாடற்றிரட்டில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் நீண்ட ஆசிரிய விருத்தமும், அதனைத் தொடர்ந்து ஆறு கலித்துறைப் பாடல்களும் வந்துள்ளன. அச்சில் வாராக் கவிகள் சில சாமிநாத பண்டிதர் அவர்களிடம் இருந்தன. அவை எங்குற்றன என்று தெரியவில்லை.

**கலித்துறை**

*யாரும் புரப்பவர் இன்மையின் மூப்பினில் யான்பிணியும்*
*ஈரும் கொடிய மிடியும் அடஉள் இனைபொழுதில்*
*சாரும் புகழப்பண் டிதன்சாமி நாத தயாநிதியைக்*
*கூரும் சுடரயில் வேலோன் திருவருள் கூட்டியதே.*

*எல்லாரும் கைவிடக் காணிப் பொருள்களை ஈனமெனப்*
*பொல்லார் கொளத்தஞ்சம் இன்றிப் புலம்புறும் போதெதிரா*
*நல்லார் தொழும்பண் டிதன்சாமி நாத நரேசன் இன்சொல்*
*சொல்லாட உய்த்த குகன்அரு ளேமெய்த் துணை எனக்கே.*

*நன்றியைப் பேணிடும் பண்டிதன்*
*மெய்ச்சாமி நாதன்உளத்*
*தொன்றிய பேரரு ளால்இடை*
*நேர்ந்தின் றுரைத்த இன்சொல்*
*என்திகைப் பைச்செற்ற தின்னவன்*
*போல இனுஞ் சிலரைக்*
*குன்றடும் வேலவன் சேர்த்திடு*
*மேலென் குறையெனக்கே.*

*பன்னாள் இவண்கண் டிலஞ்சாமி*
*நாதமெய்ப் பண்டிதனை*
*எந்நாள் இனிக்காண்பம் என்றெய்க்கும்*
*ஏழைதன் எண்ணத்தை (உள்)*
*உன்னா அறுமுகன் நேர் கூட்டி*
*னான்அவன் ஓங்கருளை*
*எந்நாளும் மெய்யென்ற ஆத்தர்கள்*
*வாக்கினை என்சொல்வனே.*

*வற்றா அருட்பண் டிதன்சாமி*
*நாதன் வளர்சென்னை நின்(று)*
*உற்றான் இவண்எமை யாழ்ப்பாணத்*
*தூர்முற்றும் ஓகைதழீஇ*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நற்றாரை வான்முகில் கண்ட*
*மயிலியல் நண்ணியிடின்*
*பெற்றாருந் தவ்வையும் உற்ற*
*களிப் பெவர் பேசுவரே.*

புலவரவர்களுக்கு முதுமையில் கண்ணொளி மங்கியது என்றும், அவர் கந்தவனக் கடவை ஆறுமுக சுவாமியை விடாது வேண்டிப் பாடு கிடந்து கண்ணொளி பெற்றார் என்றும், ''கண்ணொளியைத் தந்தாய் மறப்பேனோ'' என்னும் தொடரமைந்த பாடல் பாடினாரென்றும் கூறுப. புலவரவர்கள் 29-9-1910ஆம் நாளில் காலமானார் என்றும், அவர் மாணாக்கர்கள் பலர் பிரிவுக்கு வருந்திப் பாடினார்கள் என்றும் கூறுப. அவர்களுள் அல்வாய் நொத்தாரிசு ஆறுமுகம் அவர்கள் பாடிய பாடல்கள் இரண்டு கிடைத்துள்ளன.

*''கவிகாள மேகம் கவிச்சக் கரவர்த்தி கம்பனென்று*
*அவியா விளக்கனை யான்புக ழேந்தி யமைந்தொருங்கு*
*புவிமீது வந்த தெனுஞ்சிவ சம்புப் புலவனைக்கை*
*குவியாப் புலவ ரெவர்கவி பாடுங்குறிப் பறிந்தே!''*

*''செந்தமி ழாழி கரைகண்டு சைவத் திறம் பரவிக்*
*கந்தசுவாமி திருத்தொண்டு பூண்டு கவிமழையே*
*சிந்துநல் தேசிக னாருடுப் பிட்டிச் சிவசம்புவை*
*எந்தப் பிறப்பினிற் கண்ணாரக் காண்ப திசைமிகவே''*

**செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்**
**(முதற்பாகம்) முற்றிற்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியரையும் நூலையும் பற்றி...

❖ சமய, சமூக, கலாசார, இலக்கிய வளர்ச்சிக்காக அனுபவங்களை அடிப்படையாக வைத்து எதிர்காலத் தலைமுறையினரின் நலனுக்காக எழுதும் இலட்சிய எழுத்தாளர் அணியினருள் மேம்பட்டு விளங்குபவர் பல்கலைப் புலவர் திரு. க. சி. குலரத்தினம் அவர்கள். ஆசிரியராக, மொழிபெயர்ப்பாளராக, பாடநூல் எழுதுநராக, வரலாற்று ஆசிரியராக, சமய, இலக்கியத் துறையில் தெளிந்த சிந்தனையாளராகப் பிரகாசிக்கிறார் இவர். – **ஐ.தி. சம்பந்தன்,** சுடரொளி வெளியீட்டுக் கழகம்.

❖ புலமையாழம் பொருந்திய ஈழத்தமிழ்ப் புலவர்கள் தமிழ் மொழிக்கும் தமிழர்க்கும் ஆற்றிய தொண்டு அளப்பரியன. மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னரே புலத்துறை முற்றிய புலவர் பெருமக்கள் ஆற்றிய அரும்பெரும்பணிகளை நினைவுகூருகின்ற வகையில் 'செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்' என்னும் இந்நூல் அமைந்துள்ளது. சுடரொளி வெளியீட்டுக் கழகத் தலைவர் திரு. ஐ.தி. சம்பந்தன் அவர்களின் இவ்வெளியீட்டுப் பணி பாராட்டுக்குரியது.

– முனைவர் **ஔவை நடராசன்**, முன்னாள் துணைவேந்தர்.

❖ தமிழின் புகழை நாற்றிசையும் பரப்பிய செந்தமிழ்ச் செல்வர்களான பதினெட்டுத் தமிழீழப் புலவர்களைப் பற்றிப் பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் அவர்கள் எழுதி உள்ள இந்நூல் ஓர் அரிய தமிழ் வரலாற்றுப் பதிவாகும். வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலத்தின் மேய்ச்சலுக்கு இரையாகிப் போகாமல் தமிழ்ப் பயிர் காத்த வேலிகள் இவர்கள். தமக்குப் பின்னால் தமிழ் நிலைக்கவும் தழைக்கவும் தமிழ் தோய்ந்த மாணாக்கர்களை வடித்துத் தந்த தமிழ்ப் பட்டறைகள். இலை மறை காய்களை அல்ல – கனிகளை இந்நூல் நம் கண்களில் இருத்தியுள்ளது.

– உணர்ச்சிக் கவிஞர் **காசி ஆனந்தன்**, தமிழீழம்.

❖ தமிழ்ப் பண்பாட்டிலும் பாரம்பரியத்திலும் ஊறித் திளைத்ததோடல்லாமல், எழுத்து வன்மையும் ஒரு சேரப் பெற்றிருப்பது இந் நூலாசிரியருக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். ஈழத்தில் தமிழ் வளர்த்த சான்றோர் பலரை அறிமுகப்படுத்துகிறது இந்நூல். கற்றறிந்தோர் போற்றவல்ல அழகிய வசன நடையில் அமைந்த இந்நூல் ஈழத்தமிழன்னைக்குக் க.சி. குலரத்தினம் அணிவிக்கும் இன்னொரு அணிகலன்.

– **செ. குணரத்தினம்**, கொழும்புத்தமிழ்ச் சங்கத் தலைவர்

❖ ஈழத்தைப் பொறுத்த அளவில், தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு பொற்காலமாகத் திகழ்கிற பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழ நாட்டுப் புலவர்களின் ஆக்கங்களில் காணப்படும் சிறப்புகளைத் தமக்கே யுரிய முறையிற் சுவைபட இந்நூலில் எழுதியுள்ளார் நூலாசிரியர் பல்துறை வித்தகர் திரு. க.சி. குலரத்தினம் அவர்கள். அரிய தகவற் களஞ்சியங்களான கட்டுரைகளைத் தாங்கிய இந்நூலை வாசிப்போர், அவரின் நல்ல தமிழ்ப் பணியை நயந்து பாராட்டுவர்; வியந்து மகிழ்வர்.

– சைவப் பெரியார் **வை.கா. சிவப்பிரகாசம்**
கோப்பாய் ஆசிரிய கலாசாலை உப அதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org